# மல்லிகை மாலை

**வித்வான் ல. சண்முகசுந்தரம்**

**சண்முகம் பதிப்பகம்**
*13, மூன்றாவது தெரு, பாரதி நகர்,*
*மேலகரம் - 627 818*
*வழி - தென்காசி*

முதல் பதிப்பு
நவம்பர் - 2006
உரிமை - ஆசிரியருக்கே

**விலை ரூ.100/-**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | மல்லிகை மாலை |
| ஆசிரியர் | - | வித்வான், ல. சண்முகசுந்தரம் |
| பதிப்பகம் | - | சண்முகம் பதிப்பகம்<br>13, மூன்றாவது தெரு, பாரதி நகர்,<br>மேலகரம் - 627 818<br>(வழி) தென்காசி |
| பதிப்பாண்டு | - | நவம்பர், 2006 |
| மொழி | - | தமிழ் |
| பொருள் | - | கவி இன்பம், கலைநலம் |
| பக்கம் | - | 32 + 240 = 272 |
| விலை | - | ரூ.100/- (நூறு ரூபாய்) |
| தாள் | - | கிரீம் ஓவ் |
| நூல் அளவு | - | 1/8 - டெம்மி |
| அச்சு | - | 11 - பாயிண்ட் |
| கட்டுமானம் | - | செக்ஷன் |
| அட்டை | - | லாமினேஷன் |
| ஒளி அச்சு | - | சாவித்திரி லேசர் பிரிண்டர்ஸ்,<br>சென்னை-28 |
| அச்சகம் | - | சக்தி பிரிண்டர்ஸ்<br>அண்ட் எண்டர்பிரைசஸ்<br>தண்டையார்பேட்டை, சென்னை-21. |

# மதிப்புரை

***பி. சி. பாலகிருஷ்ணராஜா***
*கேலக்ஸி மருத்துவமனை, (சிகிச்சைப் பிரிவு)*
*திருநெல்வேலி*

*எளிமையும் இனிமையும் தன் அடக்கமும் நிறைந்த தமிழ் ஐயா அவர்களுக்கு வணக்கம்.*

*அன்புடன் தாங்கள் கொடுத்த அற்புதத்தில் அற்புதம், புஸ்தகம் பார்த்தேன், படித்தேன். பரவசம் அடைந்தேன். பாடல்கள் அனைத்தும் நெகிழ்விக்கின்றன. நெஞ்சை பாடல்களுக்கு தாங்கள் கொடுக்கும் விளக்கமோ உணர்ச்சியைக் குழைத்துப் பிசைகின்றன. பல இடங்களில், கண்ணீரை, ஆனந்தக் கண்ணீரைத்தான் பெருக்குகின்றன. உதாரணமாக*

*சங்கரனைத் தாழ்ந்த*
*சடையானை, அச்சடைமேல்*
*பொங்கரவம் வைத்துகந்த*
*புண்ணியனை - இங்கிரங்கி*
*ஆ ஆ என்(று) ஆழாமைக்*
*காப்பானை எப்பொழுதும்*
*ஓவாது நெஞ்சே*
*உரை.*

*என்னும் பாடலுக்கு, ''பொய்யைப் பொய் என்று தெரிந்தால்ப் போதும். தெரிந்தமாத்திரத்திலேயே உண்மை கண்முன் வந்து நிற்கும். அவ்வளவுதான். உண்மையினிடத்து அன்பு உண்டாகும். அது ஆர்வமாகப் பெருகும். அதாவது காதலாகவே பொங்கும். உடல்பொருள், ஆவி எல்லாவற்றையும் அதற்கு அர்ப்பணிக்கவே செய்யும். தன்னையே ஒப்படைக்கச் செய்யும் அந்தக் காதல்.*

*''அதுதான் பக்தி. அதுதான் ஞானம்.*

*''தன்னையே இன்னொன்றிடம் கொடுக்கக் கொடுக்க, ஒப்படைக்க ஒப்படைக்க இன்பம் பெருகும். அப்படியானால் இந்த ஞானத்தை அற்புத ஒளிவீசும் அரிய ரத்தினம் என்றுதானே சொல்ல வேண்டும்.''*

*என்று விளக்கம் கொடுக்கிறீர்கள். இப்படியே பாட்டுக்குப் பாட்டு விளக்கங்கள். ரசிகமணி டி.கே. சியைத் தவிர வேறு யாரிடமும் இப்படி ஒரு விளக்கம் கேட்டதில்லை நான்.*

*ரசிகமணி டி.கே.சி. அவர்கள் மறையவில்லை. தங்களிடம் கலந்து ஒளிர்கிறார்கள். அவர்களைப் போலவே நீங்களும் தமிழுக்காகப் பிறந்திருக்கிறீர்கள். அதற்காக வே வாழ்கிறீர்கள். வேறு என்ன சொல்ல நான்.*

★ ★ ★

*பாரதமணி என்னும் மாத இதழில் நீங்கள் எழுதி இருக்கிற கருணையில்ப் பிறந்த வீரம் என்னும் கட்டுரையைப் பார்க்கநேர்ந்தது. அதைப்படிக்கவும் நேர்ந்தது.*

*''இந்திய சுதந்திரத்திற்கு முன்னோடியாக அதிகாரமாற்றம் சம்பந்தமாக பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்த வந்திருக்கிறார்கள் 1945-46ல். வைஸ்ராய் மாளிகையில் வைத்துப் பேச்சு. ஒருநாள் காந்தி பதினைந்து நிமிஷம் கழித்து வருகிறார் பேச்சுக்கு.*

*பரபரப்போடு நின்ற ஜவஹர்லால் நேரு; ஏன் பாபுஜி இத்தனை தாமதம் என்கிறார். குறித்த நேரத்தில்தான் நான் புறப்பட்டேன். காரில் ஏறப்போகும் நேரம் ஒரு விதவைப் பெண் வந்தாள். அது தான் தாமதத்துக்குக் காரணம் என்கிறார் காந்திஜி.*

*நீங்கள் ஒரு வைதீகக் குடுக்கையா என்கிறார் நேரு. இல்லை இல்லை, என்கிறார் காந்தி. ''அப்படியானால் தாமதத்துக்கு காரணம்'' என்கிறார் நேரு. அந்த அம்மாளுக்கு மூன்று பெண் குழந்தைகள். மூன்று பேரும் வயதுக்கு வந்துவிட்டனர். திருமணம் செய்துகொடுக்க வழி இல்லை. என்ன செய்வேன் நான் என்று முறையிட்டாள். அவளுக்கு ஆறுதல் சொல்லி வந்தேன். அது தான் தாமதம் என்றார் மகாத்மா.*

*அதற்கு இது தான் நேரமா என்றார் நேரு. அப்பொழுது அந்த மனித தெய்வம் சொல்லியது. ஒரு அபலையின் கஷ்டத்தைப் பார்த்தும் அவளுக்கு ஆறுதல் கூடச் சொல்லமுடியாத நேரம் என்ன நேரம்? அப்படிப்பட்ட நேரம் தேவையா என்ன? இந்த அபலையைப் போல் எத்தனை எத்தனையோ அபலைகள். அத்தனைபேருக்காகவுந் தானே நாம்*

சுதந்திரம் கேட்கிறோம். குறிப்பிட்ட ஒரு கூட்டத்தாருக்கு மட்டுந்தான் சுதந்திரமா? அதற்காகவா நாம் போராடுகிறோம்? படித்தவர், படியாதவர், ஏழை, பணக்காரர், நொண்டி, முடம், தாழ்ந்தவர், வீழ்ந்தவர் அத்தனை பேரையும் பேணிக்காக்கத்தானே சுதந்திரம். இந்தப் பெண்ணும் அவர்களில் ஒருத்தி தானே'' என்று முடித்தார் தெய்வத்துள் தெய்வமாகிய காந்தி. கண்கலங்கினார் நேரு. நடுங்கும் கைகளால் காந்தியின் கரங்களைப் பற்றினார். பாபுஜி, ''சுதந்திரத்தின் பொருளும், ஜனநாயகத்தின் பொருளும் என்கண் முன் வந்து நிற்கின்றன. ஒரே மெய்ப்பொருளாகவே தெரிகிறது. இனி, அதை நான் விடமாட்டேன்'' என்று மறுகினார். நேருவின் தெளிவையும் உறுதியையும் அவருடைய கண்ணீர் பாதியும், சொல்பாதியுமாக எடுத்துக்கொடுத்தன.''

இப்படி, (இதே பொருளில்) எழுதி இருக்கிறீர்கள் கட்டுரையை. படித்த நாள் மெய்மறந்தேன். கண் கலங்கியது எனக்கும். எப்படி உருவம் கொடுக்கிறீர்கள் உண்மைக்கு! அதில் அல்லவா இருக்கிறது உயிர்.

★ ★ ★

இனி, காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமான் நாயனார், நக்கீர தேவர், பட்டிணத்தார் முதலிய மகான்களின் பாடல்களுக்கு காந்தி மகான் மெய்யுரை வெளிச்சம் கொடுக்கிறது. அப்படியே இந்த மெய்யுரைக்கு வெளிச்சம் கெடுக்கின்றன. உங்களுடைய விளக்கமும் பாடலும்.

எங்கும் நிறைந்தது உண்மை. எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறது உண்மை. அதை அப்படியே கையில் எடுத்துக் காட்டுவது போல் காட்டுகிறீர்கள்.

''நான், நான் என்கிற முனைப்புத்தான் பொய். எனது எனது என்னும் பற்றும் பிடிப்புமே அறியாமை. ஆணவமும் அறியாமையும் எப்படி எப்படி நம்மை ஆட்டிப் படைக்கின்றன என்பதைத் தெரிந்தாலே போதும். அது தான் உண்மை'' என்று எவ்வளவு அழகாய்ச் சொல்கிறீர்கள்.

உண்மையை அங்கங்கே காணவே செய்கிறோம். ஆனாலும் அதை மனதில் நிறுத்துவதில்லை. மனதில் நிறுத்த முயன்றால் போதும். ஏதாவது ஒரு பிரச்சனை வந்து அதைக்

காலைவாரிவிடும். குடும்பப் பிரச்சனையோ, பணப் பிரச்சனையோ, உற்றார் உறவினர் சம்பந்தப்பட்ட பிரச்சனையோ, உடல்ப் பிரச்சனையோ, இல்லை, தேர்தலில் போட்டியிடும் பிரச்சனை தானோ, ஏதோ ஒன்று வந்து காலை வாரிவிடுகிறது. ''நான் யார் தெரியுமா என்று மார்பு தட்டவைக்கிறது. எனக்குத்தான் அது உரியது என்று பேயாட்டம் ஆட வைக்கிறது. அதற்காக மக்களை, மனையாளை, உற்றாரை, உறவினரை எல்லாம் கொண்டு வந்து எதிரில் நிறுத்துகிறது, வேண்டியவர் வேண்டாதவர், நண்பர், பகைவர் என்றெல்லாம் கொண்டு வந்து நிற்கிறது.

அப்பொழுது அடிபட்டுப் போகிறது; எல்லாம் ஒன்று, எல்லாம் ஈசன் மயம் என்னும் உண்மை!

அப்பொழுது தெரிகிறது அடடா, கண்ணைத் திறந்து வெளிச்சம் கொடுத்து மாயையின் குறும்புகளைப் பார்க்க வைக்கிறவனும் இறைவன்தான். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அதே மாயையை ஏவிவிட்டு, நம் கண்ணை மறைப்பதும் அந்த இறைவன் தான்'' இந்தக் கருத்துப்பட விளக்கம் கொடுக்கிறீர்கள். அப்படியே

*யான் என்று தான் என்று*
*இரண்டில்லை என்பதனை*
*யாள் என்றும் கொண்டிருப்பன்*
*ஆனாலும் - தேன் உண்டு*
*அளிகள்தாம் பாடும்*
*அகன்கயிலை மேயான்*
*தெளிகொடான் மாயங்கள்*
*செய்து.*

(அளி - வண்டு. தெளி - தெளிவு.)

இப்படியே தொட்ட தொட்ட இடம் எல்லாம் தேன் சொட்டுகிறது, அற்புதத்திலும் அற்புதம் என்னும் மகா அற்புதம். வயதான பிறகேனும் இப்படி ஒரு ஆனந்த அனுபவம் ஐயா மூலம் கிடைத்ததே என்று ஒரு பெருமிதம்.

★ ★ ★

''இனி ஒரு ரயிலை எடுத்துக் கொண்டால் ஆயிரம் பேர் வரை அதில் பிரயாணம் செய்கிறார்கள். எது எது பற்றியோ அவர்கள் விவாதம் பண்ணுவார்கள். தர்க்கம் பண்ணிக் கொண்டே பிரயாணிப்பார்கள். காரசாரமாகக் கூட இருக்கும் விவாதம், தர்க்கம் எல்லாம்.

''ரயில் ஓட்டியோ (டிரைவர்) தர்க்கம், மேற்கோள், ஆதாரம், ஆராய்ச்சி என்று ஒன்றிலும் சிக்குவதில்லை.

தண்டவாளம், பாதை, கைகாட்டி, வேகம், நேரம், தூரம் இவையே அவர் கண்முன் நிற்கின்றன.

பயணிகளையும் அவர்களுடைய பாதுகாப்பையுமே அவர் பார்க்கிறார். அப்படியே அதில் ஒன்றிவிடுகிறார்.

இறைவனுடைய சந்நிதானம் என்றால் ரயிலோட்டியின் காரியமுந்தான். புத்தகமோ, ஆராய்ச்சியோ, மேற்கோளோ, புள்ளிவிபரமோ குறுக்கே வந்தால் என்னாவது ரயில்!

இனி, அப்படி ஒரு ஒருமை உணர்ச்சியோடேயே இறைவனைப் பிரதிஷ்டை பண்ணவேண்டும் இதயத்தில். மனம் தான் சந்நிதானம். உணர்ச்சியில் அப்படி ஒன்றினால் தான் இறைவனின் திருவருள், கண்முன் நிற்கும்.

வெறும் தர்க்கம், வியாக்யானம் ஒன்றும் உதவாது.

நம்முன்னோர் கண்ட உண்மை இது. நம்பி ஆண்டார் நம்பிகள் கண்ட உண்மையும் இதுவே.

*வித்தகச் செஞ்சடை*
*மேயானைச் சிற்றம் -*
*பலவன்தன் னைச்*
*சித்தகக் கோயில்*
*இருத்தும் திறத்துமிக் -*
*கார்க்கே அல்லால்*
*புத்தகப் பேய்களுக்(கு)*
*எங்கித்த தோ அரன்*
*பொன்னடி யே.*

பாட்டும் விளக்கமும் அற்புதம். கொடுத்துவைத்தவர்கள் தமிழர்கள். வேறுயாருக்குக் கிடைக்கும் இந்த ஆனந்தம்.

*அற்புதத்தில் அற்புதமே எனக்கு இப்பொழுது துணை. அது ஒன்றே துணை. என்றும் அதுவே துணை.*

*(சித்தகக் கோவில் - மனம். எங்கித்தல் - எதிரில் நிற்றல்.)*

இப்படிக்கு

*அன்புள்ள*

***பி.சி. பாலகிருஷ்ணராஜா***

பெறுபவர்
*வித்வான், ல. சண்முக சுந்தரம் அவர்கள்*
*(முகாம்) 13/13,* L.D.N. *சாரி தெரு,*
*கணபதிபுரம், குரோம்பேட்டை*
*சென்னை - 44.*

# காணிக்கை

*கருணைக்கடல் என்றாலே பெண்தான். கருணைக்கடல் மட்டும் அல்ல, பொறுமைக் கடலும் பெண்தான். எப்பொழுதும் ஆனந்தக் கடலாகவே இருக்கிறாள் பெண். காரணம் அவளது கருணையும் பொறுமையுமே.*

*ஏழைக் குடும்பத்துப் பெண். கால்ப்படி அரிசியில் ஒரு குடம் தண்ணீர் ஊற்றி வேகவைத்துக் கஞ்சியாக்கி அதையே உண்டு காலம் தள்ள வேண்டிய வறிய நிலை. பெரிய குடும்பம் (குட நீர் அட்டுண்ணும் இடுக்கண்) அந்த வறிய நிலையிலும் விருந்தினர் வந்துவிடுகிறார்கள். ஒருவரா இருவரா, ஊரே திரண்டு வந்தது போல் இருபது பேர், முப்பது பேர் என்று வந்து விடுகிறார்கள். தாகம் எடுத்தால் ஒரு அண்டாத் தண்ணீர் காணாது. அவ்வளவு பெரிய கூட்டம். கடல் நீரையே வற்றவைக்கிற கூட்டம் என்று தான் சொல்லவேண்டும். (கடல் நீர் அற உண்ணும் கேளிர்)*

*அத்தனை பேரையும் இன்முகத்தோடு வரவேற்கிறாள், உபசரிக்கிறாள்; அருமையோடும், இனிமையோடும் விருந்தளிக்கிறாள். கலகல என்று சந்தோஷமாக இருக்கிறாள். (கடல் நீர்மை கை ஆறாக் கொள்ளும்).*

*ஆடவர்களால் அப்படி முடியுமா? உலகையே வயிற்றில் வைத்துக் காக்கிறவள் அல்லவா பெண்.*

*கவியாக அவதாரம் எடுக்கிறாள் அதே பெண்.*

*குடநீர் அட்(டு) உண்ணும்*
*இடுக்கண் பொழுதும்,*
*கடல்நீர் அறஉண்ணும்*
*கேளிர் வரினும்,*
*கடன்நீர்மை கைஆறாக்*
*கொள்ளும்; - மடமொழி*
*மாதர் மனையாட்சி*
*யாள்.*

*பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை என்பது போல விஷயமும் கவியும் பொருந்தி நிற்கிற அழகே அழகு. அந்த அற்புதத்துக்கே, கலைத் தெய்வத்துக்கே இந்நூலைக் காணிக்கை ஆக்குகிறேன்.*

# முகவுரை

மல்லிகைப் பூவுக்கு நிகராக ஒரு பூ உண்டா. அதன் மணத்துக்கு நிகராக எதில் இருக்கிறது மணம். மல்லிகையின் மணமே மணம்.

தமிழும் அப்படித்தான். தமிழுக்கு நிகர் தமிழ்தான். தமிழ் என்றால் தமிழ்க் கவிதான். தமிழ்க் கவி போலத்தான் மல்லிகை மலரும்.

உலகில் எந்த மலருக்கும் இல்லாத சிறப்பு மல்லிகை மலருக்கு உண்டு. அதே போல் கவி உலகில் வேறு எங்கும் இல்லாத அருமையும் பெருமையும் எளிமையும் நிறைந்த சிறப்பு, கவிச்சிறப்பு தமிழ்க் கவிக்கே உண்டு.

மணத்தை வைத்தே மல்லிகைக்கு அந்தச் சிறப்பு. அதேபோல் இசையும் தாளமும் இணைந்து உணர்ச்சி பாவத்துக்கு உருவம் கொடுக்கிற அற்புதத்தை வைத்தே தமிழ்க் கவிக்கு எங்கும் இல்லாத சிறப்பு.

உணர்ச்சி பாவத்துக்கு உருவம் கொடுப்பதே தமிழ்தான். தமிழில் உள்ள இசையும் தாள இயலுந்தான். பார்க்கப்பார்க்க அதிசயமாக இருக்கும் தமிழின் காரியம். இந்த அதிசயத்தையே சிருஷ்டிதத்துவம் என்கிறோம். தமிழின் விளைச்சல் என்றே சொல்லத் தோன்றும்.

மாலை ஐந்து மணிக்கு மலராக விரியப் போகிறது (மல்லிகைப்) பூ. நான்கு மணிக்கு அது மொட்டாக இருக்கும். நான்கரை, நான்கே முக்கால் மணிக்குக் கூட அது மொட்டாகவே இருக்கும். விம்மிப்புடைத்தபடி மொட்டாகவே இருக்கும். மணம் இருக்காது அப்பொழுது.

வார்த்தைகளும் அப்படித்தான். இசையிலும் தான இயலிலும் சேரும்வரை மணம் இல்லை வார்த்தைகளுக்கு.

மணம் இல்லை, குணம் இல்லை, உயிர் இல்லை, ஒளியே இல்லை அவற்றில்.

இனி மணி ஐந்து ஆகிறதோ இல்லையோ டாண் என்று பூத்துவிடுகிறது மொட்டு. மல்லிகை மொட்டு. எங்கிருந்து

வந்தது மணம். எப்படி வந்தது மணம். வீடு, வாசல், முற்றம் என்று அவ்வளவு இடமும் மணக்கிறதே, கமகம என்று. மணக்கிறதே நறுமணம். அது இதுவரை எங்கே இருந்தது.

இனி, உணர்ச்சியோடு ஒட்டிய உடனேயே சொற்களும் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்து விடுகின்றன. கமகம என்று மணக்க ஆரம்பித்துவிடுகின்றன.

இசையும் தாளமும் உணர்ச்சியைப் பிசைந்து குழைக்கக் குழைக்க அதனோடு கொஞ்சிவிளையாடும் வார்த்தைகள்.

வசனத்தில் மொட்டாய்க் கிடந்த சொல், கவியில் மலராய் விரிகின்றன. மாலையாய்த் தொடுக்கப்படுகின்றன.

சோழ நாட்டுப் புலவர் ஒருவர். அவர் மதுரைக்கு வந்தார். மதுரையில் விளைந்த பூர்வமான பாடல்களைப் பார்த்தார். நம்பமுடியவில்லை அவருக்கு. இப்படியும் உண்டா பாடல்கள், என்று அதிசயப்பட்டார்.

அதை ஒரு பாண்டிய நாட்டுப் புலவரிடமே சொல்லிச் சொல்லி வியந்தார்.

இனி, பாண்டிய நாட்டுப் புலவர் சொல்கிறார். ''தச்சனிடம் ஏவி (ஆர்டர் கொடுத்து) செய்து வந்த நாற்காலி அல்ல கவி. எங்கள் பாண்டிய நாட்டுக் கவி.

''இருபதினாயிரம் முப்பதினாயிரம் வருஷமாக குடிபடைகள் எல்லோருமே, மணி முடிதரித்தாளும் மன்னாதி மன்னர் (பாண்டியர்) அவ்வளவு பேருமே, உயிரைக் கொடுத்து வளர்த்து வந்த தமிழில் விளைந்த கட்டி வயிரங்கள் எங்கள் கவி. தமிழே பூத்துச் சொரிந்த மல்லிகை மலர்கள் எங்கள் கவி. அந்த மலர்களை மாலையாகத் தமிழே கட்டித் தொங்கவிடுகிறது எங்கள் பாண்டிய நாட்டில். அதுதான் இந்த மணம், இந்த ஒளி எங்கள் பாட்டில்'' இப்படி அழுத்தம் திருத்தமாகவே எடுத்துச் சொல்லி விளக்கினார் பாண்டிமா நாட்டுப் புலவர்.

வெறும் வசனத்தில் விளக்கினால் மனசில் நிற்குமா அது. அழகிய வெண்பாவின் மூலமாக எடுத்துக்காட்டுகிறார் புலவர் பெருமான்.

என்ன தோரணையில் வருகிறது என்று பாருங்கள் விளக்கம்

*சொல் என்னும் பூம்போது*
*தோற்றிப், பொருள் என்னும்*
*நல்இரும் தீந்தாது*
*நாறுதலால்;- மல்லிகையின்*
*வண்டார் கமழ்தாமம்*
*அன்றே! மலிதேரான்*
*கொண்டாடும் கூடல்த்*
*தமிழ்.*

பூம்போது - விரியும் பருவத்து மொட்டு. பொருள் - உண்மை. உணர்ச்சி மயமான உண்மை. அதுதானே மெய்ப்பொருள். நல் இரும்தீந்தாது - மகரந்தம். மலருக்கு மகரந்தம் போல கவிக்கு விஷயம். அது தான் கவியின் சிருஷ்டிக்கு மூலம். நாறுதலால் - மணத்தலால். தாமம் - மாலை. அன்றே.- அல்லவா! மல்லிகை மலர்கள் தாமே விளைந்து தாமே மாலையாக எழுந்து வந்தது போலல்வா இருக்கிறது. எது? கூடல் தமிழ் - மதுரையை உள்ளடக்கிய பாண்டிய நாட்டில் விளைத்த தமிழ்ப்பாடல். கூடல் - மதுரை. மலிதேரான் - பாண்டியன். மிகப் பெரிய தேர்ப்படையை வைத்துப் பராமரித்து வந்தார்கள் பாண்டியர்கள். யானைப் படையைப் போலவைத் திருந்தார்கள் தேர்ப்படையை.

சும்மாவரவில்லை பாண்டிய நாட்டுப் பாடல்கள். பல ஆயிரம் வருஷமாகப் பண்பட்டு வந்த பண்பாட்டிலிருந்தும், பக்தியிலிருந்தும் விளைந்த விளைச்சலாக்கும் எங்கள் கவி, தமிழ்க்கவி என்கிற பெருமிதபாவம் பாடலில் நன்றாய்த் தொளிக்கிறது. பாடலைப் பாடப்பாட அது தெரியும்.

★ ★ ★

நாலடியார், நான்மணிக்கடிகை இரண்டு நூல்களிலும் அத்தகைய பாடல்கள் இருக்கின்றன. அப்பாடல்களை எடுத்து விளக்கம் கொடுத்து மல்லிகை மாலை என்னும் பெயரில் நூலாக வெளியிடுகிறோம்.

பார்ப்பதற்கு ஏதோ நீதிபோதனை போலத் தோன்றும் பாடல்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அப்படித்தான் தெரியும். எல்லோருக்குமே அப்படித்தான் தெரியும்.

பாடலைப் பாடி, அனுபவிக்கிற பொழுது கவியாகவே தெரியும். தமிழில் விளைந்த அற்புதம் அற்புதமாகவே தெரியும்.

இதை இதைச் செய், இதை இதைச் செய்யாதே என்று சொல்வதற்கு கவி எதற்கு? வசனம் போதாதா? மேலும் அவற்றைத் தான் ஒவ்வொரு வீட்டிலும் தாய் தந்தையர் சொல்லிய வண்ணந்தானே இருக்கிறார்கள். பள்ளிக்கூடம், வாத்தியார், அரசாங்கம் எல்லோருமே அதைத்தானே சொல்கிறார்கள். நீதிபோதனை தானே செய்கிறார்கள். அப்படி இருக்க அதற்கு மேலும் நாலடியார் எதற்கு, நான்மணிக்கடிகை எதற்கு.

தெய்வமாக் கவிஞர்களாக அவதரித்த நாலடியார், நான்மணிக்கடிகை ஆசிரியர் எல்லோருமே உண்மையை, எடுத்துச் சொல்ல வந்தவர்கள். அதுவும் உணர்ச்சிமயமாக உண்மையைப் பார்த்து, அதை அனுபவித்தவர்கள், அடடா? தெய்வ ஒளிவீசும் அரியரத்தினமாக அல்லவா இருக்கிறது ஒவ்வொரு உண்மையும் என்று ஆனந்தபரவசப்பட்டவர்கள், அந்த ஆனந்தத்தையே வெளிப்படுத்துகிறவர்கள்.

அவர்களின் அனுபவ ஆனந்தத்தின் வெளியீடுதான் பாடல்கள்.

இந்த உண்மையை எங்கே கண்டார்கள் என்றால் இங்கே தான் கண்டார்கள். நாட்டில், சமுதாயத்தில், வீட்டில் தான் கண்டார்கள். வானுலகம் போய்க் கண்டு வந்தது இல்லை. ஆனாலும் நம் கண்ணில் அவை படவில்லை. கண்ணில்ப் பட்டாலும் புத்தியில் படவில்லை. அவர்களுக்கோ கண்ணில்ப் பட்டது. அப்படியே புத்தியிலும் பட்டது உண்மை. அந்த உண்மையை அனுபவிக்க அனுபவிக்க ஆனந்தம் விளைந்தது. அதுவே கவியாக வந்துவிட்டது.

நாமோ ஒன்றையும் பார்ப்பதில்லை. ஒழுங்காகப் பார்ப்பதில்லை. பார்த்தால் நமக்கும் அனுபவம் வரும். ஆனந்தம் பெருகும். கவியாகக்கூட விளைந்துவிடுவோம் நாம்.

பார்ப்பதற்கு என்ன இல்லை இந்த உலகில். பூதக்கண்ணாடி போட்டு நுணுகிப்பார்க்க வேண்டாம். வெறும் கண்ணால்ப் பார்த்தால் போதும்.

மகாத்மா காந்தி இருக்கத்தானே செய்கிறார்.

மலை போல, இமயமலைபோல, அதையும்விட மகா பெரிய மலைபோலல்லவா அவர் நிற்கிறார். அவரைப் பார்த்தால் போதுமே. அவருடைய வாழ்க்கையைப் பார்த்தால் போதுமே. எத்தனையோ அனுபவங்கள் வரும். எத்தனை எத்தனையோ ஆனந்தம் எழுந்து எழுந்து வரும்.

அப்படி எத்தனையோ காந்திகள் நாட்டில். பார்ப்பதற்கு மனம் இருந்தால் காட்சிக்கா பஞ்சம்.

உண்மையை, அடிப்படையான உண்மையைப் பார்க்க வேண்டும் என்றால் ஏட்டைப் புரட்டக்கூடாது. சட்ட நூல்களைப் புரட்டக்கூடாது. மனிதனைப் பார்க்க வேண்டும். அவனுடைய வாழ்க்கையைப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் மனிதன் நடந்து வந்த, கடந்து வந்த இடங்களைப் பார்க்கவேண்டும். எத்தனை மேடு பள்ளங்கள்? எத்தனை கரடு முரடுகள், எத்தனை எத்தனை வளைவுகள், நெளிவுகள், முண்டு முடுச்சுகள் அத்தனையையும் பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்கப் படலம் படலமாக எழுந்து வரும் உண்மை. பேருண்மை.

அந்த உண்மையை அனுபவித்த ஆனந்தந்தான் கவி. நாலடியார் பாடல். நான் மணிக்கடிகைப் பாடல் எல்லாம் அனுபவ ஆனந்தத்தின் விளைச்சல்களே.

சட்டத்துக்குள்ளும், நீதிபோதனைக்குள்ளும் சிக்கவா செய்யும் அது.

இது சம்பந்தமாக முன்னோர் தெளிவாகவே சொல்லி இருக்கிறார்கள்.

''திறவோர்

காட்சியில் தெளிந்தனம்''

என்றே சொல்லி இருக்கிறார்கள். திறவோர் என்றால் அருளாளர், ஞானியர், மகாத்மா காந்தி போன்ற உத்தமர். காட்சி என்றால், அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை.

★ ★ ★

நூறு வருஷத்துக்கு முன் தென் ஆப்பிரிக்காவுக்குப் போனார் காந்தி. அப்பொழுது அவர் பாரிஸ்டர் (வழக்கறிஞர்) காந்தி தான். வியாபாரி ஒருவர் தம் வழக்கை நடத்தித் தர காந்தியை அழைத்துப் போனார்.

பிழைப்புக்காக வழக்காடப் போன பாரிஸ்டர் காந்தி, போன இடத்தில் தாண்டவம் ஆடிய இனவெறிக் கொடுமையைப் பார்த்தார். கருப்பர்களை வெள்ளையர் கொடுமைப்படுத்துகிறார்கள். இதைப்பார்த்த காந்தி கலங்கினார். என்ன உலகம் இது என்று வருந்தினார். அதோடு நின்றுவிடவில்லை அவர்.

கருப்பின மக்களை ஒன்றுதிரட்டினார். அவர்கள் படும் பாட்டை அவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவது பாவம். அதைவிடப் பாவம் அடிமைப்படுவது, மனிதனுக்கு மனிதன் அடிமைப்படுவது என்று விளக்கினார்.

கருப்பினமக்கள் ஒன்று திரண்டார்கள். அறவழிப் போராட்டம் நடத்தினார்கள். அப்படிப் போராட்டம் நடத்தியவர்களில் ஒருவர் ஹரிஜன் இனத்தவர். அவரைத் தம்மோடு தம் வீட்டில் வைத்தே ஆதரித்தார் காந்தி.

அந்தக்காலத்தில் தற்காலத்தில் உள்ளது போன்ற நவீனக்கழிப்பறைகள் கிடையாது. கழிவுப் பொருள் கண்ணுக்குத் தெரியாமல் ஓடி எங்கோ போய் ஒளிகிற வழிமுறை இல்லை.

அன்றாடம் கழிவுப் பொருளை எடுத்து எப்படியாவது அப்புறப்படுத்தவேண்டும். நகர வாழ்க்கையை நரக வாழ்க்கையாக்கிய தொல்லை பிடித்த காரியந்தான் அது.

ஒரு நாள் கஸ்தூரிபாவிடம் காந்தி சொன்னார். கழிவறையில் கிடக்கிற கழிவை அப்புறப்படுத்திச் சுத்தம் செய் என்று.

நூறு வருஷத்துக்கு முன் யாரோ ஒருவருடைய, அதுவும் விருந்தாக வந்திருக்கும் ஒரு அரிஜன் ஊழியரின் கழிவை எடுத்துச் சுத்தம் செய் என்றால் அது எப்படி ஒரு குடும்பப் பெண்ணால் முடியும்.

இன்று தான் முடியுமா அது.

கஸ்தூரி பா திகைத்தார், வற்புறுத்தினார் காந்தி. கஸ்தூரிபாவிடமோ, ஒரே மௌனம்.

முடியுமா முடியாதா என்று அதட்டினார் காந்தி. முடியாது என்பதை அன்னையின் மௌனமே வெளிப்படுத்தியது. அவ்வளவு தான் கோபம் வந்துவிட்டது காந்திக்கு. கோபத்தில் கண், மூக்கு தெரியவில்லை அவருக்கு. அன்னை கஸ்தூரிபாவின் கையைப் பிடித்துக் தரதர என்று இழுத்தார். கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியது மாதிரி அன்னையை வெளியே, வீட்டுக்கு வெளியேதான் தள்ளிவிட்டார் காந்தி.

என்ன செய்வார் அன்னை கஸ்தூரிபா. திக்கற்ற நிலைமை. இப்படியும் உண்டா கொடுமை என்று ஏங்கினார். கண்ணீரும் கம்பலையுமாய் அழுது ஏங்கியபடியே சொன்னார், ''உங்களை நம்பிவந்த அபலையை அநியாயமாய் விரட்டுகிறீர்களே, இது தான் உங்கள் காரியமா? வெட்கமாக இல்லையா உங்களுக்கு. மனைவியைக் கணவன் நடத்துகிற காரியா இது'' என்று. முற்றத்தில் நின்று இப்படிக் கேட்டுவிட்டார் அன்னை. அவ்வளவுதான். தீப்பொறி தட்டியது போல் ஒரு பொறிதட்டியது.

''நாம் செய்யவேண்டியதை, செய்ய நினைப்பதை நாம் அல்லவா செய்ய வேண்டும். அதைச் செய்யும்படி வேறொருவரைக் கட்டாயப்படுத்த நமக்கு என்ன உரிமை இருக்கிறது'' இப்படித் தட்டியது அந்தப் பொறி.

அதோடு விட்டதா அந்த ஞானப் பொறி, நாடுவிட்டு எனக்காகவே வந்திருக்கிறாள் கஸ்தூரிபா. என் நலனைப் பேணிக்காக்கவே வந்திருக்கிறாள். என்னை நம்பித்தானே வந்திருக்கிறாள் அவள். எனக்கு உதவுவதற்காக, என்னை நம்பி வந்த ஒரு பெண்ணை இப்படி அடித்துவிரட்டுவதா முறை. அதுவா வீரம். படுகோழைத்தனம் என்னுடைய காரியம் என்று உணர்ந்தார் காந்தி.

கண்கலங்கிவிட்டது காந்திக்கு. முற்றத்துக்கு ஓடிவந்தார். அன்னையின் கையைப் பிடித்தார். நான் செய்தது தவறு என்றார். மிகப்பெரிய குற்றம் என்றார். வா உள்ளே என்றார். மன்னித்துவிடு என்னை என்றார்.

அது மட்டுமா அல்ல! அன்றிலிருந்து அதிதியின் கழிவைக் காந்தியே அப்புறப்படுத்தினார். கழிவறியைச் சுத்தம் பண்ணினார்.

பொறுக்குமா தாயுள்ளம். அன்னையே முன் வந்து அப்பணியைச் செய்தார். அப்பொழுதுதான் தெளிவுபட்டது காந்திக்கு அதிகாரத்தால் (ஆணவத்தால்) ஒரு காரியமும் நடக்காது. அன்பால், பணிவால் எல்லாம் நடக்கும் என்று. அதுமட்டுமல்ல, அன்றிலிருந்து பெண்ணின் பெருமை, பெண்ணிடம் உள்ள தெய்வீக சக்தி முழுக்க முழுக்கத் தெளிவாகத் தெரிந்தது காந்திக்கு.

கஸ்தூரி பாவை அன்றிலிருந்து தாயாகவே மதித்தார் காந்தி. ஆகாகாள் மாளிகையில் 1942ல் காந்திஜியோடு சிறை இருந்த கஸ்தூரிபா உடல் நலம் குன்றி அவஷ்தைப்பட்டார். பலமாதங்கள் தொடர்ந்து கஸ்தூரிபாவுக்கு காந்தி செய்த தொண்டு இருக்கிறதே அது இப்படி அப்படி அல்ல. தெய்வத் திருத்தொண்டு என்று தான் சொல்லவேண்டும்.

இவ்வளவும் எங்கிருந்து வந்தது காந்திக்கு. வாழ்க்கையிலிருந்து வந்தது. வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து வந்தது.

வானத்திலிருந்து குதித்து வந்துவிடவில்லை அது. ஞானோபதேசத்திலிருந்தும் வந்துவிடவில்லை அது. இனி காந்தியின் உள்ளத்தை உருக்கிய தாய்மையை, பெண்மையை, உண்மையை எப்படி அனுபவிக்கிறது தமிழ் என்று பாருங்கள். வாழ்க்கைக்கு ஒளி கொடுக்கும் விளக்கு என்றால் அது பெண் (மனைவி) தான். வீட்டுக்கு ஒளி கொடுப்பதும் அவள் தான். அவள் இல்லை என்றால் ஒன்றும் இல்லை. வீடும் இல்லை; வாசலும் இல்லை.

*மழைதிளைக்கும் மாடமாய்,*
*மாண்பமைந்த காப்பாய்,*
*இழைவிளக்கின் நின்றெரியின்*
*என்னாம்; - விழைதக்க*
*மாண்ட மனையாளை*
*இல்லாயின் இல்லகம்*
*காண்டற்(கு) அரியதோர்*
*காடு.* *(நாலடியார்)*

மழை திளைக்கும் மாடம் - மேகம் முட்டும் மாட மாளிகை. இழை - திரி இழை. விழைதக்க மாண்ட மனையாள் - உற்ற துணையாக இருந்து மாட்சிமைப்பட்ட நெறிமுறைகளைக் காட்டும் மனைவி. காடு - சாதாரணக் காடா அது, அந்த வீடு? காண்டற்கு அரியதோர் காடுதான் அது.

உணர்ச்சி உண்மையாக இருந்தால் அது கவி உருவம் பெற்றுவிடும். நாலடியார் பாடல் மூலம் தெளிவாய்த் தெரிகிறது அது.

★ ★ ★

நான் என்னும் ஆணவத்தை எடுத்த எடுப்பில் உதறி எறிந்துவிட முடியாது. யாராலுமே முடியாது. வாழ்க்கையில், அனுபவத்தில்தான் உண்மையைக் காண முடியும். அதுவும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தெரியும் உண்மை. உண்மையைக் காணக்காண மெள்ள மெள்ள ஒதுங்கும் ஆணவம்.

சாதி வெறி ஒழிக, மத வெறி ஒழிக, இன வெறி ஒழிக என்று கத்தினால் மட்டும் ஒழியுமா அவை. வேர்ப்போட்டு, பதியம் போட்டு இறுகப்பற்றுமே தவிற ஒழியாது.

உண்மையைப் பார்த்தால் போதும். உண்மையின் ஒளி, எல்லை அற்ற ஒளி வானத்திலிருந்து தனியாகக் குதித்து வந்தது போல் தெரிவது பொய். பிரபஞ்சத்தின் ஊனோடும் உயிரோடும் ஒன்றிக் கலந்து கிடக்கிறது அது. அதைத் தெரிவது தான் உண்மை.

அப்படிப்பார்த்துப் பார்த்துத் தெளிந்தவர். தெளிந்து தெளிந்து உண்மை தான் கடவுள் என்னும் உறுதியில் நின்றவர் காந்தி மகான்.

தென்னாப் பிரிகாவில் ஒரு நாள் இரவில் ரயிலில் பிரயாணம் செய்கிறார். அப்பொழுது என்ன வயது அவருக்கு? முப்பத்தேழு முப்பத்தெட்டு வயதுதான். பெண்டாட்டி, பிள்ளை, வீடு, வாசல், உற்றார் உறவினர், காசு பணம் என்று பிடிப்பு எவ்வளவிருக்கும் அந்த வயதில். காந்திக்கும் ஓரளவுக்கு அப்படி இருக்கத் தான் செய்தது. ஆனால் எப்படி உதறி எறிகிறார் பிடிப்பை ஒவ்வொன்றாக அவர்.

முதல் வகுப்புச் சீட்டு வாங்கி முதல் வகுப்புப் பெட்டியில் இருக்கிறார் காந்தி. ரயில் ஓடிக்கொண்டே இருக்கிறது. ஒரு பெரிய நிலையத்தில் ரயில் வந்து நின்றது. ஏறினார் ஒரு வெள்ளையர் அவர் ஏற இறங்கப் பார்த்தார் காந்தியை. 'நீர் கருப்பர், வேறு பெட்டிக்கு ஓடும் என்றார். தன் முதல் வகுப்பு டிக்கட்டைக் காட்டினார் காந்தி. காசு கொடுத்தால் டிக்கட் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு ஆளும் வெள்ளையரோடு அடிமைக் கூலி பிரயாணம் செய்ய முடியுமா? ஓடு ஓடு என்று அதட்டினார் துரை. காந்தி மறுத்தார். அவ்வளவு தான் காந்தியின் பெட்டி படுக்கையைத் தூக்கி வெளியே (பிளாட்பாரத்தில்) வீசினார் துரை. காந்தியையும் இழுத்து வந்து வெளியே தள்ளிவிட்டார் துரை.

ரயில் ஓடியது. அர்த்த சாமம். ஊசியை இறக்கித் துளைப்பது போல் எறும்பையே குடைந்து துளைக்கிறது குளிர். அநாதையாய் நிற்கிறார் காந்தி. முன்பின் தெரியாத இடம். தெரிந்த முகம் என்று அங்கு யார் இருக்கிறார்கள்.

அந்த நிலையில் அவர் உள்ளத்திலிருந்து உதித்தது எது? நான் ஒரு பாரிஸ்டர். பாரிஸ்டராகிய எனக்கே இந்தக் கதி என்றால் விபரம் தெரியாத அபலைகள் என்னபாடு படுவார்கள் இங்கு. அவர்களுக்காக உழைப்பதுதான் வாழ்க்கை'' இப்படி உதித்தது எண்ணம்.

பாரிஸ்டராகிய என்னையா இவன் தள்ளிவிடுவது. இவனைச் சும்மா விடமாட்டேன். இவனை ஒழித்துக் கட்டுவது தான் என் காரியம்'' இப்படி நினைக்கவில்லை காந்தி.

நினைப்பு அப்படி வருவது தான் பொதுவாக எல்லோருக்கும் இயல்பு. அப்படி வந்திருந்தால் வெறும் பாரிஸ்டர் (மோகன் தாஸ்) காந்தியாகவே இருந்திருப்பார் காந்தி.

அப்படி ஒருமாயப் பிசாசுக்கு (நான் என்னும் ஆணவ வெறிக்கு) இடம் கொடுக்காமல் மக்களை நினைந்து, அந்த மக்களில் தான் ஒன்றி இருப்பதைப் பார்த்ததனால் தான், மகாத்மா காந்தி ஆனார், வெறும் பாரிஸ்டர் காந்தி.

உண்மையை அறியும் முயற்சி தான் தவம். உண்மையை அறிந்து (தெரிந்து) விட்டால் அதுதான் ஞானம். தவத்துக்கும்

மேல்நிலை அது. தவத்தைக் கடந்து மேலே ஏறி நிற்கும் நிலை அது.

ஞானிக்கு ஒரு சாதாரணக் குட்டை (குளம்) மாதிரி தவம். ஞானக் கடலில் நீந்திவிளையாடுகிறவனுக்கு குட்டம் எம்மாத்திரம்.

மகா பெரிய ஞானி காந்தி. நான் யார் என்னும் உண்மையைக் கண்டவர். (தன் உடையாள்) அவர்

இனி குதிரைப்படை வீரனுக்கு காலான்ப்படை ஒருகுட்டம் போலத்தான். மாலுமிக்கு எப்படி ஒரு சாதாரணக் குட்டமாகத் தெரிகிறதோ கடல் அப்படித்தான்.

கற்றறிந்த அறிஞனுக்கு எதிரே இருக்கும் சபை (அவையோர்) எவ்வளவு பெரியபண்டி தக்கடலாக இருந்தால் என்ன. சொல்வன்மையால் தாண்டி விடுவான் அந்தக் குட்டத்தை.

அப்படித்தான் தவத்தையே தாண்டி உயர்ந்தவர் ஞானியர். காந்தி போன்ற ஞானியர்.

நான் மணிக்கடிகை ஆசிரியர் காலத்திலும் காந்தியை ஒத்த மெய்யுணர்வு பெற்ற ஞானியர் இருந்திருக்கிறார்கள். இல்லை என்றால்

*கடல்க்குட்டம் போழ்வர்*
*கலவர், படைக்குட்டம்*
*பாய்மா உடையான்*
*உடைக்கிற்கும் - தோம்இல்*
*தலக் குட்டம் தன் உடையான்*
*நீந்தும், அவைக்குட்டம்*
*கற்றான் கடந்து*
*விடும்*

கலவர் - மாலுமி; மர, குதிரை.
தோம் இல் - குற்றம் இல்லாத.

தென்னாப்பிரிக்காவில் புதிய வெளிச்சம் பெற்ற காந்தி எண்பது வருஷத்துக்கு முன் இந்தியா திரும்பினார். ஆனால் ஒன்று, உண்மையை அறிவதற்கு உரிய வித்து, ஒளிஊற்று

ஏற்கனவே காந்தியிடம் இருந்தது. அவர் பாரிஸ்டர் படிப்புக்காக லண்டனுக்குப் போவதற்கு முன்பே இருந்தது.

வித்திருந்தாலும் அது மண்ணில் கால் ஊன்றி முளை விட்டது பின்னால்தான். வாழ்க்கையில் தான் படிப்படியாகத் தான். அங்கங்கே எதிர்ப்பட்ட சோதனைகளிலும், வேதனை களிலும் கண்ட சாதனைகளில் தான். மொத்தத்தில் உணர்ச்சியோடு ஒட்டிய அனுபவத்தில் தான்.

இனி எழுபது வருஷத்துக்கு முன் காந்திக்கு ஏற்பட்ட சோதனையின் மூலம் அவர் சாதனை, விண்ணுக்கும் மண்ணுக்குமாய் நிறைந்து ஒளிவீசுகிறதைப் பார்பபோம்.

அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டார் காந்தி என்று ஒரு வழக்கு. வழக்கை விசாரிக்கிற நீதிபதியோ ஆங்கிலேயர். ஓரளவுக்கு மனச் சாட்சி உள்ளவர் தான் நீதிபதி. ஆனாலும் சட்டம் அல்லவா அவரை வழி நடத்துகிறது.

விசாரணையின்போது காந்தியிடம் கேட்கிறார் நீதிபதி. ''ஆங்கில அரசுக்கு எதிராகவும், ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் இந்திய மக்களை நீங்கள் தூண்டிவிடுகிறீர்கள். கிளர்ச்சியின் மூலம் புரட்சியே பண்ணுகிறீர்கள் என்று உங்கள் மேல் குற்றச்சாட்டு. என்ன பதில் சொல்கிறீர்கள் நீங்கள்'' என்று.

''ஒரு நாட்டு மக்களை இன்னொரு நாட்டார் அடிமைப்படுத்துவது குற்றம். அதைவிடப் பெருங்குற்றம் ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாருக்கு அடிமைப்பட்டு உரிமை அற்று வாழ்வது. இதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். நான் நம்புவதை என் மக்களுக்குச் சொல்வது என் கடமை. உயிருள்ளவரை என் கடமையை நான் செய்து கொண்டே இருப்பேன். அப்படி நான் செய்வது தவறு என்று நீதிபதியாகிய நீங்கள் நம்பினால் இதற்கு அதிகப்பட்சமான தண்டனை என்ன உண்டோ அதை எனக்கு வழங்குங்கள். நான் செய்வது தவறு இல்லை என்று உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் வேலையை ராஜிநாமாச் செய்யுங்கள்'' இப்படிப் பதில் சொன்னார் காந்தி. இதைக் கேட்ட நீதிபதி கலங்கிவிட்டார். சத்தியத்தையே நேரில் கண்கொண்டு பார்ப்பது போல் பரவசப்பட்டார். ஆனாலும் உத்யோகம் என்று ஒன்று இருக்கத்தானே செய்கிறது. சட்டம்

என்று ஒன்றும் இருக்கத்தானே செய்கிறது. மனம் நீதியைப் பார், பார் என்று காட்டினாலும் கண்பார்க்குமா அதை.

சட்டத்தைப் பார்த்து சட்டப் படியே எழுதினார் தீர்ப்பு. எப்படி வந்தது தீர்ப்பு நீதிபதியிடமிருந்து.

''என் வாழ்நாளில் இப்படி ஒரு வழக்கை நான் சந்தித்து இல்லை. இப்படி ஒரு உத்தமனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி நான் பார்த்தது இல்லை.

நான் சட்டத்தின் பிடியில் சிக்கி இருக்கிறேன். அது சொல்கிறதைத்தான் நான் செய்ய முடியும். இன்றுள்ள சட்டப்படி ஆறு ஆண்டு தண்டனையை காந்திக்கு விதிக்கறேன்.

சட்டம் ஒன்றையே பார்த்து நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இது. உணர்ச்சிபூர்வமாக உண்மையைப் பார்த்து அரசாங்கம் இத்தண்டனையை ரத்துச் செய்தால் என்னைப் போல் மகிழ்ச்சி அடைகிறவர் வேறு யாரும் இருக்க முடியாது''

எப்படி இருக்கிறது தீர்ப்பு? இப்படித் தீர்ப்பு வழங்கிய நீதிபதியே குற்றம் சாட்டப்பட்ட காந்தியை எழுந்து நின்று வணங்கினார்.

நீதிமன்றத்தில் வைத்து நீதிபதி வாதியையோ பிரதிவாதியையோ கும்பிடுவது நீதிமன்ற மரபுக்குப் புறம்பானது. அதை எல்லாம் உதறி எறிந்துவிட்டு கருப்பர் காந்தியை வெள்ளைக்கார நீதிபதியே வணங்கினார்.

★ ★ ★

நீதிமன்றத்தில் காந்தி கொடுத்த வாக்குமூலத்தை நாம் பார்க்கவேண்டும். அதுவல்லவா சத்திய சோதனை. அப்படி எல்லாம் புடம்போட்டுப் புடம் போட்டு ஒளிபெற்ற தங்கந்தான், சொக்கத்தங்கந்தான் சத்தியம். கருணை மயமான நீதி என்பது அந்தச் சத்தியந்தான்.

அந்தச் சத்தியத்தை மனிதர்கள் மூலமாகத்தான் பார்க் முடியும். நேருக்கு நேராக அதை மட்டும் தனியாகப் பார்க்க முடியாது.

இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்''டயோ ஜீனிஸ்'' என்னும் ஞானி ஒருவர் பட்டப் பகலில் ஏதென்ஸ் நகரில் கையில் விளக்கைப் பிடித்தபடியே ஒவ்வொருவர் முகத்தையும் பார்க்கிறார். என்ன பார்க்கிறர்கள் பகலில் விளக்கைப் பிடித்தபடி என்று கேட்டால், யாராவது ஒரு மனிதன் கிடைக்கமாட்டானா என்று தேடுகிறேன் என்கிறார்.

அவர் தேடியது உண்மையை, மாசற்ற பேருண்மையை. அதை மனிதன் மூலமாகத்தானே பார்க்க வேண்டி இருக்கிறது. அந்தப் பேருண்மையின் அவதாரந்தான் காந்தி, மகாத்மா போன்று. மனிதனை, சமுதாயத்தை, வாழ்க்கையைப் பார்க்க வேண்டும். சோதித்துச் சோதித்துப் பார்க்க வேண்டும்.

*கைவிளக்கின் பின்னே போய்க்*
*காண்பார்போல், மெய்ஞ்ஞான*
*மெய்விளக்கின் பின்னேபோய்*
*மெய்காண்ப(து) எந்நாளோ. (தாயுமானவர்)*

அப்படிப்பட்ட நாள், விடிவுகாலம் எப்பொழுது வரும் என்று நமக்குத் தெரியாது. கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

★ ★ ★

எழுபத்தைந்து வருஷத்துக்கு முன் நடந்த ஒரு சம்பவம். நம் பாரத பூமியில்தான். காந்தியினிடத்து நடந்ததுதான் அதுவும்.

பீகார் மாகாணத்தில் அவுரி பயிரிடுபவர்கள் ஏராளம். அவர்களிடமிருந்து அவுரியைக் கொள்ளை அடிப்பது போல் ஏமாற்றி வாங்கி அதன் மூலம் குபேரர்கள் ஆனார்கள் வெள்ளைக் காரர்கள். வெள்ளைக்கார முதலாளிகள்.

அது மட்டுமா! கடவுள் உண்டாக்கிய பூமியையே, பீகார் மக்களுக்கு உரிய நிலத்தையே, அவர்கள் உழுது பயிரிடும் இடத்தையே எங்களுடையது என்று வளைத்துப் போட்டுக்கொண்டார்கள் வெள்ளையர்கள். அப்படி வளைத்துப் போட்ட தோட்டங்களில் ஏழை எளிய விவசாயிகளை விலைக்கு வாங்கியது போல் அமர்த்திக் கொண்டார்கள். ஆடு மாடுகளை அடித்து வசக்கு வதுபோல் மிரட்டி, துன்புறுத்தி வேலைவாங்கினார்கள். கூலியோ அரை வயிற்றுக் கஞ்சிக்கும் பற்றாது தான்.

உழைத்து உழைத்து ஓட்டாண்டிகளாய்ப் போன அந்த அநாதைகளுக்கு ''இதோ நான் இருக்கிறேன். கவலைப் படாதீர்கள். பயத்தை விடுங்கள், உங்களை நம்புங்கள், உண்மையைப் பாருங்கள், உங்களில் ஒருவன் நான், உங்களோடு இருக்கிறேன்'' என்று ஓடோடி வந்தார் காந்தி. கடவுள் அனுப்பிய தூதராகவே, தேவதூதனாகவே வந்தார் காந்தி. மகாத்மா காந்தியை நம்பி அவர் பின் வந்த அவுரித் தோட்ட விவசாயிகள், வெள்ளைக் கார முதலாளிகளிடம் நீதி வேண்டினார்கள். வற்புறுத்தினார்கள். அதற்காகப் போராடினார்கள். அறப்போர் நடந்தது தொடர்ந்து. வெள்ளைக் கார முதலாளிகளுக்குத் தோல்வி ஏற்பட்டது. அவமானமாய் இருந்தது அது. அதனால் கோபம் வந்தது. காந்தி மேலேயே கோபம் வந்தது அவர்களுக்கு.

எப்படியாவது தீர்த்துக் கட்டிவிடவேண்டும் காந்தியை என்று முடிவெடுத்துவிட்டார்கள் தோட்ட முதலாளிகள்.

தோட்ட முதலாளிகளின் சங்கத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது இந்தக் கொடூரமான கொலைப் பணி.

பாபு ராஜேந்திர பிரசாத் மூலமாக இது தெரிந்தது காந்திக்கு. ''இப்பொழுதே நீங்கள் ஊருக்குப் போய்விடுங்கள். இல்லை என்றால் உங்களைப் பார்க்க முடியாது எங்களால். பழிபாவத்துக்கு அஞ்சாத கயவர்கள் வெள்ளையர்கள். அவர்களிடம் அதிகாரம் இருக்கிறது, செல்வாக்கு இருக்கிறது. பணமோ கொட்டிக் கிடக்கிறது அவர்களிடம். இதற்கும்மேல் அவர்களை இப்போதைக்கு எதிர்த்து நிற்பது சரிப்படாது' என்றெல்லாம் வேண்டினார் ராஜேந்திர பிரசாத்''. காந்தியிடம் தான்.

புன் முறுவல் பூத்தார் காந்தி. பயப்படாதீர்கள். எல்லாம் நல்லபடியாகவே நடக்கும். குழப்பத்துக்கு இடம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருங்கள். என்று சொன்னார் காந்திமகான்.

அன்று இரவு பன்னிரண்டு மணி, நள்ளிரவு. எல்லோரும் உறங்கிவிட்டார்கள். ராஜேந்திர பிரசாத் உள்ளிட்ட எல்லோருமே தூங்குகிறார்கள். பீகாரே தூங்குகிறது. காந்தி மட்டும் தூங்கவில்லை.

## XXV

அந்த நள்ளிரவில் தன்னந்தனியாய்க் கிளம்பினார் காந்தி. எங்கே? எந்த ஒரு தோட்ட முதலாளி காந்தியைக் கொலை செய்து காட்டுகிறேன் என்று சொல்லி அதற்கான திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தாரோ, அந்த வெள்ளைக்கார முதலாளியின் பங்களாவுக்கே கிளம்பி வந்தார் காந்தி.

பங்களாக் காவலாளிகள் 'நீ யார் என்று மிரட்டினார்கள். நான் மோகன் தாஸ் காந்தி என்றார் காந்தி. எதற்காக இந்நேரம் இங்கு வந்தாய் என்றனர் காவலர். அவுரித்தோட்டச் சங்கத் தலைவரைப் பார்க்க என்றார் காந்தி. ஏன் என்றனர் காவலர். அவர்களுக்கு ஒரு யோசனை சொல்லவேண்டும், நல்ல யோசனை ஒன்று தென்பட்டது, அதைச் சொல்ல வேண்டும் என்றார் காந்தி. அப்படியானால்க் காலையில் வாரும். இப்பொழுது துரை தூங்குகிறார். எழுப்ப முடியாது அவரை என்றார்கள் காவலர். என் பெயரைச் சொல்லி எழுப்புங்கள். ஒன்றும் கண்டிக்கமாட்டார் உங்களை. சந்தோஷமாக வருவார் என்னைப் பார்க்க துரை என்றார் காந்தி. இப்படியாகக் காவலர்களுக்கும் காந்திக்கும் வாதப் போர் நடந்தது. இந்தச் சத்தத்தில் துரை எழுந்தார். காந்தி ஏன் நம்மை இந்த நேரத்தில் தேடி வந்தார் என்று கொஞ்சம் கலங்கினார். ஆனாலும் விட்டுக் கொடுக்காத வீறாப்போடு, யாரது என்று வீட்டினுள் இருந்தே சாளரத்தின் வழியாகச் சத்தம் போட்டுக் கேட்டார் துரை. மோகன்தாஸ் காந்தி என்றார் இவர் ''ஏன் இங்கு வந்தாய் இந்நேரம்'' என்று அதட்டிய படியே கையில் ரிவால்வரோடு நெருங்கிவந்தார் துரை.

உங்களுக்கு உதவத்தான் வந்திருக்கிறேன் என்றார் காந்தி. உள்ளூற மகிழ்ச்சி துரைக்கு. அப்பொழுதும் விட்டுக்கொடுக்கவில்லை வீறாப்பைத் துரை. ''என்ன உதவி. சொல். சீக்கிரமாகச் சொல்'' என்று நேருக்கு நேராக காந்தியின் எதிரிலேயே வந்து நின்றார் துரை.

அப்பொழுது சொன்னார் காந்தி. ''ஏதோ என்னைக் கொன்றுவிடத் திட்டம் தீட்டுவதாகவும், அதற்காக இப்படி, அப்படி என்று பலவிதமாக யோசிப்பதாகவும், அது காரணமாக நீங்களும், உங்கள் சகாக்களும் குழம்பித் தவிப்பதாகவும் அறிகிறேன்.

''சாதாரண மனிதன் நான். என்னைக் கொல்வதற்கு ஏன் இப்படி எல்லாம் சிரமப்படுகிறீர்கள். உங்கள் சிரமத்தை நீக்குவதற்காகவே வந்திருக்கிறேன்.

''எப்படிக் கொல்ல, எங்கே வைத்துக் கொல்ல வேண்டும், எந்தச் சந்தர்ப்பத்தில் கொல்ல வேண்டும் என்றெல்லாம் தவிக்க வேண்டாம். இதோ உங்கள் முன் நிற்கிறேன். நீங்களே என்னை இப்பொழுதே கொல்லலாம். இல்லை என்றால், என்னை எங்கு தொண்டுபோய், எப்பொழுது எப்படிக் கொல்லவேண்டுமோ அப்படியே செய்யலாம்.

''என்னை இப்பொழுதே ஏற்றுக்கொள்ளுங்கள். எனக்காக நீங்கள் அலட்டிக் கொள்ளவேண்டாம்'' என்று முடித்தார் காந்தி.

வெள்ளைக்கார துரை மனுசனாகிவிட்டார். உருகிவிட்டார். கலங்கிவிட்டது அவர்கண். இப்படி ஒரு நிலையில் யார் கண்தான் கலங்காது. நழுவும் ரிவால்வரைப் பையில் வைத்தார். காந்தியை ஆரத் தழுவினார்.'' உங்கள் கட்டளைப் படி தொழிலாளர் பிரச்சனையைக் கையாளுகிறேன் என்றார். தம் காவலரையே துணைக்கு அனுப்பி காந்தியை அவர் இடம் போய்ச் சேர உதவினார்.

நம்பமுடிகிறதா இதை? ஏதோ (பெரிய) புராணத்தில் வருகிற அடியார்கள் கதை மாதிரி அல்லவா இருக்கிறது.

அங்கஙகே நடக்கிற உண்மைகள் தான். அவைதான் கதை ஆகின்றன. எப்படி நடக்கும் இப்படி என்று நம்மைத் தடுமாறவும் வைக்கின்றன அவை.

காந்தியின் காரியமும் அப்படித்தானே. நம்ப முடிகிறதா இந்த உண்மையை. நம்ப முடியாததற்கு என்ன கரணம்? காந்தியை விட்டு அப்படி ஒரு எட்டாத தூரத்தில் இருக்கிறோம் நாம். உண்மையை விட்டு எங்கோ ஒதுக்குப்புறமாய் ஒதுங்கி நிற்கிறோம்.

எட்டாத தூரத்திலிருக்கும் உண்மையை, மெய்ப்பொருளை கிட்ட வந்து கட்டிப் பிடித்து ஆலிங்கனம் செய்யவைப்பது தான் கலை. கலைப் பண்போடு கூடிய கலை அரசி தான் கவி.

எப்படி என்று பாருங்கள்.

வானத்தையும் வையத்தையும் ஒருசேரப் பாலாபிஷேகம் செய்கிறது திங்கள். கடவுள்த் திங்கள். பால் நிலவு என்னும் தெய்வத் திங்கள். சான்றோரும் அப்படித்தான். மனிதகுலத்தின் அழுக்கையே துடைத்துத் துப்புரவு பண்ணி அலங்கரிக்கும் ஜோதிமயமானவர்கள் அல்லவா அவர்கள்.

சான்றோரும் முழு நிலாத்திங்களும் அப்படி ஒரு சேர இருக்கிறார்கள்.

*அங்கண் விசும்பின்*
*அகன் நிலாப் பாரிக்கும்*
*திங்களும் சான்றோரும்*
*ஒப்பர் மன்*

வானில் நடமாடும் மதியையும் மண்ணில் நடமாடும் சான்றோரையும் சரியாசனத்தில் வைத்தது தமிழ். அப்படிச் சேர்த்து வைத்து அழகு பார்த்த அதே தமிழ், படக்கென்று சான்றோரைச் செந்தூக்காகத் தூக்குகிறது. அப்படியே சந்திரனுக்கு மேலே, அதன் உச்சிக்கே உச்சிக்கும் மேலேயே கொலுவீற்றிருக்கச் செய்கிறது சான்றோரை.

தெய்வத்திங்களே என்றாலும் அதனிடம் ஒருகுறை (மறு) இருக்கத்தானே செய்கிறது! அந்த மறுவை வைத்தபடியே நடமாடத் தானே செய்கிறது நிலா.

அப்படி ஒரு குறை (மறு) தூசி அளவாவது உண்டா சான்றோரிடம்? அணுவளவு இருந்தாலும் தாங்குவார்களா? குறையைச் சுமந்து கொண்டு உயிர்வாழ்வார்களா அவர்கள்! மானம், மரியாதையை விட உயிரென்ன அவ்வளவு பெரிதா அவர்களுக்கு என்று உச்சியில் வைத்து ஊஞ்சலாட்டுகிறது தமிழ்; சான்றோரை!

*அங்கண் விசும்பின்*
*அகன்நிலாப் பாரிக்கும்*
*திங்களும் சான்றோரும்*
*ஒப்பர்மன் - திங்கள்*
*மறுவாற்றும்; மற்றைய*
*சான்றோர் தெருமந்து*
*தேய்வர் ஒருமா(சு)*
*உறின்* (நாலடியார்)

எப்படி மேலே மேலே கொண்டு போகிறது தமிழ் சான்றோரை. எட்டாதவானத்தையும் கட்டி அணைத்து அதையும் தாண்டி அல்லவா பார்க்கிறது தமிழ்.

★ ★ ★

1949-50ம் வருஷம் என்று ஞாபகம். நெல்லை மாவட்டத்தில் கழுகுமலை என்னும் ஊர். முருகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் புண்ணியத்தலம் கழுகுமலை. அங்கு ஒரு உயர்நிலைப் பள்ளி. தமிழாசிரியராகப் பணி புரிகிறேன் அங்கு நான் இனி இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசிப் பக்கம் உள்ளது எட்டக் காபட்டி என்று ஒரு ஊர். அதில் ஒரு பண்ணையார், இளைஞர் தான். முத்துசாமி என்பது பண்ணையாரின் பெயர்.

எழுத்தாளர், கு. அழகிரிசாமி மூலம் எனக்குப் பழக்கம் பண்ணையார் முத்துசாமி. சிறந்த இலக்கிய ரசிகர் திரு. முத்துசாமி. அதனால் எங்கள் பழக்கத்தில் உறவு ஏற்பட்டது.

திடுதிப்பென்று ஒரு நாள் கழுகு மலைக்கு வந்தார் நண்பர். என்னோடு தங்கினார். ஓட்டல் சாப்பாடுதான் கழுகுமலையில். பள்ளிக்கூட நேரம் போக மற்ற நேரம் முழுவதும் கவி, கலை, இலக்கியம் என்றே பேசிக் கொண்டிருப்போம். பொழுது போவதே தெரியாது.

இரண்டு நாள், மூன்று நாள், ஒருவாரம், பத்து நாள் என்று ஓடியது காலம். பதினோராம் நாள் அதிகாலை பல்துலக்கிக் கொண்டிருக்கிறேன் நான். ஏழு எட்டுப் பேர், ஒவ்வொருவரும் பீமசேனன் மாதிரித்தான் இனமும் கனமும். அத்தனை பேரும் திபுதிபு என்று என் ஜாகைக்குள் நுழைந்தார்கள்.

முத்துசாமி நாயுடு இருக்கிறாரா இங்கே என்று அதிகார தோரணையோடு கேட்டபடியே நுழைந்தார்கள்.

சத்தம் காதில் விழுந்தது நண்பருக்கு. படுக்கையை விட்டு எழுந்தார். அவ்வளவுதான். வந்தவர்களுக்கும் நண்பருக்கும் விவகாரம், தீராத விவகாரம். அவர்கள் போடுகிற சத்தத்தில் வீடே அதிர்கிறது. தெருவையே தூக்கி அடிக்கும்போல் இருந்தது சத்தம்.

விவகாரம் இதுதான்.

நண்பரின் தந்தையாருடன் பிறந்த பெரியப்பா ஒருவர். பெரியப்பாவின் மனைவியும் நண்பரின் தாயாரும் அக்காள் தங்கையும் ஆவர். பெரியப்பாவுக்கு வாரிசு இல்லை. நில புலம், ரொக்கம், தங்கம், வெள்ளி என்று சொத்தோ ஏராளம். நண்பரின் சொத்தைவிட ஏராளம். அவர்களுடைய சொத்தை எல்லாம் நண்பரை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறார்கள். நண்பரோ வேண்டாம் என்கிறார்.

பல மாதங்களாக, ஏன் ஒன்றிரணம்டு வருடங்களாகவே அவர்கள் இவரை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இவர் மறுத்து வந்திருக்கிறார். கடைசியில் உற்றார். உறவினர்களை வைத்து நெருக்கி இருக்கிறார்கள். அவர்கள் தொல்லை பொறுக்காமல் தான் இங்கே, கழுகு மலைக்கே ஓடிவந்துவிட்டார். அதையும் எப்படியோ மோப்பம் பிடித்து அவர்களும் வந்து விட்டார்கள் இங்கே.

இருதிறத்தாரும் என்னை வற்புறுத்துகிறார்கள். தம் தம் கட்சியில் உள்ள ஞாயத்தைச் சொல்கிறார்கள். இதை எடுத்துச் சொல்லுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள் என்னை. இரு திறத்தாருமே மாறி மாறி வற்புறுத்துகிறார்கள்.

விவகாரமோ பெரியது. இது சம்பந்தமாக நான் என்ன சொல்ல. என்ன சொன்னாலும் எடுபடாது என்று தெரியும் எனக்கு. அதனால் சிரித்துச் சிரித்து மழுப்பிவிட்டேன் இரு திறத்தாரையும் நான்.

அன்று காலையிலிருந்து மாலை வரை விவகாரம் நடந்தது. சொத்தை ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடினார்கள். ஒன்றுக்கும் அசையவில்லை நண்பர். ஒரு கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னார் நண்பர், இதற்கு மேலும் என்னை நீங்கள் தொந்தரவுபடுத்தினால் நான் எங்காவது ஓடிப்போகிறேன். எட்டாக்கா பட்டி ஊரே வேண்டாம் எனக்கு. பெண்டாட்டி, பிள்ளை ஒன்றும் வேண்டாம். என்னை மறந்துவிடுங்கள். நான் எங்காவது தொலைந்து போகிறேன்'' என்று.

வந்தவர்கள் பருப்பு வேகவில்லை. வருத்தத்தோடு போய்விட்டார்கள் ஊரைப்பார்த்து.

அவர்கள் போன பின் நண்பரிடம் சொன்னேன். அவர்கள் விருப்பப்படி சொத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது தானே என்று! ஏன் என்றார் நண்பர். தேவை என்றால் வைத்துக் கொள்வது. தேவை இல்லை என்றால் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி என்று தான தருமம் செய்வது. அதுவும் இல்லை என்றால் திருச்செந்தூர், திருப்பதி என்று கோவில் குளத்துக்கு எழுதிவைப்பது'' என்றேன். நண்பர் சொன்னார் அப்பொழுது, ''நான் தான் இந்தப் பாரத்தைத் தலையில் ஏற்றிச் சுமக்க வேண்டுமா? கழுத்துமுறியச் சுமந்து, பிறகு நானே அதை ஏன் இறக்கிவைக்க வேண்டும்? அவர்களே அதை இப்பொழுதே செய்து விடவேண்டியது தானே'' என்று.

நம் காலத்திலும் நம் கூடவே இருக்கிறார்கள் மனிதர்கள். நாமும் மனிதர்களாக வேண்டும். அதற்காகத்தான் உண்மையைப் பார்க்கிறது தமிழ். அனுபவிக்கிறது தமிழ். ஆனந்த பரவசத்தோடு கவிதைகளாய்ப் பூத்துச் சொரிகிறது தமிழ்.

மல்லிகை மாலை என்னும் இந்நூலிலுள்ள நாலடியார் பாடல்களும் நான்மணிக்கடிகைப் பாடல்களும் மணம் கமழும் மல்லிகை மலர்கள் தான். அம்மலர்களால் தொடுக்கப்பட்ட மணம் கமழ்மாலையே இம்மல்லிகை மாலை.

நாலடியாரில் நாநூறு பாடல்கள். நானூறு பாடல்களில் அறுபத்து ஐந்து பாடல்களையே இங்கு கொடுத்திருக்கிறோம். அறுபத்தைந்து பாடல்களுக்கும் தனித்தனியே விளக்கமும் கொடுத்திருக்கிறோம்.

இங்கு கொடுத்திருக்கிற அறுபத்து ஐந்து பாடல்கள் தான் எனக்குப் பொருள் விளங்கின. அவற்றைத் தான் பாடிப் பாடி அனுபவித்து வந்தேன். நண்பர்களிடமும் சொல்லி வந்திருக்கிறேன். பாடல்களைப் பாடி அனுபவிக்கும் போதும் நண்பர்களிடம் சொல்லும்போதும் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையே அந்தந்தப் பாடல்களின் தலைப்பிலும் விளக்கமாகக் கொடுத்திருக்கிறேன்.

இனி, நான்மணிக் கடிகை நூலிலோ நூறு பாடல்கள். அதில் நூற்பத்தொரு பாடல்கள் தான் எனக்கு விளங்கின. அவற்றையே விளக்கம் கொடுத்துப் போட்டிருக்கிறேன். ஐம்பது வருஷத்துக்கு மேலாகப் படித்துப் படித்து, பாடிப்பாடி, தேடித் தேடிக் கண்டது

அறுபத்து ஐந்தும், நாற்பத்து ஒன்றும் ஆக நூற்று ஆறு பாடல்கள் தான்.

நூற்று ஆறு பாடல்களும் நூற்று ஆறு உலகங்கள் தான். மனம் என்னும் பேரண்டத்தில் பூத்த நூற்று ஆறு உலகங்கள் தான். ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு உலகம். புதுப்புது உலகம்.

ஒரு உலகைச் சுற்றி வரவே ஒரு ஆயுள் நாள் போதாது. அவ்வளவு விசாலம். அத்தனை காட்சிகள். எத்தனையோ புதுமைகள். ஒவ்வொன்றும் கனவு போலத் தோன்றும். ஆனால் உண்மை. உண்மையிலும் உண்மை அவை.

பாடலைப் பாடப்பாட, அனுபவிக்க, அனுபவிக்க, மனிதர்கள் வருவார்கள், அவர்களுடைய வாழ்க்கை வரும். மனிதர்களின் விதம் விதமான பார்வை, பேச்சு, செயல், நினைப்பு, எல்லாம் வரும். அவ்வளவு தானா? சிலவற்றை மூடிமறைக்கிற காரியம், கண்ணீர், புன்னகை, ஆசை, வெறுப்பு எல்லாம் படலம் படலமாக எழுந்து வரும்.

இனி மல்லிகை மாலை என்னும் இந்நூலை அச்சிட்டு வெளியிட வேண்டி ஒளி அச்சுக்குக் கெடுத்தேன். அது அடித்து வந்தது. அப்படி வந்த ஒளிஅச்சுப் பிரதிகளைச் சரி பார்த்து, பிழை திருத்தி உதவியவர்கள் இருவர்.

ஒருவர், ரசிகமணி டி.கே.சி. அவர்களின் பேத்தியின் மகனும், இந்தியன் வங்கியில் (தென்காசியில்) பணிபுரிபவருமான, நண்பர், திரு. ஆர். (R) தீத்தாரப்பன் அவர்கள். மற்றொருவர் ரசிக மணியின் பேரர், திரு. தீப. நடராஜன் அவர்கள். இவர்கள் இருவருக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இனி, மல்லிகை மாலை என்னும் இந்நூல் வருவதற்கு முன் வெளிவந்த அற்புதத்தில் அற்புதம் என்னும் நூலை அருமை நண்பர் திரு. பாலகிருஷ்ணராஜா அவர்கள் படித்திருக்கிறார்கள். படித்து அனுபவித்ததை, ஆனந்த பரவசத்தையே கடிதம் எழுதி எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். திரு. ராஜா அவர்களின் தாய் மொழி தெலுங்கு. பெருந்தொழில் அதிபர். கலை, கவி, பண்பாடு இவற்றோடு தோய்ந்து தோய்ந்து பழுத்துக் கனிந்த பண்பாளர்.

அவர்களுடைய பண்புடைமையையும், கவி அனுபவத்தையும் அவர்கள் கடிதம் அழகாய் எடுத்து உரைக்கின்றது. அன்பர்கள் பார்த்து மகிழ வேண்டும் என்று அதை இங்கு பிரசுரித்திருக்கிறேன்.

தமிழையும், தமிழ்ப் பண்பையும் தெய்வத்தைப் பார்ப்பது போல் பார்த்து மகிழ்கிறார்கள் திரு. ராஜா அவர்கள்.

அவர்கள் பாராட்டுக்கும் உபசரிப்புக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன். அழகான முறையில் ஒளி அச்சு எடுத்துக் கொடுத்த சாவித்திரி லேசர் பிரிண்டிங் திரு. ராஜன் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

என்னுடைய நூல்களை நல்லமுறையில் அழகாக நயமாக குறித்த காலத்தில் அச்சிட்டுக் கொடுக்கிறவர்கள் சக்தி பிரிண்டிங் பிரஸ் உரிமையாளர் திரு. பாஸ்கர் அவர்கள். அவர்களுக்கும் என் மனம்கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

தமிழாசிரியர் எஸ்(S) சண்முக நாதனின் தமிழார்வம், கவியில்த் திளைத்து அனுபவிக்கும் பண்பு தெளிவாய்க் கிடக்கிறது அவருடைய கடிதத்தில். அக்கடிதத்தைப் பின் அட்டையில் கண்டுகளிக்கிறோம். அன்னாருக்கு மனம் பூர்வமான நன்றி

இப்படிக்கு

**ல. சண்முகசுந்தரம்**

# நாலடியார்

## மனிதனை வைத்துத் தான் பண்பாடு; கலையும் அப்படியே

பேரண்டத்துக்கே மணிமுடியாக இருக்கிறான் மனிதன். சாதாரணப் புழுப் பூச்சியிலிருந்து வந்தவன்தான் மனிதன். லட்சக்கணக்கான வருஷங்களாக இயற்கையானது முயன்று முயன்று, திருத்தித் திருத்தி உருவாக்கிய அற்புதந்தான் மனிதன்.

புழுப் பூச்சியிலிருந்து மனிதனைக் கொண்டு வருவதற்கு என்ன பாடுபட்டிருக்க வேண்டும் இயற்கை. எவ்வளவு பொறுமை, எவ்வளவு விட்டுக் கொடுக்கும் (தியாகம்) பண்பு, எவ்வளவு கருணை இருக்க வேண்டும் இயற்கைக்கு. எப்படியும் மனிதனை அதாவது ஆன்ம தத்துவத்தின் முழுமையை உருவாக்கிவிட வேண்டும் என்கிற இயற்கையின் உறுதிப்பாடும் ஆர்வமுந்தான் மனிதன். இயற்கைத் தாயின் லட்சியமே அதுதான்.

நீண்ட தவம் என்றுதான் சொல்ல வேண்டும் இதை. அதாவது மனிதனை உருவாக்கிய இயற்கைத் தாயின் விந்தையை.

இனி உருவத்திலும் அறிவிலும் படிப்படியாக முன்னேறி வந்த மனிதனிடம் துளித் துளியாக ஊறி வந்தன கருணையும் பொறுமையும். ஒத்துப் போகும் பண்பும் அப்படியே. விட்டுக் கொடுக்கும் பக்குவமும், தியாகமும், பக்தியுமாக உருவெடுத்து விட்டது மனித தத்துவம்.

பண்பாடு என்பது கருணையும், பொறுமையுந்தான். இந்தப் பண்பாடு இல்லை என்றால் மனிதன் இல்லை. குடும்பம் இல்லை. சமுதாயம், நாடு, அரசு, வாழ்க்கை என்று ஒன்றுமே இல்லைதான்.

குடும்பம் என்றால் தாய், தந்தை; மனைவி, மக்கள், உற்றார், உறவினர் என்று பலர் உண்டுதான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முகம். ஒவ்வொரு மனம். அப்படியே ஒவ்வொரு பிரச்சனை. ஆனாலும் அத்தனை பேரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருக்கிறார்கள்.

தொல்லைகள் இருந்தாலும் சகித்துக் கொள்கிறார்கள். ஒருவரை ஒருவர் விட்டு விடுவதில்லை. கசப்பைத் தாங்கிக்

கொள்கிறார்கள். கசப்பு ஏற்பட்டாலும் உறவின் இனிப்பை விடுவதில்லை.

குழந்தை(கள்) படுத்துகிற பாட்டை, கொடுக்கிற தொல்லையை தாங்கிக் கொள்ளத்தானே செய்கிறார்கள் பெற்றோர். கண்டித்தாலும், தண்டித்தாலும் விட்டு விடுவதில்லையே குழந்தைகளைப் பெற்றோர். அப்படியே கணவன், மனைவி, உடன் பிறப்புக்கள், உற்றார் உறவினர், ஒவ்வொருவரையும் ஒவ்வொருவரும் அனுசரித்தே போகிறார்கள். ஒருவரை ஒருவர் விட்டு விடுவதில்லை.

நண்பர், ஆன்றோர், சான்றோர், கலைஞர், விருந்தினர், ஏழை எளியவர் எல்லாரையுமே பக்குவமாகத் தாங்குகிறார்கள்.

இவ்வளவுக்கும் பொறுமை எங்கிருந்துதான் வந்ததோ மனிதனிடம்.

விபரம் தெரியாமல் தவறாக நடந்து கொள்கிறவர்களை மன்னிப்பது மட்டுமா? அவர்களுக்கு சமயம் பார்த்து உதவவும் செய்கிறார்கள்.

மனிதனை உருவாக்க இயற்கை காட்டிய கருணையும் பொறுமையும் அப்படியே மனிதனிடம் வந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

குடும்பம் என்கிற அற்புத அமைப்புத்தான் பொறுமைக்கும், கருணைக்கும் நாற்றங்கால். விளைநிலம், தாயகம்.

தேனடையைத் தேன் மொய்ப்பது போல் பொறை உடையாரை ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பார்கள் பலர்.

பலாச் சுளைக்குத் தேனீயைப் பிடித்தா விடவேண்டும். பொறையுடையார்களிடம் உறவாட மனிதர்களைப் பிடித்துக் கொண்டா வரவேண்டும்.

*அரியரோ*
*நல்லசெய் வார்க்குத்*
*தமர்*

ஒரு மனிதனை பல பேர் சுற்றமாய்ச் சுற்றிச் சுற்றி வருவது அதிசயம் இல்லையா. இந்த அதிசயத்தை ஊரறிய, உலகறியச் சொன்னால் தானே மனதுக்கு நிம்மதி.

பாண்டியனுடைய அரசவையிலே பாண்டியன் காது கொடுத்துக் கேட்கவே வந்து சொல்கிறார் கவிஞர்.

*அரியரோ*
*ஒல்லென் அருவி*
*உயர்வரை நன்நாட!*
*நல்லசெய் வார்க்குத்*
*தமர் (அரியரோ)*

அரசவையில் சமர்ப்பித்து விட்டால் நாட்டுக்கே சமர்ப்பித்த காரியந்தான்.

*பெரியார் பெருநட்புக்*
*கோடல்தான், தாம்செய்*
*அரிய பொறுப்பர்என்(று)*
*அன்றோ! — அரியரோ*
*ஒல்லென் அருவி*
*உயர்வரை நன்நாட!*
*நல்லசெய் வார்க்குத்*
*தமர் (அரியரோ) (1)*

தூய அன்புடையவர்கள்தான் பெரியார், பிறர் தவறைத் தன் தவறு என்று நினைக்கிறவர்கள் அவர்கள். அழிக்க வேண்டியதையும் ஆசீர்வதிக்கும் பொறை உடைமையாளர்கள் அவர்கள்.

அவர்களோடு பழகுகிற பழக்கந்தான் பழக்கம். உற்ற உறவு என்றால் அதுதான். நூறு பேர், இருநூறு பேர் என்று பலரோடு பழகினாலும் கிடைக்காது ஆறுதல். மன ஆறுதல். ஆனால் கருணையும் பொறுமையும் நிறைந்த பெரியவர் ஒருவர் போதும் அவருடன் பழகப் பழக அது கிடைக்கும். பெரு நட்பு என்றால் அதுதானே.

தரம் கெட்ட இழிந்த இழிவான செயலை ஒருவன் செய்தாலும் அதையும் பொறுத்துக் கொள்கிறார்கள் பெரியவர்கள். அதனால் அவர்களை நாடி வந்து உறவாடுகிறார்கள் பலர். தெரு மட்டுமா, ஊர் மட்டுமா, நாடே, உலகமே அவர்களோடு உறவாடத் தத்தவிக்கிறது.

ஏசுநாதர் மறைந்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்றும், இன்னமும் அவர் உறவுக்கு உலகம் முழுவதும் தவியாய்த் தவிக்கத்தானே செய்கிறது. நம் கண்முன் வாழ்ந்த மகாத்மா காந்தியை உலகம் முழுவதும், உலகத்தார் எல்லோரும் தம்மவராக ஏற்று இன்றும் உறவாடத்தானே செய்கிறார்கள்.

*அந்த உறவில்தான் எத்தனை ஆனந்தம் அவர்களுக்கு.*

*அரியரோ*
*நல்லசெய் வார்க்குத்*
*தமர்*

இனி, சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார் முதலமைச்சராக இருந்த பொழுது பஷீர் அகமட் என்பவர் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இது சம்பந்தமான விவாதம் காரசாரமாகவும் முடிவில் ஒரே சிரிப்பாகவும் நடந்து முடிந்தது. எந்தத் தகுதியில் பஷீர் அகமட் நீதிபதியாக நியமிக்கப்பட்டார், பரிந்துரைக்கப்பட்டார் என்பது உறுப்பினர் கேள்வி. எல்லாத் தகுதிகளாலுந்தான் பரிந்துரைக்கப்பட்டார் என்பது முதல்வரின் பதில்.

பஷீர் அகமடை விடக் கூடுதல் தகுதி உடையவர் இல்லையா என்று திருப்பினார் உறுப்பினர். இருக்கலாம், ஆனால் உயர் நீதிமன்ற நீதிபதிக்கு உரிய தகுதி அத்தனையும் பஷீர் அகமடிடம் இருக்கின்றன என்று மடக்கினார் முதல்வர். விசேஷத் தகுதிக்கு மதிப்புக் கொடுக்க வேண்டாமா என்றார் உறுப்பினர். மதிப்புக் கொடுத்தே பரிந்துரை செய்திருக்கிறது அரசு என்றார் முதல்வர். அது என்ன என்று வினவினார் உறுப்பினர். ''வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகியாக நான் செயல்பட்ட பொழுது பஷீர் அகமட்டுவின் தந்தையார் என்னைக் கைது செய்து சிறையிலடைத்தார். கடமையைச் சரிவர, நிறைவேற்றிய கனவானின் புதல்வர் என்பதை விசேஷத் தகுதியாக அரசு எடுத்துக் கொண்டது என்றார் ராஜாஜி 'நல்ல செய்வார்' என்பதற்கு இதைவிட வேறு என்ன பொருள் வேண்டும்.

(2)

கருணைக்கு (அன்புக்கு) ஈரம் என்று பெயர். அழகான பெயர். பொருத்தமான பெயர்.

ஈர நெஞ்சினர் என்றால் அருளாளர் என்று பொருள். வறண்ட உள்ளம் என்றால் அன்பில்லாதவன் என்று பொருள்.

அன்பு இருந்தால் போதும். பொறை உடைமை, தியாகம், பக்தி, அடக்கம், பணிவு, ஒழுக்கம் எல்லாம் தானாக வந்து விடும். அத்தனையும் சேர்ந்தே இருக்கும் அன்போடு.

கருணைக்கு ஊற்றுக்கண் குடும்பந்தான். தாய் தந்தையர், அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, மாமன் மைத்துனன் என்கிற உறவு முறையோடு சேர்ந்து வாழும் குடும்பம்தான்.

குழந்தைகளைப் பேணி வளர்க்கவில்லை தாய் தந்தையர் என்றால் குடும்பம் ஏது. குடும்பம் இல்லை என்றால் ஊரேது, நாடேது, உலகந்தான் ஏது. குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் தாய் தந்தையர் செய்கிறார்கள். அப்படியே ஒவ்வொருவரும் அவரவர் செய்ய வேண்டியதைச் செய்கிறார்கள்.

முறை தவறாது நிறைவேற்றும் கடமைதான் கருணை. இந்தக் கருணை உலகம் முழுவதும் நிறைந்திருக்கிறது. வானம் முழுவதும் அதுதான். நீதிமயமான கருணைதான்.

மழை மழை என்று சொல்கிறோமே அது கருணையின் திருவுருவந்தானே. புல்லிலிருந்து மனிதன் வரை அத்தனை உயிர்க் குலத்துக்கும் மழைதானே தாய். எத்தனை எத்தனை ஆண்டுகளாகத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது இந்த உலகை அந்த மழை. எப்பொழுதாவது அலுத்துக் கொண்டதுண்டா, சலித்துக் கொண்டதுதான் உண்டா அந்த மழை.

இனி சூரியனை வைத்துத்தான் மழையும். காற்றும் அப்படித்தான். அப்படி ஒன்றுக்கு ஒன்று ஆதரவாக வானமும் குடும்பம் நடத்துகிறது. அன்பின் (கருணையின்) அந்தரங்கம் என்றால் அதுதான்.

கருணை இல்லை என்றால் வேறு என்ன இருக்கும். எல்லாம் கருணையின் திருமேனிதான். அதாவது ஒவ்வொன்றும், அணுவிலிருந்து அண்டம், பேரண்டம், மனிதன், குடும்பம், அத்தனையும் அன்பின் வெளிப்பாடுதான். அது இல்லை என்றால் எதுவும் இல்லை.

*இனிப் பாடல்.*
*பெயற்பால் மழைபெய்யாக்*
*கண்ணும், உலகம்*
*செயற்பால செய்யா*
*விடினும் — கயற்புலால்*
*புன்னை கடியும்*
*பொருகடல் தண்சேர்ப்ப!*
*என்னை உலகுய்யும்*
*ஆறு (2)*

---

பெயற்பால் - பெய்ய வேண்டிய பருவத்தில். உலகம் - தாய் தந்தையர், உறவினர், அன்பர் முதலியோர். செயற்பால செய்யாவிடினும் - அவரவர் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை என்றால்; ஒருவருக்கொருவர் அன்பு காட்டவில்லை, ஆதரவாக இல்லை என்றால். என்னை உலகு உய்யும் ஆறு - உலகம் வாழ வழி இல்லைதான். அன்பு இல்லை, பொறுமை இல்லை, மொத்தத்தில் கடமை தவறாத கருணையே இல்லை, என்றால் வேறு என்ன இருக்கும் உலகில். வெறும் பாறையும் மணலுந்தான் உலகம். கயல் புலால் - காயலை அதாவது உப்பங்கழியை ஒட்டிய மணல் பரப்பில் ஒரே மீன் நெடி. புன்னை கடியும் - அந்த நெடியை புன்னை மலர்கள் தம் வலுவான நெடி மணத்தால் விரட்டி விடுகின்றன. கரை நெடுகிலும் மீனைக் கருவாடாகக் காயப் போட்டிருக்கிறது. மீன் நாற்றத்தை விரட்டி அடிக்க கரை நெடுகிலும் புன்னஞ் சோலை நிறைந்திருக்கின்றன. அப்படியொரு கடலும், பட்டினங்களும், தோணித் துறைகளும் பாண்டிய நாட்டில்.

கவிஞர் தம் அனுபவத்தைப் பாண்டிய மன்னனிடம் அவன் தர்பாரில் வைத்துக் காட்டுவதாகச் சொல்வது அருமையான நாடக நயம்.

குறிப்பு - ஆன்ம நேயத்தோடு மற்றவர்களுக்காகப் பாடுபடுவதுதான் கருணை. அதுதான் மனித தர்மம். கடமை என்பது அதுதான். வேள்வி, தவம் என்பதெல்லாம் அதன் பிரதிபலிப்புகளே.

*கடன் என்ப நல்லவை*
*எல்லாம் — கடனறிந்து*
*சான்றாண்மை மேற்கொள்*
*பவர்க்கு (குறள்)*

இந்தியா விடுதலை பெற்ற பின் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று ஒருவர் மகாத்மாவிடம் கேட்டார். சைனாவுக்குப் போய் சமூக சீர்திருத்தப் பணி செய்வேன் என்றார் மகாத்மா. கடமை (கருணை)க்கு எல்லை ஏது.

(3)

நீண்ட நெடுங் காலத்துக்கு முன் ஐரோப்பாவில் கிரேக்க நாடும், ரோம் ராஜ்யமுமே பண்பாடுடைய நாடுகள். அவற்றின் தலைநகரங்கள் முறையே ஏதென்ஸ் என்றும் ரோம் (ரோமாபுரி) என்றும் இருந்தன.

இரண்டு நகரங்களும் கோட்டை கொத்தளங்களோடு கூடிய அரண்மனைகள் என்ன, மாட மாளிகை-கூட கோபுரங்கள் என்ன இப்படிக் கண்கெள்ளாக் காட்சியாய்க் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றன.

திருமகள் கொலுவிருக்கும் இடமாக மட்டுமல்ல கலைமகள் தாண்டவமாடும் பண்பாட்டுக் களஞ்சியமாகவும் விளங்கின அவை. இரண்டிலுமே ஏதென்ஸ் நகருக்கு ஒரு தனி மரியாதை.

அத்தீனா என்றால் கிரேக்க மொழியில் கல்வி (கலை)க் கடவுள் என்று பொருள். அத்தீனா என்னும் கலைத் தெய்வத்தின் பெயரை வைத்து உண்டான நகரந்தான் ஏதென்ஸ். கலைத் தெய்வத்துக்கு கோயில் கட்டி கலையைப் பிரதிஷ்டை செய்திருந்தது அங்கு.

அத்தனை கலை வளம், அத்தனை பண்பாட்டு வளம் ஏதென்ஸில்.

இனி ஏதென்ஸுக்கு நிகரான, ஏதென்ஸை விடச் செழிப்பான நகரம் ஒன்று பூர்வத்தில் உலகில் இருந்ததென்றால் அது மதுரைதான். தென் தமிழ் நாட்டின் மதுரை மாநகரந்தான்.

கெய்ரோ, பாக்தாத், டமாஷ்கஸ் முதலிய நகரங்கள் எல்லாம் இரண்டாம் பட்சம் மூன்றாம் பட்சமாகவே இருந்தன.

இது பூர்வ கால வரலாறு. இனி, தற்காலத்தை எடுத்துக் கொண்டால் லண்டன், நியூயார்க், டோக்கியோ, பாரிஸ், மாஸ்கோ, பெர்லின், பம்பாய், டெல்லி, சிங்கப்பூர், ஹாங்காங் என்று பல நகரங்கள்.

அகன்ற வீதிகள், வானளாவிய மாட மாளிகைகள், பூங்காக்கள், நீரூற்றுக்கள், கேளிக்கை நிலையங்கள், அரண்மனை போன்ற போக்குவரத்து நிலையங்கள், மருத்துவமனைகள், விஞ்ஞானபவனங்கள், கலைக் கழகங்கள் என்று அழகுக்கு அழகூட்டும் காட்சிகள்தான்! கோயில் குளங்களுக்குப் போய் வருபவர்கள் போல லண்டன் முதலிய

நகரங்களுக்குப் போய் வருகிறார்கள் பலர். உலகின் பல பகுதிகளிலிருந்தும் வருடம் முழுவதும் நாள்தோறும் வருகிறார்கள். போகிறார்கள். காசி ராமேஸ்வரம், மெக்கா, ஜெருசலேம், வாடிகன் முதலிய இடங்களுக்குப் போவது போலவே ஆவலோடு போகிறார்கள்.

வாரக் கணக்கில், மாதக் கணக்கில்கூடச் சுற்றிப் பார்க்கிறார்கள். பிறகு வருகிறார்கள்.

சுற்றிப் பார்த்து வந்தவர்களைக் கவனித்துப் பார்த்தால் ஏதோ ஒரு ஏக்கம் அவர்களிடம் இருக்கிறது தெரிய வரும். விசாரித்தால் மெல்ல மெல்லச் சொல்கிறார்கள்.

லண்டன் போன்ற நகரங்களை எப்பொழுது பார்ப்போம் என்று ஒரு தவிப்பு இருக்கவே செய்கிறது. பார்க்கிற வரைதான் அந்தத் தவிப்பு. பார்த்து முடித்ததும் எப்பொழுது ஊர் போவோம் என்கிற தேட்டந்தான். ஊர் வந்த பிறகுதான் தெரிகிறது. இத்தனை பார்த்தும் மனதுக்குத் திருப்தி இல்லையே அமைதி இல்லையே என்று.

ஒரு சிறு பட்டி. அதில் அம்மன் கோயில் கொடை விழா. அதைப் பார்த்தாலே மனசுக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது. அது இல்லையே லண்டனிலும் நியூயார்க்கிலும் என்று மனம் தடுமாறுகிறார்கள் அவர்கள்.

கோயிலும் திருவிழாவும் இருக்கட்டும். ஒரு கலியாண வீடு, பருவமடைந்த பெண்ணின் சடங்கு வீடு, புதுமனை புகுவிழா வீடு, இங்கெல்லாம் எப்படி அமைதி கிடைக்கிறது மனதுக்கு. அந்த அமைதி உலகில் வேறு எங்காவது கிடைக்குமா?

மனுசனுக்கு மனுசன்தான் ஆறுதல். அமைதி அதில்தான். திருப்தியும் அதில்தான். அதிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் குழுமிய கூட்டத்தில் அடடா என்ன என்ன ஆனந்தம், என்ன சுகம். இந்த சுகமும் ஆனந்தமும் தொண்ணூறு மாடிக் கட்டிடத்திலோ, மின் ஏணியிலோ கிடைக்கவா செய்யும்?

இப்படி அங்கலாய்க்கிறார்கள் லட்சம் லட்சமாகப் பணத்தை தலயாத்திரை என்று தாரை வார்த்தவர்கள். இனி கவிஞர் பெருமக்கள் நிறைந்த சபையில் கிடைக்கும் ஆனந்தத்துக்கு அளவுண்டா? ஒத்த உணர்ச்சியோடு தங்கள் அனுபவங்களை

அவர்கள் பரிமாறிக் கொள்ளும் போது ஏற்படும் சுகத்துக்கு ஈடு இணை ஏது.

தேவர்கள் குடி இருக்கும் (உம்பர் உறைவார் பதி) வானுலகில்கூட அப்படி ஒரு ஆனந்தம் இல்லைதான். தப்பித் தவறி இருந்தால் அங்கு ஒரு வழி போய் வரலாம் என்று நகைச்சுவை சொட்டச் சொல்கிறார் கவிஞர், நாலடியார்.

*தவலரும் தொல்கேள்வித்*
*தன்மை உடையார்*
*இகல்இலர், எஃகுடையார்*
*தம்முள்க் குழீஇ*
*நகலின் இனிதாயின்*
*காண்பாம்; அகல்வானத்(து)*
*உம்பர் உறைவார்*
*பதி!* (3)

---

*தவலரும் - மாசு மறுவற்ற. தொல் கேள்வி - தொடர்ந்து வரும் கேள்வி ஞானம். இகல் இலர் - முரண்பாடு இல்லாத ஒத்த உணர்வுடையோர். எஃகு உடையார் - அரம் போலும் கூர்த்த அறிவினர்.*

*தம்முள் குழீஇ - கூடி இருந்து. நகலின் இனி தாயின் - அனுபவத்து ஆனந்திக்கும் இன்பம் போல் இருந்தால். தேலோகத்தில் இருந்தால்.*

*வானவர் குடி இருப்பாகிய தேவலோகத்தில் புலவர்கள் உண்டா, கலைஞர்கள் உண்டா, கலையை, கவியை அனுபவிக்கும் பண்பாடு உண்டா? இவை எல்லாம் இருந்தால் அல்லவா மனதுக்கு ஆறுதல். திருப்தி.*

*சூரியோதயம், சந்திரோதயம், காடு, மலை, அருவி, கடல், ஆறு, குளம் என்று இவைகளை எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருப்பது.*

*மனிதர்களோடு சேர்த்து வைத்துப் பார்த்தால்தான் எதற்கும் மரியாதை.*

*கோவிலில்கூட மனித நடமாட்டம் இல்லை என்றால் அழகில்லைதான். அமைதியும் இல்லை.*

*மனுசனுக்கு மனுசன்தான் ஆறுதல். அதிலும் மனிதனுடைய சிருஷ்டி, மனிதரிடம் இருந்து விளையும் அன்பு, பொறுமை, விட்டுக் கொடுக்கும் பண்பு, ஒத்துப் போகும் குணம், தியாகம் முதலிய பண்பாடுதான் ஆனந்தம். கவி, கலை, ஞானம் என்பவை பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை. பேரானந்தம் என்றால் அவற்றில்தான்.*

(4)

இனி வீட்டுக்கு வந்த மருமகள் சொன்னபடி கேட்க மாட்டேன் என்கிறாள். வயதானவர்களை மதிக்கிறதில்லை அவள். கணவனைக்கூட அவ்வளவாக மதிக்கிறதில்லை. பிறந்த இடத்து வளத்தை மனதில் வைத்துக் கொண்டே திமிர் பிடித்து அலைகிறாள் அவள்.

அப்படி அவள் நடந்து கொள்வது குடும்பப் பாங்குக்கு முரண் ஆனதுதான். அது தெரியத்தான் செய்கிறது பொறுப்பில் உள்ளவர்களுக்கு.

சகித்து அனுசரித்துத்தானே போக வேண்டி இருக்கிறது. பக்குவமாகத் திருத்தித் திருத்தித்தானே கொண்டு வரவேண்டி இருக்கிறது.

எடுத்த எடுப்பிலேயே இவள் நம் வீட்டுக்கு லாயக்கில்லை என்று தள்ளிவிட முடியுமா அவளை. அப்படி அவசரப்பட்டு, பொறுமை இல்லாமல் செய்தால் குடும்பம் என்னாவது. எத்தனை பேர் வாழ்க்கையை அது பாதிக்கும்.

---

*உம்பர் உறைவார் பதியாகிய உயர் வானத்தில் இவை எல்லாம் இல்லை. இருக்கிறது அங்கு என்று நிரூபித்தால் ஒரு தடவை போய்ப் பார்த்து வரலாம் என்று கிண்டலும் கேலியுமாகக் கும்மாளி போடுகிறது செய்யுள்.*

*தேவலோகத்தில் குடும்பம் ஏது? உற்றார், உறவினர், தாய் தந்தையர், நண்பர் என்னும் சுற்றம் ஏது? தெரு, ஊர், நாடு, சமுதாயம், விவசாயம், வியாபாரம் என்று உண்டா? கோயில், குளம், தேர், திருவிழா, மூர்த்தி, வழிபாடு என்றுதான் உண்டா?*

*அப்படியானால் மனுசனுக்கு அதுவும் உணர்வுள்ள மனுசனுக்கு அங்கு என்ன வேலை.*

*உண்மையை உணர்ந்து சிரித்து மகிழும் சமுதாயப் பண்பு இல்லாத இடம் ஒரு இடமா.*

*அது அங்கு இல்லை. இருந்தால் பார்க்கலாம் என்கிறார் நாலடியார்.*

*நகலின் இனிதாயின்*
*காண்பாம் அகல்வானத்(து)*
*உம்பர் உறைவார்*
*பதி*

குழந்தைகள் தப்பும் தவறுமாக நடந்து கொள்கிறார்கள் என்றால் அவர்களை ஒழித்துக் கட்டிவிட முடியுமா? அப்படி எல்லாம் போனால் மன்பதைக் கூட்டம் இருக்கவா செய்யும் உலகில்.

மனைவி, மக்கள், மருமகன், மருமகள் இவர்களை எல்லாம் சட்டி பானையை மாற்றுவது போல் மாற்ற முடியாது. நிரந்தர உறவினர் இவர்கள். அதாவது விடற்பாலர் அல்லர்.

இனி மாமன், மைத்துனன், சித்தப்பா, பெரியப்பா போன்ற உறவினர்களும் அப்படியே. விடற்பாலர் அல்லர்தான் அவர்களும்.

நெருங்கி உறவாடிய நண்பர்களும் அந்த வகையினர்தான். மிக்க புலமை உடையார் என்று போற்றப்படுகிற கவிஞர், கலைஞர், ஆன்றோர், சானறோர்களும் 'விடற்பாலர் அல்லர்'தாம்.

மனம் நோகும் படியான தவறு செய்து விட்டார்களே என்று கை கழுவிவிடக் கூடாது அவர்களை.

இவர்களுமா இப்படிச் செய்வது என்று நொந்து கொள்ள வேண்டியதுதான்.

நொந்து நொந்து அவர்களைப் பொதிந்து வைத்துக் கொள்ள வேண்டியதுதான். கண்ணில் குத்தெடுக்கிறதே என்று கழற்றி வீசி எறிய முடியுமா கண்ணை.

கண்ணுக்குக் கண்ணாக உறவாடுகிறவர்கள் அல்லவா அவர்கள்.

*இன்னா செயினும்*
*விடற்பாலர் அல்லாரைப்*
*பொன்னாகப் போற்றி*
*கொளல் வேண்டும் — பொன்னொடு*
*நல்லில் சிதைத்ததீ*
*நாள்தொறும் நாடித்தம்*
*இல்லத்தில் ஆக்குத*
*லால்* *(4)*

(5)

மௌலானா அபுல் கலாம் ஆசாத் பண்பாடு மிக்கவர் பக்தர். சீலமும் பெருந்தன்மையும் மிக்கவர்.

---

*இன்னா - தவறு, கேடு. பொன்னொடு - தானிய தவசம், துணிமணி பணம் இவற்றுடன். நல்இல் சிதைத்ததீ - குடி இருக்கும் வீட்டையே எரித்துக் கொளுத்தி விட்டது தீ? அடுப்புத் தீ. ஆனாலும் விடமுடியுமா நெருப்பை. நாள்தொறும் - காலம் காலமாக ஆக்குதலால் - அதுதானே சோறு ஆக்கிக் கொடுக்கிறது. தப்புச் செய்தாலும் விடமுடியுமா அடுப்பையும் நெருப்பையும்.*

*குறிப்பு - புல்லும் ஓலையும் வைத்து வேய்ந்த அழகிய கூரை வீடு. கோடை காலம், மத்தியான வெயில். அடுப்பைப் பற்ற வைத்தாள் பெண். சாதத்தைப் பொங்கி வடித்தாள். குழம்பைக் கூட்டினாள். தாளித்துக் கொட்டக் குழம்பைச் சட்டியில் ஊற்றினாள் பெண். தாளித வேகத்தில் 'குப்' என்று மேலே தாவி எழுந்தது தீ. இரண்டு மூன்று பொறி தீயிலிருந்து வெடித்து சிதறின. கூரையில் விழுந்தன. அவ்வளவுதான். வீடு பூராவும் எரிந்து விட்டது. வீடு மட்டுமா, வீட்டிலிருந்த தானிய தவசம், துணிமணி, பாத்திர பண்டம், ரொக்கம், தங்கம், வெள்ளி எல்லாம், வீட்டிலிருந்த அத்தனையுமே கண்ணை மூடி விழிப்பதற்குள் சாம்பலாகி விட்டன.*

*எல்லாம் இந்தத் தீயால், அடுப்புத் தீயால் வந்த வினை.*

*உண்மைதான். அதற்காக அடுப்பை விட்டு விடமுடியுமா, தீயைத்தான் விட்டு விடமுடியுமா.*

*தினந்தோறும் அடுப்பையும் நெருப்பையும் வைத்துத்தானே சோறு குழம்பு என்று ஆக்குகிறோம்.*

*சமைக்கவில்லை, சாப்பிடவில்லை என்றால் என்னாவது நம் கதி.*

*பொன்னொடு*
*நல்லில் சிதைத்ததீ*
*நாள்தொறும் நாடித்தம்*
*இல்லத்தே ஆக்குத*
*லால்*

*சின்னா பின்னமாக்கிய தீயைத் தேடித்தானே கொண்டு வருகிறோம் வீட்டுக்குள். ஒரு நாள் ஒரு பொழுதாவது விடமுடிகிறதா அதை.*

*உறவாடுகிறவர்களையும் அப்படித்தான். தவறுதலாக நடந்து கொண்டாலும் விடமுடியாது அவர்களை. சேர்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை.*

அரபு நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர் ஆசாத். இந்திய சுதந்திரப் போரில் தன்னை அர்ப்பணித்தவர். இருபது முப்பது வருடம் தொடர்ந்து போராடுவது, அடக்கு முறைக்கு ஆளாவது, கொடுஞ் சிறைக்குள் அடைபடுவது இவை தவிர வேறொன்றும் இல்லை என்றால் அதுவல்லவா தவம். தவ வாழ்க்கை என்றால் அதுதான்.

மௌலானா அபுல் கலாம் ஆசாதின் வாழ்க்கை அப்படி ஒரு தவ வாழ்க்கை.

* * *

1946-ம் வருடம் பிரிட்டிஷ் மந்திரிகள் மூவர் இந்தியா வந்தனர். இந்தியத் தலைவர்களோடு அதிகாரப் பரிமாற்றம் பற்றிப் பேசினர். சிம்லாவில் வைத்து நடந்தது பேச்சு.

தேசப் பிதா மகாத்மா காந்தி இந்தியா (ஒரே) இந்தியாவாக இருக்க வேண்டும். பாகிஸ்தான் இந்துஸ்தான் என்று பிளவுபடக் கூடாது இந்தியா. என் உடம்பைத் துண்டுபடுத்தினாலும் ஏற்றுக் கொள்வேன். இந்தியாவைத் துண்டாடச் சம்மதிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டார்.

மகமட் அலி ஜின்னாவோ உயிர் போனாலும் ஒரே இந்தியாவில் முஸ்லீம்கள் வாழ மாட்டார்கள். பாகிஸ்தான் பிரித்துக் கொடுத்தால்தான் அதிகார மாற்றத்துக்கு உடன்படுவோம் என்று சாதித்து விட்டார்.

மௌலானா அபுல் கலாம் ஆசாத் அப்பொழுது காங்கிரஸ் கட்சித் தலைவர்.

பட்டேல், நேரு போன்றவர்களுக்கும் விடுதலை கிடைத்தால் போதும். அது எந்த உருவத்தில் வந்தாலும் சரி என்று பட்டு விட்டது. ஆஸாத்தும் அதற்கு இணங்கினார்.

அதன் விளைவு என்னவாயிற்று.

காந்திஜிக்குத் தெரியாமலே பிரிட்டிஷ் தூது கோஷ்டியிடம் போனார் ஆசாத். இந்தியா பிளவுபட்டாலும் பரவாயில்லை. பிரிட்டிஷாராகிய நீங்கள் வெளியேறினால் போதும் என்று சொல்லி விட்டார்.

இதுதான் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முடிவு என்றும் சொல்லி விட்டார் ஆஸாத். அப்படி ஆசாத் சொல்லியது காந்திஜிக்கு இரண்டு நாள் கழித்து தெரிந்து விட்டது. ஆசாதைக்

கூப்பிட்டு ஆள் அனுப்பினார். ஆசாத்தும் வந்தார்.

பிரிட்டிஷ் மந்திரிகளைச் சந்தித்தீர்களா என்றார் காந்தி. ஆம் என்று ஒப்புக் கொண்டார் ஆசாத். என்ன வாக்குறுதி கொடுத்தீர்கள் அவர்களிடம் என்றார் காந்திஜி. உண்மையை அப்படியே சொன்னார் ஆசாத். ஒரு பெரிய கரிய மலையே பறந்து வேகமாக வந்து மண்டையைத் தாக்கியது போலிருந்தது காந்திஜிக்கு. வேதனைப்பட்டார். துடியாய்த் துடித்தார். ஆனாலும் ஆசாத்தை ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் போகலாம் என்று அனுப்பி விட்டார் ஆசாதை.

மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் ''நான் நூற்று இருபத்து ஐந்து வருடங்கள் வாழ ஆசைப்பட்டேன். இப்பொழுதே அந்த ஆசையைக் கைவிடுகிறேன். நான் அநாதை ஆகிவிட்டேன். என் பேச்சைக் கேட்கிறவர் ஒருவரும் இல்லை. கேட்பது போலக் காட்டிக் கொள்கிறார்கள். உண்மையில் யாரும் கேட்பதில்லை. இப்படி மனம் திறந்து கொட்டினார் காந்திஜி.

அதற்கும் மேலே சொன்னார் காந்தி மகான். ''போராடிப் போராடி அலுத்துப் போனார்கள் காங்கிரஸ்காரர்கள். வருகிற அதிகாரத்தை விட்டுவிட்டு இனியும் ஏன் கஷ்டப்பட வேண்டும் என்கிற நினைப்பு வந்து விட்டது காங்கிஸ்காரர்களிடம்'' என்று.

அதுமட்டுமா? இந்தியாவின் எதிர்காலம் என்ன என்று தேசமே எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம் அது. அப்பொழுது அரிஜன் பத்திரிகையில் மாங்கொட்டையில் உள்ள சத்துப் பற்றி எழுதினார் காந்திஜி.

தான் பட்ட வேதனையை அப்படி அப்படி எல்லாம் தீர்த்துக் கொண்டார் காந்தி என்னும் புண்ணிய மூர்த்தி. மற்றவர்களுக்காக தன்னையே ஒறுத்துக் கொண்டார்.

ஆசாத்தை அவர் வெறுக்கவில்லை. ஒதுக்கவில்லை. நேரு, படேல் போன்றவர்களையும் அப்படியே.

பொறுமையை அப்படிக் காப்பாற்றினார் காந்திஜி. சோதனையிலும் வேதனையிலும் காப்பது (பொறுமையைக் காப்பது) தானே அறம்.

காந்தி மகான் வளர்த்த சத்தியம் அதுதான். காந்தி மகான் போல் அறத்தையும் அறத்தில் பூக்கும் பொறுமையையும் ஒவ்வொரு குடும்பமும் எப்படி எப்படி எல்லாமோ காப்பாற்றுகிறது. பொறுமை இல்லாமல் வாழ்க்கையே இல்லை.

ஒருவர் செய்யும் தீமையை இன்னொருவர் தாங்கிக் கொள்கிறார் என்றால் அதுவல்லவா அதிசயம். இந்த அதிசயத்தைப் பாண்டியனிடமே சொல்கிறார் கவிஞர்.

*"உயர்வரை நாட" என்று கூப்பிட்டே சொல்கிறார்.*

*அறத்தின்*
*ஒருவர் பொறையே*
*உயர்வரை நாடே!*
*இருவர் தமக்கும்ஆம்*
*நட்பு*

பொறுமையைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் நட்பு கிடைக்குமா? நட்பு இல்லை என்றால் உலகில் வேறு என்ன இருக்கும். அதுதானே உலகம் முழுவதையும் கட்டிக் காக்கும் ஆகர்ஷண சக்தி. அன்பின் ரகஸ்யம். அறத்தின் மூல மந்திரம்.

*இறப்பவே தீய*
*செயினும்தன் நட்டார்ப்*
*பொறுத்தல் தகுவதொன்(று)*
*அன்றோ! — அறத்தின்*
*ஒருவர் பொறையே,*
*உயர்வரை நாட!*
*இருவர் தமக்கும்ஆம்*
*நட்பு (5)*

---

*இறப்பவே தீய செ(ய்)யினும் தன் நட்டார் - நம்மோடு ஒட்டி உறவாடுகிற ஒருவர் வரம்பு மீறி தவறு செய்தாலும்கூட. இறப்ப - அதிகமாக, அளவுக்கு மீறி, நட்டார் - நண்பர்.*

*பொறுத்தல் தருவது ஒன்று அன்றோ - அதையும் தாங்கிக் கொண்டு பொறுப்பதுதான் முறை. மனிதப் பிறவி எடுத்ததின் நோக்கமே (தகுவது) அதுதான். அறத்தின் பொறையே - சத்தியத்தின் திருமேனியே பொறுமைதான்.*

*குறிப்பு - 'ஒருவர் பொறையே இருவர்க்கும் நட்பாம்' என்று சேர்த்து வைத்தால் என்ன இருக்கும்? வெறும் விஷயம் ஒன்றே இருக்கும்.*

## தங்கம் தங்கந்தான், பித்தளை பித்தளைதான்

குழந்தையைத் தாய் வளர்க்கிற மாதிரியல்லவா நட்பை வளர்த்து வருகிறது அறம் (சத்தியம்).

*"நிலத்தினும் பெரிதே,*
*வானினும் உயர்ந்தன்று,*
*நீரினும் ஆழ்அள(வு)*
*இன்றே; — சாரல்,*
*கருங்கோல்க் குறஞ்சிப்*
*பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும்*
*நாடனொடு நட்பே"*

என்னும் சங்கப் பாடல், நட்பின் உன்னதத்தை கண்கொண்டு பார்க்கக் காட்டுகிறது. வேறு ஒரு இடத்திலிருந்து குதித்தோடி வரவில்லை நட்பு. அது நம்மிடமிருந்துதான் வெளிப்படுகிறது. நம் உடம்பில் ரத்தம் ஊறுவது போல் உள்ளத்தில் ஊறுவதுதான் அன்பு. அந்த அன்பு பெற்றெடுத்துப் போற்றி வளர்க்கும் குழந்தைதான் நட்பு.

நாம் மற்றொருவருடன் பழகுகிற பொழுதுதான் உறவாட உறவாடத்தான் இதயத்தில் அன்பு ஊறும். ஆர்வம் பெருகும். அந்த ஆர்வத்தின் உருவந்தான் நட்பு.

மனைவி மக்கள், தாய் தந்தையர், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர் இவர்களுடன் இயல்பாகவே பழகுகிறோம்.

---

*உணர்ச்சி வேண்டும், உணர்ச்சியில் வேகம் வேண்டும், அந்த வேகம் கவி உருவம் எடுக்க வேண்டும் என்றால்.*

*ஒருவர் பொறையே*
*உயர்வரை நாட*
*இருவர் தமக்கும்ஆம்*
*நட்பு*

*என்று துண்டுபட்டு வரவேண்டும். உயர்வரை நாட என்பது இடையில் புகுந்து துண்டுபடுத்துகிறது. துண்டுபட்ட இரண்டும் பழையபடி ஒட்டுவதற்கு என்ன பாடுபடுகின்றன. அந்த வேகமும் துடிப்பும் பாடலைப் பாடப் பாடத் தெரியும்.*

உறவாடுகிறோம். ஒருவரோடொருவர் பழகாமல், உறவாடாமல் முடியாது. அதனால் அன்பும், நட்பும் வீட்டிலேயே விளைகிறது. வீட்டுத் தோட்டத்திலேயே பயிராகின்றன அன்பும், நட்பும்.

ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுத்தல், ஒருவரை ஒருவர் சகித்துக் கொள்ளுதல், ஒருவரை ஒருவர் உபசரித்தல், அரவணைத்தல், பாதுகாத்தல் என்று நாளும் பொழுதும் வளர்கிறது நட்பு.

ஆழமாக வேர் விட்டு உறுதியாக ஓங்கி வளர்ந்த விருட்சந்தான் நட்பு. இத்தனை உறுதி இருந்தும் நட்பு சில சமயம் ஆட்டம் கண்டு விடுகிறது.

பணம், பதவி, அதிகாரம், செல்வாக்கு என்று வரும் போதும், ஆணவம் தலை தூக்குகிற பொழுதும் நட்புக்குச் சோதனை ஏற்படுகிறது.

அண்ணன் தம்பியே ஒருவருக்கொருவர் குழி வெட்டுகிறார்கள். உற்றார் உறவினரே பகை ஆகிறார்கள். தாய் தந்தையரே கசந்து போகிறார்கள். எல்லாம் பணம் படுத்துகிற பாடு. பணத்தை வைத்து விதி விளையாடுகிற விளையாட்டு.

வாழ்க்கையானது பெரும் புயலில் சிக்கி பெரிய போர்க்களம் ஆகிற பொழுது நட்பு தேய்கிறது.

எத்தனை வருஷம் பழகினாலும் பாகனை எதிரியாக வைத்துக் கவிழ்த்து விடுகிறதல்லவா, யானை, மதம் பிடித்த யானை. அப்படி ஆகிவிடுகிறது வாழ்க்கை. நட்பே பகையாகிவிடுகிறது.

அப்பொழுது அன்பு அமிழ்ந்து விடுகிறது. ஆணவம் நிமிர்கிறது.

இனி எத்தனை சூறாவளிப் புயல் வந்து தாக்கினாலும், சோதனைகளும், வேதனைகளும் ஏற்பட்டாலும் ஆணவத்துக்கு இடம் கொடுக்காமல் அன்பையே பார்க்கிறவர்கள் உண்டு. பார்த்துப் பார்த்துப் பரவசப்படுவார்கள் அவர்கள்.

அவர்கள் நட்புத்தான் செல்வம். செல்வத்துள் செல்வம் அது.

சாட்டையால் அடித்தாலும் நாயானது எஜமான் மேல் சினந்து பாய்கிறதா? இல்லையே. வாலைக் குழைத்து அவன் காலடியைச் சுற்றிச் சுற்றித்தானே வருகிறது நாய்.

உண்மையான நட்பும் அப்படித்தான். உண்மையான நண்பனை விடக்கூடாது. எங்கு போனாலும் அவனைத் தேடிப் பிடிக்க வேண்டும். பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். நாயனைய அன்பு மயமான நட்பைத்தான். யானை அனைய காலை வாரி விடும் நட்பை அல்ல.

*யானை அனையவர்*
*நண்பொரீஇ, நாயனையார்*
*கேண்மை கெழீஇக்*
*கொளல்வேண்டும்; — யானை*
*அறிந்தறிந்தும் பாகனையே*
*கொல்லும், எறிந்தவேல்*
*மெய்யதா வால்குழைக்கும்*
*நாய் (6)*

(2)

உல்லாசமும் மகிழ்ச்சியும் நிறைந்தது குடும்பம். இந்த நிலையில் எப்படியோ வீட்டுக்கு நாயகன் (கணவன்) தடம் புரண்டு விட்டான். கற்பு நிலையைக் கைவிட்டு விட்டான். துடியாய்த் துடிக்கத்தானே செய்வாள் பெண் (நாயகி). கண்ணீர் விடுவாள், கதறுவாள், காலில் விழுந்து கெஞ்சுவாள். ஒன்றுக்கும் மசியவில்லை அவன் போக்கு என்றால் துயரத்துக்கே ஆளாகி விடுவாள். துயர வெறியில் கடுமையான, கூர்மையான, தீப்பொறி பறக்கும் சொற்களாய் வரும் பெண்ணிடமிருந்து. மலரினும்

---

*யானை அனையவர் நண்பு ஒரீஇ - யானைக்கு மதம் பிடித்து விட்டால் தன்னை வழி நடத்திச் செல்லும் பாகனையே கொன்று விடும். அதுபோல் நட்பையே அழித்து விடும் ஆணவம் பிடித்தவர்களின் உறவு. அந்த உறவை விட்டுவிட வேண்டும். ஒரீஇ - விட்டு விடுதல். கேண்மை - நட்பை. கெழீஇக் கொளல் வேண்டும் - சேர்த்து அணைத்து. வைத்துக் கொள்ள வேண்டும். கெழுவுதல் - தழுவல். எறிந்த வேல் மெய்யதா(க) - எஜமான் கோபத்தில் எறிந்த வேல் தன் உடம்பில் பதிந்து கிடந்தாலும் எஜமான் மேல் கோபப்படாமல். வால் குழைக்கும் நாய் - சந்தோஷமாக வாலை ஆட்டி ஆட்டி எஜமானுடன் உறவாடும் நாய் நாயிடம் உண்மையான அன்பும், உறவும் உள்ளன. அப்படி உண்மையான அன்பும் உறவும் கொண்டவர்களை விடக்கூடாது. அவர்கள் நட்புத்தான் வாழ்க்கைக்கு ஒளி.*

மெல்லியவள்தான் பெண். ஆனாலும் கசக்கிப் பிழியும் துயரம் இருக்கிறதே அது அக்கினிக் குழம்பாய்க் கொட்டும். நாயகனின் மனச்சாட்சியை முள் குத்தின மாதிரி, தேள் கொட்டின மாதிரி தாக்கும். கசப்பாகத்தான் இருக்கும் ஒவ்வொரு சொல்லும்.

கசப்பாக இருந்தாலும் உண்மையில் அமுத மொழி என்றால் அதுதான்.

இனி நெறிமுறை பிசகும் ஆடவனைத் தூண்டி விடுவதற்கென்றே வலியவந்து உறவாடுவார்கள் சிலர் அந்த ஜென்மத்துக்குப் பெயர் 'குடிகெடுப்பான்' என்பது. டாப்பர் மாமா என்பது தற்காலத்து நாமம் அவர்களுக்கு.

அவர்கள் பேச்சு சர்க்கரையாக இனிக்கும். "உங்கள் பெருமையும், மகிமையும் மற்றவர்களுக்கு எப்படித் தெரியும் அண்ணே" என்றெல்லாம் கொம்பு சீவி விடுவார்கள் இவனை அவர்கள்.

"அவரைப் பாருங்கள், இவரைப் பாருங்கள். அவர்கள் ஆடாத ஆட்டமா? அவர்களுக்கு என்ன குறை வந்தது" என்றெல்லாம் உசுப்பி விடுவார்கள்.

அவர்கள் பேசப் பேச இவனுக்கு வெறி ஏறும். உச்சிக்கே ஏறும். ஆனால் அந்தச் சொல் ஒவ்வொன்றும் விஷம். ஆலகால விஷம். இனிப்பாக இருந்தாலும் கொடிய நஞ்சு ஏதிலார் சொல்.

உண்மையான இன்சொல் காதலர் சொல்லும் கடுஞ்சொல்தான்.

*காதலர் சொல்லும்*
*கடுஞ்சொல், உவந்துரைக்கும்*
*ஏதிலார் இன்சொலினும்*
*இன்சொல்லாம்; — போதெலாம்*

---

*ஏதிலார் - உண்மை இல்லாதவர். பொறுப்பற்றவர். உவந்து உரைக்கும் - இனிக்க இனிக்கப் பேசும். போது - பூத்து மலர்ந்த விரிபூ. மாதர் வண்டு - மயக்கும் அழகுடைய வண்டுகள். தண்சேர்ப்ப - குளிர்ந்த துறைமுகப் பட்டிணத்துக்கு நாயகனே. ஆவது அறிவார் பெறின் - குடும்பம், சந்ததி, வருங்காலம் இவற்றை யோசித்துப் பார்க்கிற புத்தி உடையவர்களுக்குத் தெரியும் எது இன்சொல் என்று.*

*மாதர்வண்(டு) ஆர்க்கும்*
*மலிகடல்த் தண்சேர்ப்ப!*
*ஆவது அறிவார்ப்*
*பெறின்* (7)

(3)

கரும்பு என்றால் அதில் மதுரமான சாறு இருக்கும். அமிர்தப் பால் அதாவது உயிர்ச் சத்தைக் கொடுக்கக்கூடிய வெல்லப் பாகே கரும்பில் இருக்கும்.

இனி கரும்பு போலவே வாட்ட சாட்டமாக இருக்கும். பேய்க் கரும்பு அதில் அப்படி ஒன்றும் உயிர்ச் சத்து இருக்காது. அது போலி. உண்மை இல்லை அதில்.

சுரைக்காயிலும் அப்படி உண்டு. பேய்ச் சுரை என்பார்கள் அதை.

மனிதர்களில்கூட அப்படித்தான். உண்மையான மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தக்கார் என்று பெயர். அப்படி இல்லாமல் தோற்றத்தில் மனிதனாகவும் நடவடிக்கையில் பேயாகவும், பிசாசாகவும் திரிகிற போலிகளும் உண்டு. அவர்களை எப்படித் தக்கார் என்று சொல்வது.

மனித உருவில் இருந்து கொண்டே ரத்த வெறி பிடித்த காட்டேரிகளாகவும், நரமாமிச பட்சிணிகளாகவும் திரிகிறவர்களை 'கயவர்' என்று தானே சொல்லத் தோன்றும்.

தக்கார் (உண்மையான மனிதர்) அல்லர் கயவர்.

எத்தனை காலம், யுக யுகாந்திரம் ஆனாலும் சரி, விஞ்ஞானத்தில் எத்தனை எத்தனை புதுமைகளைக் கண்டுபிடித்தாலும் சரி, பண்பாடும், சீலமும், ஞானமும், பக்தியும் மேலே மேலே சமுதாயத்தில் ஓங்கி உயர்ந்தாலும் சரி. கயவர்களும் இருக்கவே செய்வார்கள். மனிதர்கள் இருப்பது போலவே கயவர்களும் இருப்பார்கள்.

கயவர்களை யாராலும் மனிதர்களாக ஆக்க முடியாது. விஞ்ஞானத்தாலும் முடியாது. மெய்ஞ்ஞானத்தாலும் முடியாது.

மனிதன் மனிதன்தான். கயவன் கயவன்தான்.

எதிரிகளிடமும் மனிதன் மனிதனாகவே நடந்து கொள்வான். மனைவி மக்களிடங்கூட கயவன் கயவனாகத்தான் நடப்பான்.

இதை எப்படிச் சொல்கிறார் நாலடியார். சர்க்கரைப் பொங்கலையும், வேப்பம் பழத்தையும் வைத்தே சொல்கிறார்.

*தக்காரும் தக்கவர்*
*அல்லாரும் தம்நீர்மை*
*எக்காலும் குன்றல்*
*இலராவர்; — அக்காரம்*
*யாவரே தின்னினும்*
*கையாதாம்; கைக்குமே*
*தேவரே தின்னினும்*
*வேம்பு (8)*

(4)

ஒருவனிடம் என்ன இருந்து என்ன புண்ணியம். தன்மை இல்லை, மனிதத் தன்மை இல்லை என்றால் அவன் ஒரு மனிதனா? மனித உருவில் நடமாடும் பேய் அவன். பேய் குடி இருக்கும் சுடுகாடுதான் அவன் வீடு. குத்து விளக்கைப் பொருத்தி வைத்துக் குடியேற முடியுமா சுடுகாட்டில். எப்படி உறவாட பேயோடு மனிதன்.

அன்பில்லை ஒழுங்கு (நீதி) இல்லை, மனச்சாட்சியே இல்லை ஒருவனிடம் என்றால் அவன் எப்படி இருப்பான்.

தான் மட்டும் நன்றாக இருக்க வேண்டும். மற்றவர்கள் எல்லோரும் துன்பப்பட வேண்டும். கஷ்டத்துக்கு ஆளாக வேண்டும் என்று நினைப்பான். வாழ்க்கையின் குறிக்கோளே அதுதான் அவனுக்கு. இதைவிட மோசம். வயிறு புடைக்கச் சாப்பிட்டிருப்பான். உடம்பும் வாட்ட சாட்டமாக செக்குலக்கை மாதிரித்தான் இருக்கும். ஆனாலும் யார் யார் என்னென்ன வாங்கிக் கொடுத்தாலும் வாய் வழியாக வயிற்றுள் திணித்துக் கொண்டே இருப்பான். பஞ்சமாபாதகனிடமும் கேட்டு வாங்கி உண்பான்.

---

*நீர்மை - குணம். குன்றல் இலர் - விடமாட்டார்கள். அவரவர் நிலையிலேயே நிற்பார்கள். அக்காரம் - சர்க்கரைப் பொங்கல். கையாது - கசக்காது. கைக்கும் - கசக்கும்.*

மானம், வெட்கம், சூடு, சொரணை அவ்வளவையும் விட்டு விட்டான் அவன்.

வாயைத் திறந்தால் பொய்தான் வரும் அவனிடமிருந்து. கேட்கிறவர் சந்தேகப்படாமல் இருக்க. உண்மையையும் அங்கங்கே பொடி வைத்து ஊதுவது போல் சேர்த்து விடுவான் அவன். அந்தப் பொய்யோடு இடைமிடைந்த சொல் இருக்கிறதே, அது அமைதியான எத்தனை குடும்பங்களைச் சின்னா பின்னமாக்கி விடுகின்றன?

அவை பற்றி எல்லாம் கவலைப்படுவானா அவன். மனம் என்கிற ஒன்றும் அதில் (அத்தாட்சி) சாட்சி என்கிறதும் இருந்தால் அல்லவா உணர்ச்சி வரும். புத்தி வரும் அவனிடம்.

கயவர்கள் என்றால் இப்படி இப்படித்தான். இந்தக் கயவர்களை நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் நாலடியார். அவர்களுடைய அடாவடித் தனங்களைப் பார், பார் என்று காட்டுகிறார்.

நாமும் பார்க்கிறோம். பார்த்து முடித்த பின் நம்மிடம் கெஞ்சி வேண்டுகிறார் நாலடியார். இந்தக் கயவர்கள் போகிற வழியில் தயவு செய்து நீங்கள் போகாதீர்கள் என்று.

*எப்படி வருகிறது அந்த வேண்டுகோள்.*

*தான்கெடினும் தக்கார்கே(டு)*
*எண்ணற்க, தன்னுடம்பின்*
*ஊன்கெடினும் உண்ணார்கைத்(து)*
*உண்ணற்க — வான்கவிந்த*
*வையகம் எல்லாம்*
*பெறினும் உரையற்க*
*பொய்யோ(டு) இடைமிடைந்த*
*சொல் (9)*

---

*தக்கார் - நல்ல மனிதர், பண்பாளர். ஊன் - தசை. வான் கவிந்த வையகம் - ஆகாயமே பூமியை அரவணைத்து காப்பது போல் தெரிகிறது. அவ்வளவு ஆசை பூமியினிடத்து வானுக்கு. மனிதர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள் பூமியில்.*

(5)

அன்பு ஒன்று இருந்தால் போதும். ஆலகால விஷத்தையும் அமிர்தம் ஆக்கி விடும் அன்பு. அது ஒன்று மட்டும் இல்லை என்றால் அமிர்தமும் ஆலகால விஷந்தான்.

அன்பைப் பார்க்கக் கண்ணாடியா வேண்டும். முகத்தைப் பார்த்தாலே போதுமே. தகதகவென்று ஜொலிக்கும் முகத்தில் அன்பு.

முகத்தில் மட்டுமா, கண்ணில், பேச்சில், நடையில், உடையில், பாவனையில் ஒவ்வொரு அம்சத்திலும் கணகணவென்று பேசும் அன்பு.

உபசரிப்பில், ஏன் அள்ளிக் கொடுப்பதிலும் அந்த அன்பு பளிச்சிட்டு ஒளி வீசும். அடக்கம், பணிவு, மரியாதை இவைகளிலும் ஒளிவீசும் அன்பு.

பக்தியே இருக்கும் அன்பில். வேற்றுமை ஒழிந்து போகும். ஒற்றுமை அதாவது அன்யோன்யம் பரிமளிக்கும் அன்பில்.

இப்படி எல்லாம் கலகலப்போடு இருக்கிறதனால்தான் அன்புள்ள இடத்தில் கடவுளே இருக்கிறார் என்று சொல்கிறார்கள்.

அப்படியானால் அன்பில்லாத இடத்தில்?

* * *

''வாருங்கள், வாருங்கள். இந்தப் பக்கமே வரமாட்டேன் என்கிறீர்களே. வந்தாலும் ஒரு வேளைகூடக் கை நனைக்க மாட்டேன் என்கிறீர்களே. அப்படி என்ன பாவம் செய்தோம் நாங்கள்'' என்றெல்லாம் பசப்பு மொழி பேசுவார்கள் பலர்.

''ஒரு வேளையாவது நீங்கள் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்'' என்று மல்லுக்கும் நிற்பார்கள். சரி என்று ஒப்புக் கொண்டு உட்கார்ந்து விட்டால் போதும். தொலைந்தது காரியம்.

வீட்டுக்காரர் நாற்காலியில் 'ஜம்' என்று உட்காருவார். அம்மையார் வந்தவருக்கு மட்டும் உணவு பரிமாறுவார்.

'அவர்கள்' என்று வாயைத் திறப்பதற்குள்ளேயே 'அவுக சாப்பிட நேரம் ஆகும். நீங்கள் சாப்பிடுங்கள் முதல்ல'' என்று கணீர் என்று வரும் பதில்.

அம்மையார் சாதத்தை வட்டிலில் தட்டுகிற தட்டிலேயே பயந்து விடுவான். ஏண்டா உட்கார்ந்தோம் சாப்பிட என்று நொந்து போவான்.

குழம்பை அவள் கோதி ஊற்றுகிறதிலேயே தெரியும் அவர்கள் போலித்தனம்.

சாதச் சட்டி, குழம்புச் சட்டி எல்லாம் அங்கேயே இருக்கும். பரிமாறிய அம்மையார் உள்க் கட்டுக்குள் போய் விடுவார்.

சாப்பாடா அது. உண்ண உடன்பட்டது எவ்வளவு பெரிய கொடுமை.

*விருப்பிலார் இல்லத்து*
*வேறிருந்(து) உண்ணும்*
*வெருக்குக்கண் வெங்கருணை*
*வேம்பாம்: — விருப்புடைத்*
*தன்போல்வார் இல்லுள்த்*
*தயங்குநீர் தண்புற்கை*
*என்போ(டு) இயைந்த*
*அமிழ்து (10)*

---

*விருப்பிலார் இல்லத்து - உண்மையில் அன்போ பிரியமோ இல்லாதவர் வீட்டில். வேறு இருந்து உண்ணும் வெம் கருணை வேம்பு ஆம் - மனம் ஒட்டாமல் வேறுபட்டு ஒப்புக்கு உட்கார்ந்து உண்ணும் உணவு. காரசாரமான கருணைக்கிழங்குக் குழம்போடு. கூடிய உணவானாலும், அது வேப்பங்காய் போலத்தான். வெருக்குக் கண் கருணை - வெருகுப் பூனை போல் விழிக்கும் கருணை. கண்ணை உருட்டி உருட்டி விழிக்கும் அது போல் கண் கண்ணாக வட்டம் போடும் குழம்பு. நல்லெண்ணெய் அதிகம் விட்டுத் தாளித்தால் குழம்பில் குமிழ் வட்டம் தோன்றும். வெருகுக் கண் போலத்தான்! வெருகு தோன்றும்.*

*மனதோடு ஒட்டினால் அல்லவா உடலோடு ஒட்டும் உணவு.*

*விருப்புடைய தன் போல்வார் இல்உள் - தான் வேறு நாம் வேறு என்னும் வேற்றுமைக்கு இடம் கொடாத உண்மை அன்புடையார் வீட்டுக்குப் போவதே ஒரு இன்பம். வீட்டில் உள்ளவர்களைப் பார்ப்பதோ இன்பத்துள் இன்பம். இனி அவர்கள் அன்போடு உபசரித்துக் கொடுப்பது. தயங்குநீர் தண்புற்கை - புளித்த நீராகாரத்தில் போட்டுக் கரைத்த கம்பங் கூழானாலும் அதுதான் அமிழ்தம். எப்பேர்ப்பட்ட அமிழ்தம் அது. என்போடு இயைந்த அமிழ்து - உடம்போடு உடம்பாய், ரத்தத்தோடு ரத்தமாய், உணர்ச்சியோடு உணர்ச்சியாய் கரைந்து ஒன்றுபடும் அமிழ்தம் அது. தேவாமிர்தம் என்றால் அதுதான். கூழோடும் கஞ்சியோடும் அன்பல்லவா சேர்ந்து கிடக்கிறது.*

*என்பு - எலும்பு. அதாவது எலும்பாலாகிய உடம்பு.*

## கருணை இருந்தால் போதும். ஞானம் தானாக வரும்

நம் தலையில் இருக்கிறதே ரோமம். எத்தனை என்று எண்ணிப் பார்த்தோமா ரோமத்தை. அது பற்றி யோசிக்கவே இல்லை நாம். சரி போகட்டும். ஒரு ரோமத்தையாவது நாம் உண்டாக்கினோமா? இல்லை, எப்படி முளைக்கிறது ரோமம், யார் இதைப் பயிரிடுவது, வளர்ப்பது. பிறகு அறுவடை செய்வது? ஒன்றுமே செய்யவில்லையே நாம். அப்படி இருக்க எப்படி இவை எல்லாம் நடக்கின்றன. அதுவும் நம்மிடமே நடக்கின்றன.

ஒன்றுமே தெரியாது நமக்கு. சரி, ரோமத்துக்காவது தெரியுமா? எப்படி வந்தோம், எப்படி வளர்ந்தோம், எப்படி மறைகிறோம் என்று! ரோமமும் நம்மைப் போலத்தான். கேட்டால் பரக்கப் பரக்க விழிக்கும்.

ரோமத்தைப் போல ஆயிரம் ஆயிரம் தத்துவங்கள். ஒவ்வொன்றும் அப்படித்தான். ஒன்றுக்கும் தெரியாது விபரம். ஆனால் ஒத்துப் பேசி நடப்பது போல் அத்தனையும் ஒரு ஒழுங்கில், இம்மிகூடப் பிசகாத நெறிமுறைப்படி ஒரு தன்மைத் தாய் செயல்படுகின்றன.

அப்படிச் செயல்படுத்துவது யார் என்று தெரியாது. நமக்கும் தெரியாது. அவற்றுக்கும் தெரியாது. இனி தேக தத்துவத்தைவிட இதய தத்துவம் ஆழமானது. நுணுக்கமானது. கடலில் அலை எழுந்து மடங்குவது போல் உணர்ச்சிகள் தோன்றி மறைந்த வண்ணமாக இருக்கின்றன இதயத்தில். உணர்ச்சிகள் எப்படி வருகின்றன, எப்படி மறைகின்றன என்பது நமக்கும் தெரியாது. இதயத்துக்கும் தெரியாது.

இனி ஆன்ம தத்துவம் பற்றிச் சொல்ல வேண்டாம். ஆன்மா என்பது எது என்று யோசித்தாலே கண்ணும் மனமும் சுழல ஆரம்பித்து விடும்.

தேகம், மனம், ஆன்மா என்பவற்றுக்கும், நமக்கும் சம்பந்தம் இல்லை. அப்படியானால் நாம் (நான்) என்பது உண்டா, இல்லைதானே! செய்யாத ஒன்றுக்குப் பழி வந்து அதைச் சுமக்கிற மாதிரிதான் நம்கதை. ஒன்றும் இல்லாத பூஜ்யம், சைபர் தான். ஆனாலும் எதை எடுத்தாலும் நான், நான் என்று கூத்தடிக்கிறது!

என்னுடைய உடம்பு, என்னுடைய கண்டுபிடிப்பு, என் வயல், என் வயலுக்கு மட்டும் பாய்கிற கால்வாய். என் குலதெய்வம், என் பசு மந்தை என்றெல்லாம் எதை எதையோ தலையில் வைத்துச் சுமக்கிறோம்.

நாமா சுமக்கிறோம்.

எங்கும் நிறைந்த பரம்பொருள்தான் பல்வேறு கோலங்களில் தோன்றுகிறது. ஒவ்வொன்றையும் நான் நான் என்று கூத்தாட வைக்கிறது. சுமையும் அதுதான். சுமக்கிறதும் அதுதான்.

இறைவனுடைய அருள் நோக்கு இருக்கிற வரை, உடம்பு உடம்பாக இருக்கும். மனமும் மனமாக இருக்கும். ஆன்மா ஆன்மாவாக இருந்து செயல்படும். மேலே ஏறும், கீழே இறங்கும். நடக்கும், உட்காரும், படுக்கும், எழுந்திருக்கும். இனி திருவருள் நோக்கு ரோமக் கணை அளவு திரும்பினால் போதும். அத்தனையும் ஒத்துப் பேசி ஓடி விடும். மறைந்து விடும்.

கொஞ்ச காலத்துக்காவது, இரவலாகவேனும் உடம்பு, மனம், ஆன்மா எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தி நான் நான் என்று கூத்தாட வைத்திருக்கிறான் இறைவன். ஏன் இதெல்லாம் என்றால் மேலும் மேலும் அவனுடைய ஆனந்தக் கனவை, பிரபஞ்சத்தை வாழ்க்கையைச் செம்மைப்படுத்தத்தான். திருத்தத்தான்.

வயலைத் திருத்தித் திருத்திப் பண்படுத்துவது போல் வாழ்க்கையைத் திருத்தித் திருத்திப் பண்படுத்தத்தான். இத்தனை விளையாட்டும்.

இது தெரிய வேண்டும். தெரிந்தால்தான் மனிதன். அவன்தான் கற்றவன். அறிவுள்ளவன் என்றால் அவன்தான். தெரியாதவன் பாடு திண்டாட்டந்தான்.

இந்த உடம்பை, அற்புத உடம்பை, ஆயிரம் ஆயிரம் தத்துவங்கள் ஒன்றாய், ஒரு தன்மைத்தாய் நின்று இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம் போலச் செயல்படும் இந்தப் பொன் உடம்பை ஏன் சுமந்து கொண்டிருக்கிறோம் என்பதுகூடத் தெரியவில்லை என்றால் அவன் மனிதனா? அவனா கற்றவன்.

தெரிந்தால் போதும், இது நம்முடையது இல்லை என்று விளங்கி விடும். மலை முகட்டில் வந்து விளையாடும் பிஞ்சு

மேகம் கலைவது போல் கலைந்து விடும் இந்த உடம்பு என்பதும் தெரிந்து விடும்.

தெரிந்தவுடன் என்ன நடக்கும்.

பொன்னுடம்பு மண்ணாய், சாம்பலாய் மறைவதற்குள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்துவிட வேண்டும் என்கிற ஆத்திரம் வரும். வேகமும் வரும். பிறகு செயல்படச் செயல்பட அமைதிதான், நிம்மதிதான். ஆனந்தமே தான்.

*யாக்கையை யாப்புடைத்தாப்*
*பெற்றவர் தாம்பெற்ற*
*யாக்கையால் ஆய*
*பயன்கொள்க: — யாக்கை*
*மலையாடு மஞ்சுபோல்த்*
*தோன்றிமற் றாங்கே*
*நிலையாது நீத்து*
*விடும்* (11)

(2)

பூதம் போல் கூடவே இருக்கிறது உடம்பு. தூங்கும் போதும் சரி, விழித்தாலும் சரி கூடவேதான் இருக்கிறது உடம்பு. அல்லும் பகலும் சேர்ந்திருக்கிற உடம்பே நமக்குச் சொந்தம் இல்லை. எந்த நேரத்தில் நம்மை அநாதை ஆக்கி விட்டு அது ஓடும் என்பது நமக்குத் தெரியாது. அப்படி ஒன்றுபட்டு இருக்கிற உடம்பே நமக்குச் சொந்தம் இல்லை என்றால் வயல் நமக்கு எப்படிச் சொந்தமாகும். தென்னந்தோப்பும் மாந்தோப்பும் சொந்தம் ஆகுமா? பசுவும் எருமையுமா நமக்குச் சொந்தம்.

வயலில் உள்ள மண்ணில் ஒரு துளி அளவு மண்ணைக்கூட நாம் உண்டாக்கவில்லை. ஒரு சொட்டுத் தண்ணீரை உண்டாக்கினோமா, அதுவும் இல்லை. காற்றோ, சூரிய ஒளியோ நாம் உண்டாக்கியதில்லையே. பிறகு எப்படிச் சொந்தமாகும் வயல்.

---

*யாக்கை - உடம்பு. யாப்பு உடைத்தா(க) பெற்றவர் - உலையாத உருப்படியாகப் பெற்றவன், மனிதன். மஞ்சு - பிஞ்சு மேகம்.*

ஒரு பிடி தவசத்தை உண்டாக்க முடியுமா நம்மால். ஒரு சுளை பருத்தியைத்தான் உண்டாக்க முடியுமா நம்மால். எல்லாம் அவனுடைய காரியம். தெரிய வேண்டியது இதுதான்.

தெரிந்தால் போதும் செல்வம் நம்முடையது இல்லை. அது சமுதாயத்துக்குரியது. அங்கிருந்துதான் நம்மிடம் வந்தது. அப்படியானால் சமுதாயத்தை நோக்கியே அது போக வேண்டும்.

இப்படி உணர்ந்து செயல்படுவான் மனிதன். ஒரு கஷ்டமும் இல்லை அதில். உடம்பாவது போனால் போனதுதான். செல்வம் அப்படி அல்ல. கொடுக்கக் கொடுக்க மறுபடி மறுபடி வரும். கொடுக்க மாட்டேன் என்று மல்லுக் கட்டினால்தான் எட்டி உதைக்கும். உதைத்துத் தள்ளி விட்டு ஓட்டமாய் ஓடி விடும் செல்வம்.

இதை உணராத கொடுமையால் தானே உற்றவர்கள், உறவினர்கள், நண்பர்கள் வறுமையில் வாடினாலும் கல்லுனி மங்கனாய் இருக்கிறான் கருமி.

*நடுக்குற்றார் துன்பம்*
*எவன்கொல் துடையார்!*
*கொடுத்துத்தான் துய்ப்பினும்*
*ஈண்டுங்கால் ஈண்டும்;*
*மிடுக்குற்றுப் பற்றினும்*
*நில்லாது செல்வம்*
*விடுக்கும் வினைஉலந்தக்*
*கால்* *(12)*

---

நடுக்குற்றார் - வறுமையில் நடுங்குகிறவர்கள். எவன்கொல் துடையார் - ஏன் உதவ மாட்டேன் என்கிறான் கருமி. ஈண்டுங்கால் ஈண்டும் - கொடுத்தாலும் பெருகவே செய்யும் செல்வம். விடுக்கும் வினைஉவந்தக்கால் - போக வேண்டிய நேரம் வந்து விட்டால். மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம் - இறுக்கிப் பிடித்துக் கட்டிப் போட்டாலும் ஓடி விடும் செல்வம்.

குறிப்பு - கிட்டத்தட்ட உடம்பு போலத்தான் செல்வமும்.

(3)

கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது மழை. எங்கு பார்த்தாலும் வெள்ளக் காடு. அறுவடையும் இல்லை. கதிரடிப்பும் இல்லை. வயலில் நஷ்டம். தோப்பிலும் அப்படியே. மேய்ச்சலுக்கு மாடுகளை அனுப்பக்கூட வழி இல்லை. கஷ்டந்தான். ஒரு வேலையும் நடக்க மாட்டேன் என்கிறது. எரிச்சலாகத்தான் இருக்கிறது. எரிச்சலில் வசவில்கூட இறங்கி விடுகிறோம் மழையை.

ஏன் இப்படிக் கொட்டித் தொலைக்கிறாய். விட்டுத் தொலையேன். கொஞ்சமாவது வெறிக்கக் கூடாதா என்றெல்லாம் கேட்கிறோம் மழையிடம்.

பெய்தது போதும் நிறுத்து என்றுகூட கோபத்தில் உத்தரவு போட்டு விடுகிறோம்.

நம்முடைய வேண்டுகோளோ, உத்தரவோ எடுபடுமா மழையிடம். பெய்யும் மழையைத் தடுக்கவும் முடியாது. பெய்யாது பொய்க்கும் மழையை 'பெய்' என்று சொல்லிப் பொழிய வைக்கவும் முடியாது.

மழைக்கு முன் நாம் யார்? செல்வமும் அப்படியே. வருகிற நேரத்தில் நாலா வழிகளிலிருந்து வந்தும் சேரும் செல்வம். வந்து கொட்டுகிற செல்வத்தை வராதே என்று தடுத்து நிறுத்த முடியாது நம்மால். அது போலவே செல்வமானது நம்மை விட்டுப் போக நினைத்து விட்டால் போகாதே, விடமாட்டேன் என்று தடுக்க முடியுமா நம்மால்.

அது பாட்டுக்கு வரும். அது பாட்டுக்குப் போகும். நிச்சயம் போய் விடும் என்பது தெரிய வேண்டும். தெரிந்தால் அது போவதற்குள் அதை வைத்து எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்யலாம்.

*அதுதான் மனிதனாகப் பிறந்த நம்முடைய கடமை.*

*உறற்பால நீக்கல்*
*உறுவற்கும் ஆகா;*
*பெறற்பால் அனையவும்*
*அன்னவாம்; — மாரி*

*வறப்பில் தருவாரும்*
*இல்லை, அதனைச்*
*சிறப்பில் தணிப்பாரும்*
*இல் (13)*

(4)

மழை இருக்கட்டும். அது நம் கைக்கு எட்டாது. முப்பதனாயிரம் அடி உயரத்துக்கு மேல் வானில் சஞ்சரிக்கிற காரியம் மழை. அது நம் சொன்னபடி கேட்காதுதான். இனி நம் தோட்டத்தில், நம் வீட்டுத் தோட்டத்திலேயே இருக்கிறது விளா மரம். அதற்கு நாம்தான் நீர் பாய்ச்சுகிறோம். உரம் போடுகிறோம். தரையைக் கொத்திக் கொடுக்கிறோம்.

சாப்பாடு போட்டு துணிமணி கொடுத்து சீவிச் சிங்காரித்து தொட்டிலாட்டி உறக்காட்டுவது போல், ஊஞ்சலில் வைத்து ஆட்டுவது மாதிரியே சகல தொண்டும் செய்கிறோம் விளா மரத்துக்கு. அப்படி இருந்தும் நம் சொல்லைக் கேட்கிறதா விளா மரம்.

எத்தனை பழங்களை அது உண்டு பண்ணுகிறது. அத்தனை பழங்களும் பந்து போல உருண்டு திரண்டு வட்டமாகத்தானே இருக்கின்றன. ஒன்றிரண்டு பழத்தையாவது சதுரமாகக் கொடு, இல்லை, நீளமாகவேனும் கொடு என்று சொன்னால் கேட்குமா மரம், விளா மரம்.

நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. நாம் வைத்து வளர்த்த மரமே நமக்குச் சொந்தம் இல்லை. அப்படி இருக்க, எங்கிருந்தோ வந்த செல்வம் நமக்கு எப்படிச் சொந்தம்?

விளா மரம் போலத்தான் களா (மரமு) (ச்செடியு)ம். அது கொடுக்கும் கனி ஒரே கருப்பு. அதைச் சிவப்பாகக் கொடு என்றால் கேட்குமா களா.

---

*உறற்பால - தேடி வரும் வறுமையை, வறுமைத் துன்பத்தை. உறுவற்கும் நீக்கல் ஆகா - கஷ்டத்தில் துடிக்கிறவன் 'போ, போ' என்று விரட்டினாலும் போகுமா? பெறல் பால் அனையவும் அன்ன - அது போலவே வருகிற செல்வத்தை வராதே என்று தடுக்கவும் முடியாது. மாரி - மழை. வறப்பில் - பெய்யாது பொய்த்தால். சிறப்பில் - கொட்டினால்.*

நம் அதிகாரம் செல்லுபடியாகாது அங்கே. செல்வத்திடமும் அப்படியே.

எல்லோரும் குபேரர்களாக இருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். முடியுமா அது. ஒவ்வொருவருக்கும் இவ்வளவு இவ்வளவு என்று ஒரு கணக்கு இருக்கிறது. மஞ்சாடிகூடத் தவறாது கணக்கு.

*வளம்பட வேண்டாதார்*
*யார்யாரும் இல்லை,*
*அளந்தன போகம்*
*அவரவர்க்(கு) அற்றே;*
*விளங்காய் திரட்டினார்*
*இல்லை, களங்கனியைக்*
*காரெனச் செய்தாரும்*
*இல்* *(14)*

(5)

அன்பு இருந்தால் போதும். செம்பையும் பொன்னாக்கி விடும் அன்பு. கரியையும் வயிரம் ஆக்கி விடும். கட்டி வயிரமே ஆக்கி விடும் அன்பு.

அன்பு இருந்தால் பரிவு வரும். பிறர் கஷ்டம் தன் கஷ்டமாக இருக்கும். இன்னொருவன் பசியால் நடுங்குகிறான் என்றால் பரிவுள்ளவனுக்கு நடுக்கம் வந்து விடும். கம்பளி உடைகள், போர்வைகள் எத்தனை போர்த்தி இருந்தாலும் நடுக்கம் விடாது அவனை. பசித்தவன் நடுக்கம் நின்ற பிறகே இவன் நடுக்கம் நிற்கும்.

வறுமையைப் பற்றிக் கவலைப்பட மாட்டான் பரிவுள்ளவன். அரை வயிற்றுக்குத்தான் உணவு இருக்கிறது. பிறனொருவன் பசி பொறுக்க முடியாமல் வந்து நிற்கிறான்.

---

*யார் யாரும் இல்லை - ஒருவரும் இல்லை. அவரவர்க்கு அற்றே - ஒவ்வொருவருக்கும் இவ்வளவு இவ்வளவென்று அளந்து வைத்திருக்கிறது. அது கூடவும் செய்யாது. குறையவும் செய்யாது. கார்என - கருப்பாக.*

என்ன செய்வான் பரிவுள்ளவன். அரை வயிற்றுச் சோற்றை அவனுக்கும் கொடுத்துத் தானும் உண்பான். இரண்டு பேருக்கும் வயிறு நிறைந்து விடும்.

ஆகாரம் மட்டுமா உள்ளே போனது. தூய அன்பும் சேர்ந்தல்லவா வயிற்றுள் போனது.

உண்மையிலிருந்து வருகிறது பரிவு. ஏதோ உபதேசத்திலிருந்து வருவதில்லை பரிவு. எல்லோரும் மனிதர்கள். எல்லோரும் இறைவனுடைய குழந்தைகள். யாரும் அன்னியம் இல்லை என்கின்ற சத்திய தரிசனத்தின் குழந்தைதான் பரிவு.

அப்படி ஒரு பரிவு இல்லை என்றால் மனிதனிடம் என்ன இருந்து என்ன பலன். பூமிக்குப் பாரந்தான் அவன்.

* * *

பாவம் ஏழை எளியவர்கள் என்ன செய்வார்கள். அடித்துப் பிடுங்க முடியுமா அவர்களால். கருமியானவன் குவித்து வைத்திருப்பது திருட்டுச் சொத்துத்தான். ஆனாலும் அவர்களால் பறிக்க முடியவில்லை அவனிடமிருந்து செல்வத்தை.

அதனால் கருமி, கஞ்சன், லோபி என்று சபித்து விட்டுச் சும்மா கிடக்கிறது ஏழை படும்பாடு.

*இம்மி அரிசித்*
*துணையானும் வைகலும்*
*நும்மில் இயைவ*
*கொடுத்துண்மின் — நும்மைக்*
*கொடாஅ தவர்என்பர்*
*குண்டுநீர் வையைத்(து)*
*அடாஅ அடுப்பின்*
*அவர்!* (15)

---

*துணையானும் - அளவாவது நும்மில் இயைவ உங்கள் (வீட்டு) வசதிக்குத் தக்கபடி. கொடுத்து உண்மின் - பிறர் பசி ஆற உதவுங்கள். பிறர் பசிக்க உண்ணாதீர்கள். கொடாதவர் - கருமி. குண்டுநீர் வையம் - ஆழமான கடல் சூழ்ந்த உலகம். அடா அடுப்பினவர் - உலை ஏற்ற வழி இல்லாத வறியவர்.*

## மூடன் என்றால் அவன் கருமி தான்

பேதையில் பேதை அதாவது முழுக் கிறுக்கன் யார் என்றால் அவன் லோபிதான். மூட்டை மூட்டையாய்க் கட்டி வைத்திருப்பான் பணத்தை. ஆனால் அதன் மேல் கையை வைக்கவே பயப்படுவான். கட்டிய மனைவி ஒரு புடவைமேல் ஆசைப்படுகிறாள். அதை வாங்கித் தருமாறு கெஞ்சுகிறாள். வாங்கிக் கொடுப்பானா கருமி. மனைவி மேல் எரிந்து விழுவான். 'எங்கு போகப் பணத்துக்கு' என்று கூசாமல் புளுகுவான்.

பெற்ற தாய் ஜன்னியில் துடித்தாலும் அப்படித்தான் புலம்புவான். பிள்ளைகள் படிக்க ஆரம்பித்தால் பணம் செலவாகுமே என்று மாடு கன்றுகளோடு பழக விடுவான்.

கருமி, லோபி, கஞ்சன் என்று எத்தனையோ பெயர் பேதைக்கு.

அவனைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். வாரக் கணக்கில் மாதக் கணக்கில் கதை கதையாகச் சொல்லலாம். வருஷக் கணக்கில் சொன்னாலும் அரை குறையாகத்தான் இருக்கும் விபரம். முழு விபரத்தையும் சொல்ல முடியாது. அதே போல எழுதவும் முடியாது. வசனத்துக்குக் கட்டுப்படாது அவன் பேதைமை.

ஆனால் கவியில் சிக்கி விடுவாள். ஒரு பாடல் போதும். வெண்பாவோ, விருத்தமோ ஒன்று போதும். ஏன் அதன் அடி ஒன்று போதும். அதில் சிக்கி விடுவான். வசமாக மாட்டிக் கொள்வான் கருமி. அதாவது பேதையில் பேதை.

அப்படி நேருக்கு நேராக அவனை எந்த உரைநடையாலும் காட்ட முடியாது. கவிதான் நின்று காட்ட முடியும். இப்பொழுது அவனை நேருக்கு நேர் நின்று பார்க்கிறோம் கவியில். அதனால் திருப்தி உண்டாகிறது. "இப்படியா அலைகிறான் பேதை. இதுவரை தெரியாமல் போய் விட்டதே இவனைப் பற்றி" என்னும் ஆச்சர்யமே அடைகிறோம்.

*எப்படி என்று பாருங்கள்.*
*உண்ணான், ஒளிநிறான்,*
*ஓங்கு புகழ்செய்யான்,*

*துன்னரும் கேளிர்*
*துயர்களையான் — கொள்ளே*
*வழங்கான் பொருள்காத்(து)*
*இருப்பானேல், ஆஅ*
*இழந்தான் ஒழிந்தான்*
*அவன் (16)*

(2)

இன்னும் அவனை (கருமியை) எப்படித் தோலுரித்துக் காட்டுகிறது தமிழ் என்று பார்க்கலாம். உண்ணாமல், உறங்காமல் பணம் பணம் என்று வெறிபிடித்து அது ஒன்றையே சேர்த்தான். சேர்த்துக் குவித்தான் லோபி. குவித்த பணத்தை பூட்டியும் வைத்தான். இரும்புப் பெட்டிக்குள் போட்டுத் திணித்தே பூட்டி வைத்தான்.

அடிக்கடி பெட்டியைத் திறந்து பார்ப்பான், வங்கிக் கணக்குகளையும், நோட்டு (கரன்ஸி) கட்டுகளையும் எண்ணிப் பார்ப்பான். பிறகு பூட்டுவான். பூட்டின பிறகும் கைப்பிடியை இரண்டு மூன்று தடவை இழுத்துப் பார்ப்பான். சரியாக விழுந்திருக்கிறதா தாழ்ப்பாள் என்கிற பயத்தில்தான்.

இப்படியும் ஒரு காவல்காரன் உண்டா என்று இரும்புப் பெட்டியே திகைத்து விடுகிறது. என்னடா இது! நம்மைவிட இவன் கரடு முரடாகவல்லவா இருக்கிறான் என்று.

சிரிப்பே வந்து விடுகிறது இரும்புப் பெட்டிக்கு. சிரிப்பில் சொல்கிறது. ‘சரியான பைத்தியம் (ஏழை)தான். இந்த லோபி என்று.

---

*உண்ணான் - ஆசைப்பட்டவதை வாங்கிச் சாப்பிடுவானா, வயிறாரத்தான் சாப்பிடுவானா? மாட்டான். ஒளிநிறான் - இருளடைந்துதான் இருப்பான். துப்புரவான உடை உடுத்த மாட்டான். சமுதாயப் பழக்கம், சமூகப் பழக்கம் என்று செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வானா? கல்யாண வீட்டுக்குப் போக மாட்டான். போனாலும் மொய் எழுத மாட்டான். நழுவி விடுவான். துள்ளரும் கேளிர் - கைவிட முடியாத உறவினர். கொள்ளே - அடடா. ஆஅ - அந்தோ பரிதாபம். இழந்தான் ஒழிந்தான் - அடையாளம் இல்லாமலே போய் விட்டான்.*

''எனக்கும் இவனுக்கும் என்ன வேறுபாடு? ஒரு தம்பிடியைக்கூட வெளியே விடமுடியாது என்னால். இவனும் அப்படித்தானே'' என்று.

*எனதென(து) என்றிருப்பன்*
*ஏழை பொருளை;*
*எனதென(து) என்றிருப்பன்*
*யானும்; — தனதென்று*
*தானங்(கு) அதனை*
*வழங்கான், பயன்துவ்வான்*
*யானும் அதனை*
*அது (17)*

(3)

அன்பு என்பது தெய்வ மலர். அதன் மணந்தான் பண்பாடு, சீலம், ஒழுக்கம் எல்லாம். அன்பின் வாசனைதான்.

பரிவில்லை, இரக்கம் இல்லை, பிறருடைய லாப நஷ்டத்தைத் தன்னுடையதாகக் கொள்ளும் ஒருமை உணர்ச்சி இல்லை என்றால் அவனிடம் என்ன இருந்து என்ன புண்ணியம்.

இன்னொருவன் துயரத்தைத் தாங்க முடியாமல் தன்னிடம் உள்ளதை, தன்னையே கொடுத்து உதவுகிற கொடைதான் பரிவு. மனிதப் பிறப்புக்கு அதுதான் அழகு. பண்பாடு என்பது அதுதான்.

கொடை (தியாகம்) ஒன்றுதான் நிலைத்து நிற்கும். சாகா வரம் பெற்றது என்றால் அதுதான். பிறர் துயர் நீங்க உதவுகிறதுதான். தியாகந்தான் கொடை.

தியாகத்தை (கொடையை)விட வேறு என்ன பாதுகாப்பு இருக்கிறது மனிதனுக்கு. போகிற போகிற இடத்துக்கெல்லாம்

---

*ஏழை - கருமி. அவனைப் போல வேறு ஏழை உண்டா? எனது எனது என்றிருப்பன் பொருளை - பூட்டி வைத்த செல்வத்தை என்னது என்னது என்று நம்பிக் கொண்டிருக்கிறான். எனது எனது என்றிருப்பன் யானும் - இரும்புப் பெட்டியாகிய நானும் அப்படித்தான் நம்புகிறேன். என்னால் இன்னொருவருக்கு கொடுக்க முடியுமா இல்லை அனுபவிக்கத்தான் முடியுமா. முடியாது. அவனும் அப்படித்தானே! நான் ஒரு காவல்காரன். அவன் ஒரு காவல்காரன்.*

வழித்துணை அது ஒன்றுதான். எத்தனை ஜென்மம் எடுக்கட்டுமே அவன், அத்தனை ஜென்மத்துக்கும் வழித்துணை அதுதான். சேர்ந்து வந்து துணை புரியும் கொடை.

மூவேழு இருப்பத்தோரு உலகில் உள்ளவர்களும் அவன் நாமத்தை மந்திரம் உச்சரிப்பது போல் உச்சரிப்பார்கள். பூமியில் ஒரு கோடியில், ஒரு மூலையில் ஒருவன் செய்யும் தியாகம் (கொடை) மூன்று உலகங்களிலும் முட்டி எதிரொலிக்கும்.

இடிச் சத்தம் அப்படிக் கேட்குமா? வீரமுரசு, வெற்றி முரசு, மங்கல முரசு என்றெல்லாம் சொல்கிறோமே, அந்த முரச வாத்தியத்தின் முழக்கந்தான் அப்படிக் கேட்குமா?

கொடுத்தான், உதவினான் என்பதுதான் அப்படி எல்லாம் கேட்கும்.

*கடிப்படி கண்முரசம்*
*காதத்தோர் கேட்பர்,*
*இடித்து முழங்கியது*
*யோசனையோர் — கேட்பர்;*
*அடுக்கிய மூவுலகும்*
*கேட்குமே — ஏண்டு*
*கொடுத்தார் எனப்படும்*
*சொல் (18)*

(4)

யாரோ ஒருவன். முன்பின் தெரியாதவன்தான். அவன் துன்பப்படுகிறான். வறுமையோ, நோயோ, அறியாமையோ, இல்லை அறிவின் மிகுதி காரணமாகத்தானோ என்னவோ துன்பப்படுகிறான். துன்பத்தில் துடிக்கிறான்.

அவன் படுகிற பாடு நமக்குத் தெரிகிறது. தெரிந்தால் மட்டும் போதுமா? அவன் படும் பாடு நம் இதயத்தைத் தாக்க வேண்டும். கசக்கிப் பிழிய வேண்டும் உணர்ச்சியை. உள்ளம் உருக உருக

---

*கடிப்பு அடி - கோலால் தட்டப்படுகிற. கண்முரசு - மை பூசப்பட்ட கண் போல் இருக்கும் (அடி விழுகிற) இடம் மத்தளத்தில். காதம் - மூன்றரை மைல். யோசனை - பத்தரை மைல்.*

அவனுக்கும் நமக்கும் உள்ள வேற்றுமை அகலும். அவனாகி விடுவோம் நாம். அவன் துன்பம் நீங்க நாம் பாடுபடுவோம். அவன் வேதனை அவனை விட்டு நீங்கினால்தான் நமக்கும் விடுதலை.

வேதனையிலிருந்து விடுதலை பெறுவதுதான் ஆனந்தம். உண்மையான விடுதலை (வீடுபேறு) அதுதான். வீட்டை விட்டுப் பிரிவதில் இல்லை விடுதலை.

மற்றொன்றோடு ஒன்றிச் சேர்கிற ஒப்புரவில், ஒருமை உணர்ச்சியில் இருக்கிறது விடுதலை.

இனி தனிமனிதன் மட்டுமல்ல, குடும்பம், சமூகம், சமுதாயம், நாடு, உலகம் முழுவதுமே அப்படியும் இப்படியும் துயரத்துக்கு ஆளாகவே செய்கிறது. துயரத்தில் தத்தளிக்கவே செய்கிறது.

ஒருமை உணர்ச்சி பெருகப் பெருக, உள்ளம் விரிய விரிய இரக்க உணர்வு மேலோங்கும். தியாகம் நிமிர்ந்து நிற்கும். எந்த மூலையில் யார் துன்பப்பட்டாலும் அதை நீக்க துள்ளிப் பாயும் உள்ளம்.

அப்படி ஒரு உள்ளம் உடையவன்தான் மனிதன். மனிதருள் மாணிக்கம் என்றால் அவன்தான். பத்தரை மாற்று அல்ல, ஆயிரம், பதினாயிரம் மாற்றுத் தங்கம் போல், பசும்பொன் போல் ஒளிர்வான் அவன்.

மற்றவர் நன்மைக்காக, முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதுதான் தவம். அதனால் வரும் கஷ்ட நஷ்டங்களை, துன்பத்தைத் தாங்கிக் கொள்வதுதான் தியாகம்.

தியாக மூர்த்திகளைப் பார்த்திருக்கிறார் குறளாசிரியர். அவர்களோடு உறவாடியும் இருக்கிறார். அடடா, இவர்களல்லவா மனிதர்கள், மாமனிதர்கள், ஞானிகள் என்று வியந்திருக்கிறார். ஒளி ஊற்றாய், தெய்வ ஒளி ஊற்றாய்த் திகழும் அவர்களை எப்படிப் பார்த்து எப்படி அனுபவிக்கிறார் குறளாசிரியர் என்று பாருங்கள்.

*சுடச்சுடரும் பொன்போல்*
*ஒளிவிடும், துன்பம்*
*சுடச்சுட நோக்கிற்*
*பவர்க்கு (குறள்)*

இரக்கம் உள்ளவன்தான் மனிதன். அவனிடம் உள்ள செல்வந்தான் செல்வம். திருமகள் கடாட்சம் என்பதும், தெய்வ வரப்பிரசாதம் என்பதும் இரக்கமும் ஈகையுந்தான். இரக்கமும் ஈகையும் உடையவளே செல்வந்தன்.

* * *

இரக்கம் இல்லை என்றால் அவன் மனிதன் இல்லை. அரக்கன் அவன். அந்த அரக்கனையும் விடக் கொடிய வல்லரக்கனும் இருக்கிறான். அவன்தான் கொடுக்கிறேன், கொடுக்கிறேன் என்று நம்ப வைத்து கொடுக்காமல் ஏமாற்றுகிறவன். நம்பினவனைத் தவிக்க விடும் பாதகன். பஞ்சமா பாதகன் அவன்.

தன்னால் முடியாததை முடியாது என்று சொல்லலாம். அது இயல்பு. தருகிறேன் தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றுவது கொடுமை.

வயதுக்கு வந்த பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கக் கடனாகப் பணம் கேட்டான் ஒருவன். நாளைத் தருகிறேன் நாளைத் தருகிறேன் என்று ஏமாற்றி விட்டான் ஒருவன். திருமணமே நின்று விட்டது. இதைவிட வேறு கொடுமை உண்டா உலகில்.

இனி ஒரு இளம்பெண். இளைஞன் ஒருவனிடம் பழகி விட்டாள். தனிமையில் இருவரும் சந்திப்பார்கள். அடிக்கடி நடக்கும் சந்திப்பு. ஒரு சமயம் ஏமாற்றி விட்டான் பெண்ணை இளைஞன். இன்று வருகிறேன் நாளை வருகிறேன் என்று ஏமாற்றி விட்டான் இளைஞன். வராமலே புளுகினான். வருகிறேன் வருகிறேன் என்றே புளுகினான்.

என்ன பாடுபடும் அவள் இதயம். இதைவிட வேறு உண்டா, நம்பிக்கைத் துரோகம். தோழியிடம் தன் ஆற்றாமையைப் பெண் வெளியிடுவதாகப் பாடல்.

*இசையா ஒருபொருள்*
*இல்லென்றல் யார்க்கும்*
*வசைஅன்று வையத்(து)*
*இயற்கை; — நசைஅழுங்கச்*

*சென்றோடிப் பொய்த்தல்*
*செறிதொடி! செய்நன்றி*
*கொன்றாரில்க் குற்றம்*
*உடைத்து (19)*

(5)

காதலை விட, ஏன் காமத்தை விடவே அதிக மோகம் பணத்தின் மேல்தான் மனிதனுக்கு. பணவெறி வந்து விட்டால் பெண்டாட்டியாவது, பிள்ளையாவது, கலையாவது, பண்பாடாவது, பக்தியாவது, கடவுளாவது.

எல்லாமே ரூபாய், அணா, பைசாவாகத்தான் தெரியும் மனிதனுக்கு.

இனி ஒருவனிடம் பணம் நிறைய இருக்கிறது. ஈயாத கருமி அவன். எச்சில்க் கையால் காக்காய் விரட்ட மாட்டான் அவன். கையில் ஒட்டி இருக்கிற பருக்கை (சோற்றுப் பருக்கை) உதிர்ந்து விடுமே என்று.

என்னதான் அவனைப் புகழ்ந்தாலும், அவனுக்குத் தொண்டூழியமே செய்தாலும் தம்பிடிக் காசு கொடுக்க மாட்டான்.

இது உலகறிந்த உண்மைதான். ரகஸியம் ஒன்றும் இதில் இல்லை. ஆனாலும் அவனைச் சுற்றிச் சுற்றி வரத்தானே செய்கிறது உலகம்.

இனி சாதாரண ஏழைக் குடியானவன் ஒருவன். ஈகை உள்ளவன், இரக்கம் உள்ளவன். கூழும் கஞ்சியுமாவது பசித்தவர்க்குக் கொடுத்து உதவுவான். ஆனாலும் அவனை யாரும் மதிக்கிறதில்லை. பணவசதி இருந்தால் போதும். அவன் கொடிய கிராதகனாக இருந்தாலும் அவனை இந்திரனே சந்திரனே என்று பாராட்டுகிறது உலகம்.

---

*இசையா ஒருபொருள் - கொடுக்க முடியாத ஒன்றை. வசை அன்று - குற்றம் இல்லை. நசை அழுங்க - ஆசையில் வெந்து தவிக்க. சென்றோடிப் பொய்த்தல் - வலிய வந்து வந்து புளுகுதல். புளுகி ஏமாற்றுதல். செறிதொடி - கை நிறைய இறுக்கமாக வளையல் அணிந்த பெண்ணே! ஆசை வைத்தவரை நம்பினவரை மோசம் செய்தல். நன்றி கொன்றாரில் குற்றம் உடைத்து - செய்நன்றி மறந்த பாவந்தான்.*

நெய்யோ, நெய்யில் பண்ணின பணியாரமோ ஒரு பானையில் இருக்கிறது. மூடித்தான் இருக்கிறது பானை ஆனாலும் எறும்பு விடுகிறதா பானையை. சுற்றிச் சுற்றித்தானே வருகிறது.

* * *

மனிதர்களும் அப்படித்தான். வெறும் எறும்புக் கூட்டமாய் விட்டது உலகம். மானுட உலகம்.

*ஆகா(து) எனினும்*
*அகத்துநெய் உண்டாகில்ப்*
*போகா(து) எறும்பு*
*புறம்சுற்றும்: — யாதும்*
*கொடாஅர் எனினும்*
*உடையாரைப் பற்றி*
*விடாஅர் உலகத்*
*தவர் (20)*

---

*ஆகாது எனினும் - பாத்திரத்தைத் திறக்க முடியாது. உள்ளே போக முடியாது. பண்டம் கிடைக்காது என்று தெரிந்தும். அகத்து நெய் உண்டாகில் - உள்ளே நெய்ப் பணியாரம் இருந்தால். புறம் சுற்றும் - வெறுமனே வெளிப்புறத்திலேனும், சுற்றிச் சுற்றி வரும் எறும்பு. கொடார், விடார் இரண்டும் அளபெடையில் வந்துள்ளன. கருமியின் இறுக்கத்தைக் காட்டுகின்றன அளபெடை இரண்டும்.*

## கருமித்தனம் போன்றதுதான் ஊதாரித்தனமும்

செல்வம் என்றால் ரூபாய், அணா, பைசா என்றே பார்க்கிறோம். கரன்ஸி நோட், வெள்ளி தங்க நாணயம் இவைதான் செல்வம் என்று பார்க்கிறோம். இவை மாத்திரம் அல்ல செல்வம்.

நன்செய், புன்செய், வீடு, மாடு, நெல், காய்கனி, பருப்பு, பால், நெய் எல்லாம் செல்வந்தான்.

கல்வியும் செல்வந்தான். ஈகையும் செல்வந்தான். புகழும் செல்வந்தான்.

பண்பாடு, சீலம், பக்தி, தியாகம் இவை எல்லாம் செல்வந்தான். மானம், மரியாதையும் செல்வந்தான்.

பணமும் செல்வந்தான். ஆனால் பணம் மட்டும் செல்வம் இல்லை.

இது கருதியே முன்னோர்கள் இடம், பொருள், ஏவல் என்றே சொல்வார்கள் செல்வத்தை.

செல்வத்தை மதிக்க வேண்டும். தெய்வத்தை மதிப்பது போல மதிக்க வேண்டும். பெற்ற பிள்ளைகளை மதிப்பது போலவே மதிக்க வேண்டும் செல்வத்தை.

நாமும், நம்மைச் சேர்ந்தவர்களும் மகிழ்ச்சியாக, நலமாக வாழ வேண்டும் என்றால் செல்வம் அவசியந்தானே. செல்வம் இல்லை என்றால் என்ன நடக்கும். ஒன்றும் நடக்காது.

பெற்றோரைப் பேண வேண்டும், குழந்தைகளை வளர்க்க வேண்டும், உடல், பொருள், ஆவியை மட்டுமா, தன்னையே நம்மிடம் தந்து நமக்காகத் தியாகம் செய்தவள் அல்லவா மனையாள். அவளை உபசரிப்பதும், பேணிக் காப்பதுந்தான் தலையாய தர்மம். செல்வம் இல்லை என்றால் தள்ளாடத்தானே செய்யும் உபசாரம். உற்றார், உறவினர்களைப் பேண வேண்டும். உபசரிக்க வேண்டும். கலைஞர், சான்றோர் இவர்களை உபசரிக்க வேண்டும். கோவில், குளம், தேர் விழா என்றெல்லாம் இருக்கின்றன.

இப்படி எத்தனையோ வகையில் வாழ்க்கை. அவ்வளவுக்கும் செல்வம் வேண்டும். செல்வம் இருந்தால்தான் நடக்கும். அது இல்லை என்றால் ஒன்றும் நடக்காது.

செல்வம் இல்லை என்றால் வறியவர்களுக்கு எப்படி உதவ! எத்தனை நல்ல காரியங்கள் செய்யலாம் செல்வத்தை வைத்து.

செல்வத்தை மதித்தார்கள் என்றால் அதன் செயலையும் பயனையும் கருதித்தான்.

* * *

செல்வத்தைத் தேடுவதிலும் ஒழுங்கு வேண்டும். அதைப் பயன்படுத்துவதிலும் ஒழுங்கு வேண்டும். ஊதாரித்தனத்துக்கு இடம் இருக்கக் கூடாது அங்கு.

குழந்தையை எப்படி வளர்க்கிறோம். உண்மையாய் இரு. அன்பாய் இரு. பொறுமையாய் இரு. அடக்கமாய் இரு. முடிந்தால் உதவு. முடியாவிட்டால் அனுதாபப்படு, மறந்தும் தீங்கு செய்யாதே. ஒற்றுமையாய் இரு. கண்டபடி சுற்றாதே, கண்டபடி செலவழிக்காதே என்றுதானே வளர்க்கிறோம். அதுதான் பெற்றோரின் கடமை.

செல்வத்தையும் அப்படியே உபசரிக்க வேண்டும். உதவுவதில்கூட ஞாயம் இருக்க வேண்டும். அடக்கம் இருக்க வேண்டும். மரியாதை இருக்க வேண்டும். அளவு இருக்க வேண்டும். கண்டபடி அள்ளி வீசி விட்டால் செல்வம் தங்காது.

மதியாதவன் தலைவாசலை மிதியாது செல்வம்.

''நீ ஒரு மனிதனா, உன்னை நம்பி வந்த என்னைத்தான் நொந்து கொள்ள வேண்டும். உன் மூஞ்சியிலேயே விழிக்க மாட்டேன்'' என்று நாலுகால் பாய்ச்சலில் ஓடி விடும் செல்வம்.

அது கைவிட்டு விட்டால் வேறு என்ன ஆதாரம் இருக்கிறது மனிதனிடம். அதனால் மதித்து வாழ வேண்டும் செல்வத்தை. குழந்தையைப் பேணி உபசரிப்பது போல உபசரிக்க வேண்டும். நல்ல காரியத்துக்கே பயன்படுத்த வேண்டும் செல்வத்தை. அதுவும் முறையோடு அளவோடு பயன்படுத்த வேண்டும்.

தொடர்ந்து நல்லது செய்ய வேண்டும். அதற்கு உறை மோர் போலாவது செல்வம் வேண்டும் என்கிற உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

ஆடம்பரத்திலும் படாடோபத்திலும் காலியாகி விட்டது செல்வம் என்றால், பிறகு உற்றாராவது, உறவினராவது, நண்பராவது, ஒன்றாவது.

உதவி பெற்றவனே முகத்தைத் திருப்பிக் கொள்வான் வாழ்ந்து கெட்டவனைப் பார்த்து. மரக்கால் போட்டு பணியாட்கள் வண்டி வண்டியாய் நெல்லை அளக்கிற வளமான வாழ்க்கை என்றால், நட்சத்திரக் கூட்டம் போல் நண்பர்களும் உறவினர்களும் கூடுவார்கள். அது மாறி தரித்திரத்துக்கு ஆளானால், அவரயா! தெரியும் தெரியும் என்று ஒதுங்கி விடுவார்கள் மனிதர்கள்.

*பயபக்தியோடு இருக்க வேண்டும் வாழ்க்கையில்.*

*காலாடு போழ்தில்*
*கழிகிளைஞர் வானத்து*
*மேலாடு மீனில்ப்*
*பலராவர் — ஏலா*
*இடர்ஒருவர் உற்றக்கால்*
*ஈர்ங்குகின்ற நாட!*
*தொடர்புடையேம் என்பார்*
*சிலர்* *(21)*

(2)

பணம் இல்லை என்றால் முட்டுப்பாடுதான். எதை எடுத்தாலும் தடங்கல்தான். ஒன்றும் ஓடாது மனிதனுக்கு. மூளையே வேலை செய்யாது.

இதை எல்லாம் பார்த்துத்தான் பணத்தைப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும், சொத்தாக மேலே மேலே சேர்க்க வேண்டும். அதை அணுவளவுகூட அசைக்கக் கூடாது என்னும் எண்ணம் வந்தது மனிதர்களிடம். அப்படியே செயல்படவும் செய்தார்கள்.

நாளாக நாளாக அந்த எண்ணமே வலுப்பட்டது. சொத்தைச் சேர்ப்பதே குறியாகி விட்டது. சொத்தின் மேல் வெறியே வந்து விட்டது மனிதர்களிடம்.

அவசியத்துக்கு, ஆபத்துக்கு உதவும் என்பதற்காகச் சேர்க்க ஆரம்பித்தவர்கள், பிறகு சொத்துச் சேர்ப்பதையே, மேலும் மேலும் அதைக் குவிப்பதையே வாழ்க்கையாக்கி விட்டார்கள்.

---

*கால் - மரக்கால். கழிகிளைஞர் - ஏராளமான சுற்றத்தார். மீன் - விண்மீன். ஏலா(த) - தாங்க முடியாத. தொடர்பு உடையேம் - கொஞ்சம் தெரியுந்தான்.*

சொத்துச் சேர்ப்பதே குறி என்று வந்த பின் மனதில் எப்படி இருக்கும் தயாளம். கருமியாய், லோபியாய் போய் விட்டான் மனிதன்.

பின்னால் வந்தால் உதைக்கும். முன்னால் போனால் கடிக்கும். அப்படி ஒரு பிராணிதான் பணவெறி.

பணம் வேண்டும். ஆனால் அதன் மேல் வெறி கூடாது. ஆனாலும் இதைப் பக்குவமாகச் சொல்ல வேண்டும். அப்படி இல்லாமல் செல்வம் நிலை இல்லாதது என்று முரட்டுத்தனமாகச் சொன்னால் எடுபடவா செய்யும் உபதேசம்? கேலிக்கு இடம் ஆகிவிடும் அப்படிச் சொல்வது.

நாலடியார் பக்குவமாகவே சொல்கிறார். குடும்பம், சமூகம், சமுதாயம் என்று இருக்கிறவனா பணம் தேவைதான். அந்த அளவுக்குத் தேவை. அதுவும் இல்லை என்றால் கட்டுக்கோப்பே சிதறி விடும் வாழ்க்கையில் என்று பக்குவமாகச் சொல்கிறார் நாலடியார்.

எட்டாத உச்சியில், மலை உச்சியில்தான் மரமும் செடியும் இருக்கின்றன பூவானது பூத்து மணம் பரப்பவேண்டும். பரப்பினால்தான் தேடி வரும் வண்டு. மலர்ந்து விரியவில்லை மலர் என்றால் வருமா வண்டு.

*கல்லோங்(கு) உயர்வரைமேல்*
*காந்தள் மலராக்கால்*
*செல்லாவாம் செம்பொறி*
*வண்டினம் — கொல்லை*
*கலாஅல்க் கிளிகடியும்*
*கானக நாட!*
*இலா அஅர்க்(கு) இல்லைத்*
*தமர் (22)*

---

*செம்பொறி - சிவப்புப் புள்ளி. கொல்லை - கொல்லைப்புற தோட்டத்தில். கலால் - கல்லால், கவண் கல்லால். இலார்க்கு - வசதி இல்லாதவர்களுக்கு. தமர் இல்லை - உறவு என்று சொல்லி யாரும் வரமாட்டார்கள். கலாஅல், இலாஅஅர்க்கு இரண்டும் அளபெடை. இரண்டும் தனித்தனி. இசையும் தாளமும் செய்கிற கூத்து அது.*

(3)

முட்டுப்பாடில்லாமல் வாழ்வதற்கு, அந்த அளவுக்குக் கட்டாயம் பணம் வேண்டும். குடும்பமே பட்டினி கிடக்கட்டும். அது பற்றிக் கவலை இல்லை. நான் சத்திரம் கட்டத்தான் செய்வேன் என்று காரியத்தில் இறங்குவது ஒரு மாதிரிப் பைத்தியந்தான். வாழத் தெரியாத பைத்தியந்தான் அது.

இன்னொருவன் பசியை நீக்குவது நல்லது. அதுதான் கடமை. அதற்காகக் குடும்பத்தையே பசியில் அலற அலற அடிக்கிறேன் என்று செயல்பட என்ன உரிமை இருக்கிறது ஒருவனிடம். கிறுக்கனின் எதேச்சிகாரந்தான் அது.

* * *

சுற்றி இருக்கிற மனிதர்களைப் பார்க்க வேண்டும். அவர்கள்தான் வாழும் நெறி காட்டும் வேதங்கள். ஆசான்கள்.

மனிதர்களைப் பார்த்து அதைக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிக் கற்றுக் கொள்ள முடியாதவர்கள் காடாய் மண்டிக் கிடக்கிற மரம், செடி, கொடிகளைப் பார்த்தாவது கற்றுக் கொள்ள வேண்டும்.

மரம், செடி, கொடிகள் புஷ்பங்களைப் பூத்துச் சொரிகின்றன. குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு மேல் பூக்கிற காரியம் நின்று விடுகிறது அவைகளிடம்.

பூத்து கமகம என்று மணக்கிற போது எங்கெங்கிருந்தோ வண்டுகள் வந்து அவற்றை மொய்க்கின்றன. செம்புள்ளிகளாய் நிறைந்த அழகிய வண்டுகள் வந்து மொய்க்கிறதே ஒரு தனி அழகுதான். சரி, பூக்கிற பருவம் முடிந்த உடன் ஒரு வண்டாவது செடி கொடியை வந்து எட்டிப் பார்க்கிறதா? இல்லையே.

இதைவிட வேறு என்ன பாடம் வேண்டும். இதுதானே படிக்க வேண்டிய பாடம். பூக்கவில்லை புஷ்பம் என்றால் தாவரத்துக்கே அந்தக் கதி. அப்படியானால் பணம் இல்லை என்றால் நம் கதியும் அப்படித்தான் என்பது எளிதில் விளங்குகிற காரியந்தானே.

*ஆர்த்த பொறிய*
*அணிகிளர் வண்டினம்*
*பூத்தொழி கொம்பின்மேல்ச்*
*செல்லாவாம் — நீர்த்தருவி*

*தாழா உயர்சிறப்பின்*
*தண்குன்ற நாடகேள்!*
*வாழாதார்க்(கு) இல்லைத்*
*தமர் (23)*

(4)

காதல்ப் பெண்டிதர், காமப் பெண்டிதர் என்று ஒரு வகை. சாதாரணமாக இவர்களை வைப்பாட்டி என்றோ, வேசியர் (வேசையர்) என்றோ சொல்வதுண்டு.

பணம் கையில் ஒருவனிடம் இருக்கிற வரைக்கும் நாயகன், நாயகன் என்று கும்மி அடிப்பார்கள் இவர்கள். புள்ளிக்காரனிடம் பணம் தீர்ந்து விட்டது, இல்லை தீரப் போகிறது என்று தெரிந்தால் போதும். ஆசையாவது, நாயகனாவது. ''நீயாவது, நானாவது'' என்று விலகி விடுவார்கள் அவனை விட்டு இவர்கள்.

ஒருயிரும் ஈருடலும் என்று ஒட்டி உறவாடிய காதல் உறவே பணம் இல்லை என்றால் பட்டுப் போகிறது. அப்படி இருக்க வாழ வழி அற்றவனை யார் ஒட்டுவார்கள்.

சுடரேறி ஒளி வீசுகிற விளக்கே, திருவிளக்கே எண்ணெய் இருக்கும் வரைதான். எண்ணெய் இல்லை என்றால் சுடராவது, ஒளியாவது, விளக்காவது. ஒன்றுக்கொன்று ஒட்டும் இல்லை. உறவும் இல்லை.

வீட்டில் எரிகிற விளக்கைப் பார்த்தாவது படிக்க வேண்டாமா? அதுகூட முடியாதென்றால் இவன் உருப்படுவது எங்கே.

வாழும் வழிதான் கலை. கலையில் எல்லாம் மேலான கலை. அது வாழ்வோடு நம்மை முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறது விதி என்பதைத் தெரிவதுதான். தெரிந்து வாழ்வதுதான். அந்தக் கலை.

---

*ஆர்த்த பொறி - மேனி முழுவதும் புள்ளி புள்ளியாய் நிறைந்த. நீர்த்தருவி - அருவி நீர். தாழா உயர் சிறப்பின் தண்குன்ற நாட - வெள்ளம் பெருக்கெடுத்துத் தொடர்ந்து கொட்டும் பெருமை மிக்க குளிர்ந்த மலை வளம் நிறைந்த மன்னனே.*

*விளக்கொளியும், வேசையர்*
*நட்பும், இரண்டும்*
*துளக்கற நாடின்வே(றி)*
*அல்ல; — விளக்கொளி*
*நெய்யற்ற கண்ணே*
*அறுமால், அவர்நட்பும்*
*கையற்ற கண்ணே*
*அறும்* *(24)*

(5)

எத்தனை கோடிப் பேர் வந்தார்கள் இங்கு. அவர்களில் ஒருவர்கூட இல்லையே. கம்பர், மாணிக்கவாசகர், திருவள்ளுவர் இவர்கள் எல்லோரும் சாமான்யப்பட்டவர்களா? ஒவ்வொருவரும் ஒவ்வொரு உலகம் அல்லவா?

அவர்களும் அல்லவா போய் விட்டார்கள். ஒருவர்கூட இல்லையே அவர்களில். அவர்களுக்கே இந்தக் கதி என்றால் கோயில் கட்டியவன், குளம் வெட்டியவன், வயித்தியன், ஜோசியக்காரன், நாடகக்காரன், பாடம் சொல்லிக் கொடுத்தவன், பேச்சாளன், எழுத்தாளன் எல்லோரும் எம்மாத்திரம். தூசி மாத்திரந்தானே. காலடித் தூசி தானே இவர்கள்.

இனி மந்திரி பிரதானிகள், தளகர்த்தர்கள், சேர சோழ பாண்டியர்கள் எல்லோரும் தூசியிலும் தூசி.

கால வெள்ளத்தின் ஓட்டத்தில் இந்தத் துரும்புகள் எம்மாத்திரம்.

* * *

அரசன் ஒருவன் பவனி வருகிறான் என்றால் அதில் எத்தனை தடபுடல், எத்தனை அட்டகாசம். அம்பாரி வைத்த யானை மேல் (வெண்) கொற்றக் குடையை நாட்டி அதன் நிழலில் அமர்ந்து

---

*துளக்குஅற நாடின் - தெள்ளத் தெளிய நோக்குகிற பொழுது. துளக்கு - சந்தேகம். நெய்அற்ற கண்அறும் - எண்ணெய் தீர்ந்ததும் அணைந்து விடும். கைஅற்ற கண்அறும் - கைப்பொருள் காலி, பையும் காலி என்றால் போதும் ஒழிந்தது காரியம்.*

மிடுக்காக வந்தானே ராஜாதி ராஜன். மலை முகட்டில் கொலுவிருந்த முழு நிலாப் போலல்லவா ஒளி வீசியது குடை.

அவனும் அல்லவா போய் விட்டான். எப்படிப் போனான் அவன்.

அப்படியானால் மிச்சம் என்னதான் இருக்கிறது இங்கே. நாம் வாழும் இந்தப் பூமியில்.

*மலைமிசைத் தோன்றும்*
*மதியம்போல் யானை*
*தலைமிசைக் கொண்ட*
*குடையர் — நிலமிசைத்*
*துஞ்சினார் என்றெடுத்துத்*
*தூற்றப்பட் டாரல்லால்*
*எஞ்சினார் இவ்வுலகத்(து)*
*இல் (25)*

---

*மதியம் - சந்திரன். யானைத் தலை - யானையிடத்து. யானை மேல். துஞ்சினால் என்று தூற்றப்பட்டார் அல்லால் - ஒழிந்தான் அவன் என்கிற வசவைப் பெற்றார்களே ஒழிய. எஞ்சினார் இவ்உலகத்து இல் - மிஞ்சினவர் யாருமே இல்லை.*

*குறிப்பு - படிக்க வேண்டிய படிப்பு இதுதான். திறந்து வைத்த புத்தகந்தான் மனிதனின் வரவும் செலவும். இதைப் படிக்காமல் வேறு எதைப் படித்தாலும் பயனில்லை.*

*எதை எதையோ படிக்கிறான் ஒருவன். இந்த உண்மையை மட்டும் படிக்கவில்லை அவன். அப்படியென்றால் அவன் படித்த முட்டாள்.*

## உண்மை இல்லை என்றால் உயிர் ஏது

ஏதோ ஒரு கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்குக்கும் சிருஷ்டிக்கும் ஒரு முடிச்சு இருக்கிறது. அந்த முடிச்சுத்தான் காலம், இடம் என்னும் பிரபஞ்சம்.

* * *

நேரமும் பொழுதும் வந்து விட்டால் 'டாண்' என்று வந்து விடுவான் எமன். அவனுடைய எருமைக் கடா முற்றத்தில் வந்து நிற்கும். பாசக் கயிற்றைச் சுழற்றியபடியே உள்கட்டுக்கே வருவான் எமன். அப்படியே கட்டில் பக்கமும் வந்து விடுவான். மின்னல் வேகத்தைவிட அவன் வேகம் அதிகம்.

கண்ணை மூடிக் கொண்டுதான் படுத்திருக்கிறோம். ஆனால் எல்லாம் ஒன்று விடாமல் தெரிகிறது.

கண்ணை ஒரு உருட்டு உருட்டுகிறான் எமன். சுருக்குக் கயிற்றை மண்டை வழியே கழுத்தை நோக்கிச் செலுத்துகிறான். கூழைக் கும்பிடு போடுகிறோம். கெஞ்சுகிறோம். ஒன்றும் எடுபடவில்லை. பொன்னையும் பொருளையும் வைத்து அவன் கையில் திணிக்கப் பார்க்கிறோம். மசிய மாட்டேன் என்கிறான்.

கைதியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போவது போலக் கொண்டு போகிறான் எமன்.

பக்கத்து வீடு, தெரு, ஊர், உலகம் எங்கும் இது நடந்து கொண்டு தானே இருக்கிறது. ஏன், நம் வீட்டிலும் நாம் பார்த்தது தானே இது.

பார்த்து என்ன செய்ய, ஏன், எப்படி என்று அது பற்றிப் படித்தோமா? உணர்ந்தோமா, என்ன செய்ய வேண்டுமே'' அதைச் செய்தோமா! இல்லையே.

செக்குலக்கை மாதிரி அக்கம் பக்கம் நகராமல் சுற்றிச் சுற்றி வந்ததுதான் மிச்சம்.

உண்மையைக் கண்டு கற்றிருந்தால், புதைத்து வைத்த பொருளைத் தோண்டி எடுப்போம். அது இல்லாமல் தவிக்கிறவர்களுக்குக் கொடுப்போம். தேடிப் போயே கொடுப்போம். ஓடோடிப் போயே கொடுப்போம்.

*நின்றன நின்றன*
*நில்லா எனஉணர்ந்து*
*ஒன்றின ஒன்றின*
*வல்லே செயிற்செய்க;*
*சென்றன சென்றன*
*வாழ்நாள், செயிர்த்துடன்*
*வந்தது வந்தது*
*கூற்று (26)*

(2)

எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். உடனுக்குடன் செய்ய வேண்டும். அதுதான் அறிவுடைமை.

செய்ய வேண்டியதைச் செய்யாமல் விடுவது அறிவீனம். மடமை. செய்யத் தகாத காரியங்களைச் செய்வதைவிட மிக மோசமானது அது.

செய்யத் தகாத காரியங்களைச் செய்வதற்கு மூலகாரணமே அதுதான். செய்ய வேண்டியதைச் செய்யாமல் ஒற்றி போடுவதுதான்.

செய்ய வேண்டியதை ஒருவன் செய்யவில்லை என்றால் அவன் படித்து என்ன பலன். சாஸ்திரங்களைப் படித்தால் மட்டும் போதுமா?

''ஓதியும் ஓதார் உணர்விலார்,'' ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவுமா?

---

*நின்றன நின்றன - நிலைத்து நிற்பது போலத் தெரிகின்றன எல்லாம். நில்லா என உணர்ந்து - உண்மை அப்படி இல்லை. நொடி அளவு நேரம்கூட நிற்பதில்லை. போய்க் கொண்டே இருக்கின்றன எல்லாம் அதை உணர்ந்து தெரிய வேண்டும். ஒன்றின ஒன்றின - முடிந்ததை முடிந்த அளவுக்கு. வல்லே செயின் செய்க - உடனடியாகச் செய்ய வேண்டும். நினைத்தால் மட்டும் போதாது. செய்ய வேண்டும். செயிர்த்து - சினம் கொண்டு. கூற்று - உயிர் வேறு உடல் வேறு என்று கூறு போடும் மரணம். நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் மரணமும் சேர்ந்து ஒரு அடி எடுத்து வைக்கிறது. அப்படி கூடவே வருகிறது மரணம். செயிர்த்துடன் வநதது வந்தது கூற்று.*

*குறிப்பு - வருவது போல் தெரிகிறது மரணம். உண்மையில் நாமே போகிறோம் அதை நோக்கி.*

இனி ஒருவன் புத்தகங்களை வைத்து அது இது என்று படிக்கவில்லை. ஆனால் செய்ய வேண்டிய காரியங்களைத் திருத்தமாய்ச் செய்கிறான். உடனுக்குடன் செய்து முடிக்கிறான். அவனல்லவா கற்றறிவாளன். ''ஓதாதும், ஓதி அனையர் உணர்வுடையர்.''

இனி ஒருவன் லட்சம் லட்சமாய் பணம் வைத்திருக்கிறான். பூலோக குபேரன் என்றே சொல்லலாம் அவனை. ஆனாலும் இரக்கமே இல்லாதவன். பசியில் துடிக்கிற குழந்தைக்குக்கூட ஒரு கவளம் சாதம் கொடுக்க மாட்டான். ஊசிப் போன பழையதைக்கூடக் கொடுக்க மாட்டான். கொடுக்கலாமா என்று நினைப்பு வந்தாலே போதும். பதறி விடுவான்.

அவன் தானே தரித்திரன். பணக்காரன் என்னும் பெயரோடு மட்டும் முடிந்தது அவன் காரியம். செய்ய வேண்டியதைச் செய்யாதவனும் அவனை ஒத்தவனே.

வேறொருவன் சாதாரணக் குடியானவன். செய்ய வேண்டியதைச் செய்கிறான். உணர்ச்சி பூர்வமாகவே செய்கிறான். அவனை வசதி இல்லாதவன் (நல்கூர்ந்தான்) என்று சொல்லலாமா? கூடாது. உண்மையில் அவன்தான் செல்வந்தன்.

*ஓதியும் ஓதார்*
*உணர்விலார், ஓதாதும்*
*ஓதி அனையர்*
*உணர்வுடையார் — யாதானும்*
*நல்கூர்ந்தும் செல்வர்*
*இரவாதார், செல்வத்தும்*
*நல்கூர்ந்தும் ஈயார்*
*எனின் (27)*

---

ஓதியும் - படித்தும். யாதானும் நல் கூர்ந்தும் - இடம், பொருள், ஏவல் எதிலும் வசதி இல்லை. அப்படி வசதி இல்லாமல் இருந்தும் தெளிவாக இருக்கிறான். சந்தோஷமாக இருக்கிறான். செய்ய வேண்டியதைச் செய்கிறான். அவனல்லவா செல்வன்.

பேயோடு சேர்ந்து வாழ வேண்டுமானாலும் வாழலாம். பிசாசுகூட வேண்டுமானாலும் வாழலாம். சுடுகாட்டிலேயே சேர்ந்து வாழலாம். சிங்கம், புலி, கரடி கூடவும் வாழலாம். கொடிய கானகத்தில்கூடச் சேர்ந்து வாழலாம். ஆனால் மானம், வெட்கம், சூடு, சுரணை (கூச்சம், நாணம்) இல்லாதவனோடு, உணர்ச்சியே இல்லாதவனோடு வாழ முடியாது.

(3)

உயிரை விடுவதுகூட எளிது. உணர்வில்லாதவனைக் கட்டி அழுவது கடினம்.

பார்த்தும் தெரியாதவன், படித்தும் உணராதவன், சொல்லியும் கேட்காதவன், மனிதனா அவன்.

மனிதனும் இல்லை, விலங்கும் இல்லை. ஒப்பிட்டுச் சொல்ல முடியாத ஜென்மம் அது. அதை விட்டு எவ்வளவுக்கு எவ்வளவு ஒதுங்குகிறோமோ அவ்வளவுக்கு லாபம். அதுதான் பிறவிப் பயன்.

*நோயற்ற வாழ்வு என்றால் அதுதான்.*

*தெரியத் தெரியும்*
*தெளிவிலா தாரைப்*
*பிரியப் பிரியுமாம்*
*நோய்*

இனி உணர்ச்சி உள்ளவன் நண்பனாகக் கிடைத்து விட்டால் அதைவிட யோகம் வேறு என்ன இருக்கிறது. நம்மைச் சந்தோஷப்படுத்துவதற்கென்றே கடவுள் அனுப்பிய தூதன் அல்லவா உணர்ச்சி மயமான நண்பன்.

தேவதூதன்தான் அவன். பழகப் பழக, அவனோடு உறவாட உறவாட இன்பம் பெருகும். மனசுக்கு நிம்மதி, அமைதி எல்லாம் அதுதான்.

*உணர உணரும்*
*உணர்வுடை யாரைப்*
*புணரப் புணருமாம்*
*இன்பம்; — புணரின்*
*தெரியத் தெரியும்*
*தெளிவிலா தாரைப்*
*பிரியப் பிரியுமாம்*
*நோய்* (28)

---

*புணரின் - ஒப்பிட்டுக் காட்டினால். தெரியத் தெரியும் - குருடன்கூடத் தெரிந்து கொள்வான். தெளிவு இலாதார் - கண்முன் நின்று தரிசனம் கொடுப்பதையே காண முடியவில்லை என்றால். அவன்தான் உணர்ச்சி இல்லாதவன். உணர்ச்சி இல்லை, உணர்ச்சியில் தெளிவு என்னும் உணர்வும் இல்லை என்றால் அவன்தான் நோய். உடல் நோய் மட்டுமா அவன். மனநோயும் ஆவான். அவனை விட்டு விலகினால் போதும். நோய் ஓடி விடும்.*

(4)

ஞானமும் பண்பாடும் உடையவர்கள் அபூர்வம். பெரும்பாலான மக்களிடம் தேக தத்துவமே பிரதானமாக இருக்கும். அதில் ஏதோ ஒரு மூலையில்தான் மனம் (யோசனை) இருக்கும். அதில் போய் எப்படி ஊறும் உணர்ச்சி கடுகளவுகூட ஊறாது உணர்ச்சி? இனி ஞானமும் பண்பாடும் நிறைந்த சான்றோர்களை எடுத்துக் கொண்டால் உணர்வு மயமாகவே இருப்பார்கள். உணர்ச்சிதான் பிரதானம். உச்சி முதல் உள்ளங்கால் வரை உணர்ச்சி மயம் அவர்கள்.

உணர்ச்சியில்தான் அவர்களுக்கு மனம் (சிந்தனை) பூத்துக் குலுங்கும். அந்த மணமலரில்தான் அவர்களுக்கு உடல்! கை, கால், கண், மூக்கு எல்லாம் அதில்தான் அவர்களுக்கு.

அவர்களைப் பார்ப்பது தெய்வ தரிசனம். பழகுவதோ தெய்வ உறவு. எல்லோருக்கும் கிடைக்குமா அந்தப் பாக்கியம்.

நாலடியாருக்கு எப்படியோ கிடைத்து விட்டது உணர்வுடையார் உறவு. நெருங்கி நெருங்கி உறவாடி விட்டார் நாலடியார். இனி ஒத்த உணர்ச்சியும் உறவும் போடுகிற போட்டைப் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறது விதி. சும்மா இருக்குமா அது. தன் தொழிலைக் காட்டி விட்டது அந்தப் பொல்லாத விதி.

நாலடியாரை விட்டு உத்தம நண்பர் போயே போய் விட்டார். தாங்க முடியுமா பிரிவை. பூமியே காலடியிலிருந்து நழுவுவது போல ஆகிவிட்டது நாலடியாருக்கு. கண்ணும் மனமும் சுற்ற ஆரம்பித்து விட்டன.

'உணர்வுடையார்களுடன் இனி உறவே வைத்துக் கொள்ளக் கூடாது என்னும் எண்ணமே வந்து விட்டது. சிறிது நேரம் கழித்து உணர்வில்லாரோடு பழகுவதும் தவறுதான். அவர்கள் பிரிந்தாலும் அவர்கள் பற்றிய நினைப்பு வரத்தானே செய்யும்? மொத்தத்தில் யாரோடும் ஆழமான, அழுத்தமான, உறவு தேவை இல்லை' என்னும் சோர்வுக்கே ஆளானார் நாலடியார். கசப்பான முடிவுதான். வேறு வழி.

*தெரியத் தெரியும்*
*தெரிவிலார் கண்ணும்*

*பிரியப் பெரும்படர்நோய்*
*செய்யும் — பெரிய*
*உலவா இருங்கழிச்*
*சேர்ப்ப!யார் மாட்டும்*
*கலவாமை கோடி*
*பெறும்* (29)

(5)

உள்ளத்திலிருந்து உதிக்கும் உணர்ச்சிதான் உண்மையான உணர்ச்சி. அப்படி இல்லாமல், உதடு, பார்வை, கை என்று உடம்போடு மட்டும் ஒட்டி வருகிற உணர்ச்சி வெறும் நடிப்புத்தான்.

நிலக்கரியானது தவமிருந்து தவமிருந்து (தான்) வயிரமாகிறது. இனி மனமும் கற்பனையும் உள்ளத்தைப் பிசைய வேண்டும். குழைக்க வேண்டும். அதுதான் உள்ளத்தின் தவம். அந்தத் தவத்தில் விளைகிற உணர்ச்சியின் அவதாரந்தான் கலை.

அப்படி என்றால் தானாக விளைவதுதான கலை. கலைஞர் உண்டாக்குவதில்லை கலையை. கலைஞரிடம் விளைகிறது கலை. விளைய இடம் கொடுக்கிறார் கலைஞர்.

தடாகத்தில் உண்டாகிறது தாமரைப்பூ. தடாகம் உண்டாக்குவதில்லையே தாமரைப் பூவை. தாமரைப் பூ விளைய இடம் கொடுத்தது தடாகம். அவ்வளவுதான்.

கலையைப் போலத்தான் கலை உணர்வும். கலையின் சிருஷ்டியை உணர்ச்சி பூர்வமாக அனுபவிக்கிறதும் இதயத்தில் விளைவதுதான். விரிவுரை நிகழ்த்தியோ, விளக்கம் கொடுத்தோ,

---

*தெரிவிலார் கண்ணும் - அறிவில்லாதவரிடத்தும் (உறவு கூடாது) ஏன். பிரிய - அவர்களை விட்டுப் பிரிய நேர்ந்தாலும். பெரும் படர் நோய் செய்யும் - தாங்க முடியாத துயரத்தைக் கொடுக்கும் பிரிவு. யார் மாட்டும் கலவாமை கோடி பெறும் - ஒருவரிடமும் நெருக்கமாக உறவாடக் கூடாது. அது இருந்தால் போதும். கோடி நமஸ்காரம் - கோடி கோடி நமஸ்காரம்'' என்று நம்மை விட்டு ஓடி விடும் துன்பம். உலவா இருங்கழிச் சேர்ப்ப - வற்றாத உப்பங்கழிகளும் காயல்களும் கூடிய கடல் வளம் மிக்க பாண்டியா! அறிவுடையார் பிரிவை எப்படித் தாங்க.*

ஒப்புமைகளை எடுத்துக் காட்டியோ கலை அனுபவத்தை உண்டாக்க முடியாது.

* * *

நிலக்கரிதான் வயிரமாக விளைகிறது. நிலக்கரியை யாரும் வயிரமாக விளைவிக்கிறதில்லை. பாலில் போட்டு அடுப்புக் கரியைக் குளுப்பாட்டி வெயிலில் காய வைத்து எடுத்தாலும் வெள்ளி ஆகுமா கரி.

மூடன் காரியமும் அப்படியே. விஷயத்தை அவன் காது வழியாக மண்டைக்குள் போட்டுத் திணித்தாலும் உள்ளே இறங்காது உண்மை.

மூடன் மூடன்தான்.

ஞானமும் பண்பாடும் விளைய தவம் அல்லவா செய்திருக்க வேண்டும்.

*சும்மா வருமா சுகம்.*
*பாலால்க் கழீஇ*
*பலநாள் உணக்கினும்*
*வாலிதாம் பக்கம்*
*இருந்தைக்(கு) இருந்தன்று*
*கோலால்க் கடாஅய்க்*
*கொளினும் கொள்ளாதாம்*
*நோலா உடம்பிற்(கு)*
*அறிவு (30)*

---

*கழீஇ - கழுவிக் குளுப்பாட்டி. உணக்கினும் - காயப் போட்டாலும். வாலிதாம் பக்கம் - வெள்ளியாகிற காரியம். இருந்தைக்கு இருந்தன்று - கரிக்கு இல்லைதான். இருந்தை - கரி. கோலால் கடாய் - கம்பு கொண்டு குத்தி இறக்கினாலும். புகல் ஒல்லா - உள்ளே இறங்காது. மனசோடு ஒட்டாது. எது? அறிவு - ஞானம். அதாவது கலை அனுபவம். நோலா உடம்பு - தவம் செய்யாத ஜென்மம்.*

*குறிப்பு - நாம்தான் தவம் செய்ய வேண்டும். நம்மிடந்தான் விளைய வேண்டும் ஞானம். வேறு எங்கிருந்தோ வருவதில்லை அது.*

## உயிர் மட்டுமா ஒளியும் உண்மைதான்.

ஞானமும் பண்பாடும் இருந்தால் போதும் ஒருவனிடம். அவனைப் பலரும் விரும்புவார்கள். பணவசதி இல்லை என்றாலும் சரி, அழகில்லை என்றாலும் சரி, அதிகாரம், செல்வாக்கு என்று ஒன்றும் இல்லை என்றாலும் சரி அவனைப் பலரும் விரும்புவார்கள்.

மேலான உயர்ந்த ஸ்தானத்தில் வைத்தே மதிப்பார்கள் அவனை.

மேலோர் என்றால் ஞானமும் பண்பாடும் உடையவர்தான். பெரியோர், சான்றோர் என்றெல்லாம் போற்றிப் புகழ்வார்கள் மேலோரை.

இனி ஞானமோ, பண்பாடோ இல்லை என்றால் அவனிடம் செல்வம் குவிந்திருந்தாலும், அதிகாரம் குவிந்திருந்தாலும், அழகில் மன்மதனையே தோற்கடிக்கிறவனாக இருந்தாலும் அவனை ஒருவரும் விரும்ப மாட்டார்கள். கீழோன் (கயவன்) என்றே ஒதுக்கி விடுவார்கள் அவனை. பொது மக்களே இப்படி என்றால் அறிவுடையார் பற்றிச் சொல்லவா வேண்டும். அவன் இருக்கும் இடத்தையே எட்டிப் பார்க்க மாட்டார்கள்.

இனி கள்ளிச் செடியும் பூ பூக்கவே செய்யும். அழகாக இருக்கும் கள்ளிப் பூ. செவ்வல்லி மலர் போல செக்கச் செவேல் என்று கண்ணைப் பறிக்கும் வண்ணத் தோடிருக்கும் கள்ளி மலர். கள்ளிப் பழமும் அப்படித்தான்.

எத்தனை அழகாக இருந்தாலும் கள்ளிப் பூவைப் பறிக்க நீட்டுவார்களா கையை, பெண்கள். பறித்துத் தலையில்தான் சூடுவார்களா அவர்கள் கள்ளிப் பூவை.

பழத்தையும் அப்படியே. பறிக்கவும் மாட்டார்கள். சாப்பிடவும் மாட்டார்கள்.

கள்ளி கள்ளிதான், அல்லி அல்லிதான். அல்லிப் பூ ஆகிவிடுமா கள்ளிப் பூ.

*அல்லிப்பூ அன்ன*
*அழகுறுவ தாயினும்*
*கள்ளிமேல் கைநீட்டார்*
*சூடுறுவார் — செல்வம்*

*பெரிதுடையார் ஆயினும்*
*கீழ்களை நள்ளார்*
*அறிவுடையார் என்னும்*
*அவர் (31)*

(2)

அறிவே இல்லாத மூடனைக் கூடச் சமாளிக்கலாம். ஆனால் அறிஞன் போல் நடிக்கிற மடையனை மட்டும் சமாளிக்க முடியாது.

யாராலும் முடியாது அவனைச் சமாளிக்க. இனி மட்டத்துக்கும் மட்டமான போக்கிரியைச் சமாளித்து விடலாம். எளிதானதுதான் அது. ஆனால் ஞானகுரு போல வேஷம் போட்டு அலையும் போக்கிரிச் சாமியார்களைச் சமாளிக்க முடிகிறதா? சர்வ வல்லமை படைத்த அரசாங்கமே திணறுகிறதே அவர்களைச் சமாளிக்க.

* * *

ஒரு சிறிய செப்பு (டப்பா). புனுகு, ஜவ்வாது கோரோசனை என்று நறுமணத் திரவியங்கள் கலந்த கலவை (களிம்பு) இருக்கிறது அதில்.

குளித்து விட்டு செப்பைத் திறப்போம். கலவையில் கைவிரலை வைப்போம். ஒரு பிரட்டுப் பிரட்டி விரலை எடுப்போம். அப்படியே புருவத்திலும் நெற்றியிலும் தடவுவோம். கமகம என்று தெருவெல்லாம் மணக்கும் வாசனை.

இது வழக்கமாகச் செய்கிற காரியந்தான். இனி வழக்கம் போல் ஒரு நாள் குளித்து விட்டு வந்தோம். செப்பைத் திறந்தோம். என்ன கொடுமை. பூநாகம் போன்ற ஒரு சின்னஞ்சிறிய பாம்புக் குட்டி நூலிழை அளவுதான். அப்படியும் இப்படியும் செப்புள் நெளிகிறது.

---

*அன்ன - போன்ற. சூடுறுவார் - சூட ஆசைப்படுகிறவர்கள். பூவைக் கண்டால் போதும், அயலார் வீட்டுத் தோட்டமானாலும் வெளிப்புறம் நின்று பறித்து தலையில் வைத்துச் சூட ஆசைப்படுவார்கள் பெண்கள். நள்ளார் - பழக மாட்டார்கள். அறிவுடையார் என்னும் அவர் - ஞானத்தையே உடைமையாக (செல்வமாக) மதிக்கும் ஞானச் செல்வர்.*

எப்படி அடித்துக் கொள்ளும் மனம். வாரம் பல ஆனாலும், மாதம் பல ஆனாலும் விடுமா பயமும், அவமானமும் நம்மை விட்டு.

இனி பார்ப்பதற்கு யோக்கியராகவே தெரிந்தார் ஒருவர். பழகப் பழக என்ன தெரிகிறது. படுபோக்கிரி என்றே தெரிகிறது.

*அது செப்பினுள் நெளிகிற பாம்பு தானே.*
*சான்றோர் எனமதித்துச்*
*சார்ந்தாய்மன், சார்ந்தாய்க்குச்*
*சான்றாண்மை சார்ந்தார்கண்*
*இல்லாயின் — சார்ந்தோய்கேள்!*
*சாந்தகத்(து) உண்டென்று*
*செப்புத் திறந்தொருவன்*
*பாம்பகத்துக் கண்ட*
*படித்து (32)*

(3)

மகாத்மா காந்தியிடம் லூயி பிஷர் (அமெரிக்க நிருபர்) ஒரு கேள்வியைப் போட்டார். 'இந்தியர்கள் பக்தியும் ஆசார அனுஷ்டானங்களும் நிறைந்தவர்கள். நீங்களோ அவர்களிடம் சமத்துவம் வேண்டும், சகோதரத்துவம் வேண்டும், சாதி, மத, இன வேறுபாடு கூடாது என்றெல்லாம் சொல்கிறீர்களே, நீங்கள் சொல்வது எடுபடுமா' அவர்களிடம் என்று.

கடகட என்று சிரித்தார் காந்திஜி. சிரித்துக் கொண்டே சொன்னார் ''யார் சொன்னது பக்தி உடையவர்கள் இந்தியர் என்று! சுத்த சோம்பேறிகள் பெரும்பாலான இந்தியர்கள்!! பொழுது போகாமல் திண்ணை வேதாந்தம் பேசியே காலத்தைக் கழிக்கிறவர்கள். திண்ணை வேதாந்தத்தோடு ஊர்ப் புரணியையும் சேர்த்து இரண்டுக்கும் வியாக்யாகம் சொல்கிறவர்கள். இவர்கள் எப்படி பக்தர் ஆவார்கள்'' என்று.

---

*சான்றோர் என மதித்துச் சார்ந்தாய் - யோக்கியர் என்று நம்பித்தான் நெருங்கினாய் பழகினாய். சார்ந்தாய்க்கு - நெருங்கிப் பழகிய உனக்கு. சான்றாண்மை சார்ந்தார்கள் இல்லாயின் - அவரிடம் நீ எதிர்பார்த்த பண்பாடு இல்லை என்றால். சாந்துச் செப்பில் பாம்பு நெளிகிறதுதான்.*

மேலும் சொன்னார் காந்தி மகான். ''உழைப்புத்தான் பக்தி அது வழங்கும் இன்பந்தான் உடல், மனம், ஆன்மா மூன்றையும் சுத்தப்படுத்தும் ஆனந்தம். அந்த ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும்.

''ஆதி முதல் இந்தப் பண்புதான் இந்தியர்களிடம் பொதுவாக இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் உழைப்பை விட்டு விட்டு சோம்பலிலேயே சுகம் காண்கிற நிலை உருவாகி விட்டது.

''ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதும், சொத்தைச் சேர்த்துக் குவிப்பதும்,அதனால் ஒருவரை ஒருவர் வெறுப்பதும், நீ வேறு, நான் வேறு என்று வேற்றுமையை வளர்ப்பதும் பிழைப்பாகி விட்டது இந்தியர்களிடம்.

''தங்கள் தவறு தங்களைத் தாக்காமல் இருக்கவும், அதிலிருந்து தப்பிக்கவுமே வறட்டுத் தத்துவங்களை உண்டாக்கினார்கள். அவைகளை இறுகப் பிடித்துக் கொண்டார்கள். தெய்வங்களையே சாட்சி சொல்ல வைத்தார்கள்.

''சாதி வேற்றுமை, மத வேற்றுமை, இன வேற்றுமை, ஏழை பணக்காரன், படித்தவன் படியாதவன், வேண்டியன் வேண்டாதவன் என்றெல்லாம் பாகுபாடு பண்ண வைத்தது சோம்பல் தான்.

''சோம்பல் என்பது கொடிய போதை. தன்னுணர்வு இருக்காது அதில். பிறர் மேல் பொறைமையை உண்டாக்கும் அது. அவன் இப்படி, இவன் அப்படி என்று ஒவ்வொருவரையும் குறை சொல்ல வைக்கும் சோம்பல்.

''மற்றவர்கள் காரியங்களையே பார்ப்பது அவற்றைக் குறை கூறுவது, அதையே கேட்பது இவற்றிலேயே இன்பம் காண்பதுதான் சோம்பல். காலத்தையே அதிலே கரைக்க வைக்கிறது சோம்பல்.

மகா பெரிய பாவம் என்றால் சோம்பல்தான்.

தனக்கும் பிறர்க்கும் பலன் தரும் செயலை ''உத்சாகமாகச் செய்யும், உழைப்பிருந்தால் இந்தப் பாவத்துக்கு இடம் ஏது.

''உழைப்பின் பெருமையை இந்தியர்கள் தெரிய வேண்டும். உத்சாகத்தோடு செயல்பட வேண்டும். உழைப்புத்தான் பலன்.

அதுதான் நிம்மதி, அமைதி, ஆனந்தம் என்று செயல்பட வேண்டும் ஒவ்வொரு இந்தியனும். ''அதற்காகத்தான் சமத்துவம், சகோதரத்துவம் என்று சொல்கிறேன்.

''பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற வேண்டும் என்று போராடுவதே அதற்குத்தான்.''

இப்படி முடித்தார் காந்தி மகான்.

* * *

தம் தம் கடமையை இன்பமாய்,ஆர்வத்தோடு செய்கிறவர்கள் மற்றவர்களை வெறுக்க மாட்டார்கள். பொறாமைப்பட மாட்டார்கள். பிறர் குறை கூறுவதையே தொழிலாக வைத்துக் கொள்ள மாட்டார்கள்.

உண்மையான அறவாணர்கள் (தர்மப் பிரபுகள்) என்றால்அ வர்கள்தான்.

வேதம், வேதாந்தம், சித்தாந்தம், சாஸ்திரம் என்று உபதேசங்கள் தேவை இல்லையே அவர்களுக்கு.

*பிறர்மறை யின்கண்*
*செவிடாய், இருவிழியும்*
*ஏதிலார் இல்க்கண்*
*குருடாய், — தீய*
*புறங்கூற்றின் மூகையாய்*
*நிற்பானேல் யாதும்*
*அறம்கூற வேண்டா*
*அவற்கு (33)*

---

*பிறர் மறையின் கண் - இன்னொருவர் பற்றி ஒருவர் குறை கூறுகிறார் என்றால். செவிடாய் - காது கொடுத்து அதைக் கேட்கக் கூடாது. ஏதிலார் இல்கண் - மற்றவர் குடும்பப் பிரச்சனையில். இரு விழியும் குருடாய் - கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். பார்க்கக் கூடாது. மூகை - ஊமை.*

*குறிப்பு - மனிதனிடமிருந்து தானே அறநூல் பிறக்கிறது. அப்படியானால் அவனுக்கு நீதி உபதேசம் வேண்டியதில்லை தானே.*

(4)

நமக்குப் பசி எடுக்கிறது. பசி ஆற வேண்டுமானால் நாம் சாப்பிட வேண்டும். நாம்தான் சாப்பிட வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு வந்த பசி ஆறும். பிறர் சாப்பிடுவதால் நம் பசி ஆறாது.

காய்ச்சலோ மண்டையடியோ வந்தது நம்மிடம். அதைத் தணிக்கவும் நாம்தான் மருந்து சாப்பிட்டோம். இன்னொருவர் மருந்துண்டு நம் நோய் குணமாவதில்லை.

நமக்கு மட்டும் வகுத்து வைத்த விதி அல்ல இது. எல்லோருக்கும் பொதுவான பொது விதி இது.

நல்லவனாக (மனிதனாக) வேண்டும் ஒருவன் என்றால் நல்ல செயல்களை, தனக்கும் பிறர்க்கும் கேடு உண்டு பண்ணாத நல்ல செயல்களை அவன் செய்ய வேண்டும். இன்னொருவர் நல்லது செய்ய மற்றொருவன் நல்லவனாக முடியாது.

கெட்ட காரியங்களை ஒருவன் செய்கிறான் என்றால் வேறொருவர் அவனைக் கெடுக்க வேண்டியதில்லை. அவனாகவே கெடுவான். அவன் செயலே அவனைக் குப்புறத் தள்ளி புழுதியில் உருட்டி விடும்.

இனி கெட்டவன் ஒருவன் நல்லவன் ஆகவேண்டும் என்றால் அவன்தான் தன் கேடான செயல்களை எண்ணி வருந்த வேண்டும். நல்லன செய்து திருந்த வேண்டும். திருந்தித் திருந்தி கேட்டிலிருந்து விடுபட வேண்டும். வேறொருவர் செய்கிற யாகமோ, பூஜை, புனஸ்காரமோ கெட்டவனை நல்லவனாக்காது.

ஒரு லட்சியத்துக்காக ஆயிரம் பதினாயிரம் பேர் என்று போரில் குதிக்கிறார்கள். அத்தனை பேரிலும் ஒருவன்தான் தலைவன் ஆகிறான். போரில் வெற்றி கிடைக்கிறது. நிர்வாகப் பொறுப்பு அந்த ஒருவனிடமே வருகிறது. அத்தனை பேருக்கும் பங்கிட்டுப் போவதில்லை பொறுப்பும் தோரணையும்.

புறம்போக்காய்ப் பார்க்கிற பொழுது அத்தனை பேருடைய உழைப்பைக் கொண்டுதான் அவன் தலைவன் ஆனதாகத் தெரியும். அதுவல்ல உண்மை.

மற்றவர்களிடம் இல்லாத ஒரு தனித்த பண்பு இவனிடம் இருந்தது. அதாவது மற்ற எல்லோருடைய உழைப்பையும் தன்னுடைய உழைப்பில் சங்கமிக்க வைக்கும் பக்குவம் இருந்தது

இவனிடம். அந்தப் பக்குவந்தான் இவனைத் தலைமகன் ஆக்கியது.

மற்றவர்களிடம் அது இல்லை. இருந்தாலும் அது எடுபடவில்லை.

தலைமைப் பொறுப்பேற்பதற்குரிய பக்குவம் உடையவன்தான் தலைவன் ஆவான்.

இன்னொருவர் பக்குவத்தில் மற்றொருவன் தலைவன் ஆவதில்லை.

*தீதும் நன்றும்*
*பிறர்தர வாரா (புறநானூறு)*
*என்பது நூற்றுக்கு நூறு உண்மை.*

*நன்னிலைக்கண் தன்னை*
*நிறுப்பானும், தன்னை*
*நிலைகலக்கிக் கீழிடு*
*வானும் — நிலையினும்*
*மேன்மேல் உயர்த்து*
*நிறுப்பானும், தன்னைத்*
*தலையாகச் செய்வானும்*
*தான் (34)*

---

*நல்நிலைக்கண் தன்னை நிறுப்பான் - உயர்ந்த லட்சியத்தில் ஒருவன் நிலைத்து நிற்கிறான் என்றால், அதற்குரிய காரணம் என்ன? தான் - தனக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் அறநெறியில் அவன் செயல்படுவதுதான். வழுவாது தொடர்ந்து செயல்படுவதுதான். அவனும் அவன் செயலுமே அவனை நல்லவன் என்று உயர்த்துகிறது. இனி, நிலை கலக்கித் தன்னையே கீழிடுவானும் தான் - இனி ஒருவன் நிலை தவறி தலை குப்புறக் கவிழ்கிறான், கெட்டவன் என்கிற பெயரில் சேற்றிலும் சகதியிலும் கிடந்து உழல்கிறான் என்றால் அதற்குரிய காரணமும் அவன்தான். தாறுமாறாக நடந்து கொள்ளும் அவனுடைய கீழான போக்குத்தான் காரணம். நிலையினும் - கெட்டுப் போனவன் ஒன்றிரண்டு நல்லது செய்து நல்லன் என்னும் நிலைக்கு வந்து விட்டான். ஆனாலும் அதில் நிலைத்து நிற்க வேண்டும் என்றால். மேல் மேல் உயர்த்தி நிறுப்பானும் தான் - திருந்தித் திருந்தி வழுவாது நிற்க வேண்டும் அவன். அந்தப் பொறுப்பு அவனைச் சேர்ந்ததுதான். இனி தலையாகச் செய்வானும் தான் - பரம்பரை, சூழ்நிலை இவைகளையே உதறி எறிந்து விட்டு, உயர்ந்தோங்கி ஒளிர்கிறான் ஒருவன் என்றால், அதற்கும் அவன்தான் காரணம். உயர்ந்த லட்சியமும் அதை ஒட்டிய செயலுமே காரணம்.*

(5)

சட்டம், ஒழுங்கு, நீதி, நெறிமுறை முதலிய அறவுணர்வுகளுக்கு ஒளி கொடுக்கிறார்கள் அருளாளர்கள். ஒளி கொடுத்து அவற்றுக்கு வழிகாட்டுகிறார்கள் அவர்கள்.

குருகுலம் நடத்தியோ உபதேசம் செய்தோ அல்ல. தங்கள் வாழ்க்கையின் மூலமாகவே அறவுணர்வின் கண்ணைத் திறந்து விடுகிறார்கள். அதன் கையைப் பிடித்து நடை பழக்குவதும் அவர்கள் வாழ்க்கையே.

அருளாளர்களுக்கு ஆன்றோர் என்றும் பெயர். சான்றோர் என்றும் பெயர்.

* * *

வானம், பூமி முழுவதையும் பாலாபிஷேகம் செய்கிறது சந்திரன். பூரண சந்திரன். என்ன பளபளப்பு, என்ன குளுமை, எப்படிச் சொக்குப் பொடி போட்டுப் பரவசப்படுத்துகிறது இந்த முழு நிலா! அடடா! கடவுள்த் திங்கள் என்பது என்ன பொருத்தமான பெயர் சந்திரனுக்கு.

சான்றோர்களின் அன்புடைமை, பொறையுடைமை, நேர்மை, ஆதரவு, தியாகம் என்கிற பண்புடைமையும் அப்படித்தான். கடவுள்த் திங்களைப் போலே சொக்க வைக்கும் அவை.

பளிங்கு போன்ற தூய வெண்ணிலவும் சான்றோரும் (சான்றாண்மையும்) அச்சில் வார்த்த மாதிரி ஒன்றை ஒன்று ஒத்தே உள்ளன.

ஆனாலும் திங்கள், தெய்வத் திங்களாக இருந்தாலும் சான்றோருக்கு ஒருபடி கிழ்தான் (ஒரு முழம் கட்டைதான்) என்கிறார் நாலடியார்.

உபசாரத்துக்காகவா அப்படிச் சொல்கிறார் கவிஞர். இல்லை இல்லை. பாடலைப் பாடிப் பார்த்தால் தெரியும் விபரம்.

*அங்கண் விசும்பின்*
*அகன்நிலாப் பாரிக்கும்*
*திங்களும், சான்றோரும்*
*ஒப்பர்மன்; — திங்கள்*

*மறுவாற்றும், மற்றைய*
*சான்றோர் தெருமந்து*
*தேய்வர் ஒருமா(சு)*
*உறின் (35)*

---

என்ன இருந்தாலும் சந்திரனிடம் சிறு களங்கம் இருக்கத்தானே செய்கிறது. சான்றோரிடம் உண்டா அது. அங்கண் விசும்பு - விசாலமான ஆகாயம். விசும்பு - ஆகாயம். அகன்நிலா பாரிக்கும் திங்கள் - சந்து பொந்து ஒரு இடமும் மிச்சம் வைக்காமல் அத்தனை இடமும் போய் நிலவைப் பரப்பும் சந்திரன். மறுஆற்றும் - ஒளி கொடுக்கும் சந்திரனும் களங்கத்தோடுதான் இருக்கிறது. ஆனால் சான்றோர் அப்படி இல்லை. கடுகளவு களங்கம் ஏற்பட்டாலும் சோர்ந்து ஓய்ந்து விடுவார்கள். தெரு மருதல் - சோர்தல். மாசு - குற்றம், தவறு. வானத்தை அலங்கரிக்கும் நிலவைவிட உயர்ந்தவர் சான்றோர்.

## பண்பாடில்லாத உண்மை என்ன உண்மை

மனிதன் தனித்து வாழ முடியாது. குடும்பம், ஊர், சமூகம், நாடு, சமுதாயம் என்னும் துணை கொண்டுதான் வாழ முடியும். பிறர் ஆதரவில்லாமல் ஒருவராலும் வாழ முடியாது.

குடும்பம், தெரு, ஊர், சமூகம் இவை புற ஆதரவு. புற ஆதரவைப் போலவே அக ஆதரவும் மனித வாழ்வுக்குத் தேவை. அன்பு, பொறுமை, ஈகை, இன்சொல், அடக்கம், ஒத்துப் போதல் இப்படிப் பல பண்புகள். இந்தப் பண்புகள்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் அக ஆதரவு.

குழந்தைப் பருவத்திலிருந்தே அன்பு முதலிய அக ஆதரவு சேர்ந்து வளர வேண்டும். முதலில் குழந்தை வளரட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் அன்பு முதலிய பண்புகளை என்று விட்டுவிடக் கூடாது. தேக வளர்ச்சி, மன வளர்ச்சி, குண வளர்ச்சி மூன்றும் சேர்ந்தே வரவேண்டும்.

அறுபது எழுபது வயதுக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அடக்கம், மரியாதை முதலிய பண்புகளை என்று விட்டு விட்டால் உருப்படுமா வாழ்க்கை. மனிதக் கூட்டம் மனிதக் கூட்டமாகவா இருக்கும் அப்பொழுது.

இளமையிலேயே பரிவுணர்ச்சி சேர்ந்து வளர்ந்து வந்திருந்தால்தான் ஆயுள் முழுவதும் அது இருக்கும். வசதி குறைந்திருந்தாலும், வேறு ஆதாரம் இல்லை என்றாலும் பிறர் துயர் துடைக்க எழுந்து நிற்கும் பரிவு.

இனி கோணல் மாணலானதுதான் உலகம். மனித காரியம் என்றால் தப்பும் தவறும் இருக்கவே செய்யும். மிக்க பலம் இருந்தும், வளமான செல்வாக்கிருந்தும் பிறன் செய்த தீங்கைச் சகித்துக் கொள்கிறான் ஒருவன் என்றால் அவன் வளர்ந்து வந்த முறைதான் காரணம்.

குழந்தைப் பருவத்திலிருந்தே பண்பாடு வளர வேண்டும். இன்னும் கொஞ்சம் யோசித்துச் சொல்வதென்றால் கருவுற்ற காலம் முதலே பண்போடு சேர்ந்து வளர வேண்டும். அப்படி வந்தால்தான் அடக்கம் இருக்கும்.

*இளையான் அடக்கம்*
*அடக்கம், கிளைபொருள்*
*இல்லான் கொடையே*
*கொடையாகும் — எல்லாம்*
*ஒறுக்கும் மதுகை*
*உரனுடை யாளன்*
*பொறுக்கும் பொறையே*
*பொறை (36)*

(2)

பசு நமக்கு உதவியாக இருக்கிறது. பால், மோர், நெய்யென்று உதவுகிறது. நிலத்துக்கு உரம் கொடுக்கிறது. உழவுக்கு உதவும் காளையையும் கொடுக்கிறது பசு.

விலங்கு தானே, மாடு தானே பசு என்று அதைப் புறக்கணிப்பதில்லை மனிதர்கள்.தெய்வத்தை மதித்து உபசரிக்கிற மாதிரியே பசுவையும் மதித்து உபசரிக்கிறார்கள் மனிதர்கள்.

உண்மையை உணர்ந்து மதிக்கிறதும் உபசரிக்கிறதுமே பக்தி. இது இயல்பாகவே இருக்கிறது மனிதர்களிடம். புல்ப் பூண்டுகளிலிருந்து யானை குதிரை வரை சகல பிராணிகளிடமும் இயல்பாக இருக்கிறதுதான் இது. அதாவது பக்தி.

இந்தப் பக்திதான் நன்றி உணர்வு.

* * *

மனிதர்களிடம் நன்றி உணர்வு இருப்பது இயல்பான காரியமே. அதில் ஒன்றும் அதிசயம் இல்லை. ஒருவனிடம் நன்றி உணர்வு இல்லை என்றால் அதுதான் அதிசயம்.

இந்த அதிசயத்தை மனதுள் பூட்டி வைத்து மறைக்க முடியுமா? முடியவில்லை கவிஞரால். பாண்டியன் அரசவைக்கே ஓடி வருகிறார். பாண்டியன் முன்னிலையில் புலவர் குழாத்திடமே சமர்ப்பிக்கிறார் அதிசயத்தைக் கவிஞர்.

---

*கிளை - உற்றார் உறவினர். பொருள் - கைப்பொருள் செல்வம், சொத்து எல்லாந்தான். எல்லாம் ஒறுக்கும் மதுகை உரனுடையாளன் - எதிர்த்தவரைக் கூண்டோடு நசுக்கி விடும் ஆற்றல் மிக்க வீரன் ஒருவன். பொறை - பொறுமை.*

*தினைஅனைத்தே ஆயினும்*
*செய்நன்(று)ஒன்(று) உண்டேல்*
*பனைஅனைத்தா உன்னுவர்*
*சான்றோர்; — பனைஅனைத்து*
*என்றும் செயினும்*
*இலங்கருவி நல்நாட!*
*நன்றல நன்றறியார்*
*மாட்டு (37)*

(3)

மனிதர்கள் என்றால் நடை, உடை, பாவனைகளில் பலவிதம். ஒரே விதத்தில் அத்தனை பேரும் இருக்க முடியாது. பலவிதமான மனிதர் இருப்பது இயல்புதான்.

பல பல விதங்களாக இருந்தாலும் மனிதர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறது. ஒரு பிரிவினர் கயவர், இன்னொரு பிரிவினர் சான்றோர். மற்றொரு பிரிவினரோ கயவரும் இல்லை. சான்றோரும் இல்லை. பொதுவர் (பொதுவானவர்).

இனி நட்பை எடுத்துக் கொண்டால் அதிலும் மூன்று பிரிவு(கள்) உண்டு. ஒன்று கடையாயார் நட்பு. மற்றொன்று இடை ஆயார் (பொதுவர்) நட்பு. மற்றொன்று சான்றோர் நட்பு.

கேட்கக் கேட்கக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதுவரைதான் கடையாயார் நட்பு இருக்கும் இடை ஆயார் நட்பு அப்படி இல்லை. இடை இடையே கொடுத்தால் போதும். ஆபத்துக்கு, அவசியத்துக்கு உதவினால் போதும். இடையாயார் நட்பு தொடரும். இனி, சான்றோரை எடுத்துக்

---

*தினை - சின்னஞ்சிறிய தானியம். பனை - பெரிய மரம். கடுகளவுதான் ஒருவர் செய்த நன்மை என்றாலும், அதை மலை அளவுக்கு மதித்து. உன்னுவர் - எண்ணி எண்ணி இன்புறுவர். யார்? சான்றோர். இனி, பனை அனைத்து - பனை அளவு நன்மையை. என்றும் செயினும் - ஒருவர் தொடர்ந்து செய்தாலும். நன்று அறியார் மாட்டு - நன்றி உணர்வு இல்லாதவர் உள்ளத்தில். நன்றல - ஒட்டவே ஒட்டாது. நன்மையாகவே படாது அது.*

*விசித்திரமான ஜென்மந்தான் நன்றி உணர்வில்லாத ஜென்மம் என்பது விஷயம், அதுதான் கவி உருவம் எடுக்கிறது.*

கொண்டால் என்றென்றும் பசுமையாக இருக்கும் அவர்கள் நட்பு. குளுமை குன்றவே குன்றாது அவர்கள் நட்பில். மேலும் மேலும் வளருமே தவிர குறையாது அவர் தம் நட்பு. நாம் வளர்க்க வேண்டாம், தானாகவே வளரும் சான்றோர் நட்பு.

இந்த உண்மையை எப்படித் தெளிவுபடுத்துவது. தெளிவுபட்டால் தானே உணர்ச்சியோடு கலக்கும். உணர்ச்சியோடு கலந்து அனுபவத்தில் ஊற ஊறத்தான் கவியாக எழுந்து வரும்.

அப்படி எழுந்துவர என்ன செய்கிறது தமிழ். கமுகம் தோட்டம் வைக்கிறது. தென்னந்தோப்பை வளர்க்கிறது. பனை மரத்தையும் நட்டு வைக்கிறது தமிழ். கொத்தி, திருத்தி எப்படி எல்லாமோ பண்படுத்துகிறது தோட்டங்களை.

*கடையாயார் நட்பிற்*
*கமுகனையர், ஏனை*
*இடையாயார் தெங்கின்*
*அனையர் — தலையாய*
*எண்ணரும் பெண்ணைபோன்(று)*
*இட்டஞான்(று) இட்டதே*
*தொன்மை உடையார்*
*தொடர்பு (38)*

(4)

கயவர் கயவர்தான். அவர்களை நல்லவர்களாக மாற்ற ஒருவராலும் முடியாது. ஆலம் பழத்தைப் பலாச் சுளையாக மாற்ற முடியுமா? நாய் வாலை நிமிர்த்தி நிற்க வைக்க முடியுமா? காக்காய் காக்காய்தான். அதைக் கிளியாக்க முடியுமா? கிளி போலப் பேச

---

*உரம், தண்ணீர், கவனிப்பு என்று நிறையப் பாடுபட வேண்டும் கமுகுக்கு. இத்தனை பாடுபட்டும் கமுகு கொடுக்கும் பலன் குறைவுதான். பாக்கு ஒன்றுதான். தெங்கு - தென்னை. தென்னைக்கு ஓரளவு பாடுபட்டால் போதும். தேங்காய், மட்டை, ஓலை என்று பலன் அதிகம் கிடைக்கும். பெண்ணை - பனை. இட்டஞான்று இட்டது - பனங்கொட்டையை ஊன்றி வைப்பதோடு சரி. ஒன்றும் அதற்குச் செய்ய வேண்டியதில்லை. ஆனாலும் பதனீர், நுங்கு, மட்டை, ஓலை என்று தொடர்ந்து கொடுக்கும் பனை.*

வைக்க முடியுமா காக்காயை? இவையே முடியாது என்கிற போது மூர்க்கனை எப்படிச் சான்றோன் ஆக்க முடியும். இது சம்பந்தமாக ஔவையார் பாடல் ஒன்று.

*ஆலைப் பலாஆக்கல்*
*ஆமோ, அருஞ்சுணங்கன்*
*வாலை நிமிர்க்க*
*வசம்ஆமோ — நீலநிறக்*
*காக்கைதனைப் பேசுவித்தல்*
*ஆமோ; கருத்தில்லா*
*மூர்க்கரைச்சீர் ஆக்கலா*
*மோ (ஔவையார்)*
*சுணங்கள் - நாய்.*

தெளிவாகவே தீர்ப்பளித்து விட்டார் ஔவையார். அனுபவம் உள்ளவர்கள் எல்லோரும் தெரிந்ததுதான் இது.

கயவன் கயவன்தான் அவனை மனிதனாக்க முடியாது என்பது.

எத்தனை உதவி செய்தாலும் கயவனிடம் நன்றி உணர்வு இருக்காது. அத்தனையையும் ஒரு நொடியில் உதறி எறிந்து விடுவான். 'உம்மால் ஒரு உப்புக் கல்லுக்குப் பிரயோசனம் உண்டா' என்று குதிப்பான். உம்மை நம்பி நான் கெட்டேன் என்றுகூட ஆர்ப்பரித்து விடுவான்.

கயவன் என்றால் அப்படித்தான். ஆச்சர்யப்பட ஒன்றும் இல்லை அவனிடம். ஆச்சர்யம் எல்லாம், அதிசயம் எல்லாம் சான்றோரிடந்தான்.

என்ன அதிசயம் அவர்களிடம். உதவி என்றே சொல்ல முடியாது. கடமையைத்தான் செய்திருப்பான் ஒருவன். அதுவும் அரைகுறையாகத்தான் செய்திருப்பான். ஆனாலும் அதை ஆயிரம் ஆயிரமாகப் பெருக்கிப் பாராட்டுவார்கள். ஆனந்திப்பார்கள், உபசரிப்பார்கள். தெய்வத்தைப் பார்ப்பது போல அதைப் பார்த்து இன்புறுவார்கள். சான்றோர் அதுமட்டுமா?

கடுகளவு உதவி செய்தவன் மலையளவு தொந்தரவு கொடுத்தாலும் அதையும் பொறுத்துக் கொள்வார்கள். இதைவிட அற்புதம் என்ன இருக்கிறது உலகில்.

*ஒருநன்றி செய்தவர்பால்*
*ஒன்றி எழுந்த*
*எழுநூறும் சான்றோர்*
*பொறுப்பர்; — கயவர்க்கு*
*எழுநூறு நன்றுசெய்து*
*ஒன்றுதீ(து) ஆயின்*
*எழுநூறும் தீதாய்*
*விடும் (39)*

(5)

மனிதனைப் போலவே தோற்றம் உடையவன் கயவன். தோற்றம் சரிதான். அதற்காக மனிதனும் கயவனும் ஒன்றாக முடியுமா? மனிதன் மனிதன்தான். கயவன் கயவன்தான்.

உழைப்பு, உழைப்பில் ஆனந்தம் இவற்றின் அவதாரந்தான் மனிதன். தனக்கு வேண்டிய உணவையும் உடையையும் உழைத்து உழைத்துத் தேடியவன் மனிதன். எல்லையற்ற ஆனந்தத்தை அதில் கண்டு அனுபவிக்கிறவன் மனிதன்.

கயவனுடைய காரியம் அதுவல்ல. உழைப்புக்கும், அவனுக்கும் வெகுதூரம். உழைக்காமல் இருப்பதுதான் அவனுக்குப் பொழுதுபோக்கு. அதில்தான் அவனுக்குச் சுகம்.

ஆடு, மாடு, மான், மிளா, நண்டு, மீன், கோழி, புறா, குருவி என்று பிற உயிரினங்களை (விலங்கு, பறவை, நீர் வாழ்வன முதலிய உயிரினங்களை) சித்தரவதை செய்வான். கொன்று தீர்ப்பான். கொலை உண்டவற்றின் பிணத்தை (ஊனுடம்பை) உண்டு மகிழ்வான். அப்படியானால் அவனைப் பற்றி என்ன சொல்ல? பிணந்தின்னிக் காட்டேரி என்று தானே சொல்லத் தோன்றும். மனித உருவில் நடமாடும் பேய். பிணத்தைப் புதைத்து வைக்கும் சுடுகாடு என்று தானே சொல்லத் தோன்றும். அவனையும் அவன் வயிற்றையும்.

---

*குறிப்பு - எழுநூறு எழுநூறு என்று சுற்றிச் சுற்றி வருகிற செய்யுளில், ஒன்று என்பதும் அப்படியே. என்ன ஒற்றுமை, கயவனும் சான்றோர் போலல்லவா இருக்கிறான். ''மக்களே போல்வர் கயவர்'' அதுவும் அதிசயந்தான்.*

மேலும் அவன் வயிற்றை என்ன சொல்ல. விலங்கு, பறவை முதலியவற்றைச் சுட்டெரிக்கும் இடுகாடு என்றும் சொல்லத் தோன்றும்.

கயவனாவது சான்றோனாக மாறவாவது. இந்த ஜென்மத்தில் நடக்கிற காரியமா அது. அஹிம்சை பற்றி, சத்தியாகிரகம் பற்றி (துறவு பற்றி) எல்லாம் அவனிடம் உபதேசம் செய்யலாமா? செய்தால் செய்கிறவனுக்குத்தான் அட்டமத்தில் சனி.

*துக்கத்துள்த் தூங்கி*
*துறவின்கண் சேர்கலா*
*மக்கள்ப் பிணத்த*
*சுடுகாடு — தொக்க*
*விலங்கிற்கும் புள்ளிற்கும்*
*காடே; புலம்கெட்ட*
*புல்லறி வாளர்*
*வயிறு (40)*

---

*துக்கத்துள் தூங்கி - கொலை வெறி பிடித்த முகத்தைத் தொங்கப் போட்டபடியே சோம்பலில் மிதக்கிறவன் புல்லறிவாளன். துறவின் கண் சேர்கலா (புல்லறிவாளன்) தன்னலம் துறந்து பிறர் நலம் பேணும் துறவுக்கும் அவனுக்கும் ஏது தொடர்பு. புலம் கெட்ட - மனச்சாட்சியே இல்லாத. புல்லறிவாளன் - கயவன், மூர்க்கன் அவன். மக்கள் பிணத்த. சுடுகாடு - மனித உருவில் நடமாடும் பேய் அவன். பேய் வாழும் சுடுகாடு அவன். அவன் வயிறோ, விலங்கு, பறவை அத்தனைக்கும் இடுகாடு.*

*மனிதனுக்குச் சொல்லக்கூடிய உபதேசத்தை அவனுக்குச் சொல்லலாமா? கூடவே கூடாது.*

## அடக்கமும் மரியாதையுமே பண்பாடு

கல்லாதவன் என்றால் கயவன்தான். பண்பாடில்லாதவன் தான். மூர்க்கன்தான். எப்பொழுதும் அவனுக்கு மூளை கலங்கியே இருக்கும். தெளிவே இருக்காது அவனிடம்.

மூடன் ஒருவன் பணக்காரனாக இருக்கலாம். அதிகாரம் பண்ணுகிறவனாகவும் இருக்கலாம். அதற்காக அவனோடு உறவு கொண்டாடலாமா?

கயவன் ஒருவன். வலிய வருகிறான் உறவாட. அதற்கு இடம் கொடுக்கவில்லை நாம். அதனால் கோபம் வருகிறது கயவனுக்கு. பகைமை பாராட்டுகிறான்.

சரிதான், பரவாயில்லை. அவன் பகைவன் என்று ஒதுங்க வேண்டும். அவன் விரோதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் ஒருபோதும் நட்புக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது கயவனிடம்.

*தெளிவிலார் நட்பில்*
*பகைநன்று*

இனி தீராத நோய். அதனால் வரும் நோவும், வலியும் தீராதபடியே தொடர்கின்றன. நாளும் பொழுதும் நைந்து நைந்து சாகிறான் ஒருவன். அப்படி அணு அணுவாய்ச் சாவதைவிட மொத்தமாய், ஒரே அடியாய்ச் சாவதே மேல்.

*சாதல்*
*விளியா அருநோயின்*
*நன்றால்*

ஒருவனைக் கேவலமாக, தரம் கெட்டுப் பேசுவது கொடுமை. கொலையைவிடப் படுபயங்கரமான கொடுமை அது. என்ன இருந்தாலும் மற்றவர் மனம் சுழிக்க, அவர்தம் காது புளிக்க ஒருவனை இகழ்ந்து பேசக் கூடாது. கொல்லாமல்க் கொல்லுகிற கயமை அது.

*அளிய*
*இகழ்தலிற் கோறல்*
*இனிதே*

இனி கல்வி அறிவில்லாத கயவனை, மூடனை, அற உணர்வே இல்லாத கிராதகனைப் புகழ்ந்து பாராட்டுவதும் ஒருவகையில் ஏளனந்தான். கேவலமாக வைவதைவிடக் கடுமையானதுதான் பொய்ப் புகழ்ச்சி.

*தெளிவிலார் நட்பிற்*
*பகைநன்று, சாதல்*
*விளியா அருநோயின்*
*நன்றால் — அளிய*
*இகழ்தலின் கோறல்*
*இனிதே, மற்(று) இல்ல*
*புகழ்தலின் வைதலே*
*நன்று (41)*

(2)

அகஸ்திய மாமுனிவர் போன்று எல்லையற்ற புலமை. திருவள்ளுவரை ஒத்த பண்பாடு, மாணிக்கவாசகர்தான் என்று சொல்லும் படியான பக்தி, கம்பரின் அவதாரமேதான் என்னும் படியான கலைப் பண்பு இவ்வளவும் சேர்ந்தெடுத்த அவதாரமான மகான் ஒருவர்.

மூவாயிரம் நாலாயிரம் பேர் என்று சொல்லும்படி ஆடவர்களும் பெண்டிரும் நிறைந்த இலக்கிய சபை. மகான் பேச இருக்கிறார். அவருக்கு முன் ஒரு முரட்டுப் பண்டிதரின் சொற்பொழிவு.

சொற்பொழிவாற்றும் முரட்டுப் பண்டிதர் மகானை மூர்க்கமாகப் பார்க்கிறார். சபைக்குச் சுட்டிக்காட்டியபடியே "இவர் ஒரு கோமாளி, புலமையோ, ஆராய்ச்சித் திறமையோ இல்லாத

---

*விளியா - விட்டு விலகாமல், சேர்ந்திருந்தே கொல்லும். அருநோய் - கொடிய நோய். அளிய - இரங்கத்தக்கபடி. கோறல் - கொல்லல். கொலை செய்தல். இல்ல புகழ்தல் - ஒருவனிடம் இல்லாததை இருப்பதாகப் புளுகுகிற புகழ்ச்சி அது புகழப்படுகிறவனுக்குக் கேவலம். அதைவிட கேவலம் புகழ்கிறவனுக்கு.*

*குறிப்பு - கொலை கொடிது, அதைவிடக் கொடிது இகழ்தல். அதையும் விடக் கொடிது இல்ல புகழ்தல்.*

போலி. தமிழைக் கெடுக்க வந்த கொடு நோய்'' என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி வசை பாடுகிறார். மகானைத்தான். பண்டிதர்தான்.

சபையோர் எல்லோரும் வருந்துகிறார்கள். ஏன் இப்படிப் பேயாட்டம் ஆடுகிறது சனியன் என்றே வருந்துகிறார்கள். ஆனால் மகானோ புன்முறுவல் பூக்கிறார். பேஷ், பேஷ் என்று உத்சாகமாகச் சிரிக்கிறார்; பண்டிதரைப் பார்த்தே.

பொறுக்குமா பண்டிதருக்கு. மூளையே கொதித்து விட்டது. கொதித்த கொதிப்பில் ''என்னய்யா சிரிப்பு, மானங்கெட்ட சிரிப்பு, நான் புட்டுப் புட்டு வைக்கிறேன் உம்மை, நீர் இளிக்கிறீரே'' என்று வெறி கொண்டு விட்டார் பண்டிதர்.

ஜனங்களுக்கெல்லாம் பண்டிதர் மேல் கோபாவேசமே வந்து விட்டது. வசவிலேயே இறங்கி விட்டார்கள் பலர்.

பண்டிதர் உட்கார்ந்தார். மகான் எழுந்தார் என்ன சொன்னார் ஜனங்களிடம் மகான்.

''எப்படி நெளிவு சுழிவோடு இயல்பாய், எளிமையாய் தமிழ் வருகிறது பண்டிதரிடமிருந்து! அதுதான் தமிழின் தனிப் பண்பு. மனதில் உதிக்கும் உணர்ச்சிகளை துடிப்போடும், வேகத்தோடும், அழுத்தந்திருத்தத்தோடும் தமிழ்தான் எடுத்துச் சொல்ல முடியும். வேறொரு பாஷையால் முடியாது. தமிழின் லாவகத்தையும் இசைவையுமே பார்க்க வேண்டும். என்னை விட்டுவிட வேண்டும். என்மேல் புலவருக்குள்ள கோபத்தையும் விட்டுவிட வேண்டும். புலவரின் தமிழ் பேசுகிற பாங்கையே பார்க்க வேண்டும்'' இப்படி ஆனந்தமாகச் சொன்னார் மகான்.

அப்படிச் சொன்ன அந்த மகானைவிட உயர்ந்த ஞானியைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மற்றவர்களுக்குக் கிடைத்திருந்தால் அது ஒரு யோகந்தான். நாலடியார் பார்த்திருக்கிறார் அத்தகைய மகான்களை. அவர்களோடு, பழகியும் இருக்கிறார் என்று தெரிகிறது. அது அவர் செய்த புண்ணியம்

*நேர்த்து நிகரல்லார்*
*நீரல்ல சொல்லியக்கால்*
*வேர்த்து வெகுளார்*
*விழுமியோர்; — ஓர்த்ததனை*

*உள்ளத்தான் உள்ளி*
*உராய்உரைத்(து) ஊர்கேட்ப*
*துள்ளித்தான் முட்டுமாம்*
*கீழ் (42)*

---

*விழுமியோர் - சான்றோர். மகா பெரிய ஞானியர். பொறுமை, கருணை, அடக்கம், இன்சொல், தியாகம் முதலிய பண்புகளுக்கு நிலைக்களமாக இருக்கிறவர்கள் அவர்கள்.*

*அவர்கள் வாழ்க்கைதான் மற்றவர் கற்க வேண்டிய கல்வி. பின்பற்ற வேண்டிய பண்பாடு, அற்புதமாகவும், அதிசயமாகவும் இருக்கும் அவர்கள் வாழ்ந்து காட்டும் வாழ்க்கை.*

*அதில் ஒரு காட்சி.*

*நேர்த்து - நேருக்கு நேர் நின்றே. நிகர் அல்லார் - தகுதி இல்லாதவர். தரங்கெட்ட கீழ் (கீழோர்) என்றே வைத்துக் கொள்ளலாம். குற்றம் ஒன்றும் இல்லை அதில். நீர் அல்ல சொல்லியக்கால் - இதயமே இல்லையோ என்று சொல்லும்படி கொதிக்கக் கொதிக்க வைதாலும் கோபம் கொள்ள மாட்டார்கள் சான்றோர். வேர்த்து வெகுளார் - கோபம் வந்தால் உஷ்ணம் ஏறும் உடம்பில். முகம், மார்பு, முதுகு, நெற்றி என்று வேர்க்கும். உதடு, கண், கை, விரல், புருவம் எல்லாம் படபடக்கும். இந்த உபாதைகள் ஒன்றும் அவர்களிடம் இல்லை. இனி அவர்களுக்கு நேர்மாறானவர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் மூலம் காணும் காட்சி என்ன.*

*ஓர்த்து அதனை - கோபத்தை வைத்து மேலும் மனசைக் கசக்கித் தேய்ப்பார்கள் தேய்த்து, உள்ளத்தான் உள்ளி - அதே நினைப்பை மாறி மாறிப் புரட்டிப் போட்டு, அதையே எண்ணி எண்ணி. உராய் உரைத்து - வெறி கொண்டு ஆங்காரத்தோடு புலம்பிய படியே. ஊர் கேட்ப - தெருவில் போகிறவர், வருகிறவர் எல்லாம் கூடி வேடிக்கைப் பார்க்க. துள்ளித்தான் முட்டுமாம் - குதிப்பார்கள், தாவுவார்கள், பாய்வார்கள், துள்ளி எழுவார்கள் அவ்வளவுதானா, அவனை மோதுவார்கள், இவனை மோதுவார்கள், ஒருவனும் கிடைக்கவில்லை என்றால் தூணென்றுகூடப் பார்க்க மாட்டார்கள், கல்த் தூணாக இருந்தாலும் டமார் டமார் என்று முட்டுவார்கள், மோதுவார்கள்.*

*எப்படியும் போகட்டும் அவர்கள். உயர்ந்த உத்தமர்களை, ஞானிகளை எப்படிப் பார்க்க வேண்டும். எப்படி மதிக்க வேண்டும் என்பது தான் விஷயம். அப்படிப் பார்த்து அனுபவித்திருக்கிறார் ஞானியரை. நாலடியாரின் அனுபவமும் ஆனந்தமும் கைகோர்த்து செய்யுளுருவம் எடுத்திருக்கிறது.*

(3)

உடம்போடு ஒட்டிப் பிறந்தவன் மனிதன். குறுக்கு வசத்தில் அல்ல. நிமிர்ந்த உயர் வசத்தில் பிறந்தவன் மனிதன். அதுவும் அவனவன் கை முழத்துக்கு எட்டெட்டுச் சாண் உயரம். உயர்ந்து நிமிர்ந்த என்சாண் உடம்பு மனித உடம்பு.

அது காரணமாகவே ஆணவமும், எதை எடுத்தாலும் நான் நான் என்று சாதிக்கிற வேகமும் சேர்ந்தே கிடக்கிறது மனிதனிடம். உச்சி முதல் உள்ளங்கால் வரை சர்வ வியாபகம் ஆணவம். அதுதான் மனிதன். அதை எடுத்து விட்டால் பூஜ்யம் (சைபர்)தான் மனிதன்.

ஆணவ சொரூபந்தான் மனிதன் என்றாலும் மனிதனுக்கு மனிதன் ஆணவம் தனித்தனிப் போக்கு, தனித்தனி வேகம், காரம், மணம், குணம் ஒவ்வொன்றிலும் தனித்தனி அளவு.

* * *

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை. திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் சொக்கலிங்கம் பிள்ளை என்று ஒரு ஓய்வு பெற்ற தாசில்தார் இருந்தார். அவர் வீட்டுக்கு நேர் எதிர் வீட்டில் வரதராஜ ஐயங்கார் என்று பிரபல வழக்கறிஞர் குடி இருந்தார்.

சொக்கலிங்கம் பிள்ளையின் இளைய புதல்வனும், வரதராஜ ஐயங்காரின் மூத்த பேரனும் தெருவில் விளையாண்டு கொண்டிருந்தார்கள். விளையாட்டில் ஏதோ தகராறு. ஒருவரை ஒருவர் எதிர்த்துச் சண்டை போட்டார்கள். சொக்கலிங்கம் பிள்ளையின் புத்திர பாக்கியம் கூர்மையான ஊசிக்கல் ஒன்றை எடுத்தான். அதைக் கொண்டு வரதராஜ ஐயங்கார், பேரன் மண்டையில் ஓங்கி ஒரு குத்துக் குத்தினான். மண்டையிலிருந்து ரத்தம் மளமளவென்று கொட்டியது. வீட்டுக்கு ஓடி வந்து விட்டான் பையன். பார்த்தார் வரதராஜ ஐயங்கார். மனம் கலங்கி விட்டார். யாருக்குத்தான் மனங்கலங்காது மண்டையிலிருந்து ரத்தம் பீறிட்டுக் கொப்புளிக்கிறதைப் பார்த்தால்.

பேரனை அழைத்துக் கொண்டு சொக்கலிங்கம் பிள்ளையிடம் வந்தார் ஐயங்கார். ரத்தம் சொட்டும் பேரனின் மண்டையைப் பிள்ளைவாளிடம் காட்டினார். "பிள்ளையைக்

கண்டித்து வையும், என்ன இருந்தாலும் இப்படியா செய்வது'' என்று பக்குவமாகத்தான் சொன்னார் ஐயங்கார்.

உடனே சீறி எழுந்தார் சொக்கலிங்கம் பிள்ளை. ''என் பையன் உம்முடைய பேரனை இப்படி அடிக்க வேண்டுமானால் உம்முடைய பேரன் எவ்வளவு பெரிய தப்புச் செய்திருக்க வேண்டும். சும்மா அடிக்க மாட்டான் என் பையன். முதல்ல உம்முடைய பேரனைக் கண்டித்து வையும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் மற்றதை'' என்று தீப்பொறி பறக்கவே கொட்டினார் ரிட்டயர்டு தாசில்தார்.

அப்படி என்ன தவறு செய்தான் என் பேரன் என்றார் ஐயங்கார். அதை அவனிடம் கேளும் என்றார் பிள்ளை. நீங்களே சொல்லுங்களேன் என்றார் ஐயங்கார்.

எனக்கு இதுவா வேலை என்று துள்ளினார் பிள்ளை. சொன்னால் என்ன குறைந்து விடும் என்றார் ஐயங்கார். அவ்வளவுதான், '''ஒரு ரிட்டயர்டு தாசில்தார் நான்'. யுவர் ஆனர் என்று என் முன் நின்று வழக்குரைக்க வேண்டியவர் நீர். என்னிடமே எதிர்த்துப் பேசுவதா'' என்று பூண் கட்டிய கைக்கம்பை எடுத்தார். வக்கீல் மண்டையில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார். ஐயங்கார் மண்டையும் பிளந்து விட்டது.

வழக்கறிஞர்கள் ஒன்றுகூடி பிள்ளைவாள் மேல் வழக்குத் தொடுத்தார்கள். வழக்கிலிருந்து மீளப் படாத பாடுபட்டார் பிள்ளைவாள். அந்தக் காலத்திலேயே ரூபாய் ஆறாயிரம் செலவு ஆயிற்று பிள்ளைவாளுக்கு.

சாகும் வரை அந்தக் கைத்தடியை கோபம் வந்த போதெல்லாம் மற்றவர்களிடம் காட்டி எச்சரிப்பார் சொக்கலிங்கம் பிள்ளை. கையிலிருப்பது வரதராஜத் தண்டம். ஜாக்கிரதை'' என்று பெண்டாட்டி பிள்ளைகளிடமே அதைக் காட்டிப் பயமுறுத்துவார் பிள்ளைவாள்.

ஒரு கட்டத்தில் அவர் மனையாளே கண்ணீரும் கம்பலையுமாய் ''இப்பொழுதே என் பிள்ளைகளுடன் தனிக்குடித்தனம் போகிறேன். கருநாகத்தோடு குடி இருந்தாலும்'' உம்மோடு இருக்க முடியாது'' என்று பொட்டணம் கட்டி விட்டாள்.

இப்படிப்பட்டவர்களையும் பார்த்திருக்கிறார் நாலடியார். அனுபவம் எப்படி வருகிறது பாட்டாய்.

*வென்றிப் பொருட்டால்*
*விலங்கொத்து மெய்கொள்ளார்*
*கன்றிக் கறுத்தெழுந்து*
*காய்வாரோ(டு) — ஒன்றி*
*உறைவித்(து) அகத்துறுவார்*
*காண்பவே கையுள்ச்*
*சுரைவித்துப் போலும்தன்*
*பல் (43)*

(4)

வெறுப்புத்தான் தீமைகள் அத்தனைக்கும் காரணம். நான் என்னும் ஆணவமே வெறுப்பாக வெளிப்படுகிறது.

ஆனோ, பெண்ணோ மனிதப் பிறவி உருப்படியாக இருக்கும் வரை ஆணவம் இருக்கும். போகவே போகாது ஆணவம். சுட்டுச் சாம்பலான பிறகுதான் போகும் ஆணவம். அதுவும் சாம்பலை ஆற்றில் (நீரில்) கரைத்த பிறகுதான் முற்றும் ஒழியும் மனிதர்களை விட்டு ஆணவம்.

இனி மனிதர்கள் வாழ்கிற பொழுதே ஆணவம் ஒதுங்க வழி உண்டு. சும்மா இருக்காமல் செயல்பட்டால், உழைத்தால் அதுவும் தன்னலம் ஒன்று மட்டும் இல்லாமல் பிறர் நலத்துக்காவும் உழைத்தால் ஆணவம் தலை தூக்காது. அடங்கி, ஒடுங்கிப் பம்மி விடும் ஆணவம்.

---

*வென்றிப் பொருட்டால் - எதனாலும் சரி, அதில்தான் சொல்வதே சரி என்று சாதிக்கும் ஆணவ வெறியில். விலங்கு ஒத்து - புலி, ஓநாய், குரங்கு போன்று. மெய் கொள்ளார் - உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாய். கன்றி - மனம் கொதித்துக் குழம்பியும். கறுத்து - உடம்பெல்லாம் புழுங்கி வெந்தும். வாய்காவார் - வார்த்தைகளைக் கொட்டுகிறவர்கள். மூர்க்கர்கள் அவர்களோடு. ஒன்றி - சேர்ந்து. உறைவித்து - இருக்கச் செய்து. அகத்துறுவார் - குடும்பம் நடத்துகிறவர்களே. தங்கள் பற்களை தங்கள் கையில் வைத்துப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படும். காண்ப சுரைவித்துப் போலும் தம்பல்.*

ஆனாலும் இருக்கவே செய்யும் ஆணவம். முயற்சி உடையவர்களுக்குத்தான் சதா செயல்படுகிறவர்களுக்குத்தான், உழைப்பிலேயே இன்பம் காண்கிறவர்களுக்குத்தான் மறைந்து கிடந்தாலும் தெரியும் ஆணவம். அடடா, வாலைச் சுருட்டி மடக்கிக் கொண்டு எவ்வளவு தந்திரமாய் ஒதுங்கி நிற்கிறது ஆணவம் என்று.

அப்படித் தெரியத் தெரியத்தான் ஆணவத்தின் விஷம் கரையும். குறும்பு, அகம்பாவம், கொழுப்பு, இவைகளின் வேகம் தணியும்.

அதன் பிறகல்லவா ஒருவர் மேல் ஒருவருக்கு பிரியம் உண்டாகும். உண்மையான, அன்பு அதாவது காதலே உண்டாகி விடும் மனிதர்களுக்குள்.

அன்பிருந்தால் போதும் உண்மையான அன்புதான் காதல். பக்தி என்றே சொல்லலாம் அந்த அன்புக் காதலை அது இருந்தால் கொஞ்சம் வெட்கமும், கூடவே கொஞ்சம் கூச்சமும் இருக்கும்.

நேருக்கு நேர் நின்று ஒருவரைப் புகழ்ந்து பேசவே, பாராட்டவே, உபசரிக்கவே வெட்கம் வரும், கூச்சம் உண்டாகும்.

உண்மையான பெருமையைச் சொல்லிப் பாராட்டவே கூச்சப்படுவான். யார்? அன்புடையவன். ஆணவம் நீங்கிய உண்மையான அன்பன்.

அன்பில்லாதவன் நிலையோ வேறு. எதிரே கூச்சம் இல்லாமல் புகழ்வான். தலை மறைகிற வரை புகழ்வான். தலை மறைந்த உடனேயே இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி இகழ்வான். யாரைப் புகழ்ந்தானோ அவரையே இகழ்வான்.

எதனால் உண்டானதோ அவன் நா(வாய்) என்று திகைக்கிறார் நாலடியார். மலை வளம் மிக்க பாண்டிய அரசனின் அவைக்களம் வந்தே திகைப்பைக் கொட்டுகிறார் கவிஞர்.

*கணமலை நல்நாட*
*கண்நின்(று) ஒருவர்*
*குணனேயும் கூறற்(கு)*
*அரிதால்; — குணன்அழுங்க*

*குற்றம் உழைநின்று*
*கூறும் சிறியவர்க்கு*
*எற்றால் இயன்றதோ*
*நா (44)*

(5)

'கல்வி என்றால் என்ன? இந்தக் கேள்விக்கு வாயைத் திறந்து பதில் சொல்ல எல்லோருக்குமே திகைப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் எல்லோருடைய இதயத்திலும், உணர்விலும் அதற்குரிய பதில் இருக்கவே செய்கிறது. நீதியும் கருணையுமே கல்வி என்கிற உள்ளுணர்வு இல்லாதவர் யார்? ஆனால் தன்னுணர்வையே சொல்ல ஏன் வருகிறது பயம்.

விளங்க மாட்டேன் என்கிறது அது.

நீதியையும் கருணையையும் முறையே ஒழுக்கம் என்றும் பண்பாடு என்றும் முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

குருகுலம், பள்ளிக்கூடம், ஏடு, எழுத்தாணி, பாடம், தேர்வு என்பவை எல்லாம் இரண்டாம் பட்சம் மூன்றாம் பட்சம் என்கிற கணக்குத்தான்.

வாழ்க்கை என்றால் எத்தனையோ மேடு பள்ளங்கள். முண்டு முடுச்சுகள் உண்டு. அடிக்கடி அவற்றோடு மோத வேண்டி வரும். அப்படி மோதுவதுதான் பிரச்சனை.

ஒவ்வொரு பிரச்சனையையும் சமாளிக்க வேண்டும். ஒழுக்கத்துக்கோ, பண்பாட்டுக்கோ மஞ்சாடி அளவுகூடச் சேதாரம் ஏற்படக் கூடாது. அதற்கு (சேதாரம் ஏற்படுவதற்கு)ப் பதிலாக ஒழுக்கமும், பண்பாடும் சமாளிப்பதில் தெளிவுபட வேண்டும். உறுதி பெற வேண்டும்.

மனச்சாட்சியில் கூர்மை என்பது அதுதான். சோதனையிலும் வேதனையிலும் ஒழுக்கத்தை விட்டுக் கொடுக்காமல்,

*கணமலை - கூட்டம் கூட்டமாய்ச் சேர்த்து நடப்பது போல்த் தோன்றும் குன்றுகள். நின்ற இடத்தில் நிற்கும் குன்றுகள்தான். கண்நின்று - எதிரே இருந்து. குணன் அழுங்க - ஒருவரிடம் உள்ள நல்ல பண்புகளை தேய்த்து அழித்து விட்டு. குற்றம் - தப்பும் தவறுமாக. உழை நின்று - நேருக்கு நேராக இல்லாமல் பக்கவாட்டில் மறைந்து. கூறும் சிறியவர்க்கு - புறம் கூறும் கயவர்களுக்கு. எற்றால் இயன்றதோ நா - தேள்க் கொடுக்கை வைத்தா, பாம் பின் விஷப் பல்லை வைத்தா எதை வைத்துப் படைத்தான் பிரமன் அவர்கள் நாவை.*

பண்பாட்டை விட்டுக் கொடுக்காமல் ஒளி பெறச் செய்வது தான்.

அந்த ஒளியில் துலங்குகிற அனுபவமும் ஆனந்தமுமே கல்வி. கற்றவர் என்றால். அந்த உண்மைக் கல்வியைக் கற்றவர் தான்.

அதைக் கல்லாதவர் கயவர். எந்த மருந்துக்கும் கட்டுப்படாத நோய். சமுதாய நோய் என்றால் கயவர்தான்.

சும்மா இருக்க மாட்டார்கள் கயவர். தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். அதுவும் சான்றோர் என்றால் வலிய வந்து வம்பு பண்ணுவார்கள்.

யானையைக் கண்டால் குதிரை விலகும். எருமை விலகவா செய்யும். மெல்ல உரசியே பார்க்கும். கட்ட மண்ணிலும் குட்டிச் சுவரிலும் உரசி உரசிப் பழக்கப்பட்டது எருமை. சும்மா போகுமா அது.

பொய்யர் புரட்டர் என்றே சொல்வார்கள் கயவர் யாரைச் சான்றோரைத்தான். மதவிரோதி, இனவிரோதி, குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு என்றுகூடக் கத்துவார்கள் கயவர். மனிதர்களா கயவர்?

*கல்லாது நீண்ட*
*ஒருவன் உலகத்து*
*நல்லறி வாளர்*
*இடைப்புக்கு — மெல்ல*
*இருப்பின்ஒரு நாய்இருந்(து)*
*அற்றே; இராது*
*உரைப்பின்அந் நாய்குரைத்*
*தற்று* (45)

---

*நீண்ட ஒருவன் - நெளிவு சுழிவு இல்லாமல் தடித்தனமாக நடக்கிறவன். அறிவாளர் இடைப்புக்கு இருப்பின் - சான்றோர் கூட்டத்தில் கயவனுக்கு இடம் கிடைத்தால் போதும். பிராமண போஜனத்தில் கரடி புகுந்த மாதிரிதான்.*

*குறிப்பு - மனிதனைப் பார்த்து நாய் குரைக்கத்தான் செய்யும். என்ன செய்ய அதற்கு. ''மனுசனை மனுசன் அறிவான். மடநாயைத் தடிக்கம்பு அறியும்'' என்று விட்டுவிட வேண்டும் அதை.*

## உண்மை விளங்க விளங்க தேடிவரும் அடக்கம்

வறுமை, அதன் கொடுமை, அது படுத்தும் பாடு இவை எல்லாம் புத்தகத்திலா இருக்கின்றன. வறுமையும் அதன் கொடுமையும் வறுமையில்தான் இருக்கின்றன. வறுமையில் கிடந்து உழல்கிறவன் துயரிலும் கண்ணீரிலுந்தான் இருக்கின்றன.

கிழிந்து ஒட்டுப் போட்ட சேலையைத் தவிர வேறு இல்லை கட்டிய மனைவியிடம். அவளுக்கு புதிதாக ஒரு சேலை வாங்கிக் கொடுக்க வழியில்லை. என்ன பாடுபடுவான் கணவன். இனி பெற்ற தாய் மூச்சுத் திணறி உயிருக்குப் போராடுகிறாள். அவள் கண்கள் சொருகுகின்றன. மருத்துவரிடம் கூட்டிப் போக வழியில்லை. மருந்து வாங்கவோ, மருத்துவம் பார்க்கவோ தம்பிடி இல்லை கையில். இருப்பதெல்லாம் அவன் கண்ணில் வழியும் கண்ணீர்தான். என்ன செய்வான் அப்பாவி மனிதன்.

உடன் பிறந்த சகோதரி அவளுக்கு ஒரே மகள். திருமணம் நடக்கப் போகிறது. திருமணம் நடக்கும் ஊருக்குப் போய் வரவோ, திருமணத்துக்குச் செய்ய வேண்டிய கட்டுகளைச் செய்யவோ முடியவில்லை. அவன் குடலைப் பிரட்டுமா பிரட்டாதா வறுமை. அது போகட்டும். ஒருவனுக்கு ஒரே மகன். படிப்பில் மிக மிகக் கெட்டிக்காரன். வறிய சூழ்நிலையிலும் அதிக மதிப்பெண் பெற்றுத் தேறி இருக்கிறான். ஊரே பாராட்டுகிறது அவன் படிப்பை. ஆனால் மேல்க் கொண்டு படிக்க வைக்க முடியவில்லையே தந்தையால். இதைவிட வேறு நரகம் உண்டா? கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியில் போட்டு வறுத்தெடுக்க வல்லவா செய்கிறது வறுமை.

வறுமையின் கொடுமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். சொல்லச் சொல்ல மாளாது வறுமை.

வறியவர்கள் எத்தனை பேர் உண்டோ அத்தனைவித வறுமை உண்டு. அத்தனை விதக் கொடுமையும் உண்டு.

அனுபவித்துப் பார்க்கிறவனுக்கல்லவா அது படுத்தும் பாடு என்ன என்று தெரியும். ''வறுமையாவது போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்'' என்று தொல் காப்பிய ஏட்டில் பேராசிரியர் எழுதி வைத்துப் போன உரைநடையை மனப்பாடம் பண்ணினால் தெரியுமா வறுமையும் அதன் கொடுமையும். மனக்கண்ணை

மூடிக் கொண்டு படிக்கிறவனுக்கோ, மனக்கண்ணை மூடியபடியே ஒப்புவிக்கிறவனுக்கோ வறுமையும் தெரியாது. அதன் கொடுங்கோன்மையும் தெரியாது.

வறுமையிலிருந்து விடுபட எங்கு வேண்டுமானாலும் போவான் மனிதன். என்ன வேஷம் வேண்டுமானாலும் போடுவான் மனிதன். புகை நுழைய முடியாத இடத்துள்ளும் நுழைந்து விடுவான் வறுமையிலிருந்து விடுபடத் துடிக்கிறவன்.

*நீரினும் நுண்ணிது*
*நெய்யென்பர், நெய்யினும்*
*யாரும் அறிவர்*
*புகைநுட்பம — தேரின்*
*நிரப்பிடும்பை யாளன்*
*புகுமே; புகையும்*
*புகற்கரிய பூழை*
*நுழைந்து (46)*

வேகாத பச்சை மண் குடத்தில் தண்ணீரை ஊற்றி வைத்தால், குடத்தின் வெளிப்புறம் உள்ளிருக்கும் நீர் கசிந்து வெளியே வரும். அப்படி என்றால் நுட்பமானது (நுண்ணிது) தானே நீர்.

ஆனால் அதையும்விட நுண்ணியது நெய் அதாவது எண்ணெய். வெந்து காய்ந்த குடத்தில் எண்ணெயை விட்டு வைக்கிறோம். ஆனாலும் கசியவே செய்யும் எண்ணெய். அதனால் மெழுகை, குடத்தின் வெளிப்புறம் பூசி விடுவார்கள். அப்படிப் பூசிய குடத்துக்கு எண்ணெய்க் குடம் என்றே பெயர்; இனி யோசித்துப் பார்த்தால், அதாவது தேரின், எண்ணெயைவிட

---

*புழை - இடுக்கு. நிரப்பிடும்பை - வறுமை.*

*குறிப்பு - வறுமையின் பிடியிலிருந்து விடுபட கையைக் கட்டுவான். வாயைப் பொத்துவான். காலைப் பிடிப்பான், கும்பிடுவான், கூத்தாடுவான் மனிதன். ஆனால் ஒன்று, மானம், மரியாதையைக் காக்கவும் அப்படிப் பாடுபட வேண்டும். உயர்ந்த லட்சியத்துக்காகவும் அப்படிச் செயல்பட வேண்டும் மனிதன்.*

*ஆணவத்தைத் துடைத்தெறியும் வீரம் ஆகிவிடும் அது. வானத்து மீன் போல் ஜொலிப்பான் மனிதன் அப்பொழுது.*

நுட்பம் புகை என்பது தெரியும். மெழுகு பூசிய எண்ணெய்க் குடத்தையும் துளைத்தபடி வெளியேறி விடும் புகை. அந்தப் புகையாலும் நுழைய முடியாத இடத்துக்கே, காவலும் கட்டுப்பாடும் நிறைந்த இடத்துக்குள்ளேயே நுழைந்து வந்து விடுவான் காரியக்காரன். வறுமையில்ச் சிக்கித் தவிப்பவன். ஊசி நுழைய முடியாத இடம் என்றாலும், நுழைந்து விடுவான் கஷ்டத்துக்கு ஆளானவன்.

என்ன பாடுபடுத்துகிறது வறுமை. எப்படியெல்லாம் விரட்டி அடிக்கிறது வறுமை. மனிதனைத்தான். உணர்வுடையாளர்க் கல்லவோ விளங்கும் இது.

(2)

வறுமை ஒன்று போதும். ஒரு இடத்திலும் நிலை கொண்டு நிற்க விடாமல் விரட்டி விரட்டி மனிதனை அடித்துத் துரத்த. இனி வறுமையோடு மானம், மரியாதை பற்றிய பிரச்சனையும் சேர்ந்து கொண்டால் என்னாவது மனித வாழ்வு. சொந்த ஊராவது, வீடு வாசலாவது, உற்றார் உறவினராவது, நண்பராவது எல்லாவற்றையும் அப்படி அப்படியே போட்டு விட்டு ஓட வேண்டியதுதான்.

கண்காணாத இடத்துக்கே ஓடி விடுவான் மனிதன். தனக்கும், குடும்பத்துக்கும் சாப்பாடு கிடைக்கவில்லை என்றாலும் தாங்கிக் கொள்வான் ஒருவன். ஆனால் உற்றார், உறவினர், நண்பர் கலைஞர் என்று பலரையும் உபசரித்தவன் ஒருவன். இப்பொழுதோ பசித்து வந்தவனுக்கு ஒரு கவளம் உணவளிக்கவே வழி இல்லை என்றால் என்ன பாடுபடுவான் அவன்.

திடுதிப்பென்று எல்லாம் போய் விட்டது. சொத்து சுகம் அத்தனையும் பறந்தோடி விட்டன. இந்த நிலையிலும் இவன் உதவியை நாடி வருகிறார்கள் பலர். பழுமரத்தை நாடி வரும் பறவை போலவே வருகிறார்கள் பலர்.

தேடி வருகிறவர்களை உபசரிக்க முடியவில்லை. இந்த அவல நிலையை மானம் மரியாதை உள்ள ஒருவனால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். வீடாவது வாசலாவது அவனுக்கு. மனைவி மக்களைக்கூட ஊரில் விட்டு விட்டு வேறு இடம் நாடி அங்கு போய் விடுவான் அவன்.

திருவோடேந்தி நாலு வீட்டில் பிச்சை எடுத்தாவது வாழ்வான். பசித்தவர் நிலை என்னவென்று தெரிவதற்கு எடுப்பது போல் எடுப்பான் பிச்சை.

கருணை உள்ளவனிடம் மானம் இருக்கும். எல்லாம் போன பிறகும் மானம் இருக்கவே செய்யும் அவனிடம்.

*இட்டாற்றுப் பட்டொன்(று)*
*இரவலர்க்(கு) ஈயாது*
*முட்டாற்றுப் பட்டு*
*முயன்றுள்ளூர் வாழ்தலின்,*
*நெட்டாற்றுச் சென்று*
*நிரைமனையில் கைநீட்டும்*
*கெட்டாற்று வாழ்க்கையே*
*நன்று (47)*

(3)

ஒரு வீட்டை (குடும்பத்தை) எடுத்துக் கொள்வோம். ஐந்து பேரோ, நான்கு பேரோ, இல்லை எட்டுப் பேர், பத்துப் பேர் என்கிற கணக்கிலோ இருக்கிறார்கள். அத்தனை பேரும் ஒரே நேரத்தில் ஒருவர் கையை இன்னொருவர் பிடித்தபடி வந்து விடவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயம் வந்தார்கள். போகும் பொழுதும் அப்படித்தான். எல்லோரும் ஒன்று போல் போய்

---

*இடு(ம்) ஆறுபட்டு - கொடுக்கும் கொடை தடைபட்டு. முட்டாறு பட்டு - முட்டுப் பாட்டுக்கு ஆளாகி. முயன்று உள்ளூர் வாழ்தலின் - மானப் பிரச்சனையோடு போராடிப் போராடி சொந்த ஊரில் காலம் தள்ளுவதைவிட. நெடு ஆறு சென்று - நீண்ட நெடுந்தூரத்தில் இருக்கிற அந்நியப் பிரதேசத்துக்கே போய். அங்குள்ள, நிரை மனையில் கை ஏற்று - வரிசை வரிசையான வீடுகளில் வளைவு வீடுகளில் பிச்சை எடுத்து. கெடு ஆறு வாழ்க்கையே நன்று - நாதி இல்லாமல் அநாதையாய் வாழ்கிறது நல்லதுதான். மானம் கெட்டு உள்ளூரில் வாழ்வதைவிட அது எவ்வளவோ உயர்ந்ததுதான்.*

*ஊர் ஊருக்கு, தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு நடக்கிற காரியந்தான். இது உலகம் முழுவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது இது. நம் கண்கொண்டு பார்க்கவே செய்கிறோம். இதை, மானமும் வீரமும் அப்படி ஆட்டிப்படைக்கிறது உலகை.*

விடுவதில்லை. சில மாதம், பல மாதம், சில வருஷம், பல வருஷம் என்று இடைவெளி விட்டுத்தான் போகிறார்கள்.

போகிறவர்களை (இல்லை, இல்லை, போனவர்களை) இருக்கிறவர்கள் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார்கள். ஆனால் நாமும் இப்படித்தான் போக இருக்கிறோம். எல்லாவற்றையும் போட்டு விட்டுப் போகத்தான் இருக்கிறோம். அதற்காகவே பதியம் போட்டு உட்கார்ந்திருக்கிறோம் என்று யாராவது உணர்ந்து பார்க்கிறது உண்டா.

அப்படி ஒரு உணர்வு மனதில் ஊன்றி நிற்குமானால் எப்படி ஆனந்தமாய் இருப்பான் மனிதன்? மற்றவரோடு அன்போடிருப்பான், ஆதரவு காட்டுவான், கலகல என்று சிரிப்பான், இதயத்தோடு இதயம் வைத்துப் பேசுவான். ஒற்றுமையோடு வாழ்வான். வேற்றுமை உணர்ச்சி வரவே வராது அவனிடம்.

***

பிணத்தைச் சுற்றி வட்டம் போட்டு குய்யோ, முறையோ என்று கதறத்தான் செய்கிறார்கள். மனிதர்கள் எல்லோருக்கும் கதி இதுதான் என்கிற பொருளில் பறைக் கொட்டு முற்றத்தில் முழங்கத்தான் செய்கிறது. டுண் - டுண் - டுண் என்று இடைவெளி விட்டு ஒலிக்கவே செய்கிறது கொட்டு. இத்தனைக்கும் மத்தியில் நாலு பேர் வந்து பிணத்தை எடுத்து வெளியில் கிடத்துகிறார்கள். நீராட்டுகிறார்கள். கோடி உடுத்துகிறார்கள். பூமாலை போடுகிறார்கள். பாடையில் ஏற்றி வைக்கிறார்கள். ஓட்டமும் நடையுமாய்ப் போய் விடுகிறார்கள். சுடுகாட்டுக்கே கொண்டு போய் விடுகிறார்கள். சுட்டுச் சாம்பலாக்கத்தான். சாம்பலை ஆற்றில் கரைத்தும் விடுகிறார்கள். அவ்வளவும் முடிந்தது. எல்லாம் ஆற்றோடு கரைந்த காரியந்தான்.

அத்தனை காரியத்தையும் உடனிருந்தே செய்கிறோம். ஆனாலும் நமக்கும் இப்படித்தான் என்கிற புத்தி மட்டும் வரமாட்டேன் என்கிறது.

நாம் மட்டும் நிரந்தரம். நம்மோடுதான் நன்செய் இருக்கும். தோப்பு இருக்கும். அதிகாரம், செல்வாக்கு, ரொக்கம் எல்லாம் அப்படி அப்படியே இருக்கும். நம் கூடவே இருக்கும். நாமும் அவற்றின் கூடவே இருப்போம்.

என்றென்றும் நம்முடைய பணியாள் நமக்குத் தொண்டு செய்து கொண்டே இருப்பான். நாம் அவனை இன்று போல் என்றும் அதிகாரம் பண்ணிக் கொண்டே இருப்போம்.

என்றென்றும் நாம் உண்டு, நம்மைச் சார்ந்தவையும் உண்டு.

உண்டு, உண்டு, உண்டு என்னும் நினைப்பிலேயே இருக்கிறோம். உலகமே அப்படித்தான் இருக்கிறது. ஆனால் டுண், டுண், குண் என்று அடிக்கிறது கொட்டு.

* * *

இனி நம்முடைய கதையும் இப்படித்தான் என்று உணர்ந்து பார்க்கிறவர்களும் ஒன்றிரண்டு பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். மாறி மாறி வந்து போகிற நாடகக் காட்சிகளைப் பார்க்கிறார்கள். அனுபவிக்கிறார்கள். ஆனந்தமாக இருக்கிறது அவர்களுக்கு.

இனி உணர்ந்து பார்க்காத கிறுக்குகளையும் பார்க்கிறார்கள். ஆங்காரமே வந்து விடுகிறது ஆனாலும் ஆங்காரம் பரிவாய் மாறி விடுகிறது.

பாவம் கண்ணிருந்தும் குருடர்கள். புத்தி இருந்தும் யோசனை இல்லாதவர்கள் என்கிற பரிவே வந்து விடுகிறது.

*அந்தச் சிரிப்பே கவி உருவம் எடுக்கிறது.*

*கணம்கொண்டு சுற்றத்தார்*
*'கல்'என்(று) அலற*
*பிணம்கொண்டு காட்டுய்ப்பார்க்*
*கண்டும் — அணங்குறவே*
*உண்டுண்டுண்(டு) என்னும்*
*உணர்வினார்ச் சாற்றுமே*
*டுண்டுண்டுண் என்னும்*
*பறை (48)*

---

கணம் கொண்டு - சிறு சிறு கூட்டமாய் வந்து. கல் என்று - 'ஓ' என்று கதறி, காட்டு உய்ப்பார் கண்டும் - சுடுகாட்டுக்கே கொண்டு போய் தீயில் போட்டு விடுகிறார்கள். அதைப் பார்த்தும் அணங்குஉற - ஆடம்பரம் பெருக, படாடோபம் கொடி கட்டிப் பறக்க. உண்டு, உண்டு, உண்டு என்னும் உணர்வினார் - நாம் மட்டும் நிச்சயம் என்னும் புத்தி கெட்டவர்களுக்கு. சாற்றும் - அடித்துச் சொல்கிறது. பறை - கொட்டு முழக்கம். டுண், டுண், டுண் என்று சொல்கிறது பறைக் கொட்டு.

(4)

அம்மன் கோவில் திருவிழா.

ஆடவர், பெண்டிர், குழந்தைகள், எல்லோருக்கும் ஒரே கொண்டாட்டம். சமுத்திரம் போல் கூடிவிட்டது கூட்டம்.

குளித்து முழுகிப் பொங்கல் விடுகிறவர்கள், குலவை இடுகிறவர்கள், வேப்ப மாலையும், மஞ்சள் நீர் ஆடையுமாய்ச் சாமி கும்பிடுகிறவர்கள், தீச்சட்டி ஏந்தி ஆடுகிறவர்கள், அருள் வந்து வாக்குக் கொடுப்பவர்கள் இப்படி எங்கு பார்த்தாலும் ஆரவாரம், முழக்கம். ஆனந்த பரவசம்.

நேர்த்திக் கடனைத் தீர்க்க ஆட்டைக் கொண்டு வருகிறார்கள் சிலர். செம்மறி ஆட்டுக்குட்டி மஞ்சள்த் தண்ணீரை விட்டுக் குளுப்பாட்டுகிறார்கள். குட்டியை கொம்பில் வேப்ப மாலையைச் சுற்றுகிறார்கள். அரளிப் பூமாலையும் அதன் மேல் போடுகிறார்கள். ஆட்டின் கழுத்திலும் மாலைதான்.

ஆட்டுக்கு ஒரே கொண்டாட்டம். கொட்டு முழக்கம் வேறு, கொட்டு முழக்கத்தில் தாளத்துக்கு ஏற்றபடி ஆடவே துடிக்கிறது ஆடு.

இனி; சூலத்தில் எலுமிச்சம் பழத்தைச் சொருகி இரண்டு பேர் இரண்டு பக்கமும் வர வீச்சரிவாளோடு வருகிறார் பூசாரி. பலிபீடப் பூசாரி.

மஞ்சள் வேட்டி, வேப்ப மாலை, ஆட்டம், பாட்டம், வீச்சரிவாள் இத்தனை சகிதமாய் ராஜ தோரணையோடு வருகிற பூசாரியைப் பார்த்து ஆட்டுக்கு ஒரே மகிழ்ச்சி.

கொட்டு முழக்கம் உச்சத்துக்கு ஏறுகிறது. ஒருவன் மஞ்சள் நீரை ஆட்டின் மேல் தெளிக்கிறான். சிலிர்த்தெழுகிறது ஆடு. சிலிர்த்த சிலிப்பில் கழுத்தை ஒரு உதறு உதறுகிறது ஆடு.

அவ்வளவுதான் சதக் என்று ஒரே வெட்டு. தலை வேறு உடல் வேறு என்று இரண்டு துண்டாய் விழுந்து விட்டது. ஆடு இரண்டு துண்டிலிருந்தும் வருகிறது ரத்தம். ஒரே ரத்தந்தான். அரிவாளில் ஒட்டி இருக்கிற ரத்தமும் அதேதான்.

*எப்படி மாயமாய் மறைந்து விட்டது. ஆட்டின் ஆனந்தம்.*
*உலகம் முழுவதும் அதே ஆட்டுக் குட்டிகள்தான்.*
*வெறிஅயர் வெங்களத்து*
*வேல்மகன் பாணி*

*முறியார் நறும் கண்ணி*
*முன்னர்த் — தயங்க*
*மறிகுள(கு) உண்டன்ன*
*மன்னா மகிழ்ச்சி*
*அறிவிலார் தங்கள்*
*இடை (49)*

(5)

காலமும் கணக்கும் முடிய முடிய சொல்லாமல் கொள்ளாமல் போய் விடுகிறான் மனிதன். எங்கு போனான் எப்படிப் போனான் என்று ஒருவருக்கும் தெரியாது. அவன் போய் விட்டான். அவன் போன பின் வீட்டில் கிடப்பது சவந்தான், பிணந்தான்.

பிணத்துக்குத்தான் ஏகப்பட்ட உபசாரம் குளுப்பாட்டுகிற தோரணை என்ன, கோடி உடுத்தி விடுகிற காரியம் என்ன, சந்தனம் என்ன, புனுகு என்ன, பூமாலை என்ன.

இவ்வளவுக்கும் மேலே மேளதாள முழக்கம், ஒரு பக்கம் உறுமிக் கொட்டு இன்னொரு பக்கம், பறை கொட்டு மற்றொரு பக்கம். பம்பைக் கொட்டும் உண்டுதான்.

இத்தனையும் ஒரு சேர அடிப்பதில்லை. விட்டு விட்டு, ஒன்றன்பின் ஒன்றாகத்தான் அடிக்கிறதுண்டு. அப்படி ஒரு ராஜ மரியாதை. அத்தனையும் பிணத்துக்குத்தான்.

இதோடு விட்டதா தோரணை. வாத்ய முழக்கம் நின்ற உடன் சங்கம் முழங்கும். பம், பம் என்று முழங்க முழங்க பிணத்தைச் சுற்றி அழுகிறவர்களின் ஒப்பாரி உச்சத்துக்கு ஏறும்.

---

*வெறி அயர் வெங்களம் - ஆவேசம் வந்து பூசாரி ஆடும் பலிபீட முற்றம். வேல் மகன் - பூசாரி. கையில் சிறுவேல் ஒன்றிருக்கும் பூசாரி இடம். பாணி - தாளம். தாளம் போட்டு ஆடுவது போல் ஒய்யார நடை நடந்து வருவான் பூசாரி. முறியார் நறுங்கண்ணி - மொட்டும் அரும்பும் வைத்துக் கட்டிய மாலை. முன்னர் தயங்க - ஆட்டின் கழுத்திலும் கொம்பிலும் கிடந்து அசைய. மறிகுளகு - இளம் ஆடு. உண்டன்ன - பெற்ற. மன்னா மகிழ்ச்சி - நிலையற்ற இன்பம். அறிவிலார் தங்கள் இடை - அறிவிலிகள் கனவு காணும் வாழ்வும் ஆட்டுக்குட்டி வாழ்வுதான்.*

அதே கொட்டு முழக்கம், சங்க நாதத்தோடு பாடை மீதேறிப் பயணிக்கிறான் ஆசாமி. அதாவது ஆசாமியின் வெற்றுடம்பு, பிணந்தான்.

*சென்றே எறிப*
*ஒருகால், சிறுவரை*
*நின்றே எறிப*
*பறையினை — நன்றேதான்*
*முக்காலைக் கொட்டினுள்*
*மூடித்தீக் கொண்டெழுவார்*
*செத்தாரைச் சாவார்*
*சுமந்து (50)*

---

சென்றே எறிப ஒருகால் - ஒரு கொட்டை ஓங்கி ஓங்கி அடிக்கிறார்கள். சிறுவரை நின்று - சிறிது நேரம் விட்டு. நின்றே எறிப - ஒலியானது 'தம்' பிடித்து நிற்கும்படி தட்டுவார்கள். முக்காலை - இப்படி மூன்று வகையிலும். கொட்டினுள் - கொட்டி முழங்கும் முழக்கத்தில் வைத்து தீ மூட்டச் சுமந்து போகிறார்கள் யார்? செத்தாரை சுமந்து போகிறவர்கள் யார். இனி ''சாவார்தான்'' சாகிறவர்தான் தொடர்ந்து போகிறவர்கள் தான் ''செத்தாரைச் சாவார் சுமந்து'' என்று சொல்லிக் கொண்டே இருக்கலாம். சொல்லச் சொல்ல நாவுக்கு ருசி.

## திருமகள் மட்டுமா, கலைமகளும் பெண்தான்

ஒரு பெண் பருவத்துக்கு வந்த மாத்திரத்திலிருந்தே மளமள என்று இனமும் கனமுமாக வளர ஆரம்பித்து விடுவாள். அப்படியே அழகும் சேர்ந்து வளரும். கடைந்தெடுத்த தங்கச் சிலையாய் இருப்பாள் பெண். உல்லாசம், எக்களிப்பு, நாணம், கூச்சம் எல்லாம் சேர்ந்து பெண்ணை வானத்துத் தேவதை ஆக்கி விடும். பெரிய மனுசியே ஆகிவிடுவாள் பெண்.

வாழையும் கிட்டத்தட்ட அப்படித்தான். கன்றாக இருக்கிற வாழை மடல் பிடித்து குருத்து விட்டு இலைகளை விரித்து நிமிர்ந்து நிற்க ஆரம்பித்தால் பருவ மங்கை போலத்தான். அப்படித்தான். மளமளவென்று வளரும் அதனால்தான் வாழைக்கு குமரி என்று பெயர்.

பெரிய பூ ஒன்று தொங்கும் வாழையில் அப்பொழுது வாழையின் அழகு தனி. பிறகு குலை தள்ளும். நூறு நூற்று இருபது காய் (கனி)களோடு குலை தள்ளி நிற்கிற வாழையைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். வேறு ஒன்றைப் பார்க்காது கண். பார்க்கப் பார்க்க வாழையோடு ஒன்றி விடும் மனம். பிறகு எதைப் பார்க்கும் கண்.

இனி வாழைக் குலையை வெட்டி விற்று விடுவான் விவசாயி. அதன் பிறகு அதன் (வாழையின்) கதி அதோ கதிதான். அலங்கோலமாய் நிற்கும் வாழை.

மங்கைப் பருவம் கடந்து, தாய்மைப் பருவத்தையும் தாண்டிய பெண், வற்றி உலர்ந்து எப்படிக் கூனிக் குறுகுவாள்? கம்பைக் கையில் பிடித்து ஊன்றி ஊன்றித்தான் நடக்க வேண்டும் அவள். வழிகாட்டும் கண்ணே கம்புதான் வயதான பிறகு பெண்ணுக்கு.

எப்படி மதமதர்த்து நிமிர்ந்து நின்றது அழகு. எப்படி மாயமாய் மறைந்தது அது.

வந்தது போகும். போவதற்காகத்தான் வருகிறது. எதுவும் அப்படித்தான். இதுவல்லவா மனம் வைத்துப் பார்க்க வேண்டிய காட்சி. ஆனந்தம் தரும் காட்சிதான் அது.

*வந்ததையும் போனதையும்*
*வைத்துவைத்துப் பார்த்திருந்தால்*
*சிந்தைக்(கு) இதம்அதிகம்*
*சேரும் பாரபரமே (தாயுமானவர்)*

முக்தி நிலை என்றால் அதுதான். அல்லாத பட்சம் நரக நிலைதான் வாழ்க்கை. வாழ்ந்தும் வாழாது செத்த நிலைதான்.

*பனிபடு சோலை*
*பயன்கெழு வாழை*
*கனிஉதிர்ந்து வீழ்ந்தற்(று)*
*இளமை — நனிபெரிதும்*
*வேற்கண்ணள் என்றிவளை*
*வெரும்கன்மின் மற்றிவளும்*
*கோல்க்கண்ணள் ஆகும்*
*குனிந்து (51)*

பத்து மாதம் வயிற்றில் வைத்துச் சுமந்து பெற்றெடுத்தாள் நம்மை ஒரு பெண். பாலூட்டிச் சீராட்டி அவள்தான் வளர்த்தாள். அவளைத்தான் தாய், தாய் என்று சுற்றி வருகிறோம் நாம். அவளும் அப்படியே என் குழந்தை, என் குழந்தை என்று சுற்றிச் சுற்றி வருகிறாள் நம்மை.

ஒரு நாளா இரண்டு நாளா ஐம்பது வருடம் அறுபது வருடம், ஏன், எழுபது எண்பது வருடம்கூட தாயும் பிள்ளையுமாய்ச் சேர்ந்துதான் இருந்தோம்.

என்ன இருந்தாலும் நம்மை விட்டு விட்டுப் போய் விடத்தானே செய்கிறாள் நம் தாய்.

எங்கே போகிறாள்? இன்னொரு பெண்ணின் வயிற்றுக்குள்ளேயே போய் விடுகிறாள். பத்து மாதம் அங்கே இருந்து வெளியே வருகிறாள்.

---

*பனிபடு சோலை - தண்ணென்று எப்பொழுதும் குளிர்ந்திருக்கும் தோப்பு, வாழைத் தோட்டம். நனி பெரிதும் - எல்லாம் இவள்தான் என்று அளவுக்கு மீறிமோகம் கொண்டு. வேல்கண் - வேலை ஒத்த துறுதுறு என்ற கண். கோல் - கம்பு. வெஃகன்மின் - அவளை உடைமை ஆக்கி அது ஒன்றே கதி என்று வெறி கொள்ள வேண்டாம்.*

என்னைப் பெற்றெடுத்த தாய் என்னை இங்கே போட்டு விட்டு, இன்னொருத்திக்குக் குழந்தை ஆகிவிடுகிறாள்.

பெற்ற பிள்ளையையும் தாயின் நிலையையும் ஏன் விடவேண்டும் அவள். ஏன் குழந்தையாகப் போக வேண்டும் இன்னொருத்திக்கு.

*எனக்குத்தா(ய்) யாகியாள்*
*என்னைஈங்(கு) இட்டுத்*
*தனக்குத்தாய் நாடியே*
*சென்றாள்*

யாருக்குத் தெரியும் அது. விளங்க மாட்டேன் என்கிறது அது. இனி என் தாயையே குழந்தையாகப் பெற்றெடுத்தாளே ஒரு மாதரசி, தாய். அவளாவது அந்த ஸ்தானத்தில் நிலைத்து நின்றாளா? இல்லையே! அவளும் எனக்கு ஒரு தாய் வேண்டும் (பிள்ளை இருந்தால் மட்டும் போதாது. நானும் பிள்ளையாக வேண்டும்) என்று ஓடி விட்டாளே. என்ன கூத்து இது!

தாய், தாய் என்று தாவித் தாவி ஓடுகிறது உலகம். பேரண்டத்தையே சுற்றிச் சுற்றி வருகிறது (ஆன்ம) உலகம். பேரண்டமே அப்படித்தான் தாவித் தாவி ஓடிக் கொண்டே இருக்கிறது.

தாய், தாய் என்று தாவித் தாவி ஓடுகிறது எல்லாம். அப்படியானால் நிலைத்து நிற்பது எது!

*எனக்குத்தா(ய்) யாகியாள்*
*என்னைஈங்(கு) இட்டுத்*
*தனக்குத்தாய் நாடியே*
*சென்றாள் — தனக்குத்தா(ய்)*
*யாகும் அவளும்*
*அதுவானால்த் தாய்த்தாய்க்கொண்டு*
*ஏகும் அளித்தில்*
*உலகு (52)*

---

*தனக்கு தாயாகும் அவளும் - என்னைப் பெற்றெடுத்த என் தாயையே குழந்தையாகப் பெற்றவளும் அதுவானால் - தாயை நாடி ஓடுகிறாள். அப்படி என்றால், தாய் தாய் கொண்டு ஏகும் - தாய் தாய் ஓடுகிறது உலகம். அளித்து - மிக்க பரிதாபந்தான்.*

*குறிப்பு - அருமையான சிலேடை தாய் தாய் என்பது.*

(3)

பாலைக் காய்ச்சுகிறாள் பெண். பிறகு அதை ஆற வைக்கிறாள். ஆறிய பாலில் ஒரு துளி மோரை விட்டு பாத்திரத்தை மூடி விடுகிறாள். இவ்வளவும் இரவு ஒன்பது மணி, பத்து மணி அளவில்.

விடியற்காலம் பார்த்தால் ஆறிய பாலும் உறை ஊற்றிய மோரும் சேர்ந்து கட்டித் தயிர்! ஆகிவிட்டது. என்ன மணம், என்ன ருசி, என்ன சுகம் அந்தத் தயிரில். அவ்வளவுதானா? தயிரை ஒரு பானையில் கொட்டுகிறாள். தண்ணீர் விட்டுக் கலக்குகிறாள் அதில் மத்தை ஊன்றுகிறாள். தாம்புக் கயிற்றை மத்தில் சுற்றுகிறாள் கடைகிறாள். கட்டித் தயிர் சில்லுச் சில்லாய் உடைகிறது. சிறிது நீர் விட்டு, நீர் விட்டு மேலும் மேலும் கடைகிறாள். நுங்கும் நுரையுமாக மோராய்ப் பெருகுகிறது தயிர்.

---

*தந்தையை இழந்து தவிக்கிறான் இளவரசன் ஹாம்லெட். தவிப்பவனின் சிற்றப்பன் அவன் தான் .அண்ணனை, பேரரசன் ஹாம்லெட்டையே வஞ்சகமாகக் கொன்றவன். கொன்று அரியணை ஏறியவன்; கிளாடியஸ் - அவனே கூறுகிறான், இளவரசன் ஹாம்லெட்டுக்கே பண்ணுகிறான் உபதேசம்.*

*''அருமை ஹாம்லெட்! நீ ஒருவன் மட்டும் தந்தையை இழந்து தவிக்கவில்லை. உன் தந்தையும் தன் தந்தையை இழந்தார். உன் தந்தைக்குத் தந்தையும் அப்பனை இழந்தவரே. அவருடைய தந்தையும் அப்படியே. நிலைபெற்று நின்றவர் யார்?*

King Claudius

'Tis Sweet and Commendable in your nature, Hamlet, to give these mourning duties to your father: But, you must know, your father lost a father; that father lost, lost his

*ஷேக்ஸ்பியர் அற்புதமாய் எடுத்துக்காட்டுகிறார் உண்மையை ஆனாலும் நம்மைத் தொட்டு, கட்டிப்பிடித்து ஆலிங்கனம் செய்யவில்லை உண்மை. ஒட்டாமல் சற்று விலகியே நிற்கிறது அந்த உண்மை.*

*நாலடியார் பாடலைப் பாடப்பாட ஆவலோடு பாய்ந்து வருகிறது உண்மை வந்து கட்டித் தழுவுகிறது. நம்மை கண்ணைத் திறந்துவிட்டு ஒளி கொடுக்கிறது உண்மைக்கு நாலடியார்.*

*விளக்கை விளக்கும் விளக்கு என்றால் அது தமிழ்க் கவிதான். தமிழர்களாகிய நமக்குத்தான். ஆங்கிலேயர்களுக்கு எப்படியோ!*

மோரில் துளித்துளியாய் சிதறி நீந்துகிறது வெண்ணெய். அதை அப்படியே கையால் அரித்து எடுக்கிறாள் பெண். சிறு பாத்திரம் ஒன்றில் தண்ணீர் விட்டு வைத்திருக்கிறது. அரித்தெடுக்கிற வெண்ணெயை அதில் போடுகிறாள். பல தடவை எடுத்தெடுத்துப் போடுகிறாள். பிறகு அவ்வளவு வெண்ணெயையும் சேர்த்தெடுத்து உருண்டையாய்த் திரட்டுகிறாள். அதில் சேர்ந்திருக்கும் நீரை இறுத்து விடுகிறாள். ஒரு சட்டியில் வெண்ணெய் உருண்டையைப் போட்டு அடுப்பில் தீ மூட்டி உருக்குகிறாள். பருவம் வந்து நெய் உருகும் பக்குவத்தில் அதில் கொஞ்சம் முருங்கை இலையைப் போடுகிறாள். முருங்கை இலை கிடைக்கவில்லை என்றால் வெற்றிலைக் காம்பைக் கிள்ளிப் போடுகிறாள். மற்றப்படி புளி இலையையோ, மா இலையையோ, வேறு எந்த இலையையோ கிள்ளிப் போட மாட்டாள் பெண்.

கமகம என்று மணக்கிறது உருக்கு நெய். இறக்கி வைக்கிறாள். சூடு தணிந்து ஆறின பிறகு நெய்யில் கிடக்கும் முருங்கை இலையைக் கரண்டி கொண்டு எடுத்து குழந்தைகளிடம் கொடுக்கிறாள். லட்டு, ஜிலேபியைச் சாப்பிடுவது போல் ருசித்து ருசித்துச் சாப்பிடுவார்கள் குழந்தைகள்.

பாலைக் காய்ச்சி, மோராக்குவதிலும், நெய்யாக்குவதிலுமே இத்தனை காரியம். காரியத்தின் ஒவ்வொரு அம்சத்திலுமே எத்தனையோ பக்குவம். நுட்பமும் அப்படியே, புலமையும் அப்படியே, கலைப் பண்பும் அப்படியே.

அப்படியானால் குடும்பம் நடத்துகிறதில் எத்தனை எத்தனை காரியங்களை பெண்பாலாரிடம் ஒப்படைத்திருக்கிறது இயற்கை? முற்றம் தெளித்துக் கோலம் போடுவதிலிருந்து கணவன், குழந்தை இவர்களை பேணி உபசரிக்கிறது வரை எத்தனை காரியங்கள். சமையல் செய்து அன்போடு பரிமாறுவதிலிருந்து விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கிறது வரைதான் எத்தனை காரியங்கள். துணிமணிகளைத் துவைத்தல், பாத்திர பண்டங்களைத் துப்புரவு செய்தல் விழாக்கள், வீட்டுச் சடங்குகள், உற்றார் உறவினர் வீட்டு வைபவங்கள் அவ்வளவிலும் கலந்து சிறப்பிக்கிறது வரை எத்தனை காரியங்கள்? அதில் எத்தனை நீக்குப் போக்குகள், சுழிவு நெளிவுகள் அவ்வளவையும்

இன்சொல்லோடும், பொறுமையோடும், மலர்ந்த முகத்தோடும் செய்கிறாள் பெண். திருத்தமாகவும் நயமாகவும் செய்து முடிக்கிறாள் பெண்.

உண்மையான கல்வி என்றால் அது இதுதான். பெண்ணின் காரியங்கள்தான். கலை என்றாலும் அவைதான். பண்பாடு என்றாலும் அவைதான்.

இவ்வளவையும் எங்கு போய் கற்றாள் பெண். எந்த ஒரு கலாசாலையாவது சொல்லிக் கொடுக்க முடியுமா இதை. இயற்கை அன்னையின் அருட்பிரசாதந்தான் பெண்ணின் காரியம்.

இயற்கை அன்னை ஒவ்வொரு பெண்ணிடமும் நேருக்குநேர் நின்று சொல்லிக் கொடுப்பதில்லை. குடும்பம், சமுதாயம் இவற்றின் மூலமே பயிற்சி கொடுத்து விடுகிறது இயற்கை.

வீட்டுக் காரியங்களை எப்படிச் சொல்லிக் கொடுத்தாளோ இயற்கைத் தாய் பெண்ணுக்கு, அப்படியே, அன்பு, பொறுமை, பக்தி, வீரம், அடக்கம், தியாகம் முதலிய அருங்குணங்களையும் சமுதாயம், குடும்பம் இவற்றின் மூலமாகவே சொல்லிக் கொடுத்து விடுகிறாள் இயற்கை அன்னை.

கல்லாமலே எல்லாக் கலைகளையும் கற்று விடுகிறாள் பெண். கல்வி அவளைத் தேடி வருகிறது. கல்வியைத் தேடிப் போவதில்லை பெண். இந்தக் கல்விதான் கற்பு. பெண்ணின் பெயரே கற்பு என்பதுதான்.

குடும்பத்துக்கு அவள்தான் தீபம். சகல பாக்கியங்களும் (மாட்சிமை) பொங்க குடும்பத்தைப் பாதுகாக்கிறவளே பெண்தான். அவள்தான், மனை மாட்சியாள்.

இவ்வளவையும் பார்த்து அதிசயப்படுகிறோம். அப்படியே, பெண்ணிடம் போய் இத்தனை மாட்சிமையையும் கற்றது எங்கே என்று கேட்டால் என்ன சொல்வாள் பெண். ஒன்றும் சொல்ல மாட்டாள். சிரிப்பாள். கடகட என்று வாய் விட்டுச் சிரிக்க மாட்டாள் பெண்.

பொருள் பொதிந்த பண்பட்ட உணர்வோடு மனசுக்குள்ளேயே சிரிப்பாள் பெண். மென்மையாக அவள்

உள்ளுக்குள்ளே சிரிக்கிற சிரிப்புத்தான் வெளியே புன்முறுவலாய்ப் பூக்கிறது.

கேட்ட கேள்விக்கு உத்தரம் சொல்ல பெண்களுக்கு உதவும் மொழியே அதுதான்.

‘மடமொழி மாதர்’.

* * *

பெண்களை இப்படி எல்லாம் உணர்ந்து பார்க்கிற பொழுது ஆடவர் காரியம் சாதாரணம்தான். கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்வதென்றால் வீர தீரம் மிக்கவர் என்று சொல்லிக் கொள்ளும் ஆடவர் காரியம் அத்தனையும், பெண்ணின் கால் தூசுகூடப் பெறாது என்றுதான் சொல்லத் தோன்றும்.

* * *

ஒரு ஏழைக் குடும்பம். குழந்தை குட்டிகளோடு கூடிய பெரிய குடும்பம். அத்தனை பேரும் வயிறாரச் சாப்பிடக்கூட வழி இல்லை. இரண்டு, மூன்று குத்து அரிசியைப் போட்டு ஒரு சிறு குடம் அளவு தண்ணீரை விட்டுக் கொதிக்க வைத்துக் கஞ்சியாக்குவாள் தாய். அதைக் குடித்துத்தான் பசி ஆறுகிறார்கள் எல்லோரும்.

வருடத்தில் முக்கால்வாசி நாள் இப்படித்தான்.

*குடநீர்அட்(டு) உண்ணும்*
*இடுக்கண் பொழுதும்*

இப்படிப்பட்ட வேதனை மிக்க வேளையிலும் சோதனைக்கு வந்தது போல், இறைவனே விட்ட சோதனை போல் உற்ற உறவினர் வந்து விடுகிறார்கள்.

வந்த விருந்தினர் ஒருவரா இருவரா? பலர். மிகப் பலர். எப்படிச் சமாளிக்கிறது என்று யாரையும் திணற அடித்து விடும் வந்த கூட்டம். இருபது முப்பது பேர் என்று பலர். கொஞ்சம் கற்பனை பண்ணிச் சொல்வதானால் ‘தாகம் தணிக்க கடலையே குடித்துத் தீர்க்கிற கூட்டம்’ என்றுதான் சொல்லத் தோன்றும் வந்த கூட்டத்தை.

*கடல்நீர் அறஉண்ணும்*
*கேளிர் வரினும்*

தரித்திரம் தாண்டவம் ஆடுகிறது வீட்டில். அந்த நேரம் பார்த்து இப்படி ஒரு கூட்டம் விருந்தாட வருகிறதென்றால் ஆணாய்ப் பிறந்தவனுக்குக் கோபந்தான் வரும். தாறு மாறாய் நடந்து கொள்வான். அதுதான் ஆண் பிள்ளை.

ஆனால் இயற்கைத் தாயின் திருமகளாகிய பெண்ணோ வந்தவர்களை இன்முகத்தோடு வரவேற்கிறாள். இன்சொல்லோடு உபசரிக்கிறாள். ஜாம் ஜாம் என்று சாப்பாடு போட்டு ஆனந்தத்தில் திளைக்கவைக்கிறாள். அதுதான் பெண்.

*குடநீர்அட்(டு) உண்ணும்*
*இடுக்கண் பொழுதும்,*
*கடல்நீர் அறஉண்ணும்*
*கேளிர் வரினும்;*
*கடன்நீர்மை கைஆறாக்*
*கொள்ளும் மடமொழி*
*மாதர் மனைமாட்சி*
*யாள்! (53)*

(4)

இலங்கையில் ராவணனால் சிறை வைக்கப்பட்டிருக்கும் சீதையை நேருக்கு நேராகப் பார்த்தான் அனுமன். தன்னையே நம்ப முடியவில்லை அனுமனுக்கு. தன் கண்ணையே நம்ப முடியவில்லை அவனுக்கு.

---

*அட்டு - சமைத்து. இடுக்கண் - துன்பம். அற உண்ணும் - மிச்சம் வைக்காமல் குடித்துத் தீர்க்கும். கேளிர் - உறவினர். கடன் நீர்மை - வரவேற்று உபசரிக்கும் கடமையை. ஆறா(க) கொள்ளும் - குடும்பப் பாங்காகக் கொண்டு ஒழுகி வரும். மடமொழி மாதர் - பெண். மனைமாட்சியாள் - இல்லத்தரசியேதான் அவள்.*

*குறிப்பு - தினசரிச் செலவில் மிச்சம் பண்ணி மிச்சம் பண்ணி சேர்த்துவைப்பாள் பெண். அந்த மிச்சத்தை வைத்தே கடமையை நிறைவேற்றுவாள் பெண்.*

சோகமே உருவாக இருக்கிறாள் பிராட்டி. ஆனால் வேதனை முழுவதும் ராமனைநோக்கியே நிற்கிறது. ''உலகில் யாருக்கும் கிடைக்காத அன்பை அல்லவா எனக்கு வழங்கினாள், அப்படி வழங்கிய பெருமான் நான் இல்லாமல் என்ன பாடுபடுவான். அத்தனை துன்பமும் என்னால் அல்லவா அவனுக்கு என்று ஒரு துயரம். இனி கொடிய பாதகர்களாகிய அரக்களிடமிருந்து என்னை மீட்காமலே போய் விட்டால் அவனுடைய புகழ் என்னாகும்'' என்று இடிந்து நலிகிற துயரம் ஒன்று.

இப்படித் துயரமே உருவாக இருக்கிறாள் பிராட்டியார்.

பழிபாவத்துக்கு அஞ்சாத கொடியவனின் வெஞ்சிறை! காற்றும் நுழைய முடியாத கட்டுக் காவல். இந்த நிலையில் உயிரை விடுவது எளிது. ஆனால் உயிரை விட்டு விட்டால் தன்னை மீட்காத பழிபாவத்துக்கு ஆளாகி விடுவானே நாயகன் என்கிற பரிவு. அதற்காகவே உயிரைக் கையில் பிடித்து வைத்திருக்கிறான் பிராட்டி. என்ன நம்பிக்கை, என்ன பொறுமை, என்ன வீரம் இவ்வளவும் சேர்ந்தது தானே கற்பு.

கற்பின் தெய்வச் சுடராகவே காட்சி தருகிறாள் அனுமனுக்கு பிராட்டி. பிரம சிருஷ்டியில் இப்படியும் ஒரு அற்புதமா என்று அதிசயப்படுகிறான் அனுமன்.

மனசை விட்டு அகலுமா அனுமனிடமிருந்து இந்த அதிசயம். மனசில் ஒரு உள்ளொளியாகவே நிற்கிறது பிராட்டியின் தோற்றம் அனுமனுக்கு. அதனால் பிராட்டியை 'நெய்யுறு விளக்களாய்' என்றே அழைக்கிறான் அனுமன்.

திருவிளக்கில் நெய்யை ஊற்றி நிறைத்து அதில் திரியை ஊறப் போட்டு நனைத்து, சுடரேற்றினால் எப்படி அமர்ந்த சுருதியில், நிறைந்த அமைதியில் பிரகாசம் கொடுக்கும் தீபம் அந்தத் தீபமாய் இருக்கிறாள் பிராட்டி.

தெய்வத் திருவிளக்கேதான் பிராட்டி. கிட்டத்தட்ட எல்லாப் பெண்களுமே குடும்பத்தைப் பிரகாசப்படுத்தும் விளக்குத்தான்.

* * *

மாட மாளிகைகூட கோபுரத்தோடு கூடிய அரண்மனை ஆனாலும் கட்டும் காவலும் மிக்க கோவில் போன்ற அரண்மனையே ஆனாலும். அத்தனையும் இருள்க் குகைதான்.

மனையாள் என்கிற தெய்வப் பெண் இருந்தால்தான் இருள் விலகும். ஒளி பிறக்கும். இது உலகம் கண்ட பொது இயல்.

இனி நாலடியார் என்ன சொல்கிறார். ''பெண் உருவில் வந்த தெய்வமாகிய மனையாள் இருக்கிற இடந்தான் வீடு. அந்தத் தெய்வம் இல்லை, என்றால் அரண்மனையே ஆனாலும் அது காடுதான் வெறும் காடல்ல. பிணம் எரியும் சுடுகாடுதான்'' என்றே சொல்லி விடுகிறார்.

*மழைதிளைக்கும் மாடமாய்,*
*மாண்பமைந்த காப்பாய்,*
*இழைவிளக்கும் நின்றெரியின்*
*என்னாம்; — விழைதக்க*
*மாண்ட மனையாளை*
*இல்லாயின் இல்லகம்*
*காண்டற்(கு) அரியதோர்*
*காடு (54)*

(5)

பெண் என்றால் அடக்கத்தின் அவதாரந்தான் ஒரு உண்மையைக் கண்டால் அதை எளிதில் விட்டுவிட மாட்டாள் பெண். மனதுள் பொதிந்து வைப்பாள். அதைப் பார்த்துப் பார்த்து அனுபவிப்பாள். அதனோடு தொடர்புடைய அம்சம் வாழ்க்கையில் ஏதாவது ஒன்று இருக்கத்தானே செய்யும். அதை வைத்து இதை, பிறகு இதை வைத்தே அதை என்று உரசி உரசிப் பார்ப்பாள் பெண்.

உண்மையிள் ஒளி புதுப்புது வர்ணங்களில் படலம் படலமாய் எழுந்து ஜொலிக்கும் அப்பொழுது. ஒவ்வொரு ஒளிப் படலமும் ஒவ்வொரு ஆனந்தத்தைக் கொடுக்கும். அந்த ஆனந்தத்தை அனுபவித்துத் திளைக்கிறது பெண்ணின் இதயம்.

---

*மழை திளைக்கும் மாடம் - மேகம் முட்டுகிற அளவுக்கு உயரமான கோபுரம். மாண்பமைந்த காப்பு - பேரத்துக்கே இடம் இல்லாத நாணயமான காவல். இழை விளக்கும் நின்று எரியின் என்னாம் - நெய்யில் நனைந்த திரிகள் சுடர் விட விளக்குகள் ஆயிரக்கணக்கில் ஒளியைப் பாய்ச்சுகின்றன. என்ன பலன் அதனால் விழைதக்க - அன்பே உருவான மாண்ட மனையாள் - மாட்சிமை மிக்க தெய்வாம்சம் நிறைந்த மனையாள்.*

படாடோபம் பண்ண மாட்டாள் பெண். அடக்கமாய், மரியாதையாய், சொகுசாய், உல்லாசமாய், உண்மையை உணர்ந்து திளைக்கிற குணம் பெண்ணிடமே உண்டு.

இப்படி ஒரு அரிய இதயப் பண்பு பெண்ணிடம் மட்டும் எப்படி வந்தது? இந்தக் கேள்விக்கு உரிய பதில் இதுதான். "அன்பினிடத்து பெண்ணுக்குள்ள பிடிமானந்தான் காரணம். அன்புதான் பெண்ணுக்கு உயிர். அதுதான் அவளுக்கு லட்சியம். அன்பு ஒன்றுக்காகவே உயிர் வாழ்கிறவள் பெண். அன்புக்காக உயிரைவிட வேண்டுமானாலும் சுகமாய் விட்டு விடுவாள். அதுவே பெண்ணின் சிரஞ்சீவித்வம். மரணமிலாப் பெருவாழ்வு என்பது பெண்ணைப் பொறுத்தவரை அதுதான்."

இந்த அன்பு பெண்ணின் குழந்தைப் பருவத்திலிருந்தே பெண்ணோடு சேர்ந்து வளர்கிறது. கருவிலிருந்தே பெண்ணோடு பெண்ணாய்ச் சேர்ந்தே வளர்கிறது அன்பு.

ஒரு பெண் பருவம் அடைகிறாள் என்றால் அவளுடைய தேக தத்துவத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். அப்படியே ஆன்மா, உணர்ச்சி எல்லாவற்றிலும் மாற்றம் ஏற்படும். உணர்ச்சி தத்துவத்திலும் ஏற்படும் மாற்றம், அந்த மாற்றத்தின் தீவிரந்தான் காதல். உள்ளத்தில் உருவான காதலே காதலனாய் வெளியில் வந்து நிற்பதைப் பார்க்கிறாள் பெண். அதனால் உயிரையே வைக்கிறாள் காதலனிடம் பெண்.

* * *

பெண்ணின் தாய்க்கோ எப்பொழுதும் குழந்தையாகவே தெரிவாள் மகள். பருவமடைந்தது முதல் மளமளவென்று அவள் பெரிய மனுசி ஆனது தாய்க்குத் தெரியாது. தெரிந்தாலும் அவள் மனம் அதை அப்படியே அங்கீகரிக்காது.

* * *

இனி காதலனோடு பழகுகிறதில் சில தடங்கல்கள் ஏற்பட்டன பெண்ணுக்கு. எப்படித் தாங்க முடியும் அதைப் பெண்ணால். இரவோடு இரவாகத் தாய்க்குத் தெரியாமல் காதலனோடு போய் விட்டாள் பெண். பாலைவனம் போன்ற கரடுமுரடான காட்டுப் பாதையில்தான்.

விடிந்தும் விடியாததுமாக எழுந்தாள் தாய். ஒரே பாயில் தன்னோடுதான் படுத்திருந்தாள் மகள். ஆனால் காணவில்லை மகளை. உள்க்கட்டு, முற்றம், கொல்லைப்புறம் எங்குமே இல்லை மகள்.

''அடடா! விபரம் தெரியாமல் போய் விட்டேனே என்கிற ஆதங்கம் உள்ளே இருக்கிறது தாயிடம். அது எப்படி வருகிறது தமிழில்.'' செம்பஞ்சுக் குழம்பைப் பஞ்சில் முக்கி அது கொண்டு அவள் காலில் கோலம் போட்டாலும் வலிக்கிறது வலிக்கிறது என்று மடக்குவாள் காலை. அப்படிப்பட்ட இளம் பிஞ்சு என் மகள். கொதிக்கும் வெயிலில் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியில் எப்படிப் போனாளோ என்று புலம்புகிறாள் தாய்.

*அரக்காம்பல் நாறும்வாய்*
*அம்மருங்கிற்(கு) அந்தோ*
*பரல்கானம் ஆற்றின*
*கொல்லோ — அரக்கார்ந்த*
*பஞ்சுகொண்(டு) ஊட்டினும்*
*பையெனப் பையென*
*அஞ்சிப்பின் வாங்கும்*
*அடி* *(55)*

---

*ஆம்பல் நாறும்வாய் - பூத்து மலர்ந்த ஆம்பல் பூவை ஒத்த அழகிய முகம். கன்னமும் சரி வாயும் சரி இதழும் சரி எல்லாம் ஆம்பல் மலர்தான். அம்மருங்கிற்கு - அழகிய சிறுத்த இடையோடு - கூடிய பெண்ணுக்கு. அவள் பாதத்துக்கு. பரல் கானம் - கூரிய முனையோடு கூடிய கொதிக்கும் கல். ஆற்றின கொல் - காட்டில் நடந்து போகும் போது எப்படித் தாங்கும் கல்லை அவள் பாதம். பைஎனபைஎன - மெள்ள மெள்ள என்று பின்வாங்கும் பாதம் எப்படி நடந்ததோ காட்டில்.*

## உடம்பினால் ஒட்டினால்ப்போதுமா, மனமும் ஒட்ட வேண்டும்

பரத்தையர், பொருட் பெண்டிர் என்று ஒரு வர்க்கம். அந்த வர்க்கத்தையும் பிரமன்தான் படைத்தான். அந்த வர்க்கமும் பெண் வர்க்கமாகவே தொடர்ந்து நெடுங்காலமாய் வந்து கொண்டுதான் இருக்கிறது.

கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் ஆண் வர்க்கத்திலும் அது உண்டுதான். நாணயம் கெட்டவன், வரன்முறை இல்லாதவன் வேறு யார்? பரத்தைதானே. ஆண் பரத்தை அவன்.

அது அப்படி இருக்கட்டும். பெண்ணின் பரத்தைமை பற்றிய ஒரு பாடல்.

பணம்தான் குறி பரத்தைக்கு. யார் கொடுத்தாலும் சரி பணத்தை. அவரோடெல்லாம் உறவாடுவாள். ஒருவன் கொடுத்த பணத்துக்காக அவனோடு உறவாடிய பரத்தை அவன் அப்பனோடும் உறவாடுவாள் பணத்துக்காக. ஏன் அவனுடைய அப்பனுக்கு அப்பனான பாட்டனோடும் உறவாடுவாள் பரத்தை.

பரத்தையர் பற்றிய விபரம் எல்லோருக்கும் தெரியும். கயவனுக்கும் தெரியும். சித்தருக்கும் தெரியும். பரத்தைக்கும் தெரியும். பரத்தையோடு உறவாடும் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

***

இனி, வீடு உண்டு, வீட்டு வேலை உண்டு என்று வீட்டோடேயே பெரும்பாலான நாட்களைக் கழிக்கிற பெண்ணுக்கும் தெரியும். குலமங்கையர், குடும்பப் பெண்கள் எல்லோருக்கும் தெரிந்த கதைதான் இது.

குடும்பப் பாங்கான பெண்கள் ஓய்வான நேரத்தில் நான்கு பேர் ஐந்து பேர் என்று கூடுவார்கள். தேர், திருவிழா, கோவில், கல்யாண வீடு, சடங்கு வீடு என்றெல்லாம் போய் வருவார்கள் அவர்கள்.

உல்லாசமாய்ச் சிரித்து மகிழ்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். குடும்பம், வாழ்க்கை, சமுதாயம், சமூகம், ஒழுக்கம், பண்பாடு,

குழந்தைகள், படிப்பு, கல்யாணம், காட்சி என்று எங்கெங்கோ போய் வட்டம் அடிக்கும் அவர்கள் பேச்சு.

அப்படி எல்லாம் பேசி மகிழும் பேச்சு வாக்கில் ஒரு பெண் மற்றவர்களிடம் அதிசயமாய்க் கேட்டாள். கேட்பதாக ஒரு பகல்க் கனவு காண்கிறார் கவிஞர். அவ்வளவுதான்.

என்ன கேட்கிறாள் பெண்.

தாலி கட்டிய புருஷன்தான். வருஷக்கணக்காய் ஓருயிரும் ஈருடலுமாய்த்தான் இருக்கிறோம். அப்படி இருந்தும் நாயகன் நெருங்கி வருகிறான் என்றால் கூச்சமாய் இருக்கிறது. வெட்கமாய் இருக்கிறது. எங்கிருந்துதான் வருகின்றனவோ இந்த நாணமும் வெட்கமும்! அப்படி இருக்க என்று கொஞ்சம் நிறுத்துகிறாள். பிறகு வெட்கப்படுகிறாள் பிறகு கூசிக் கூசியே கேட்கிறாள்.

யார் யாரோ வந்து உறவாடுகிறார்கள். அத்தனை பேருக்கும் இடம் கொடுக்கிறாள் ஒருத்தி என்றால் அவளும் பெண், நாமும் பெண்ணா? அது எப்படி.

*இப்படிக் கேட்கிறாள் பெண்.*

*எஞ்ஞான்றும் எம்கணவர்*
*எம்தோள்மேல்ச் சேர்ந்தெழினும்*
*அஞ்ஞான்று கண்டேம்போல்*
*நாணுதுமால்; — எஞ்ஞான்றும்*
*என்னை கெழீஇயினர்*
*கொல்லோ! பொருள்நசையால்ப்*
*பன்மார்பு சேர்ந்தொழுகு*
*வார்! (56)*

---

*எஞ்ஞான்றும் - தாலி கட்டிய நாள்முதல் வாழ்நாள் முழுவதும் இன்றுவரை அப்போதைக்கப்போது. அஞ்ஞான்று கண்டேம் போல் நாணுதும் - திருமணம் ஆன நாள் மாதிரியே வெட்கமாக இருக்கிறது. என்னை கெழீஇயினர் - வெட்கத்தை விட்டு விட்டு எப்படி இருக்க முடியும் பெண்ணுக்கு. பொருள் நசை - பணவெறி. பன்மார்பு - பலபேர் உறவு.*

(2)

அது என்னுடையது. இது என்னுடையது, அதை விடமாட்டேன். இதை விடமாட்டேன் என்று எதன் எதன் பின்னாலேயோ ஓடுகிறது மனம். அதோடு சேர்ந்து நாமும் ஓடுகிறோம்.

''வகுப்பிலேயே நான்தான் முதல் மாணவன். நான்தான் பார்த்தேன். நான் உண்டாக்கிய வாழை. நான் பாடிய பாட்டு. நான் சொன்ன கதை'' இப்படி ஒவ்வொன்றிலும், எதை எடுத்தாலும் அதில் எல்லாம் ''நான் நான்'' என்று அதையே ஊன்றி வைக்கிறோம்.

ஊன்றி வைக்கிறோம் என்றால் என்ன? நாமே நம்மை இன்னொன்றில் மாட்டிக் கொள்கிறோம். பிறகு அதுதான் நம்மை ஆட்டு ஆட்டென்று ஆட்டுகிறது. காலையும் எடுக்க முடியவில்லை. கையையும் எடுக்க முடியவில்லை. வசமாகச் சிக்கி விட்டோம். ''மாட்டிக் கொண்டான் பெரியசாமிடோமா' அவ்வளவுதான்!

இனி எல்லாம் இறைவன் மயம். இறைவன் ஒருவன். அவன் ஒருவனே. அவளைத் தவிர ஒன்றும் இல்லை என்பதுதான் உண்மை. உண்மையைப் பார்த்தால் போதும். விதையும் அவன்தான், மண்ணும் அவன்தான். நீரும் அவன்தான், விளைச்சலும் அவன்தான் என்பது தெளிவாய் விளங்கி விடும்.

விதைக்கிறது அறுவடை செய்கிறது தானியத்தைச் சேர்த்து வைக்கிறது. சமைக்கிறது, சாப்பிடுகிறது எல்லாம் அவன்தான். ஆனாலும் நான், நான் என்று ஆடவிடுகிறான் ஒவ்வொன்றையும்.

இவ்வளவும் அவனுக்கு விளையாட்டு.

தன் விளையாட்டை தானே அனுபவிக்க அவனே ஒரு பொம்மையை உண்டாக்கினான். அந்தப் பொம்மையையே நான் நான் என்று ஆட, கூத்தாடவே வைத்து விட்டான் இறைவன்.

வெறும் பொம்மலாட்டந்தான் 'நான்' என்பது. எல்லாம் அவன் செயல். நம் செயல் ஒன்றும் இல்லை என்று உண்மையில் நிற்பது எளிது. சிரமம் என்ன இருக்கிறது அதில்.

ஆனால் கையில் இருக்கிற எளிமையை விட்டு விடுகிறோம். கடுமையை, சிக்கலை விலை கொடுத்து வாங்குகிறோம்.

விதி செய்கிற சதி அது. யாரை விட்டது விதி.

* * *

எல்லாம் இறைவன் செயல் என்று தெரிந்து பாரத்தை அவன் காலடி மாட்டில் இறக்கி வைத்தவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். உழைத்துக் கொண்டே இருப்பார்கள். உழைப்பில் விளைகிறதை தனக்கும் உபயோகப்படுத்திக் கொள்வார்கள். மற்றவர்களுக்கும் வழங்குவார்கள். பிறர்க்குப் பயன்படவே வாழ்கிறவர்கள் அவர்கள்.

உலக ஷேமத்திற்காக உழைக்காமல் இருக்க முடியாது அவர்களால். செயலின் பலனை உலகுக்கு வழங்குவதுதான் ஈஸ்வரார்ப்பணம். அதாவது காணிக்கை. நம் முன்னோர் இந்தக் காணிக்கையையே தவம் என்றும், யோகம் என்றும் கருதி இருக்கிறார்கள். துறவு, துறவு என்று அவர்கள் சொல்வதின் பொருளே பிறர்க்குப் பயன்பட உழைத்தல் என்பதே.

அப்படி ஒரு துறவு நிலை கையில் இருக்கத்தானே செய்கிறது. அதை விட்டு விட்டு, "அது வேண்டும், இது வேண்டும் என்னும் அடிமை நிலையை ஏன் தேடி ஓட வேண்டும். விதியின் சதிதானே இது.

*துறவுஉளவாச் சான்றோர்*
*இளிவரவும்*

சான்றோர் (ஞானியர்) சான்றோர் என்று சொல்லிக் கொண்டு அஞ்ஞானத்தில் கிடந்து உழல்வது போல் பைத்தியக்காரத்தனம் உண்டா.

வாழ்க்கையில் இது போல் எத்தனையோ கோமாளித்தனங்கள். எனக்கே சொந்தம் என்று ஒன்றை வசப்படுத்தத் துடிக்கும் ஊனம் அதாவது அஞ்ஞானம்.

* * *

இனி பிஞ்சுக் கத்தரிக்காய், பிஞ்சு வெண்டைக்காய், முருங்கைக்காய், அவரைக்காய், புடலங்காய், முளைக்கீரை, வாழைத் தண்டு, வாழைப் பூ, பருப்பு, வற்றல், வடகம் என்று எத்தனை இருக்கின்றன ருசியோடும் மணத்தோடும் சாப்பிட வேண்டாம் என்று அவற்றை விட்டு விட்டு, ஆட்டை நறுக்குகிறேன், கோழியைக் கழுத்தைத் திருகுகிறேன், உயிரைக்

கொன்று நாற்றம் பிடித்ததை பிணத்தையே உண்பேன் என்று அலைகிறதும் பேதைமை அல்லவா.

அதிலிருந்து மீள முடியவில்லையே பலரால். அதுவும் விதியின் ஒரு விளையாட்டுத்தான்.

*தூய*
*பிறஉளவா ஊன்துறவா*
*ஊனும்*

தூயபிற - காய், கனி, ஊன் துறவா ஊன் - மாமிச உணவு. கொலை செய்து பிணம் தின்னும் பழக்கத்தை விடாத இழிநிலை.

* * *

இனி ஒரு பெண். நல்ல பண்பாடு மிக்க குடும்பத்தைச் சேர்ந்த குலமங்கைதான். கையைப் பிடித்துக் கழுத்தில தாலி கட்டிய கணவன் அழகாய், மன்மதன் போல் இருக்கிறான். அன்பைச் சொரிகிறான். நன்செய், தோப்பு, பால், நெய், தங்கம், வெள்ளி, வயிரம் ஒன்றுக்கும் குறைவில்லை. அரண்மனை போல மாளிகை. பணியாளர் பலர். இடம் பொருள் ஏவல் எல்லாம் வளம்தான். ஒரு குறையும் இல்லை வாழ்க்கையில். குழந்தைகளும், ஆண், பெண் என்று இருபாலாருமே தளதள என்று இருக்கிறார்கள். ஆனாலும் விதி என்கிற ஒன்றும் இருக்கத்தானே செய்கிறது. யாரை விட்டது அது. மனிதர்களைத் தொல்லைப்படுத்துவதற்கென்றே எதை எதையோ கையில் வைத்திருக்கிறது பொல்லாத விதி.

இந்த அம்மணியை மட்டும் விட்டு வைக்குமா என்ன அந்த விதி.

கொண்ட கணவன் அன்பைத் தன் மேல் பூமழை போல் கொட்டிக் கொண்டிருந்தாலும் அவள் மனதில் அமைதி இல்லை. எப்படியாவது மாமியாளை ஒரு கை பார்த்து விடவேண்டும் என்று தவிக்கிறாள். மைத்துனியை (நாத்தனாரை) குறைந்தபட்சம் நடமாட்டம் இல்லாதபடி படுத்த படுக்கை ஆக்கிவிட வேண்டியதுதான் என்று கொதிக்கிறாள்.

யார் யாரிடமோ இது சம்பந்தமாக யோசனை கேட்கிறாள். பணத்தைப் பணம் என்று பாராமல் அள்ளி இறைக்கிறாள்.

மந்திரவாதிகள், சூனியக்காரர்கள், பூசாரிகள், சாமி கொண்டாடிகள் என்று பலரையும் தேடிப் போகிறாள். அவர்கள் சொன்னபடி எல்லாம் பில்லி, சூனியம், ஏவல் என்று வைக்கிறாள்.

கிறுக்குப் பிடித்தவளாய் வெறி கொண்டவளாய் அலைகிறாள்.

எத்தனை இருந்து என்ன பலன். கொடுத்து வைக்கவில்லை தானே அவளுக்கு.

*பறைகறங்கக்*
*கொண்டான் இருப்பக்*
*கொடும்குழையான் தெய்வமும்ஒன்(று)*
*உண்டாக வைக்கப்பாற்(று)*
*அன்று*

பறைகறங்கக் கொண்டான் இருப்ப - மேளதாள முழக்கத்தோடு 'நானிருக்கிறேன் உனக்கு' என்று கைப்பிடித்தானே நாயகன். தங்கச் சிலை போல அவள் இருக்கத்தானே செய்கிறாள். கொடும் குழையாள் - அப்படியும் இப்படியும் ஆடும் வைரத்தோடு அணிந்தவள்தான் இவளும். தெய்வமும் ஒன்று உண்டாக - கட்டிய புருஷனுக்குத் தெரியாமலே மந்திரவாதிகளை, சாமி கொண்டாடிகளை நம்பி இவள் அலைகிறாள் என்றால். ஒன்று உண்டாக வைக்கற்பாற்று அன்று - பெண்மையும் தாய்மையும் நிறைந்த பெண்ணா அவள். குடும்பப் பாங்கான குலமகள் கண்கில் வருவாளா அவள், இல்லை, ஏற்கனவே குறிப்பிட்ட பேராசைக்காரர்கள், பிணந்தின்னிகள் வர்க்கத்தில்தான் இவளையும் வைக்க வேண்டும்.

*துறவுஉளவாச் சான்றோர்*
*இனிவரவும், தூய*
*பிறஉளவா ஊன்துறவா*
*ஊனும் — பறைகறங்கக்*
*கொண்டன் இருக்கக்*
*கொடுங்குழையாள் தெய்வமும்ஒன்(று)*
*உண்டாக வைக்கப்பாற்(று)*
*அன்று (57)*

---

துறவு உளவா(க) அதாவது துறவு நிலை என்கிற ஒன்று கையில் இருக்க, அதை விட்டு விட்டு பேராசைப்படுவதும் கேவலமாக நடந்து கொள்வதும் 'இளிவரவு' - படுமட்டமான போக்கு.

'துறவு உளவா' எனத் தொடங்கும் இப்பாடல் நாலடியார் அச்சுப் புத்தகம் எதிலும் இல்லை. பழைய ஏடுகளை ஆய்ந்து பார்த்தவர்களும் அப்படியே சொல்கிறார்கள். நாலடியாரில் இல்லை என்றே சொல்கிறார்கள்.

ஆனால் பாடலின் அமைப்பும் கட்டுக்கோப்பும் நாலடியார் போலவே இருக்கிறது. அதை வைத்து ஒரு யூகத்தின் அடிப்படையில்தான் இங்கே சேர்த்து வைத்திருக்கிறது பாடலை இனி தண்டி அலங்காரம் என்னும் இலக்கண நூலில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டிருக்கிறது இப்பாடலை. அங்கிருந்துதான் எடுத்திருக்கிறது பாடலை.

(3)

தேவர்களாலும் முனிவர்களாலும் போற்றி வழிபடப்படுகிற தேவாதிதேவன் தான், விராட்டிபுருவுள் தான் செங்கண் மாலாகிய திருமால்.

அந்தத் திருமாலை வைத்து ஒரு நாடகம். சிறிய நாடகந்தான். ஓரங்க நாடகந்தான்.

வைகுந்தத்திலிருந்து பூலோகத்துக்கு வருகிறார் திருமால். வந்தவர் நேராக விலை மாது ஒருத்தியின் வீட்டுக்கே போகிறார். காத்தல்க் கடவுளாகிய திருமால் அல்லவா வந்திருக்கிறார் என்று தெரிந்தது பெண்ணுக்கு. தடபுடலோடு வந்தாள். ஆசைப்பெருக்கோடு அவர்காலைத் தொட்டுக் கும்பிட்டாள். உபசரித்தாள். அப்படியே கும்பிட்ட கையோடு தானே பெருமானின் மடியைத் தடவிப் பார்த்தாள். காசு பணம் ஒன்றும் இல்லை மடியில். தழுவிய கையை எடுத்தாள். ஆனாலும் விடவில்லை பெண். அரக்கிவிட்ட கொம்பிலிருந்து அப்பொழுது தான் கொழுந்துவிட்டுத் துளிர்க்கும் புத்தம் புதிய தளிர் அல்லவா பெண். 'கொய்தளிர் அன்னாள்' அல்லவா அவள். விடுவாளா பிடியை.

திருமாலின் மார்பு தோள் என்று ஒவ்வொன்றாகத் தடவிப் பார்த்தாள். பொன்மாலையோ, வயிர மாலையோ கிடக்கத்தானே செய்யும் என்று.

* * *

*துளப மாலையைத் தவிர ஒன்றும் இல்லை.*
*யாருக்கு வேண்டும் துளப மாலை.*

படக்கென்று எழுந்தாள் பெண். எடுத்தாள் கையை. இதோ வருகிறேன் என்று மூன்றாம் கட்டுக்கே போய் விட்டாள். போனது மட்டுமா, கதவைச் சார்த்தினாள். தாழ்ப்பாளும் போட்டுக் கொண்டாள்.

இருந்திருந்து பார்த்தார் திருமால். கனைத்தும் பார்த்தார். செறுமியும் பார்த்தார். ஒரு நாழிகை ஒன்றரை நாழியை கழிந்ததுதான் மிச்சம்.

மெள்ளத் தாய்க் கிழவி வந்தாள். வந்தவள் ''அவளுக்கு இப்பொழுது சௌகர்யப்படாது'' என்று முகத்தில் அடித்தது போலச் சொல்லி விட்டாள். நீங்கள் போகலாம் என்று ஒரு கும்பிடு போட்டே அனுப்பி விட்டாள் தாய்க் கிழவி. திருமாலையேதான்.

'என்ன தரித்திரமோ இது என்று' சத்தம் போட்டு முனகியபடியே தலைவாசல் கதவை மூடவும் செய்தாள் கிழவி. தாழ்ப்பாளும் போட்டு விட்டாள் அவள்.

ரொம்பவுந்தான் அவமானப்பட்டு விட்டார் திருமால். அவர் நினைத்தது ஒன்று. நடந்தது ஒன்று. பணத்தில் குறி வைத்து விட்டால் அதன்முன் திருமாலாவது, பெருமாளாவது. செல்லாக் காசுதான் யாரானாலும்.

*அங்கண் விசும்பின்*
*அமரர் தொழப்படும்*
*செங்கண்மால் ஆயினும்*
*ஆகமன்; — தம்கைக்*
*கொடுப்பதொன்(று) இல்லாயின்*
*கொய்தளிர் அன்னார்*
*விடுப்பர்தம் கையால்த்*
*தொழுது (58)*

---

*அங்கண் விசும்பு - நட்சத்திரக் கொத்தோடு விரிந்து பரந்த ஆகாயம். அமரர் -தேவர். கொய்தளிர் அன்னார் - குளுமையும் பசுமையும் நிறைந்த தளிர் போன்ற மெல்லியலார் பொருள்ப் பெண்டிர். விடுப்பர் - அணைக்கும் கையை எடுத்து விடுவார்கள். விடை கொடுத்தே அனுப்பி விடுவார்கள்.*

(4)

பிரபு ஒருவர். பெரிய அரண்மனை போல் மாளிகை ஒன்று கட்டினார். மேலே பார்த்தால் மாடங்கள்தான். கூடங்கள்தான். உள்ளே பார்த்தால் விசாலமான மண்டபங்கள், உள் அரங்குகள், முற்றங்கள், திண்ணைகள், இப்படி ஏராளம்.

மாளிகையை இரண்டு பகுதி (வீடு) ஆக்கினார். ஒவ்வொன்றும் குட்டி அரண்மனைதான். வடக்கு வீடு தெற்கு வீடு என இரண்டு. இரண்டுக்கும் பொதுச் சுவர் ஒன்று. உச்சி முதல் உள்ளங்கால் வரை இரண்டும் ஒரே மாதிரி. ஒரே அச்சு. ஒரே வார்ப்பு.

இரண்டும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்.அண்ணன் தம்பி என்று சொல்லக் கூடாது. இரண்டைப் பிள்ளைகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

பிரபுவுக்கு இரண்டு மகன். மூத்தவனுக்குத் தெற்கு வீடு. இளையவனுக்கு வடக்கு வீடு.

மூத்தவன் ஊதாரி. சொத்தை எல்லாம் தூற்றி இறைத்து விட்டான். வீட்டைப் பேணவே இல்லை. ஒரு தலைமுறைக்குள், இருபத்தைந்து முப்பது வருஷங்களுக்குள்ளேயே பழுதுபட்டுப் போனது வீடு. அங்கங்கே, பொந்தும், புடையும், கீறலும், விரிசலுமாய் இடிய ஆரம்பித்தது. தொடர்ந்து இடியவும் செய்தது. மழை பெய்தால் வீட்டுக்குள் தெப்பம் போல் பெருகி விடும் வெள்ளம். பிறகு எங்கே உருப்படும் வீடு.

கட்ட மண்ணும் குட்டியச் சுவருமாய் இடிந்து போனது தெற்கு வீடு. எருக்கலையும், மஞ்சணத்தியும் காடாய் மண்டி விட்டன உள்ளே.

வடக்கு வீடு எப்பொழுதும் போல ஜம் என்று இருக்கிறது.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் தானே இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்தானே. எத்தனை வருஷம் ஒன்றாகவே சேர்ந்து இருந்தன இரண்டும். ஆனால் அனுதாபப்பட வாச் செய்கிறது வடக்கு வீடு. ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்கிற நிலையில் கவலை இல்லாமல் இருக்கிறது வடக்கு வீடு. தெற்கு வீட்டைப் பற்றித்தான்.

ஆண்டாண்டு காலமாகச் சேர்ந்திருந்து என்ன பலன். உண்மையான உணர்ச்சியோடு கூடிய உறவு இல்லை என்றால் அடுத்தடுத்து நெருங்கி இருந்தாலும் விலகி இருக்கிற காரியந்தான். எட்டாத தூரத்தில், ஒட்டவே ஒட்டாத நிலையில் தனித்திருக்கிற காரியந்தான்.

மனிதர்கள் மாதிரித்தான் மனையும். உண்மையான அன்பு, மனசோடு மனசு ஒட்டுகிற உறவு இல்லாதவர்கள் சேர்ந்திருந்து என்ன புண்ணியம்.

*பலநாளும் பக்கத்தார்*
*ஆயினும் நெஞ்சில்*
*ஒருநாளும் ஒட்டாரே*
*ஒட்டார்*

இனி கம்பர், சடையப்ப வள்ளல் கதை எல்லோருக்கும் தெரியும். இதயத்தோடு இதயம் வைத்து உறவாடுகிறவர்கள் இருவரும்.

அடிக்கடி சந்திக்க வேண்டும். உறவாட வேண்டும். அதுதான் அவர்களுக்கு இன்பம். அது தடைப்பட்டால் பைத்தியமே பிடித்தது போல் ஆகிவிடும் இருவருக்கும்.

* * *

கம்பர் அடிக்கடி தேசாந்திரியாய் யாத்திரை போய் வருவார். ஒரு வாரத்தில் வருகிறேன் பத்து நாளில் வருகிறேன் என்று சொல்லிப் போவார். அப்படியே வந்தும் விடுவார் வள்ளலிடம். தவிர்க்க முடியாத நிலையில் இரண்டொரு நாள் தாமதம் ஆனால் தவித்துப் போவார் வள்ளல். கம்பரும் அப்படியே. யாத்திரையை அரைகுறையாக முடித்து விட்டு ஓடி வந்து விடுவார்.

ஒரு சமயம் ஒரு மாத காலம் ஆகிவிட்டது கம்பர் வர. வள்ளலுக்கு ஒன்றும் ஓடவில்லை. சாப்பாடும் இறங்கவில்லை. தூக்கமும் போய் விட்டது. முப்பத்தோராம் நாள் கம்பர் வந்தார் வள்ளலிடம். கம்பரைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார் வள்ளல். பேச்சே இல்லை. வாயைத் திறக்க முடியவில்லை. உதடு துடிக்கின்றன. ஆனாலும் சொல் வரமாட்டேன் என்கிறது. கண்ணீர்தான் கசிகிறது வள்ளலிடம்.

கம்பரும் பதறிப் போனார். அவராலும் வாயைத் திறக்க முடியவில்லை. நீண்ட நேரம் கழித்து "இப்பொழுதுதான் இந்தச் சடையப்பன் ஞாபகம் வந்ததோ என்றார் வள்ளல். கம்பருக்கு அழுகையே வந்து விட்டது. "என் உயிர் போனாலும் மறக்க முடியுமா உங்களை. எந்தெந்த ஜென்மம் எடுத்தாலும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்க முடியுமா. மறந்தால் கம்பனா நான்? என்றே சொன்னார். கண்ணீரும் கம்பலையுமாகவே சொன்னார் கம்பர்.

*ஆன்பாலும் தேனும்*
*அரம்பைமுதல் முக்கனியும்*
*தேன்பாய உண்டு*
*தெவிட்டுமனம் - தீம்பாய்*
*மறக்குமோ வெண்ணெய்*
*வருசடையாய்! கம்பன்*
*இறக்கும்போ தேனும்*
*இனி*

ஆன்பால் - பசும்பால். அரம்பை முதல் முக்கனி - வாழை, பலா, மா என்னும் மூன்று கனிகள். அரம்பை வாழை. தேன்பாய - தேன் சொட்ட. தீம்பாய் - கொழுத்துப் போய். மறக்குமோ - அந்தக் கொழுப்பில் மறக்கவா செய்யும். பிரிவேது நமக்குள். உயிர் வேறு, உடல் வேறு என்கிற நிலை ஏற்படுகிறதே அந்தப் பிரிவுதான், கடைசிப் பிரிவுதான் இனி. அதுவரை உங்களை விட்டுப் போக மாட்டேன். சேர்ந்தே இருப்பேன்.

தடுமாறித் தடுமாறி இப்படிச் சொன்னார் கம்பர்.

ஒத்த உணர்ச்சி எப்படி வெளிப்படுகிறது கம்பரிடமிருந்து. இப்படி ஒரு ஒத்த உணர்ச்சி உள்ளவர்கள் மாதக் கணக்கில் பிரிந்தாலும் நட்புக்கு பழுது ஏது. உணர்ச்சியை வைத்தல்லவா நெய்திருக்கிறது நட்பை அவர்களிடம்.

உண்மையானவர்கள் விலகி இருந்தாலும் ஒருவரை ஒருவர் விடமுடியாது. விடாது நட்பு.

கம்பர் பாடலை வைத்து நாலடியாரைப் பார்க்கலாம்

*பலநாளும் பக்கத்தார்*
*ஆயினும், நெஞ்சில்*
*ஒருநாளும் ஒட்டாரே*
*ஒட்டார் — பலநாளும்*
*நீத்தார் எனக்கை*
*விடல்உண்டோ நெஞ்சத்து*
*யாத்தாரோடு யாத்த*
*தொடர்பு (59)*

காந்தி மகான் இந்தியா முழுதும் பட்டி தொட்டி எல்லாம் போய்க் கொண்டிருப்பார். ரவீந்திரநாத் தாகுரோ இந்தியா மட்டுமல்ல, உலகம் முழுவதையும் வலம் வந்து கொண்டிருப்பார். ஆனாலும், தாகுர் இதயத்தில் காந்தி. காந்தியின் இதயத்தில் தாகுர். பிரிந்திருந்தாலும் அப்படி ஒட்டி உறவாடினார்கள்.

சி, எப் ஆண்ட்ரூஷ் என்று ஒரு உத்தமர். அவரிடம் தாகுர் அடிக்கடி சொல்வார். "காந்தி ஒரு குழந்தை. அந்தக் குழந்தை முப்பது கோடி மக்களையும் பேணி உபசரிக்கும். ஆனால் தன்னைப் பேணத் தெரியாது. நீங்கள் போய் அந்தக் குழந்தையைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று. சொல்வது மட்டுமல்ல. ஆண்ட்ரூஸை காந்தியிடம் அனுப்பி வைப்பார்.

வட்ட மேஜை மகாநாட்டுக்குக் காந்தி லண்டன் போகிறார் என்றால் அந்தத் தெய்வக் குழந்தைக்கு நீங்கள் போய் உதவ வேண்டும். அதனால் முன்கூட்டியே லண்டன் போய் ஆவன செய்யுங்கள் என்று ஆண்ட்ரூஸை அனுப்பி வைப்பார் கவி தாகூர்.

உலகம் முழுவதும் வலசாரி இடசாரி என்று சுற்றி வருகிற தாகூருக்கு அங்கங்கே நண்பர்கள் பலர். ரோமெய்ன், ரோலண்ட்,

---

*பலநாளும் நீத்தார் என - மாதக்கணக்கில் பிரிந்திருக்கிறாரே என்ற துயரால். கைவிடல் உண்டோ - முறிக்க முடியுமா உண்மை நட்பை. நெஞ்சத்து யாத்தாரோடு யாத்த தொடர்பு - மனதோடு மனதை வைத்து உருவேற்றிய நட்பை உணர்ச்சி பூர்வமான தொடர்பை விடல் உண்டோ.*

*குறிப்பு - கவி தாகுர் கல்கத்தாவில், சாந்தினிகேதனில் இருந்தார் இந்தியாவின் கீழ் கோடி அது. காந்தியோ சபர்மதி, வார்தா என்று ஆச்ரமம் கட்டி இருந்தார். சபர்மதி, வார்தா எல்லாம் இந்தியாவின் மேல் கோடி. ஆனாலும் ஒருவரை ஒருவர் உள்ளன்போடு மதித்தார்கள். உறவாடினார்கள். நட்புக்கு எது மேல்கோடி, கீழ்கோடி.*

ஆல்பர்ட் ஐன்ஸ்லிடன் முதலிய மாமேதைகள் பலர் தாகூரின் நண்பர்கள். அவர்களிடமெல்லாம் காந்தியைப் பற்றித்தான் பேசுவார் தாகூர். தன்னைப் பற்றி, தன் கவியைப் பற்றிச் சொல்வதைக்கூட விட்டு விடுவார். காந்தியைப் பற்றிப் பேச மறக்கவே மறக்காது அவர் நா.

இத்தனைக்கும் அரசியல் நோக்கில் இருவருக்கும் கருத்து வேறுபாடு உண்டு. இருவரும் ஆண்டுக்கணக்கில் பிரிந்திருப்பார்கள். ஆனால் அந்த மாமேதைகள் இரண்டு பேருடைய உள்ளங்களிலும் ஊடும் பாவுமாய் ஓடிக் கொண்டிருந்தது நட்பு. ஓடி நெய்து கொண்டிருந்தது நட்பு. வானத்துக்கும் பூமிக்குமாக ஓங்கி வளர்ந்து உயரே உயரே போய்க் கொண்டு தானே இருந்தது அந்த நட்பு.

*பல நாளும்*
*நீத்தார் எனினும்*
*விடல்உண்டோ தன்நெஞ்சத்(து)*
*யாத்தாரோ(டு) யாத்த*
*தொடர்பு*

(5)

''கல்விக்கழகு கசடற மொழிதல்'' என்று மூதுரை ஒன்று. மூதுரையைத்தான் கட்டிப் புரண்டு உருண்டோம். உருண்டு கொண்டே இருக்கிறோம். அது காரணமாக கல்வி பற்றிய நினைப்பே வரவில்லை நம்மிடம்.

கசடற மொழிதல் அதாவது தங்கு தடை இல்லாமல் வார்த்தைகளைக் கொட்டித் தடபுடலாகப் பிரசங்கம் பண்ணுவதுதான் கல்வி என்று ஆகிவிட்டது.

* * *

பண்பாடும் ஒழுக்கமுந்தான் கல்வி. பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் தரிசிப்பதுதான் கல்வி. அதற்காகவே அடிமேல் அடி எடுத்து வைத்து வாழ்க்கையை நோக்கி நடப்பதுதான், வாழ்ந்து காட்டுவதுதான் கல்வி என்னும் உண்மையைப் பார்க்க விடாது மறைத்து விட்டது பழமொழி.

பழமொழியைத் தள்ளிவிட வேண்டும். உண்மையை நாட வேண்டும். தேட வேண்டும். கண்முன் வந்து நிற்கும் உண்மை. அதனோடு ஒன்றித் திளைக்க வேண்டும். அதன் பரிமளந்தான் ஒழுக்கம் பண்பாடு.

* * *

பண்பாடு இருந்தால் அடக்கம் இருக்கும். மரியாதை இருக்கும். பொறையுடைமை, பக்தி, தியாகம் முதலிய எல்லா நற்குணங்களுக்கும் ஊற்றுக்கண் அடக்கந்தான். மரியாதைதான்.

மரியாதையும் அடக்கமும் இல்லாதவன் ஒரு நிலையில் நிற்க மாட்டான். கையில் பிடிக்க முடியாது அவனை. குச்சு வீட்டை மச்சு வீடாக மாற்றினாலே போதும். விண்ணுக்கும், மண்ணுக்குமாகக் குதிப்பான்.

நான் யார் தெரியுமா என்று கேட்டு அதட்டுவான். தொலைத்து விடுகிறேன் பார் என்று உருட்டுவான். கல்லாதவன் அவன்.

*கற்றவன் சொல்வானா அப்படி*
*சக்கரச் செல்வம்*
*பெறினும் விழுமியோர்*
*எக்காலும் சொல்லார்*
*மிகுதிச்சொல் — எக்காலும்*
*முந்திரிமேல் காணி*
*மிகுவதேல் கீழ்தன்னை*
*இந்திரனா எண்ணி*
*விடும் (60)*

---

*சக்கரச் செல்வம் - சக்கரவர்த்திப் பதவி. மிகுதிச் சொல் - தற்பெருமை. முந்திரி - சல்லிக் தம் பிடிக்காசு. காணி - முக்கால் துட்டு மாதிரி அதைவிடக் கொஞ்சம் பெரிய காசு. விழுமியோர் - சான்றோர். கீழ் - கயவர். அடக்கந்தான் சான்றாண்மை. அது இல்லாதவன். கயவன்.*

## பிறப்புக்கு ஏதுகாரணம், இறப்புக்கும் அப்படியே

ஒரு காட்டு வழியாக நடந்து போகிறோம். பனங்காடுதான் அது. மெதுவாகத்தான் அடிக்கிறது காற்று. அதற்கே பொறுக்க முடியவில்லை பனையில் உள்ள காய்ந்த ஓலைக்கு. மேலும் கீழும் குதிக்கிறது. அதட்டுகிறது. பயமுறுத்துகிறது. சளசள என்று சத்தம் போட்டுக் கொண்டே இருக்கிறது. சும்மா இருக்காது காய்ந்த ஓலை. சலசலத்துக் கொண்டே இருக்கும்.

இனி அதே பனையில் பசுமையும், குளுமையும் கொண்ட பச்சோலையும் இருக்கிறது. அது எவ்வளவு அடக்கமாக இருக்கிறது. மரியாதையாக இருக்கிறது. சூறாவளிக் காற்றே அடிக்கட்டுமே. நிதானத்தை விடாது பச்சோலை. அமைதியாகப் புன்முறுவல் பூக்கும். சலசலப்புக்கு ஏது அங்கு இடம்.

கல்லாத கயவர்களுக்கு வற்றிய பனை ஓலைதான் சரியான எடுத்துக்காட்டு. கற்றறிந்த சான்றோர்க்கு பச்சோலையை விட வேறு என்ன இருக்கிறது எடுத்துக் காட்ட.

*கற்றறிந்த நாவினார்*
*சொல்லார்தம் சோர்வஞ்சி,*
*மற்றையார் ஆவர்*
*பகர்வர்; — பனையின்மேல்*
*வற்றிய ஓலை*
*சலசலக்கும், எஞ்ஞான்றும்*
*பச்சோலைக்(கு) இல்லை*
*ஒலி* *(61)*

---

*சோர்வு அஞ்சி - கூச்சப்பட்டு. மற்றையார் - கல்வி அறிவில்லாதவர். பகர்வர் - கத்துவார்கள்.*

*குறிப்பு - கற்றறிந்த பண்பாளர்களின் ஞானமும், சீலமும் அவர்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் ஒளி வீசும். இதை உணர்த்துகிறது கற்றறிந்த நாவினார் என்பது. ஞானமோ சீலமோ இல்லாதவர்களைக் கீழோர் என்றும் சொல்லலாம். கயவர் என்றும் சொல்லலாம். கயவர், கீழோர் என்னும் வார்த்தைகளில் இல்லாத வேகம் மற்றையார் என்று அவர்களை ஒதுக்கித் தள்ளுவதில் இருக்கிறது. சான்றோர் நாவிலிருந்து வருவது பொருளோடு கூடிய சொல். மற்றையார் நாவிலிருந்து வருவது பொருளற்ற சத்தம். அதாவது பகர்தல்.*

*பனையின் மேல் என்பதைத் தனிச் சீரில் நிற்க வைத்திருக்கிறது. வற்றிய ஓலைக்கும், பச்சோலைக்கும் இடையில் எஞ்ஞான்றும் என்பதை வைத்திருக்கிறது. அதுதான் காய்ந்த ஓலையையும், பச்சோலையையும் துல்லியமாகப் பிரித்துக் காட்டத்தான்.*

(2)

ஒரு சிறு ஊர். பட்டிக்காடு மாதிரி சிறு ஊர். நூறு நூற்று இருபது வீடுகள். முந்நூறு முந்நூற்றைம்பது ஜனங்கள். திடுதிப்பென்று விஷக்காய்ச்சல் வந்து அடித்தது ஊரை.

விஷக்காய்ச்சலில் சிறியவர், பெரியவர், முதியவர், இளைஞர் என்று பலரும் அடிபட்டுப் போனார்கள். இதில் ஒரு விநோதம் என்னவென்றால் கல்வி அறிவில்லாத கயவர் பலர் விஷக்காய்ச்சலில் தப்பினார்கள். அவர்களிடம் பாச்சா பலிக்கவில்லை காய்ச்சலுக்கு. அவர்களில் எழுபது வயது எண்பது வயதான கிழவர்களிடம்கூட விஷக்காய்ச்சல் வாலாட்ட முடியவில்லை. அதே நேரத்தில் முப்பது முப்பத்தைந்து வயதான ஒருவர். கல்வி கேள்விகளில் நிறைந்த அறிஞர். அறிவுக்கேற்ற பண்பாளர். இரண்டு நாள்தான் காய்ச்சல். சுருட்டிக் கொண்டு போய் விட்டது அவரை.

எத்தனை பேருக்கு ஆதரவாக இருந்தார் அவர். அவரையா இழுத்துக் கொண்டு போவது இந்தக் காய்ச்சல்.

ஏழை எளியவர்களை எல்லாம் குடல் பதறக் கொடுமைப்படுத்தும் கொடியவன் கல்லாக இருக்கிறான். நல்லவன் போய் விடுகிறான்.

கொடுமைதான். ஆனால் இது இயல்பான காரியந்தான்.

மரணம் பொது. ஏழை, பணக்காரன், படித்தவன், படியாதவன், நல்லவன், கெட்டவன் என்று வித்தியாசம் காட்டாது மரணம்.

யாருக்கு எப்பொழுது முடிகிறதோ வாழ்நாள். அப்பொழுது பாய்ந்து விடும் மரணம்.

இந்த உண்மை எல்லோருக்கும் தெரிந்ததுதான். தெரிந்தாலும் அதை அங்கீகரிக்க முடிகிறதா, இல்லையே. ஆனால் கவிஞருக்கோ மரணத்தின் மேல் கசப்பே வருகிறது. கசப்பே பிறகு ஹாஸ்யமாய் வருகிறது. எப்படி வருகிறது ஹாஸ்யம்.

---

*பச்சோலை சலசலக்காது என்று சொல்லவில்லை. 'பச்சோலைக்கு இல்லை ஒலி' என்று சொல்லி இருக்கிறது. தமிழின் நயம், பண்பட்ட பதம் அது ஒளிர நெளிந்து குழைந்து ஒசிந்து நடக்கிற சிங்கார நடை அது.*

பொல்லாத பயல் தான் எமன். படியாத மூடனைக் கொண்டு போய் என்ன பண்ண. ருசித்துச் சாப்பிட அவனிடம் என்ன இருக்கிறது. ஒன்றும் இல்லை. கற்றறிந்த பண்பாளனைக் கொண்டு போனால், அவளிடம் ஞானம் இருக்கிறது, பண்பாடு இருக்கிறது. கருணை இருக்கிறது. ருசித்து ருசித்துச் சாப்பிடலாம் அவற்றை.

விபரத்தோடுதான் நடந்து கொள்கிறான் எமன்.

*பல்லான்ற கேள்விப்*
*பயன்உணர்வார் வீயவும்,*
*கல்லாதார் வாழ்வும்*
*அறிதிரேல்; — கல்லார்கண்*
*சேதனம் என்னும்அச்*
*சேறகத்(து) இன்மையால்*
*கோதென்று கொள்ளாதாம்*
*கூற்று (62)*

(3)

பிறவிகள் கோடான கோடி என்றாலும் மனிதப் பிறவி பல கோடி என்றாலும் அத்தனை பிறவிகளையும் ஊடுருவி, கருணையானது மனித உருவில் வந்து விடத்தான் செய்கிறது.

---

*பல்லான்ற கேள்விப் பயன் உணர்வார் - பல திறப்பட்ட ஞான சாஸ்திரங்களை உணர்ந்து படித்து, அதன் பயனாகிய பண்பாடு, ஒழுக்கம், கருணை என்று அனுபவிக்கிறவர்கள்.*

*வீயவும் - இறக்க. கல்லாதார் - அறிவோ பண்பாடோ இல்லாத மூடர்கள். வாழ்வு - கொட்டாப் புளி மாதிரி ஜம் என்று இருக்க (என்ன காரணம்? திகைக்கிறீர்களா. இதோ சொல்கிறேன் விபரம்.)*

*கல்லார்கண் - மூடர்களிடம். சேதனம் என்னும் சேறு அகத்து இன்மையால் - ஞானம், பண்பாடு என்னும் ரஸம், சுவை மிக்க ரஸம் அவர்களிடம் இல்லை. மனசே இல்லாத, மனச்சாட்சியே இல்லாதவர்கள் அவர்கள். கோது என்று - அதனால் அவர்கள் வெறும் சக்கை என்று கருதி. கொள்ளாது - எடுத்துக் கொள்ளாது. பற்றிக் கொண்டு போகாது. கூற்று - மரணம். (எமன்)*

*குறிப்பு - அருமையான பாட்டு. தெய்வ கடாட்சத்திலிருந்து வருகிற பாட்டு. கடாட்சத்தின் முத்திரை பாட்டில் கிடக்கிறது.*

அப்படி வருகிற கருணையே தியாகி. தியாக மூர்த்தியைப் பிறந்தான் என்று சொல்லக் கூடாது. அவதரித்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

அவதார மூர்த்திகள் வதவத என்று இருக்க மாட்டார்கள். சிலர்தான் இருப்பார்கள். என்றும் இருப்பார்கள், எங்கும் இருப்பார்கள். அவர்கள் இல்லை என்றால் உலகமும் இல்லைதான்.

உண்மையில் ஒருவன் பிறக்கிறான் என்றால். கருணை உள்ளவன்தான். உண்மையில் ஒருவன் வாழ்கிறான் என்றால். ஏழை எளியவர்களை வெறுக்காத இரக்கம் உடையவன்தான்.

*என்றும் புதியார்*
*பிறப்பினும், இவ்உலகத்(து)*
*என்றும் அவனே*
*பிறக்கலான்*

கருணையும் தியாகமும் நிறைந்த அவன் எப்படி இருப்பான், தயையின் வடிவாகவே இருப்பான் அவன். தியாகத்தின் தரிசனம் என்றுதான் சொல்ல வேண்டும் அவனை.

கஷ்டப்படுகிறவர்களை வெறுப்பதும், வறியவர்களை பாவிகள் என்றே ஒதுக்குவதுமே உலக இயல். கருணாகரனாகிய அவதார மூர்த்தியோ தாழ்ந்தவர்களை, வீழ்ந்தவர்களை, ஆதரவற்றவர்களை, துயரத்துக்கு ஆளாகித் தவிப்பவர்களை ''தம்மவராகவே மதிப்பான். அவர்களில் ஒருவன்தான் 'நான்' என்று செயல்படுவான். ஏழை எளியவர்களை வெறுக்கவும் மாட்டான், ஒதுக்கவும் மாட்டான். கருணைக் கடல் என்றால் அவன்தான்.

*இரப்பாளை எள்ளா*
*மகன்.*

தன்னிடம் உள்ளவற்றை எல்லாம் அவர்களிடம் கொடுப்பான். அவர்களுக்குக் கொடுக்கத்தான் என்னிடம் வந்து இருக்கிறது செல்வம் என்பதே அவன் கண்ட காட்சி.

இந்த அதிசயத்தைக் கண்டு அனுபவிக்கிறார் கவிஞர். அனுபவத்தையும் ஆனந்தத்தையும் அரசவையில் வந்து, கற்றறிந்த நாவலர் குழாத்துள் வந்தே சமர்ப்பிக்கிறார் கவிஞர்.

மலை வளம் மிக்க பாண்டியா! மலையின் மேனி முழுவதும் பொன் மழை பொழிவது போல் வெள்ளி மழை கொட்டுவது போல் அருவிகள் கொட்டும் வளப்பம் மிக்க மன்னர் மன்னவா! என்று அரசனைக் கூவி அழைத்தே அவையில் சமர்ப்பிக்கிறார் கவிஞர்.

*என்றும் புதியார்*
*பிறப்பினும் இவ்உலகத்(து)*
*என்றும் அவனே*
*பிறக்கலான் — குன்றின்*
*பரப்பெல்லாம் பொன்னொழுகும்*
*பாயருவி நாட!*
*இரப்பாரை எள்ளா*
*மகன் (63)*

(4)

அழையா விருந்து என்றால் நாம்தான். நம்மில் ஒவ்வொருவரும் அழையா விருந்துதான். நம்மை யார் கூப்பிட்டார்கள். வெற்றிலை பாக்கு வைத்து நம்மை அழைத்தது யார். ஒருவரும் இல்லை. அப்படி இருந்தும் நாம் வந்தோம்.

எங்கிருந்து வந்தோம். ஏன் வந்தோம், எப்படி வந்தோம் என்று தெரியுமா நமக்கு. வந்தது இருக்கட்டும், போவதாவது எங்கே என்று தெரியுமா? அதுவும் தெரியாது. போவது எப்போது என்றாவது தெரியுமா! ஒன்றும் தெரியாது. ஆனாலும் வந்தது உண்மை. போவதும் உண்மை. அதாவது வந்ததும் ஒரு

---

*இல்உலகத்து என்றும் புதியார் பிறப்பினும் - விரிந்து பரந்த இவ்உலகின் எல்லாப் பகுதியிலும் நாள்தோறும் புதிது புதிதாகப் பிறக்கத்தான் செய்கிறார்கள் மனிதர்கள். புதுப்புது வரவாகத்தான் இருக்கின்றன தோற்றங்கள். ஆனால் ஒன்று. என்றும் - இன்றல்ல, நேற்றல்ல, என்றென்றும். அவளே பிறக்கலான் - மனிதனாகப் பிறக்கிறான் என்றால், மனித அவதாரம் என்றால் அவன்தான். யார் அவன்?*

*இரப்பாரை என்னா மகன் தான் அவன். இனி, வெள்ளி உருகி ஒழுகுவது போல் கவுர்கவுராக ஒழுகுகிறது அருவி. குன்றின் பரப்பெல்லாம் பொன்னொழுகும் பாயருவி.*

*குறிப்பு:-*

மாயம்தான். போவதும் ஒரு மாயம்தான். இரண்டும் பொம்மலாட்டந்தான்! என்றாலும் இந்த இரண்டுக்கும் மத்தியில் ஒரு பட்டாளத்தையே உருவாக்கிக் கொள்கிறோம் நாம்.

தாய் தந்தையர், மனைவி மக்கள், அண்ணன் தம்பி, அக்கா தங்கை, சித்தப்பா, பெரியப்பா, சித்தி, பெரியம்மா, மாமன், மைத்துனன், கொழுந்தன், கொழுந்தி என்று ஒரு கூட்டத்தையே உருவாக்கிக் கொள்கிறோம். நண்பர்கள் என்றும் ஒரு கூட்டம்.

ஒரு மரம் கிளை கிளையாய் கிளைப்பது போல உறவினர், நண்பர் என்று கிளை கிளையாய் கிளைக்கிறது வாழ்வு.

அப்படியானால் இந்த வாழ்வும் ஒரு மர்மம்தான். ஏன் வாழ்ந்து கொண்டிருக்கிற பொழுதே 'படக்' என்று போய் விடுகிறோம் அல்லவா.

*கேளாதே வந்து,*
*கிளைகளாய் இல்த்தோன்றி,*
*வாழாதே போவரால்*
*மாந்தர்கள்: —*

ஒரு மரம். அதில் வந்து ஒரு கூடு கட்டுகிறது புள் (பறவை). முட்டையிட்டு அடை காக்கிறது அங்கே. குஞ்சு பொறிக்கிறது. குஞ்சு வளர்ந்து ஆளான பிறகு (உடனே) பறவை பறந்தோடி விடுகிறது. குட்டிப் பறவையும் பறந்தோடி விடுகிறது. கூட்டையும், மரத்தையும் அப்படி அப்படியே போட்டு விட்டே தாயும் ஓடி விடுகிறது. பிள்ளையும் ஓடி விடுகிறது. மரம் அழைத்தா வந்தது புள் (பறவை) போகிற பொழுது விடை பெற்றா போகிறது.

அப்படியே நாமும் ஓடி விடுகிறோம். வந்தது போலவே போய் விடுகிறோம்.

*கேளாதே வந்து*
*கிளைகளாய் இல்த்தோன்றி*
*வாழாதே போவரால்*
*மாந்தர்கள்; — வாழாதே*
*சேக்கை மரன்ஒழிய*
*சேண்நீங்கு புட்போல*

*யாக்கை தமர்க்கொழிய*
*நீத்து* *(64)*

வாழாது - நிலைத்து நிற்காமல், சேக்கை - கூடு. மரன் ஒழிய - இந்தா வைத்துக் கொள் என்று மரத்திடமே கூட்டை ஒப்படைத்து விட்டு. சேண் நீங்கு புள் போல - கண்ணுக்கெட்டாத தூரத்துக்கு, நீண்ட நெடுந்தூரத்தை நோக்கிப் பறந்து போகும் பறவை போல. வாழாதே போவர் மாந்தர்கள் - மனிதர்களும் எல்லாவற்றையும், வாழும் வாழ்க்கையையே போட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். யாக்கை - உடம்பை. தமர்க்கொழிய - உற்றார் உறவினரிடம் ஒப்படைத்து விட்டு. நீத்து - ஒட்டுப் பத்து ஒன்றும் இல்லை என்று சொல்லும்படி, துணையே இல்லாமல் தானே போய் விடுகிறார்கள் மனிதர்கள்!

குறிப்பு - கண்ணுக்குத் தெரியாத நுட்பத்துக்கும் நுட்பம் உயிர்த்தாது. அது இங்கு வந்துதானே கூடு (உடம்பு) கட்டியது. எலும்பு, தோல், ரத்தம், சதை, மூளை, வயிறு, கண், காது, மூக்கு, வாய், கால், கை என்றெல்லாம் சேர்த்து வைத்து உடம்பு என்கிற கூடு கட்டியது இங்குதான்.

(5)

செல்வத்தை திருமகள் (கடாட்சம்) என்கிறோம். சிந்தனையை, சிந்தனையில் விளைகிற அறிவை சரஸ்வதி (கடாட்சம்)

---

*ஆறடி உயரம், எண்பது தொண்ணூறு கிலோ எடை. எல்லாவற்றையும் வைத்துச் சிற்பம் கட்டியது போல உடம்பைக் கட்டியது இங்குதான். உற்றார், உறவினர், ஊரார், சமுதாயம் என்று அத்தனை பேரும் கொடுத்த கொடையை வைத்துத்தான் உருவானது இந்த உடம்பு.*

*அப்படி என்றால் இரவல்தானே உடம்பு.*

*அது எப்படி நமக்குச் சொந்தமாகும். அதைத் தூக்கிக் கொண்டு போவது தவறு தானே. அதனால் கொடுத்தவர்களிடமே (தமர் வசமே) இந்தா பிடி, எடுத்துக் கொள் உடம்பை என்று கொடுத்துப் போய் விடுகிறது கண்ணுக்குத் தெரியாத உயிர்த்தாது (ஆன்ம தத்துவம்).*

*நாமா வந்தோம். நாமா போகிறோம். வானத் தமரனே வந்தான். வந்தது போலப் போனாள்.*

*என்ன பிழைப்பு இது. நான் நான் என்று அலட்டிக் கொள்கிற இந்தப் பேதைமையும் ஒரு பிழைப்பா!*

என்கிறோம். உடம்பையோ இறைவனின் சந்நிதானம் என்கிறோம். உயிரையோ இறைவன் என்றே சொல்கிறோம்.
சிவனே சீவன் என்று முனை முறியாமல் மோனையில் வைத்தே சொல்கிறோம்.
நாம் மட்டுமா, திருவள்ளுவர், நாலடியார், மாணிக்கவாசகர், கம்பர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், பட்டிணத்தார், தாயுமானவர் அத்தனை ஞானியரும் ஒரே குரலில் சொல்கிறார்கள் இதை.
அப்படி எல்லாம் புகழ்ந்து பாராட்டும் அருளாளர்களே ''எல்லாம் பொய், அத்தனையும் மாயை, ஒன்றையும் நம்பாதே, நம்பி ஏமாந்து விடாதே'' என்றும் சொல்கிறார்கள்.
செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்றெல்லாம் அடித்துச் சொல்கிறார்கள்.
ஒன்றை உண்மை என்று சொல்லி பிறகு அதையே பொய்யென்றும் சொல்வதில் முரண்பாடு இருப்பதாகவே தெரியும்.
ஏன் அப்படி முரண்படச் சொல்கிறார்கள் என்று யோசனை செய்து பார்த்தால் முரண்பாடு போய் விடும். வாய்மை, மெய்ம்மை, உண்மை என்றெல்லாம் சொல்கிற மெய்ப் பொருளே தெரியும் அதில்.

* * *

மற்றவர் வேறு நாம் வேறு என்கிற வேற்றுமை உணர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாது. எல்லோரும் ஒன்று. அதனால் ஒருவருக்கு ஒருவர் ஆதாரமாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் இந்த உடம்பு. அதற்குத்தான் செல்வம், என்னும் மெய்ப் பொருளைக் காட்டவே அப்படிச் சொல்கிறார்கள். மற்றப்படி செல்வத்தையோ, உடம்பையோ, இளமையையோ இகழ வேண்டும் என்பதற்கல்ல. பணவெறி பற்றியும், ஆணவம் பற்றியும், இளமையின் செருக்கு பற்றியும் கிண்டலும் கேலியுமாக அருளாளர்கள் சொல்வதில் புதுப்புது ஒளிப் படலங்களே தோன்றும். உடம்பு, செல்வம் இவை எல்லாம் நல்லது செய்ய உதவும் கருவிகளாக அல்லவா உள்ளன என்னும் உண்மையே தெரிந்து விடும்.

* * *

சூரியன் உதிக்கிறதும், மறைகிறதும் வேடிக்கையாகத் தெரியலாம். ஒவ்வொரு தடவையும் சூரியன் புதிது புதிதாகவே தோன்றுகிறான். அப்படி அவன் தோன்றுகிறதை 'நாள்' என்கிறோம்.

அது நாள் அல்ல. நம் வாழ்நாளைக் கண்டம், கண்டமாக அறுக்கும் வாள் (ரம்பம்) என்கிறார் கவிஞர்.

செத்த வசனத்திலா சொல்கிறார் கவிஞர். இசையும் தமிழும் கைகோர்த்து நடனம் ஆடும் தாளத்தில் வைத்தே, அந்தத் தாளத்தில் பூத்து மலரும் சிருஷ்டியில் வைத்தே சொல்கிறார் கவிஞர்.

அதுதானே கவி.

*தோற்றம்சால் ஞாயிறு*
*நாழியா வைகலும்*
*கூற்றம் அளந்துநும்*
*நாள்உண்ணும்; - ஆற்ற*
*அறம்செய்(து) அருளுடையீர்*
*ஆகுமின்; யாரே*
*பிறந்திங்(கு) இறவா*
*தவர். (65)*

---

தோற்றம்சால் ஞாயிறு - தகதக என்று வெளிச்சம் போட்டுக் கொண்டு தினந்தோறும் வருகிறானே சூரியன். ஞாயிறு - சூரியர். அவன் எப்படி வருகிறான். வைகலும் - நாள்தோறும். நாழியா - நொடி, நாழிகை, நாள் என்று கூறுபோட்டபடி யேவருகிறான். அப்படியானால் ஒவ்வொரு கூறும் நம் வாழ்நாளை ஒவ்வொன்றாக உருவி எடுக்கும் வாள் (எமன்) தான். அதுமட்டுமா, நாழி என்னும் பக்கா வைத்து நம் வாழ்வினை அளந்து அளந்து போட்டுக் கரைக்கிற கூற்றுவன் (எமரீன) தான். ஆற்ற - குறை இல்லாமல் நிறையவே. அறம் செய்து அருளுடையீர் ஆகுமின் - நல்லதையே செய்யுங்கள், நாலுபேருக்கு நல்லவராகவே இருங்கள். பிறந்திங்கு இறவாதவர் யார் - நம்மில ஒருவரும் நிலைத்து நிற்கப்போவதில்லை போகத்தான் போகிறோம். போய்க்கொண்டே இருக்கிறோம். அப்படி இருந்தும் ஏன் ஒருவருக்கொருவர் ஆதாவில்லாமல் இருக்கிறோம்.

விளங்கமாட்டேன் என்கிறது இது. விளங்கினால்ப் போதும் இது. இல்லாதவர்களை நோக்கி கை நீளும்; கொடுக்கத்தான். அணைத்து அரவணைக்கவுந்தான்.

அறஉணர்வும் கருணையும் நம்மை ஆட்கொண்டுவிட்டால் எப்படி இருப்போம் நாம்.

நீதிவழங்கும் நீதிபதியாக அல்ல. நீதியாகவே, நீதிமயமாகவே இருப்போம் நாம்.

வந்ததற்கும், தங்கி இருந்ததற்கும் அடையாளம் வேறு என்ன வேண்டும்.

அது போதும் மனிதனுக்கு.

# நான்மணிக்கடிகை

## கருணைபெற்றெடுத்த குழந்தை தருமம்

திருக்குறள், நாலடியார் போன்று உண்மையான பூர்வமான நூல் நான்மணிக்கடிகை.

ஆசிரியர் பெயர் விளம்பி நாகனார். ஆசிரியரின் அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்து கவி உருவம் எடுக்கிறதை ஒவ்வொரு பாடலிலும் பார்க்கலாம்.

பாடல்கள் வெண்பா என்னும் பூர்வமான இனத்தைச் சேர்ந்தவை. ஒவ்வொரு வெண்பாவும் நான்கு நான்கு அடிகள் கொண்டவை.

ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு உண்மை. அதாவது ஆசிரியரின் உண்மை அனுபவம் தமிழோடு சேர்ந்து பேசும். அப்படியானால் பாடல்தோறும் நான்கு உண்மைகள், உணர்ச்சிமயமான அனுபவ உண்மைகள் நான்கும் கணகண என்று ஒலிக்கும். மாணிக்கம், மரகதம், முத்து, பவளம் நான்கும் சேர்த்து வைத்துக் கட்டிய வயிர அட்டிகை ஒளி விடுவது போல் ஒவ்வொரு வெண்பாவும் தகதக என்று ஜொலிக்கும்.

நான்மணிக்கடிகை என்கிற பெயர் பொருத்தமான பெயர்தான். கடிகை என்றால் மாலை.

பாடலை ஒரு தடவை பாடி அனுபவித்தால் போதும். பாடலை மறக்க முடியாது. மாறி மாறிப் பாடிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். பாடப் பாட பாடலில் உள்ள கலைப் பண்பும், சிருஷ்டியும், இசையும், தமிழும் லட்டு, ஜிலேபி, அல்வா, பால் திரட்டு போலத் தித்திக்கும்.

* * *

---

3 *யானையின் மூக்குத்தான் நீண்டு கையாக, தும்பிக்கையாகத் தெரிகிறது. அப்படி நீண்டு கை போல அதன் மூக்கு தொங்காவிட்டால் பிரம்மாண்டமான யானை அழகாக இருக்காது. அருவருப்பாகவும் பயங்கரமாகவும் இருக்கும் யானை. அப்படி இல்லாமல் துதிக்கத் தக்கபடியாகத் தொங்கும் கையே துதிக்கை.*

உண்மை என்றால் உணர்ச்சியோடு ஒட்டாத வறட்டு உண்மை அல்ல. யானைக்கு நான்கு கால், ஒரு கை[3]. ஆனால் மனிதனுக்கு இரண்டு கால், இரண்டு கை என்று சொல்வது சாதாரண விஷயம். அனுபவத்திலிருந்து விளைந்து வருகிற உணர்ச்சியோடு கூடிய அற்புதம் (உண்மை) இல்லை அது.

உணர்ச்சியில் கிடந்து, தவமே கிடந்து அனுபவத்தோடு உரசி விளையாட வேண்டும் உண்மை. அதுதான் கவிதைக்கு உரிய விஷயம். அது வார்த்தைகளோடு உருண்டு புரண்டு விளையாட வேண்டும். நான்மணிக்கடிகைப் பாடல்கள் அப்படி விளையாடுகிற விளையாட்டுத்தான்.

நான்மணிக்கடிகையில் உள்ள பாடல்கள் பூர்வமான பாடல்கள். ஆனாலும் இன்று பாடிய பாடல்கள் போல் இருக்கின்றன. அப்படி நம்மோடு ஒட்டுகின்றன, உறவாடுகின்றன பாடல்கள்.

விஷயம், உணர்ச்சி, பாத்திரம் (மனிதர்) பேச்சு (வார்த்தை) எல்லாமே அப்படி.

* * *

இனி மனிதன் பெற்ற வரங்களில் எல்லாம் உயர்ந்த உன்னதமான வரம் வார்த்தை. அதாவது பேச்சு. மொழி என்னும் அற்புதம்.

வார்த்தை உதவுகிற மாதிரி வேறு ஒன்றும் உதவாது. தாறு மாறாகப் பேசி விட்டாலோ அந்த வார்த்தைகளே குடியைக் கெடுத்து விடும்.

ஆவதும் வார்த்தையால்தான். அழிவதும் வார்த்தையால்தான்.

மகமட் அலி ஜின்னா காங்கிரஸ் கட்சியில்தான் இருந்தார். தேச விடுதலைக்குத் தீவிரமாகப் போராடிய, மிகத் தீவிரமாகப் போராடிய முன்னணித் தலைவர்களில் ஜின்னா ஒருவர். முஸ்லீம் லீக் கட்சிக்காரர்களின் எதிர்ப்பையும் மீறி காங்கிரஸ் கட்சிக்கு உழைத்தார் ஜின்னா. ஆங்கில அரசு ஜின்னாவைக் காங்கிரஸிலிருந்து பிரித்துவிட ஜின்னாவுக்கு எப்படி எல்லாமோ ஆசை காட்டியது. அதற்கு இடம் கொடுக்கவில்லை ஜின்னா. அதுமட்டுமல்ல, ஆங்கில அரசின் நயவஞ்சகத்தைத் தாக்கவும் செய்தார்.

ஆனால் ஜவஹர்லால் நேருவுக்கும் ஜின்னாவுக்கும் கருத்து வேறுபாடு எப்படியோ உண்டாகி விட்டது.[3] அது காரணமாக அடிக்கடி மோதல் வரும் அவர்களுக்குள்.

நேரு கொஞ்சம் முன்கோபக்காரர். கோபம் வந்து விட்டால் அது உண்மையான கோபமாகவே இருக்கும் அவரிடம். முன்பின் யோசிக்காமல் பேசி விடுவார். அப்படியே நடந்தும் கொள்வார்.

கோபத்தில் ஆத்திரப்பட்டு ஜின்னாவை அப்படிப் பேசி விட்டார் நேரு. "லண்டனில் போய் பாரிஸ்டர் வேலை பார்க்க வேண்டியது தானே ஜின்னா" என்று சினந்தே பேசி விட்டார் நேரு.

துண்டை உதறித் தோளில் போட்ட விதமாக காங்கிரஸை விட்டு அன்று வெளி ஏறியவர்தான் ஜின்னா. அவர் வளர்த்த காங்கிரஸுக்கே எதிரி ஆகிவிட்டார். காங்கிரஸை நிர்மூலம் பண்ணவும் ஆரம்பித்து விட்டார்.

அப்படி ஒரு வேற்றுமை பிறந்து விட்டது ஜின்னாவிடம். அந்த வேற்றுமைதான் பாரத நாட்டையே இந்தியா, பாகிஸ்தான் என்று துண்டாட வைத்தது. நாட்டுப் பிரிவினையில் எத்தனை லட்சம் குடும்பங்கள் எத்தனை எத்தனை கொடுமைகளுக்கு ஆளாயின. இன்றளவும் தீராத மண்டையடியாக அல்லவா இருக்கிறது அது.

அணுவுக்குள் பிரம்மாண்டமான சக்தி இருப்பது போல் வார்த்தைக்குள்ளும் இருக்கிறது சக்தி. அளந்து பேச வேண்டும். முறையோடு பேச வேண்டும். சொல்ல வேண்டியதையே சொல்ல வேண்டும். சொல்லத் தகாத சொல்லைச் சொல்லவே கூடாது. பேச்சில் ஆத்திரம் கூடாது. நிதானம் வேண்டும். கணக்கு வழக்கோடு இருக்க வேண்டும் பேச்சு. மகாத்மா காந்தியிடம் அந்தக் கணக்கு வழக்கைத் துல்லியமாக மிக மிகத் துல்லியமாகப் பார்க்கலாம்.

நேரு நல்லவர். உத்தமமானவர். ஆனால் பளிச் பளிச்சென்று அவரிடமிருந்து வருகின்ற கோபமும், கோபத்தில் குதித்தோடி

---

3 *மோதலுக்கும் கருத்து வேற்றுமை வளர்ந்ததற்கும் மௌலானா அபுல் கலாம் ஆசாத்தான் காரணம் என்று ஒரு அபிப்பிராயம் மூத்த காங்கிரஸ் வட்டாரத்தில் இருந்தது.*

வருகின்ற வேண்டாத சொற்களும் அந்தக் காலத்தில் பல பிரச்சினைகளை உண்டாக்கின.

நேரு போன்றவர்களை கவிஞர் பார்த்திருக்கிறார். அடடா, எப்பேர்ப்பட்ட உத்தமர்களாக இருக்கிறார்கள் இவர்கள். ஆனால் ஆத்திரமும் ஆத்திரத்தில் இவர்களிடமிருந்து வருகின்ற வார்த்தைகளும் வெண்ணெய் திரண்டு வருகிற பொழுது தாழியை (பானையை) உடைத்த மாதிரி ஆகிவிடுகிறதே என்று திகைக்கிறார். அந்தத் திகைப்பிலிருந்து ஒரு தெளிவு பிறக்கிறது. எப்படி?

*- கூறற்க*
*கூறல் லவற்றை*
*விரைந்து*

வேண்டாத பேச்சை ஆத்திரத்தில் பேசி விடாதே என்று நயந்து வேண்டுகிறார் கவிஞர்.

இனி நான்கு பேர் ஒரு மோட்டாரில் போகிறார்கள். ஒருவர் தொழிலதிபர், மற்றவர் மருத்துவர், பிறிதொருவர் விஞ்ஞானி, அதுவும் அணுசக்தித் துறை விஞ்ஞானி, இன்னொருவர் நாடாளுமன்ற உறுப்பினர்.

போகிற கார் நடுக்காட்டில் நின்று விட்டது. நான்கு பேரும் இறங்கினார்கள். காரைத் தள்ளிக்கூடப் பார்த்தார்கள். மூச்சு விடவில்லை மோட்டார்.

அப்பொழுது வழிப்போக்கன் ஒருவன் அந்த வழி வந்தான்.

காரின் முன் பக்கத்து மூடியைத் திறந்தான் வழிப்போக்கன். ஐந்து நிமிஷம்கூட ஆகவில்லை பழுது பார்த்து ஒக்கிட்டு விட்டான் காரை. ஓட ஆரம்பித்து விட்டது மோட்டார். விஞ்ஞானி அவனிடம் கேட்டார், ''தம்பி! என்ன படித்திருக்கிறாய்'' என்று.

'பள்ளிக்கூடமே போனதில்லை நான்' என்றான் அவன்.

பள்ளிக்கூடம் போய் படிக்கவில்லையே, பட்டம் பெறவில்லையே, உத்யோகமும் இல்லையே, வெறும் தச்சன் தானே, கொல்லன் தானே என்று அவனை ஒதுக்கி வைக்கலாமா?

*எள்ளற்க என்றும்*
*எளியர் என்று*

இனி நெறிமுறை இல்லாதவன் கயவன். பழிபாவத்துக்கு அஞ்ச மாட்டான் அவன். ஆனால் எப்படியோ காசு பணம் என்று சேர்ந்து விட்டது அவனிடம். பண்பாட்டை மதிக்கிறவன் போல பாவலாப் பண்ணுகிறான். அதற்காகவே அறிஞர் பெருமக்களை உபசரிக்கிறான். விருந்துக்கு அழைக்கிறான். அது இது என்று சன்மானம் கொடுக்க முனைகிறான். 'இடம் கொடுக்கலாமா அதற்காக அவனுக்கு' என்ன இருந்தும் மட்டமானவன் மட்டம் ஆனவன் தானே. கை நீட்டி ஒன்றை அவனிடம் வாங்கி விட்டால் ஒழிந்தது காரியம். தொலைந்தோம் நாம்.

*என்பெறினும்*
*கொள்ளற்க கொள்ளார்கை*
*மேற்பட*

பண்பாடு, ஒழுக்கம் இவை எல்லாம் படித்து வருவதில்லை. வீட்டிலிருந்து, குடும்பப் பழக்க வழக்கத்திலிருந்து வருவது. அதனால் பண்பாடு, ஒழுக்கம் இவற்றுக்கு குடிப்பிறப்பு என்று பெயர்.

கீழ் மகன் என்று சொல்வது ஒழுக்கமும் பண்பாடும் இல்லாதவனைத்தான். சாதியைக் குறிக்கிற சொல் அல்ல அது. ஒழுக்கமும் பண்பாடும் இல்லாதவன் தாறுமாறாக நடந்து கொள்வான். வாய்க்கு வந்தபடி பேசுவான். அவனுக்கென்று என்ன இருக்கிறது அவனிடம், கயமை ஒன்றைத் தவிர.

அதனால் பொறுப்புணர்ச்சியை அவனிடம் எதிர்பார்க்கக் கூடாது.

பதிலுக்குப் பதில் என்று அவனிடம் வைத்துக் கொள்ளக் கூடாது.

மனம் கொதிக்கக் கொதிக்க அவன் பேசுவான். கேட்டும் கேளாதது போல் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். பதிலுக்கு நாமும் திட்டுவோம் என்று வசவில் இறங்கிவிடக் கூடாது.

பயித்தியத்தைக் கண்டு ஒதுங்கவில்லையா? மல்லுக்கட்டவா செய்கிறோம் பயித்தியத்தோடு.

*உள்சுடினும்*
*சீறற்க சிற்றில்ப்*
*பிறந்தாரை*

*எள்ளற்க என்றும்*
*எளியர்என்(று), என்பெறினும்*
*கொள்ளற்க கொள்ளார்கை*
*மேற்பட, — உள்சுடினும்*
*சீறற்க சிற்றில்ப்*
*பிறந்தாரை: — கூறற்க*
*கூறல் லவற்றை*
*விரைந்து (1)*

(1)

கோவில் ஒன்று கோபுரத்தோடு எழுந்து நிற்கிறது என்றால் அது ஒரு சமுதாயம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் அனுபவித்து வருகிற இன்ப உணர்ச்சிகளின் மொத்த உருவம், அதாவது அவதாரம் என்பதுதான் உண்மை. கல்லும், மணலும், செங்கல்லும், சுண்ணாம்பும் சேர்ந்து எடுத்த உருவந்தான் கோபுரம் என்றால் அது உண்மை ஆகாது.

செங்கல்லும் சுண்ணாம்புந்தானே என்று கோவிலை இடித்தால் அது அந்த சமுதாயத்தின் இதயத்தையே கடப்பாறை கொண்டு இடிக்கிற காரியந்தான். கோவிலுக்கு ஒரு சிறு சேதம் வந்தாலும் துடியாய் துடிக்கும் சமுதாயம். இனி அந்தக் கோவிலை முன் நின்று கட்டினார் ஒரு பெரியார். மிக்க சிரமப்பட்டே கட்டினார். கட்டி முடிக்கிற வரை கூடவே இருந்து உதவினார் அவர். கட்டி முடிந்த கோவிலைப் பார்த்துப் பார்த்து அவர் உள்ளம்

---

*எள்ளற்க. இகழக் கூடாது. எளியர் என்று - சாதாரண ஆள் தானே என்று. கொள்ளற்க - வாங்கக் கூடாது. உள் - உள்ளம். சீறற்க - சினம் கொண்டு சண்டை போடக் கூடாது. சிற்றில்ப் பிறந்தார் - அற்பர். கூறல்லவற்றை - பொறுப்பற்ற வார்த்தைகளை. விரைந்து - ஆத்திரப்பட்டு.*

*பெருமையும் சிறுமையும் நாவை (பேச்சை) வைத்துத்தான்.*

*- கூறற்க*
*கூறல் லவற்றை,*
*விரைந்து*

*கவிஞரின் இந்த அனுபவத்துக்கு அலங்காரம் பண்ணுகின்றன. எள்ளற்க, கொள்ளற்க, சீறற்க என்னும் மூன்றும்.*

குளிர்ந்தது. ஜன்ம சாபல்யமே கிடைத்து விட்டது அவருக்கு. இந்த நிலையில் கோவிலுக்கு இடையூறு, அதன் அஸ்திவாரத்தையே தகர்க்கிற மாதிரி நடக்கிறது காரியம் என்றால் என்ன பாடுபடும் அவர் இதயம். சுக்கல் சுக்கலாக நொறுங்கத்தானே செய்யும் அவர் உள்ளம். குழப்பம், மனக்குழப்பம் என்றால் அதுதான் அப்பொழுது உயிரை விட்டு விடுவதுதான் அவருக்குச் சுகமாக இருக்கும். உயிரை வைத்துக் கொண்டிருப்பதுதான் கஷ்டமாக இருக்கும் அப்பொழுது.

இனி அசுணம் என்று ஒரு பறவை. மான் போல் பெரிதாக இருக்கும் அசுணம். ஆழ்ந்த தியான உணர்வோடு கூடிய இதயத்திலிருந்து வருகிற இசையில் மயங்கி அப்படியே ஒன்றி விடும் அசுணம். இனி அந்த நேரம் பார்த்து கர்ண கடூரமாய்ப் பறைக் கொட்டை அடிக்கிறான் ஒருவன் என்றால் அது குழம்பித் தத்தளிக்கத்தானே செய்யும். தத்தளித்துச் சாயும். அசுணத்தின் மூச்சே நின்று விடும்.

*பறைபட வாழா*
*அசுணம்*

அதுபோலத்தான் செய்ய வேண்டியதைச் செய்ய முடியாமல், கொடுமையைத் தடுத்து நிறுத்த முடியாமல் மனம் தத்தளிக்கிற பொழுது உண்மையான லட்சியத்தில் நிற்கிறவர்கள் உயிரையே தியாகம் செய்வார்கள்.

*உள்ளம்*
*குறைபட வாழார்*
*உரவோர்*

மகமட் அலி ஜின்னா பாகிஸ்தானை உருவாக்கினார். அப்படி அவர் அதை உருவாக்கிய தன் நோக்கம் முஸ்லீம்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். தனி அரசு நடத்த வேண்டும் என்பதற்குத்தான்.

ஜின்னாவின் நோக்கம் நல்ல நோக்கந்தான். ஆனால் நடந்தது என்ன? பாகிஸ்தானிலுள்ள ஒரு பிரிவினரைக் கொடுமைப்படுத்த இன்னொரு பிரிவினரைத் தூண்டி விட்டது. அதனால் படுபயங்கரமான கொடுமைகள், வகுப்புக் கலவரங்கள் இரு நாடுகளிலும் தாண்டவமாடின. லட்சோப லட்சம் குடும்பங்கள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மானம், மரியாதை,

சொத்து, சுகம், ஏன் உயிரையே இழந்து தவித்தன. எல்லாவற்றுக்கும் மேலாக சமுதாய நீதியே, மனித உறவே, அறநெறியே கழுத்து நெறிப்பட்டு கண் விழி பிதுங்கின.

துடியாய்த் துடித்தார் மகமட் அலி ஜின்னா. "இந்தக் கொடுமைக்காகவா பாகிஸ்தானை உருவாக்கினேன்" என்று அலறினார் ஜின்னா. என்னைக் கொல்கிறார்களே என் மக்கள் என்று வருந்தினார். இனி நான் உயிரோடு இருந்து என்ன பலன் என்று கலங்கினார். உயிர் என்னை விட்டுப் பிரிவதற்கு முன் நான் டெல்லி போக வேண்டும். பண்டித ஜவஹர்லால் நேருவிடம் போக வேண்டும். என் தவறையும் மனச்சுமையையும் அவரிடம் இறக்கி வைக்க வேண்டும். மன்னிப்புக் கேட்க வேண்டும், அதன் பிறகுதான் எனக்கு அமைதி என்றுகூட ஏங்கினார்.

ஒரு வீரனுடைய லட்சியத்துக்குச் சோதனை வந்தால் அதைச் சரிசெய்ய முடியாவிட்டால் அப்பொழுது அவன் தவிக்கிற தவிப்புத்தான் குறை.

மனக்குறை (உள்ளம் குறை)

மனக்குறையோடு வாழ விரும்ப மாட்டான் வீரன். மரணந்தான் அவனுக்கு அமைதி.

*உள்ளம்*
*குறைபட வாழார்*
*உரவோர்*

இனி அரசியல் என்று ஒன்று. அதிகாரம்தான் அதற்குக் குறி. அதை நோக்கி வெறியே வந்து விடும் அரசியலுக்கு. அந்த வெறியில் பஞ்சமா பாதகங்களையும் செய்யும் உல்லாசமாகவே செய்யும் அரசியல். தரும தேவதையையே தத்தம் செய்து விடும் அரசியல்.

மகாத்மா காந்தியை யார் என்று சொல்ல வேண்டியதில்லை. அவர்தான் இந்தியா, இந்தியாதான் அவர். மனித குலத்தின் ஆன்மாவே அவர்தான்.

சுதந்திர உணர்ச்சி வலுப்பட்டு உருவாகிய வரை காந்தி சொல்படி காங்கிரஸார் எல்லோரும் நடந்தார்கள். சுதந்திரம் பெற்று அதிகாரத்தில் அமர்ந்தார்களோ இல்லையோ, காந்தி சொல்கிறபடி நடக்க விரும்பவில்லை அவர்கள். அவர் விருப்பத்துக்கு மாறாக நடக்க ஆரம்பித்தார்கள்.

ஒரே இந்தியாதான் மகாத்மாவின் உயிர். இந்தியாவைத் துண்டு போடுவதைவிட தன்னையே துண்டு போடலாம் என்றார் காந்தி. ஆனால் நேரு, பட்டேல் போன்றவர்கள் இந்தியா, பாகிஸ்தான் என்று துண்டாடச் சம்மதித்து விட்டார்கள். வருகிற சுதந்திரம், அரசு கட்டில் வராமல் போய்விடக் கூடாதே என்கிற வேகந்தான் காரணம். மகாத்மாவால் இதை ஜீரணிக்க முடியவில்லை. காங்கிரஸைத் தன் வழிப்படுத்தவும் முடியவில்லை அவரால்.

சுதந்திரம் பெற்ற பிறகும் வகுப்புக் கலவரத்தை அணைப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு மனப்பூர்வமான மதிப்புக் கொடுக்கவில்லை காங்கிரஸ் கட்சி. நாடும் அப்படியே.

பாகிஸ்தானுக்கு ஐம்பது கோடி ரூபாய் கொடுங்கள் என்று இந்திய அரசை வற்புறுத்தினார் காந்தி மகான்

தயக்கம் காட்டியது அரசு. அதற்காக உண்ணாவிரதமே இருந்தார் காந்தி மகான். நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த காந்தி மகானே தன்னுடைய சுதந்திர பூமியில் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் அவர் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்.

பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் சொன்னார்.

''நான் அநாதை ஆகிவிட்டேன். என் வார்த்தைக்கு ஆமாம் சாமி போட்டுத் தலை ஆட்டியவர்கள் இப்பொழுது என்னைப் புறக்கணிக்கிறார்கள்'' என்று. மேலும் சொன்னார் காந்தி மகான்:

''நூற்று இருபத்து ஐந்து வயது வரை வாழ விரும்பினேன். அது தவறு என்று தெரிந்து விட்டது எனக்கு. நான் வளர்த்த காங்கிரஸை நானே எதிர்ப்பது பாவம். அதைவிட மரணமே நல்லது என்று படுகிறது எனக்கு'' இப்படிச் சொன்னார் அந்த மகாத்மா.

கடவுளின் நேர் சாயலான காந்தி மகான் போன்ற புனித ஆன்மாக்களின் நிலை அதுதான். லட்சியந்தான் உயிர் அவர்களுக்கு. லட்சியத்துக்கு தொய்வு ஏற்பட்டால் கை, கால், மார்பு, தலை, வயிறு, முகம் சேர்ந்த உடம்பும் சரி, வாழ்வும் சரி பாரமாகவே படும் அவர்களுக்கு.

நெற்பயிரை எடுத்துக் கொண்டால் அதற்கு லட்சியம் அரிசிதான். அதுதான் பயிருக்கு உயிர். மற்றபடி தண்டு, இலை, சண்டு, சாவி எல்லாம் வெறும் குப்பைதான்.

வறட்சியில் அன்னம் பிடிக்கவில்லை, நெல்மணி (அரிசி) எல்லாம் கருக்காய் ஆகிவிட்டன என்றால் பிறகு இலையாவது, தண்டாவது, உமியாவது, தவிடாவது.

மானிடப் பயிரின் நெல் அல்லவா காந்தி மகான். அவருடைய லட்சியந்தானே மனித குலத்துக்கு உயிர்ச் சத்தை ஊட்டும் உணவு (அரிசி).

அது கருகுகிறது என்றால் பயிர் வாழவா செய்யும். சோர்ந்து கருகியே விடும்.

*நெற்பட்ட கண்ணே*
*வெதிர்சாம்; — தனக்கொவ்வாச்*
*பறைபட வாழா*
*அசுணமா, உள்ளம்*
*குறைபட வாழார்*
*உரவோர், — நிறைவனத்து*
*நெற்பட்ட கண்ணே*
*வெதிர்சாம்; — தனக்கொவ்வாச்*
*சொற்பட்டால் சாவதாம்*
*சால்பு* *(2)*

---

*பறை - கொட்டு முழக்கம், அசுணம். ஒரு பறவைதான். உருவத்தில் மான் முதலிய விலங்கு போல் பெரிதாக இருக்கும். அதனால் அசுணமா என்று சொல்வது வழக்கம். உரவோர் - சான்றோர். நிலத்துக்கு உரம் எப்படியோ அப்படித்தான் சமுதாயத்துக்கு சான்றோர். அதனால் அவர்கள் உரவோர்தான். அவர்கள் இல்லை என்றால் சமுதாயத்துக்கு உயிர் ஏது, ஊக்கம் ஏது. நிறைவனத்து நெல் - கண்ணுக்கெட்டிய தூரம் காடாக நிறைந்திருக்கிற நெற்பயர். பயிரில் விளைகிற நெல். பிறகு நெல்லில் முளைக்கிற அரிசி. வெதிர் - சண்டு, சருகு. சாம் - சாகும் என்ற சொல் மத்தியில் உள்ள எழுத்தை இழந்து நிற்கிறது. சாம் என்று நிற்கிறது. அப்படி*

(3)

குறளாசிரியர் என்றால் தெய்வப் புலவர்தான். அவர் சொல்வது ஒவ்வொன்றும் வேதம். அவர் சொல்லும் சொல் அத்தனையும் மந்திரம். சரஸ்வதி தேவியே மாறுவேஷம் போட்டு குறளாசிரியராகத் தெரிகிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் ஒன்று. குறளாசிரியர் தகப்பனார் பெயர் தெரியாது. பாட்டனார் பெயரும் தெரியாது. உற்றார் உறவினர் பற்றியும் தெரியாது. அவர்கள் எல்லோரும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றுதான் தெரிகிறது. குறளாசிரியர் போல் ஒருவரும் அந்தப் பரம்பரையில் வரவில்லை என்று சொல்வதில் குற்றம் இல்லை. இருந்திருந்தால் கணக்காயனார் மகன் நக்கீரர் என்பது போல அடைமொழியோடு வந்திருக்கும் குறளாசிரியர் பெயரும். வெறுமனே வள்ளுவர் என்று சாதியை மட்டும் குறிப்பிட்டுப் பெயர் வராது.

சாதாரண குடும்பத்தில் பிறந்த குறளாசிரியர் உலக மகா ஞானியாகவே இருந்தார். அவருடைய பாடலைப் பார்த்தால் தெய்வமே குடிகொண்டிருக்கிற கோயில் என்றுதான் சொல்லத் தோன்றும். நினைக்க நினைக்க அதிசயந்தான். அளவிட முடியாத அதிசயந்தான்.

கண்ணப்ப நாயனார் பிறந்தது சாதாரண வேட்டுவர் குலம். அந்தக் குடும்பத்தில் பிறந்தவரா இத்தனை பக்தியோடும் ஞானத்தோடும் திகழ்ந்தார் என்கிற யோசனை வந்தால் அதிசயம் வராமல் வேறு என்ன வரும்!

அரசியல் உலகில் இன்றும் நம் கண்கொண்டு பார்க்கத்தானே செய்கிறோம். ஏழை எளிய குடும்பத்தில் பிறந்த சிலர் நாட்டுக்கே தலைவர்களாகத் திகழ்கிற விந்தையை.

ஏன் இப்படி என்று சோதித்துப் பார்த்தால் ஒன்றும் புலப்படாது. மகா பெரிய ஞானிகளுக்கே புலப்படாது. சிருஷ்டியில் அப்படி ஒரு அந்தரங்கம். அற்புதமான அந்தரங்கம்.

---

*நிற்பதற்கு இலக்கணத்தில் இடைக்குறை என்று பெயர் மாண்டு மடிந்து விடும் என்பதுதான் பொருள் சாம் (சாகும்) என்பதற்கு. தனக்கு ஒவ்வாச் சொல் - தன் மக்களின் இன வெறியைக்கூட அடக்க முடியவில்லை காந்திக்கு, அவர் உருவாக்கின காங்கிரஸே அவரை நம்பவில்லை என்னும் சொல் பிறக்கத்தானே செய்யும். அப்படிச் சொல் பிறந்த பிறகு வாழ முடியுமா சான்றோர்களால். சால்பு - அன்பும் அருளும் நிறைந்த வீரதத்துவம். அதுதான் மானுடம் என்கிற மங்கலம்.*

*யார் அறிவார்*
*நல்லாள் பிறக்கும்*
*குடி*

மனிதர்களிடம் மட்டும் அல்ல. சிருஷ்டியின் அற்புத ரகஸ்யம்; புல்லிலிருந்து பெரிய நட்சத்திரம் வரை பேரண்டம் முழுவதுமே நிறைந்து கிடக்கிறது. அது இல்லாமல் எதுவும் இல்லை.

*கள்ளி வயிற்றின்*
*அகில்பிறக்கும், மான்வயிற்றின்*
*ஒள்ளரி தாரம்*
*பிறக்கும் — பெருங்கடலுள்*
*பல்விலைய முத்தம்*
*பிறக்கும்; — யார்அறிவார்*
*நல்லாள் பிறக்கும்*
*குடி* *(3)*

(4)

நண்பர்கள் என்று பலர் இருக்கலாம் ஒருவருக்கு. ஆனால் உண்மையான நண்பன் யார், போலியான நண்பன் யார் என்று எளிதில் கண்டுபிடிக்க முடியாது. இனி ஒரு கஷ்டம், சிக்கல், ஆபத்து என்று வந்தால் அப்பொழுது தெரியும் உண்மை நண்பன்

---

*கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் - சப்பாத்திக் கள்ளி போன்ற சாதாரண மரந்தான். ஆனாலும் அதிலிருந்து நறுமணம் கமழும் அகில் கட்டையே உண்டாகி விடுகிறது. என்ன அதிசயம் இது. ஒள் அரிதாரம் - அரிய நுட்பமான வாசனைச் சாந்து, கஸ்தூரியே. பெருங்கடலுள் - கங்கு கரை இல்லாதது கடல். அதன் ஆழமும் அகலமும் அப்படி, அப்படிப்பட்ட பெரிய கடல்தான். ஆனாலும் அதன் ஏதோ ஒரு மூலையில் காரசாரமான உப்பு விளையும் பகுதியிலேயே விலை மதிக்க முடியாத குளுமையான நித்திலம். முத்தே பிறந்து விடுகிறது. எல்லாம் அதிசயமாகத்தான் இருக்கிறது. அணுவிலிருந்து அண்டம் வரை எல்லாம் அதிசயம்தான். அத்தனை அதிசயங்களையும் தூக்கி அடித்து விடுகிறது மனித காரியம். படிப்பு வாசனை அற்ற ஏழை எளிய குடும்பத்திலேயே மகா பெரிய ஞானிகள் பிறந்து விடுகிறார்கள், வீராதி வீரர்கள் பிறந்து விடுகிறார்கள். கவிஞர்கள், கலைஞர்கள், சான்றோர்கள், ஆன்றோர்கள் என்று பிறந்து விடுகிறார்கள்.*

யார் என்று. இனி நம்முடன் நெருங்கிப் பழகும் ஒருவன் காரணமாகவே இடையூறு வருகிறது நமக்கு. அது ஒரு பெரிய கேடாகவே உருவெடுக்கிறது என்று அறிகிற பொழுது வெகு துள்ளிபமாகத் தெரிந்து விடுகிறது நட்பின் திறம்.

சும்மா தெரியுமா உண்மை. கொஞ்சமாவது தியாகம் பண்ண வேண்டாமா அதற்கு.

*கெட்டறிப*
*கேளிரான் ஆய*
*பலன்*

நஷ்டத்திலும் அப்படி ஒரு லாபம் இருக்கத்தானே செய்கிறது.

இனி வைரம், வைடூர்யம் என்று ரத்தினங்கள் பல. ஒவ்வொன்றிலும் தரவரிசை பல உண்டு. அந்தந்த மணியின் நீரோட்டத்தைப் பார்த்து, ஒளி வீச்சைக் கணக்கிட்டு அவற்றைத் தரம் பிரிப்பார்கள். அதற்காக ஒவ்வொரு மணியையும் துடைத்துத் துடைத்துத் துப்புரவு செய்வார்கள். நாய்த் தோலில் வைத்தே துடைப்பார்கள். தண்ணீர் விட்டுக் கழுவி எடுத்தது போலப் பளபள என்று ஜொலிக்கும் ரத்தினங்கள்.

அப்படி ஜொலிக்கும் ரத்தினங்களைக் கையில் எடுத்துப் பார்ப்பார்கள். முகத்தின் பக்கம் வைத்துப் பார்ப்பார்கள். தள்ளி வைத்தும் பார்ப்பார்கள். முற்றத்துக்குக் கொண்டு வந்தும் பார்ப்பார்கள். வீட்டின் அந்த மூலை இந்த மூலை போய்ப் போய்ப் பார்ப்பார்கள்.

இப்படி எல்லாம் சோதிக்கச் சோதிக்கத்தான் ரத்தினங்களின் தரம் தெரியும்.

*மண்ணி அறிப*
*மணிநலம்*

---

*மறக்க முடியுமா இந்த அதிசயத்தை. யாருக்குத் தெரியும் அந்த ரகஸ்யம்.*

*யாரறிவார்*
*நல்லாள் பிறக்கும் குடி*

தங்கத்தின் மாற்றுத் தெரிய வேண்டும் என்றால் அதைப் புடம் போட்டு எடுக்க வேண்டும். வைரம் முதலிய ரத்தினங்களைப் புடம் போட்டால் போச்சு காரியம். கரிதான் மிஞ்சும். அதனால்தான் துடைத்துப் பார்ப்பார்கள். தண்ணீர் விட்டுக் கழுவியது போல இருக்கும் துடைக்கிற துடைப்பு.

*மண்ணுதல் - கழுவுதல்.*

இனி குதிரையின் தரம் இன்னதென்று தெரிய வேண்டும். அதன் மேல் ஏறி சவாரி செய்து பார்த்தால்தான் தெரியும். பசுவை, காளையைப் பார்ப்பது போல் எதிரில் நிற்க வைத்துப் பார்த்தால் ஒன்றும் தெரியாது. குதிரையின் பாய்ச்சல், துள்ளல், வேகம், ஓட்டம் எல்லாம் சவாரியில்தான் தெரியும்.

*பண் அமைத்து*
*ஏறிய பின்அறிப*
*மாநலம்*

பண் அமைத்து - சேணம் கட்டி. மா - குதிரை. துடைத்த மாத்திரத்தின் மணிகளின் தரம் தெரியத்தானே செய்கிறது. பிறகு ஏன் தங்கத்தை மட்டும் சுட்டுப் பொசுக்கிப் புடம் போட்டுப் பார்க்க வேண்டும் என்று கேட்கக் கூடாது.

*சுடச்சுடத்தான் ஒளிரும் பொன்*

*மண்ணி அறிப*
*மணிநலம், பண்ணமைத்து*
*ஏறிய பின்னறிப*
*மாநலம் — மாசறச்*
*சுட்டறிப பொன்னின்*
*நலம்காண்பார்; — கெட்டறிப*
*கேளிரான் ஆய*
*பலன் (4)*

---

*மாசுஅற - அழுக்கு நீங்க. பொன் - தங்கம். பொன்னின் நலம் காண்பார் - பொற்கொல்லர். கெட்டறிப - ஒரு கேட்டுக்கு ஆளானால்தான் தெரியும். கேளிர் - நண்பர். குறிப்பு - வாழ்க்கையின் நெறிமுறைகளும் ஒழுங்கும் எத்தனையோ சோதனைகளைக் கடந்து வந்தவைதான். ஆகாயத்திலிருந்து குதித்து வரவில்லை அவை.*

(5)

செல்வம் என்றால் ரூபாய், அணா, பைசா மட்டும் அல்ல அதில். அறக்கடவுளே அதில் குடி இருக்கிறது. ஆனந்தமும் அப்படியே. உற்றார், உறவினர், நண்பர், கலைஞர், ஆன்றோர், சான்றோர் இவர்களை எல்லாம் சுற்றமாய்ப் பேணி தழுவி ஒழுகுவதற்குப் பயன்படத்தானே செய்கிறது செல்வம். கோவில் கட்டலாம், கோபுரம் கட்டலாம், திருவிழா நடத்தலாம், அன்னதானம் பண்ணலாம், கல்வியை வளர்க்கலாம், நோய் நொடிகளைப் போக்கலாம், மொத்தத்தில் சமுதாயத்தைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்தக் கொள்ள எவ்வளவு பிரயோசனமாய் இருக்கிறது செல்வம். பாலைவனத்தையே சோலை வனம் ஆக்கலாம் பணத்தைக் கொண்டு.

நீர்வளம், நிலவளம் மிக்க செல்வச் செழிப்பான நாட்டில் திருடர்களுக்கு வேலை இல்லை. பொய், பித்தலாட்டத்துக்கும் இடம் இல்லை. நிம்மதியாக இருப்பார்கள் மக்கள். அது தானே ஆனந்தம். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் செல்வத்தில் உள்ளன. ஆனந்தம் என்கிற பேரானந்தமயமான வீடும் இருக்கிறது அதில்

*என்ன இல்லை செல்வத்தில்*
*எல்லாம் பொருளில்ப்*
*பிறந்து விடும்*

இனி கடுமையான பாறை (கல்லில் இருந்து)யிலிருந்து மாணிக்கம், மரகதம், கெம்பு, நீலம் என்று ஒளி வீசும் மணி (ரத்தினங்)கள் பிறக்கத்தானே செய்கின்றன. அதுபோலத்தான் மெல்லியலாள் என்று பாராட்டப்படுகிற பெண்ணின் இதமான வேண்டுகோளிலிருந்து வீரதீர சாகசங்களே பிறந்து விடுகின்றன.

*கல்லில்ப் பிறக்கும்*
*கதிர்மணி, காதலிதன்*

*சொல்லில்ப் பிறக்கும்*
*உயர்மதம்*

அன்பும் அருளும் கண்ணுக்குத் தெரியாத உண்மைதான். ஆனால் அன்புமயமான அருளிலிருந்து தானே பக்தி, தியாகம், ஞானம் எல்லாம் பிறக்கின்றன.

*கல்லில்ப் பிறக்கும்*
*கதிர்மணி, காதலிதன்*
*சொல்லில்ப் பிறக்கும்*
*உயர்மதம் — மெல்லென்*
*அருளில்ப் பிறக்கும்*
*அறநெறி; — எல்லாம்*
*பொருளில்ப் பிறந்து*
*விடும் (5)*

---

கதிர்மணி - ஒளி வீசும் ரத்தினம். உயர் மதம் - மாவீரம். மெல்லென் அருள் - இதமாய்த் தழுவும் அருள்.

## தூக்கம் எப்படி வரும்?

இரண்டு பேர். இருவரும் நல்ல நண்பர்கள். நெடு நாள்ப்பட்ட பழக்கம் அவர்களுக்குள். அழகான, புதுமையான பொருள் ஒனறு. கடிகாரமோ, பேனாவோ மோதிரமோ ஒன்று அவர்களில் ஒருவனிடம் இருக்கிறது. மற்றவன் அதைப் பார்த்தான். ஆசை வந்து விட்டது அதனிடம் அவனுக்கு. கேட்டால் கொடுக்க மாட்டான் அவன் என்பது இவனுக்குத் தெரியும். ஆனால் அது இல்லை என்றால் இவனுக்கு எதுவும் இல்லாத மாதிரிதான்.

பிறகு என்ன செய்ய.

எப்படியாவது கடத்திக் கொண்டு போய்விட வேண்டியதுதான் என்று முடிவாகி விட்டது. பிறகு தூக்கம் வருமா இவனுக்கு.

*கள்வம் என்பார்க்கும்*
*துயில் இல்லை*

யார் இந்தப் பெண். எப்படிப்பட்ட அழகு இவளிடம் என்று அடிக்கடி மயங்குவான் இளைஞன். ஒரு நாள் அந்தப் பெண் இவனை ஏற இறங்க ஒரு மாதிரிப் பார்த்தாள். உடனே திரும்பினாள். வேறொரு பெண்ணிடம் ஏதோ கேட்டாள். மறுபடியும் ஒரு ஓரமா, ஜாடையா இவனைப் பார்த்தான் புன்னகை ஒன்று நெளிந்து ஒளிந்து மறைந்தது. காதலே பிறந்து விட்டது இளைஞனிடம். பிறகு தூக்கம் வருமா பையனுக்கு.

*காதலிமாட்டு*
*உள்ளம்வைப் பார்க்கும்*
*துயில் இல்லை*

இனி சிறு கிராமம் ஒன்று. அதில் நடுத்தரப் பண்ணையார் ஒருவர். வயல், தோப்பு, மாளிகை, பசு, வில் வண்டி எல்லாம் உண்டு அவரிடம். சொந்தத்தில் பிள்ளையார் கோவிலும் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடமும் அவர் வசம் இருந்தன.

நண்பர்கள், விருந்தினர்கள் என்று வீடு கலகலப்பாகவே இருக்கும். தேர், திருவிழா என்றால் மோர்ப் பந்தல் வைப்பார். அன்னதானம் பண்ணுவார். ஈகை இரக்கம் உள்ள மனிதர்தான்.

பி.ஏ, வரை படித்தவர் பண்ணையார். பிறகு பி.எல், படித்தார். நல்ல வழக்கு என்றால் வலிய எடுத்து வாதாடுவார். ஜெயித்தாலும் காசு வாங்க மாட்டார். தோற்றாலும் காசு வாங்க மாட்டார்.

மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும்தான் வாழ்ந்தார். என்ன காரணமோ சென்னை பட்டணம் போனார். வீடு வாங்கி வழக்கறிஞர் தொழிலில் இறங்கினார்.

நான்கைந்து வருடத்தில் ரூபாய் இருபது லட்சத்துக்கு மேல் குவிந்து விட்டது அவரிடம். பேங்கில் போட்டு இருப்பில் கட்டி விட்டார் தொகையை. இருபது லட்சமும் பேங்கில் மட்டுமா கிடந்தது. அல்லும் பகலும் இவர் நெஞ்சிலும் கிடந்தது. நெஞ்சில் உட்கார்ந்தபடியே அது அழுத்தி அழுத்தித் தேய்த்தது இவரை. அது தேய்த்த தேய்ப்பில் இவருக்கு வெறியே பிடித்து விட்டது.

எப்படியும் இருபது லட்சத்தை ஐம்பது லட்சம் ஆக்காமல் விடமாட்டேன் என்கிற வெறி உச்சிக்கே ஏறிவிட்டது.

பிறகு எப்படி வரும் தூக்கம் பண்ணையாருக்கு.

*ஒண்பொருள்*
*செய்வம் என்பார்க்கும்*
*துயில்இல்லை*

அதோடு விட்டதா விதி இவரை. திட்டம் போட்டபடியே ஐம்பது லட்சம் சேர்ந்தது. அதற்கு மேலும் சேர்ந்தது. ஆனால் பிள்ளைகள் தாறுமாறாகச் செலவு செய்கிறார்கள். மனையாளும் கட்டுக்கடங்காமல் பணத்தை அள்ளி வீசுகிறாள். தங்கக் கடைக்கும், ஜவுளிக் கடைக்கும் பாய்ந்தோடிப் போகிறது பணம். புத்திர பாக்கியங்களின் குடி, கூத்தும் கசக்கிப் பிழிகிறது பணத்தை.

எப்படி இந்தப் பணத்தைப் பத்திரப்படுத்துவது, காப்பது என்கிற கவலை பிய்த்துத் தின்கிறது பண்ணையாரை.

பிறகு எப்படித் தூங்குவார் அவர்.

*கள்வம் என்பார்க்கும்*
*துயில்இல்லை, காதலிமாட்(டு)*
*உள்ளம்வைப் பார்க்கும்*
*துயில்இல்லை — ஒண்பொருள்*

*செய்வம்என் பார்க்கும்*
*துயில்இல்லை; — அப்பொருள்*
*காப்பார்க்கும் இல்லை*
*துயில் (6)*

(2)

வீணையின் நாதம் பரமசுகம். ஆனால் அதில் உயிர் (உணர்ச்சி) இருக்க வேண்டும். அது இல்லை என்றால் கேட்கிறவர் உயிரையே வாங்கி விடும் வீணை. பறைக் கொட்டு எவ்வளவோ மேல் சுதி சுத்தம் இல்லாத வீணையைவிட.

*பறைநன்று பண்அமையா*
*யாழின்*

இனி வீரத்துக்கும் தீரத்துக்கும் உரியவர் ஆடவர்களே என்று ஒரு ஐதீகம். பெண்களின் திடசித்தம் இன்னதென்று தெரியாதவர்கள் பேச்சு அது. பெண்ணிடம் இயல்பாகவே இருக்கிற ஒருமை உணர்ச்சி, பொறுமை, தியாகம் இவற்றைப் பார்க்க வேண்டும். பார்த்தால் ஆடவர் காரியம் எல்லாம் பெண்களை நோக்க சாதாரணம் என்று தெரியும்.

*நிறைநின்ற*
*பெண் நன்று பீடிலா*
*மாந்தரின்*

பீடு - பெருந்தன்மை, சான்றாண்மை, பேராண்மை மிக்க ஊராண்மை. ஆண்களில் ஆயிரத்துக்கு தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பேர் பீடிலா மாந்தர்தாம்.

இனி அடாவடித்தனம் உடைய வம்பன் ஒருவன். தனக்கு உரியது அல்லாததை புறம்பான வழியில் பெறுகிறான். அதனால் ஆரவாரம் பண்ணுகிறான். இனி சாதாரண மக்களோ தகுதி இல்லை என்றால் ஆசைப்படுவதில்லை. பெருந்தன்மை மிக்க சான்றவர்களோ தங்களுக்கு உரியது அல்லாத ஒன்று தங்களை நாடி வந்தாலும் அதை ஏற்பது இல்லை. வறுமையில் உழன்றாலும் உழல்வார்களே ஒழிய முறை கெட்டு ஒன்றைப் பெற முயற்சிக்க மாட்டார்கள். வந்தாலும் ஏற்க மாட்டார்கள்.

---

*கள்வம் என்பார் - திருடிக் கொண்டு போக வேண்டியதுதான் என்று திட்டமிட்டவர். துயில் - தூக்கம். உள்ளம் வைப்பார் - மனதைப் பறிகொடுத்தவர். ஒண்பொருள் - கண் நிறைந்த பணம்.*

*பண்பழிந்து*
*ஆர்தலின் நன்று*
*பசித்தல்*

இனி உயிருக்கு உயிராகப் பழகி உறவாடியவர் இருவர். அவர்களுக்குள் ஒரு சிறு கருத்து வேறுபாடு. அது முற்றி முற்றி ஒருவரை விட்டு ஒருவர் விலக நேர்ந்தது. விலகிய பிறகோ அவர்களிடம் நிம்மதி இல்லை. தவியோ தவி என்று தவித்தன இருவர் உள்ளங்களும். அப்படி அவர்கள் உள்ளம் தவித்த தவிப்பை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. உள்ளத்துக்கு உள்ளேயே தீமூட்டம் போட்டது போலத்தான் அது. உடம்பு முழுவதும் உயிரே பற்றி எரிந்தது அந்தத் தீயில். சமாளிக்க முடியவில்லை அந்த வெப்பத்தை. வெப்பத்தைச் சமாளிப்பதைவிட தீயை மூட்டி அதில் விழுந்து பொசுங்குவதே நலம் என்று படுகிறது அவர்களுக்கு.

பிறிவாற்றாமை அப்படி எல்லாம் படுத்தவே செய்யும்.

*பறை நன்று பண்ணமையா*
*யாழின், நிறைநின்ற*
*பெண்நன்று பீடிலா*
*மாந்தரின் — பண்பழிந்து*
*ஆர்தலின் நன்று*
*பசித்தல்; பசைந்தாரைத்*
*தீர்தலில் தீப்புகுதல்*
*நன்று* (7)

---

*பறை - பறைக் கொட்டு. நிறை நின்ற பெண் - அடக்கம், பொறுமை, தியாகம் என்று நற்பண்புகள் அத்தனையும் சேர்ந்து நிறைந்து நிற்கும் பெண். பசித்தல் - பசியும் பட்டிணியும் நீங்கா வறிய நிலை. பசைந்தார் - உள்ளம் குளிர பசுமை பொங்கப் பழகி உறவாடியவரை. தீர்தல் - விட்டுப் பிரிதல். அது கொடுமை. தீயில் விழுந்து பொசுங்குவதைவிட துன்பம் தரும் நண்பர்களின் பிரிவாற்றாமை.*

*குறிப்பு - அன்புக்கும் உறவுக்கும் எவ்வளவு சக்தி இருக்கிறது. அந்த சக்தி தானே ஆன்ம தத்துவத்தை வாழ வைக்கிறது. அன்பு என்கிற ஒன்று மட்டும் இல்லை என்றால் பிரபஞ்சமே சுக்கல் சுக்கலாய் நொறுங்கி விடும். அப்படி இருக்க சின்னஞ்சிறு மனிதனால் தாங்க முடியுமா அன்பின் இழப்பை*

*பசைந்தாரைத்*
*தீர்தலில் தீப்புகுதல்*
*நன்று*

(3)

மனிதனின் முதல் எதிரி வறுமைதான். மனிதனைச் சின்னா பின்னமாகச் சிதைக்கும் கொடிய அம்பு ஒன்று உண்டென்றால் அது வறுமைதான். மானம், மரியாதை இவற்றைக்கூட ஒழித்துக் கட்டி விடும் வறுமை. வேண்டாதவர்களிடமே அழைத்துக் கொண்டு போகும் வறுமை. அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாட வைக்கும் வறுமை. இனி வேண்டியவர்களிடம் பொய்யைப் புளுகைச் சொல்லி ஒன்றை யாசிக்கச் செய்வதும் வறுமையே.

*இரவெழுஉம்*
*இன்மைக் குழியின்*
*விரைந்து*

இரவு - யாசகப் பிரவர்த்தி. எழூஉம் - நிமிர்ந்து நிற்கும். இன்மைக் குழியின் - வறுமை உள்ள இடத்தில். விரைந்து - வேறு எது பற்றியும் யோசிக்காது. சட்டென்று எழுந்து நிற்கும் யாசகப் புத்தி.

மனிதன் எப்படிப்பட்டவன். தலை நிமிர்ந்து நடக்க வேண்டிய மனிதனையே பிச்சைக்காரன் ஆக்கி விடுகிறது வறுமை.

இனி மனிதன் நல்லவன்தான். இயல்பாகவே அன்பும் ஆதரவும் நிறைந்த நல்லவன்தான் ஆனாலும் பணம் அவனைக் கெடுத்து விடுகிறது. வீடு, வாசல், மனைவி, மக்கள், சொத்து, சுகம் என்று பார்க்கப் பார்க்க பணத்தின் மேல் வெறியே, மோக வெறியே உண்டாகிறது மனிதனுக்கு. பிறகு அன்பு போய் விடுகிறது. தாட்சண்யம் போய் விடுகிறது. ஆதரவு காட்டுகின்ற பண்பு மாயமாய் மறைந்து விடுகிறது மனிதனிடமிருந்து. அவ்வளவுதான் பொல்லாத ராட்சதன் ஆகிறான் மனிதன். பெற்ற பிள்ளையிடம்கூட, கட்டிய மனையாளிடம்கூடக் காட்ட மாட்டேன் என்கிறான் பணத்தை. அப்படி மூடி மறைக்கிறான் காசு பணத்தை. கொடுமை (வன்கண்) என்றால் இதல்லவா (மூடி மறைக்கிற திருட்டுத்தனம் என்கிற (கரவல்லவா) கொடுமை.

அந்தக் கொடுமையின் பிறப்பிடம் எது? அன்பு வற்றிப் போன, கண்ணோட்டம் என்கிற தயை தாட்சண்யமே வறண்டு போன ''நான் என்கிற ஆணவந்தான் அதன் பிறப்பிடம்.

*வன்கண்*
*கரவெழூஉம் கண்ணில்*
*குழியின்*

கரவு - கருமித்தனத்தால் ஒளித்து வைக்கும் திருட்டுத்தனம் கண்இல் குழி - தாட்சண்யம் இல்லாத வறண்ட இடம்.

இனி மனிதனிடம் தெய்வாம்சம் ஒன்று உண்டென்றால் நிம்மதியாக அமைதியாக வாழும் வாழ்க்கைதான். அமைதியில்தான் ஆனந்தம். மனிதனைக் கண்டு மனிதன் பயப்படும் அச்சம் ஒழிய வேண்டும். அது ஒழிந்தால் போதும். மனிதன் மேல் மனிதனுக்குப் பிரியம் வரும். நான்கு பேரோடு சேர்ந்து வாழ்வது என்பது அப்பொழுதுதான்.

தன்னிடம் உள்ளதை பிறர்க்கும் பகிர்ந்தளித்து உறவாட வேண்டும். அதற்கு வசதி வேண்டும். நல்ல வழியில் முயன்று அதற்கான வசதியைத் தேட வேண்டும். எப்படிப் பார்த்தாலும் உதவி உதவி உறவாடுவதுதான் இன்பம். உதவும் வள்ளன்மைக்கு இடம், பொருள், ஏவல் என்று வசதி வேண்டும்.

வள்ளன்மை என்னும் பயிர் வளரப் பாத்தியாக இருப்பது செல்வந்தான்.

*வளப்பாத்தி உள்வளரும்*
*வண்மை*

இனி உண்மை அனுபவங்களை உணர்ச்சியோடு எடுத்து ஒருவர் சொல்கிறார் என்றால் பலர் அதைக் கேட்பார்கள். இதயத்தைக் கொடுத்தே கேட்பார்கள். கேட்கிறவர், சொல்கிறவர் இவர்களுக்குள் உறவே ஏற்பட்டு விடும். உண்மையான உறவு அதில்தான். அப்படியானால் பதம்பட்ட நயமான சொல்லும் ஒரு பாத்திதான். உறவு என்னும் புஷ்பம் பூத்துக் குலுங்க பூஞ்செடி வளரும் பாத்திதான். இனி யாசகம் என்னும் குழந்தையை பெற்றெடுக்கும் தாய் வறுமை தான். வறுமையும் ஒரு பாத்திதான். அதாவது பயிர்க் குழிதான்.

*வளப்பாத்தி உள்வளரும்*
*வண்மை, கிளைக்குழாம்*
*இன்சொல் குழியின்*
*இனிதெழூஉம் — வன்கண்*

*கரவெழூஉம் கண்ணில்*
*குழியின்; இரவெழூஉம்*
*இன்மைக் குழியின்*
*விரைந்து (8)*

(4)

ஒருவனிடம் திறமை இருக்கிறது. செல்வமும் இருக்கிறது. கலை உணர்வும், அறிவும்கூட இருக்கிறது அவனிடம். இவ்வளவிருந்தும், பிச்சைக்காரப் புத்தி அவனை விட்டுப் போகவில்லை என்றால் அவன் என்ன மனிதன். அது வேண்டும், இது வேண்டும் என்று அலைகிறவன் ஒரு மனிதனா.

'மரியாதை வேண்டாம். மற்றவர்கள் என்னை ஏளனமாக நினைக்கிறதில்த்தான் எனக்குப் பரம சுகம்' இப்படி ஒரு நிலையை வேண்டுகிறவன் எவனோ அவன்தான் பேதை. அப்படியானால் இன்னாமை (துன்பம்) என்பது அவனை விட்டு நீங்குமா?

*இன்னாமை வேண்டின்*
*இரவெழுக*

*இன்னாமை - துன்பம். இரவு - யாசகம்.*

இனி ஒருவன் அரசர்க்கு அரசனாகவே இருக்கிறான். இருந்து என்ன பலன். அவனோடு சரி அவன் கதை. எப்பொழுது அவன் அதிகாரம் தலைகீழாகச் சாயும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அவனுடைய ஆடம்பரமும், தடபுடலும். அவை மூலம் ஏற்பட்ட மரியாதையும் புகழ்ச்சியும் கூடத்தான். தலை குப்புற அவன் சாய்வதற்கு முன்பே அவனை விட்டு அத்தனையும் ஓடிவிடும். நீ யாரோ நான் யாரோ என்று ஓடிவிடும்.

---

*வளப்பாத்தி - செல்வம் (வளமை) என்னும் பாத்தியில். கிளைக்குழாம் - சுற்றமும் நட்பும். கரவு - திருட்டுத்தனம். மறைத்து வைத்தல். கண்ணில் குழியில் - கண்ணோட்டம் இல்லாத வெறுப்பில். இரவு - யாசகம். இன்மைக் குழியின் - வறுமை என்னும் பாத்தியில்.*

*நண்பர்களிடம் எதையாவது கேட்டு வாங்குகிற இளிவரவு (மானம் கெட்ட ஆசை) ஒருவனிடம் இருந்தால் போதும். பிடித்தது அவனுக்குச் சனி. ஏழரை நாட்டுச் சனியேதான் அது. துன்பத்தை விலை கொடுத்து வாங்கும் பேதைமை என்றால் அதுதான்.*

நிலைத்து நிற்க அவனிடம் ஒன்றுமே இல்லை. இனி மற்றவர்களுக்காக உழைக்கிறவர்கள், தியாகம் செய்கிறவர்கள், உதவுகிறவர்கள் என்று சிலர் இருக்கிறார்கள். அவர்கள் சாதாரணப் பட்டவர்களாகக்கூட இருக்கலாம். ஆனாலும் அவர்கள்தான் நிலைத்து நிற்பார்கள்.

இறந்தும் வாழ்கிறவர்கள் அவர்கள். அவர்கள் பேரும் புகழும் சூரியர் சந்திரர் உள்ள வரை கொடி கட்டிப் பறக்கும்.

*இந்நிலத்து*
*மன்னுதல் வேண்டின்*
*இசைநடுக*

மன்னுதல் வேண்டின் - நிலைத்து நிற்க வேண்டும் என்றால். இசை நடுக - புகழை, புகழாகிய பயிரை நடுகை இடவேண்டும் வாழ்க்கை என்னும் வயலில். சமுதாயம் போற்றி வரவேற்கும் செயல்களைச் செய்ய வேண்டும். அதற்காகத் தன்னையே தியாகம் செய்ய நேர்ந்தாலும் துணிந்து செய்ய வேண்டும்.

* * *

அற்பர் காரியம் அப்படி. சான்றோர் காரியம் இப்படி. இனி வாழ்க்கையில் ஒவ்வொருவனும் கடைப்பிடிக்க வேண்டிய கருமம் இரண்டு. ஒன்று ஈகை. மற்றொன்று பொறுமை.

பிறந்தது எப்படி உண்மையோ அப்படியே இறந்து போவதும் உண்மை. போகும் பொழுது ஒன்றும் சேர்ந்து வராது. மாளிகையும் வராது. ரொக்கம், உத்தியோகம், அதிகாரம், தோரணை ஒன்றும் கூடவராது. மனைவி, மக்கள்கூட முட்டி அழுவதோடு சரி. துணிந்து யார் வருவார் துணைக்கு.

ஆனாலும் ஒன்று உண்டு. அது விடாமல் தொடர்ந்து வரும். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அத்தனையிலும் ஊடுருவித் துணையாய் வரும் அது.

அமைதியும் ஆனந்தமும் சேர்ந்த இன்பம்தான் அது. அந்த இன்பம் எப்படி வரும்? தேடிய பணத்தைப் பொத்திப் பொத்திப் பொட்டணம் கட்டாமல், கட்டிய பொட்டணத்தை மனதில் குழி தோண்டிப் புதைக்காமல், சமூக வளர்ச்சிக்கு, மனித உறவுக்குத் தாராளமாக கொடுக்கிறதின் வழியே வரும்.

*தன்னொடு*
*செல்வது வேண்டின்*
*அறம்செய்க*

*செல்வது - கூடவருவது.*

இனி வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். பெரும் போராட்டமேதான். வீட்டுக்குள்ளும் போர்தான், வெளியேயும் போர்தான். பாரத யுத்தமேதான் வாழ்க்கை.

இந்தப் போரில் வெற்றி பெற வேண்டுமா? அதற்குரிய வழி ஒன்றுதான். பொறுமை என்னும் சகிப்புத் தன்மைதான். விட்டுக் கொடுத்தல் என்கிற அற்புதத்தில் எவ்வளவு பெரிய தியாகம் இருக்கிறது.

*இன்னாமை வேண்டின்*
*இரவெழுக, இந்நிலத்து*
*மன்னுதல் வேண்டின்*
*இசைநடுக — தன்னொடு*
*செல்வது வேண்டின்*
*அறம்செய்க; — வெல்வது*
*வேண்டின் வெகுளி*
*விடல்* *(9)*

தன்னிடம் உள்ள சினத்தையே வெல்ல முடியாதவன் வேறு எதை வென்று விடுவான்.

வெல்வது வேண்டின் வெகுளி விடல் என்று சொன்னால் கவி பிறக்குமா? அது பிறக்க வேண்டும் என்பதற்காகவே 'வெல்வது' என்பது துண்டுபட்டு நிற்கிறது. பிறகு 'வெகுளி விடல்' என்பதனைக் கைகோர்த்து தாண்டவமே ஆடுகிறது.

இனி வார்த்தைகளை இசையில் ஊறப் போடுவதும் பிறகு அவற்றைத் தாளம் போட்டு ஆட வைப்பதும் அந்தந்த

---

*தன்னொடு செல்வது வேண்டின் - தனக்குத் துணையாகத் தன்னோடு ஒன்று வரவேண்டும் என்று விரும்பினால். அறம் - புண்ணியமான காரியங்கள். குறிப்பு - ஆங்காரத்துக்கும் சினத்துக்கும் இடம் கொடுத்து விட்டால் ஒழிந்தது காரியம். வாழவிடாது அது நம்மை. வாழ்க்கையே தோல்விதான். படுதோல்விதான்.*

மொழிக்குரிய மக்களின் அனுபவபூர்வமான உணர்ச்சியின் வேகங்கள்தான். பல ஆயிரம் ஆண்டுகளாய் மக்களின் அனுபவத்தில் பூத்துப் பூத்து மணம் கமழும் உணர்ச்சியின் நவநவமான சாயல் மொழியில் கலந்து மருவுகிறது. அதைப் பார்த்துப் பரவசப்படுவதுதான் கவிஞரின் காரியம்.

அந்த ஆனந்தத்தில் திளைக்கத் திளைக்க உண்மைக்கும் உணர்ச்சிக்கும் உருவம் கொடுத்து விடும் மொழி.

*வெல்வது*
*வேண்டின் வெகுளி*
*விடல்*

எப்படி முத்திரை பிடித்து அபிநயத்தில் ஆடிக் காட்டுகிறது தமிழ்.

(5)

இமய மலையையே வேர்ப் பிடுங்காகப் பிடுங்கிப் போட்டாலும் சரி. அதை அப்படியே விழுங்கி விடும் கடல். விழுங்கியதை ஜீரணித்தும் விடும் கடல்.

இனி மரச் சட்டங்களை, மரப்பலகைகளை வைத்தே கட்டுகிறார்கள் கலங்களை. அதாவது மரக்கலம் என்னும் தோணிகளை.

தோணி சிறிதாகவும் இருக்கும் பெரிதாகவும் இருக்கும். எதாக இருந்தாலும் அதில் ஏறி பல தீவுகளையும் கடக்கிறார்கள். பல நாடுகளுக்கும் போய் விடுகிறார்கள்.

பிரம்மாண்டமானது கடல். அதை நோக்க சின்னம் சிறியதுதான் தோணி. ஆனாலும் சிறிய தோணியை வைத்து பெரிய கடலையே பிளந்து ஊடுருவி வென்று வருகிறார்கள். ஒரு சிறு குட்டத்தைக் கலக்குகிற தோரணையில் கடலையே உழப்பி அடித்து விடுகிறார்கள் தோணிக்காரர்கள்.

*கடல்க்குட்டம் போழ்வர்*
*கலவர்*

போழ்வர் - பிளப்பர். கலவர் - மாலுமிகள். மரக்கலம் விடுகிறவர்கள்.

இனி இந்தியாவில் அதிகம் எது என்றால் அரச தோரணை மிக்க சமஸ்தானங்கள்தான் என்று சொல்லும்படி இருந்தது ஒரு காலத்தில். அரசர்கள் பலர். அவர்களிடம் படை பட்டாளங்களும் ஏராளம். தேர்ப்படையைவிட ஆள்ப்படை அதிகம். ஆள்ப் படையைவிட வல்லமை மிக்க படையாக இருந்தது யானைப்படை. மந்தை மந்தையாக ஒவ்வொரு அரசரிடமும் யானைப் படை இருந்தது. ஆனால் குதிரைப் படை அப்படி இல்லை.

ஒரு காலத்தில் அரேபியர்கள் இந்தியாவைத் தாக்கினார்கள். அவர்களிடம் குதிரைப் படைதான் பிரதானம். புயல் போலச் சீறிப் பாய்ந்தது அவர்கள் குதிரைப் படை. அதற்குத் தாக்குப் பிடிக்க முடியவில்லை இந்தியப் படையால். எளிதில் வெற்றி பெற்று விட்டார்கள் அரேபியர்கள். அதைவிட எளிதாகத் தோற்று விட்டார்கள் இந்தியர்கள்.

எதிரிகளின் சேனா சமுத்திரத்தையே குட்டையைக் கலக்கின மாதிரி கலக்கி விட்டது குதிரைப் படை.

*படைக்குட்டம்*
*பாய்மா உடையான்*
*உடைக்கிற்கும்*

படைக்குட்டம் - மாற்றார் படையாகிய குட்டத்தை. பாய்மா உடையான் - துள்ளிப் பாயும் குதிரை வீரன். உடைக்கிற்கும் - தவிடு பொடியாக நொறுக்கி விடுவான்.

மாலுமிகள் காரியமும், குதிரை வீரர் காரியமும் இருக்கட்டும். தன்னுணர்வு பெற்ற ஆன்றோர் நிலை என்ன என்று பார்க்கலாம்.

சத்திய தர்சனம், ஞானம் என்பதெல்லாம் நாம் யார் என்பதை அறிவதுதான். அது தெரிந்தால் போதும் பக்தி வந்து விடும். நம் செயல் என்று ஒன்றும் இல்லை என்பது விளங்கிய மாத்திரத்திலேயே நான் என்னும் ஆணவம் அடங்கி ஒடுங்கி விடும். இது இது என்னது என்னும் மயக்கமும் ஒழிந்து விடும். அதுதான் தவம், அதுதான் யோகம். பிறகு காவி எதற்கு? தாடி எதற்கு.

தவத்தில் எல்லாம் தவம் தன்னுணர்வு என்னும் ஞானந்தான்.

*தவக்குட்டம்*
*தன்னுடையான் நீந்தும்*

தன்உடையான் - தன் உணர்வாளன். தன்னை யார் என்று தெரிந்தவன். தவக்குட்டம் - சாதாரணப்பட்டவர்களுக்கு யோகம், தவம் என்பவை மாகடல் மாதிரிதான், சம்சார சாகரத்தைவிட சன்யாச சாகரம் நீந்த முடியாததுதான். ஆனால் தன்னைத் தெரிந்தவனுக்கு படித்துறையோடு கூடிய சிறு குளம் மாதிரிதான் ஞான சமுத்திரம். வெகு எளிதாக இக்கரையிலிருந்து அக்கைரைக்கு நீந்தி வந்து விடுவான் அவன்.

இனி ஒரு குடும்பத்தில் ஐந்து அல்லது ஆறு பேர்தான். தாய், தந்தை, மனைவி, மக்கள் என்று சிறிய குடும்பம்தான். என்றாலும் அதைக் கட்டி மேய்ப்பதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடுகிறது.

ஒன்று மேட்டுக்கு இழுத்தால் இன்னொன்று பள்ளத்துக்கு இழுக்கும். அதுதான் மனித சுபாவம். குடும்பத்தில் உள்ளவர்கள் மனிதர்கள் தானே.

இனி நாற்பது நாற்பத்து ஐந்து மாணவர்கள் சேர்ந்த வகுப்பு. அதைச் சமாளிக்க என்ன பாடுபடுகிறார் ஆசிரியர். சரி போகட்டும். ஒரு தேசத்தை நோக்க அதன் விசாலத்தை நோக்க பாராளுமன்றம் சிறியதுதான். நூறு கோடி பேர் கொண்ட நாட்டில் அறுநூறு பேர் வரை தானே பாராளுமன்ற உறுப்பினர்கள். ஆனாலும் உறுப்பினர்களைச் சமாளிக்கஎன்ன பாடுபடுகிறார் சபாநாயகர்.

இத்தனைக்கும் சட்டத்துக்கே கர்த்தாக்கள் உறுப்பினர்கள். ஆனாலும் தினசரி இரண்டு மூன்று தடவை சபையை ஒத்தி வைத்துத்தான் நடத்த வேண்டி இருக்கிறது.

அப்படி இருக்க ஆயிரக்கணக்கில் பண்டிதர்களும் புலவர்களும், வித்வான்களும் நிறைந்த சபையை ஒருவர் தம் பேச்சால் கட்டி ஆள்கிறார் என்றால் அது அதிசயம் இல்லையா?

*கடல்க்குட்டம் போழ்வர்*
*கலவர், படைக்குட்டம்*
*பாய்மா, உடையான்*
*உடைக்கிற்கும் — தோம்இல்*
*தவக்குட்டம் தன்னுடையான்*
*நீந்தும்; அவைக்குட்டம்*
*கற்றான் கடந்து*
*விடும் (10)*

---

*தோம்இல் தவக்குட்டம் - குற்றம் குறை இல்லாத தவம், விரதம், வேள்வியாகிய நீர்த் தேக்கம். அவை - சபை. அறிஞர் கூட்டம். கற்றான் - உண்மையைத் தெரிய உணர்ச்சியோடு சோதித்துப் பார்க்கிறவன். அதற்குரிய வழியை ஆன்றோர் சான்றோர் வாய்மொழி மூலம் கேட்டுச் சிந்திக்கிறவன். அதாவது உண்மை எது, பொய் எது என்று கண்டு தெளிந்தவன். அதில் உறுதி தளராது நிற்பவன். அவன்தான் கற்றான்.*

## சிரிக்கவே செய்கிறான் எமனும்

அரண்மனையோ குடிசையோ வீடென்று இருந்தால் அதில் விளக்கேற்றி வைக்க பெண் வேண்டும். (மாட்சிமைப்பட்ட மனையாள் - மாண்ட மனையாள்) பெண் இல்லை வீட்டில் என்றால் அது வீடும் இல்லைதான். ஆக்கமும் அங்கு இல்லைதான்.

*மனைக்காக்கம் மாண்ட*
*மகளிர்*

மாண்ட - மாண்பு மிக்க பண்பும் சீலமும் நிறைந்த. மகளிர் - மனையாள்.

இனி நவரத்னங்களைப் பதித்து கட்டிடமாகக் கட்டி பொன்னாபரணம் செய்கிறான் பொற்கொல்லன். தங்க வேலை பார்க்கிறவன் என்றாலும் அவனிடம் நாணயம் இல்லை என்றால் அவனை யார் மதிப்பார்கள். அவன் தொழில் விருத்தியாகாது தானே. இனி செருப்புத் தைக்கிறவன் ஒருவன். சொன்னால் சொன்னபடி இருக்கும் அவன் காரியம். நாணயந்தான் அவன் முதலீடு. அதனால் அவன் தொழில் விரிந்து பரந்தது. தடபுடலாக எதுவும் இவனிடம் இல்லைதான். ஆனாலும் நாணயம் இருக்கிறது இவனிடம். அதனால் தொழில் விருத்திதான்.

*ஒருவன்*
*வினைக்காக்கம் செவ்வியன்*
*ஆதல்*

செவ்வியன் - செம்மை நலம் மிக்கவன். உண்மையானவன். யோக்கியன்.

இனி நாடாளும் அரசனுக்கு ஆக்கம் (சிறப்பு) என்று எதைக் குறிப்பிட்டுச் சொல்ல. மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக ஒழுகுவதுதான் மன்னனுக்குச் சிறப்பு. நீதி வழுவாமல் கருணையோடு ஆண்டால் போதும். எங்கள் மன்னன்தான் மன்னன் என்று குட்டி குறுமானிலிருந்து வயதான பெரியவர்கள் வரை எல்லோருமே போற்றிப் பாராட்டுவார்கள். அதற்கு நிகரான சிறப்பு வேறு ஏது? கஜனாவில் இருக்கிற வயிர வைடூர்யம் எல்லாம் இதற்குப் பின்னால்த்தான். வலுவான வேல்ப் படையாலும் வில்ப் படையாலும் பெற முடியாததை நீதியும் கருணையும் கையில் கொண்டு வந்து கொடுக்கும்.

*சினச் செவ்வேல்*
*நாட்டாக்கம் நல்லன்இவ்*
*வேந்தென்றல்*

சினச் செவ்வேல் - கோபம் கொப்பளிக்கும் பிரகாசமான வேல். அப்படிப்பட்ட வேல்ப் படையை உடைய. நா(ட்)டு ஆக்கம் - நாட்டுக்கு அதிபதியான அரசனுக்குப் பெருமை.

இனி நல்ல வசதியான பிரபுதான். கல்வி, கேள்வி மிக்கவர்தான். நல்ல செல்வாக்குள்ளவர்தான். ஊரின் பல திறப்பட்ட மக்களும் அவரை மதித்தார்கள் உற்ற நண்பர்கள் சிலர் அவருக்கு.

இந்த நிலையில் பிரபுவின் நடை, உடை, பாவனைகளில் மாற்றம் ஏற்பட்டது. நண்பர்களுக்கு அது பிடிக்கவில்லை. சொல்லிப் பார்த்தார்கள். காதில் வயிரக் கடுக்கன்தான் ஏறி இருக்கிறது பிரபுக்கு. ஆனால் அன்பர்களின் பொன்னுரை ஏற முடியவில்லை அதில்.

பிரபுவை விட்டு ஒவ்வொருவராக விலகினார்கள் நண்பர்கள். அவர்கள் விலக விலக ஆக்கமும் பிரபுவை விட்டுக் கழன்று ஓடியது.

அழிவுக்கு அச்சாரம் நல்ல அன்பர்களைக் கைகழுவதுதான்.

*மனைக்காக்கம் மாண்ட*
*மனையாள், ஒருவன்*
*வினைக்காக்கம் செவ்வியன்*
*ஆதல் — சினச்செவ்வேல்*
*நாட்டாக்கம் நல்லன்இவ்*
*வேந்தென்றல்; — கேட்டாக்கம்*
*கேளிர் ஒரீஇ*
*விடல் (11)*

---

*கேட்டாக்கம் - ஆக்கக்கேடு. நண்பர் ஒரீஇ விடல் - உண்மையான நட்பும் சுற்றமும் நம்பிக்கை இழந்து விலகிப் போகிறதுதான். கடைசி அடி என்ன தோரணையில், என்ன எடுப்பில் ஒய்யாரமாய் நிற்கிறது பாருங்கள். 'நண்பர் ஒரீஇ விடல்' உணர்ச்சிக்கு பாவ உருவம் கிடைத்து விட்டால் போதும். கலைத் தெய்வமே காட்சி கொடுக்கும். கலைத் தெய்வம் கவியாக வருகிறதென்றால், உணர்ச்சிக்கு மொழியே பாவ உருவம் கொடுக்கிற காரியந்தான்.*

(2)

மொழி என்றால் அகராதிக்குள்ளும் நிகண்டுக்குள்ளும் கிடக்கிற சொல் அல்ல. உண்மையை உணர்ச்சியை இசையாகவும் தாளமாகவும் உருவாக்குகிற வார்த்தைகளே மொழி.

இனி பாடுவதற்குத்தான் பாட்டு. வாசிப்பதற்கு அல்ல. அதற்கு இருக்கவே இருக்கிறது வசனம். பாட வேண்டும் என்று நினைத்தால் போதும். பாடுவதற்கு உரிய, பாட்டுக்கேற்ற ராகம், தாளம் எல்லாம் வந்து விடும். காரணம் இசையும் நடனமும் (தாளமும்) பாட்டுக்கு உள்ளேயே இருக்கின்றன.

உணர்ச்சியை மதித்துப் பாடவேண்டும் நிறுத்தி சாவதானமாகப் பாட வேண்டும் பாட்டை. அதுதான் பண்பு. அப்படிப் பாடப் பாட பாட்டுக்குரிய பண் (சுதி சுத்தமான ராகம்)களை கட்டி வரும்.

பண்(பு) கெட்டு ராக ஆலாபனையை பாட்டில் பெய்கிற காரியம். கலைத் தெய்வத்தின் முகத்தில் கரியைப் பூசுகிற காரியந்தான்.

*பண்அதிர்ப்பின்*
*பாடல் அதிர்ந்து*
*விடும்*

இனி கணவனுக்கு எதிர்பாராத ஒரு அதிர்ச்சி, அல்லது மனக்குழப்பம் என்றால் மனைவியையும் அது தாக்கவே செய்யும். அவளும் அவஸ்தைக்கு ஆளாவாள்.

''அவர் பாடு அது. நமக்கென்ன'' என்று விலகி நிற்க முடியுமா மனையாளால்?

*பெற்றான் அதிர்ப்பில்*
*பிணைஅன்னாள் தானதிரும்*

பெற்றான் - கொண்ட கணவன். பிணைஅன்னாள் மான்குட்டி போன்ற உல்லாசமும், கூடவே மருட்சியும் உடைய பெண்.

இனி பலே பலே பண்டிதர் ஒருவர். கரை காண முடியாத கல்விக் கடல்தான் அவர். ஒரு பாடலில் ஒரு எழுத்துப் பிழை. இயல்பான காரியந்தான் எழுத்துப் பிழை. அதை ஒதுக்கிப் பார்ப்பதற்குத்தானே அறிவு. ஆனால் பன்டிதரோ அதற்கும் ஒரு முடிச்சுப் போட்டுப் பொருள் சொல்வார். விரிவுரை நடத்துவார். அப்படியே போகப் போக சில சமயம் அவருக்கே குழப்பம் வந்து விடும். ஆனால் ஒன்று. மூளையே குழம்பினாலும் பிடித்த பிடியை

விடுவாரா பண்டிதர். அதற்காக பொருத்தமே இல்லாத எதை எதையோ கொண்டு வந்து அதன் தலையில் கொட்டுவார்.

புலவர் போகிற போக்கு சரி இல்லை என்று ஜாடை மாடையாகத் தெரியத்தான் செய்யும் பலருக்கு. தெரிந்தாலும் முத்தமிழ் வித்தகரை எப்படிக் குறை கூற. அதற்காகத் தமிழையே குறை சொல்வார்கள் பலர். கன்னா பின்னா என்று கதை அளப்பதுதான் தமிழின் காரியம் என்கிற தீர்மானத்துக்கே வந்து விடுவார்கள் அவர்கள்.

அரச மரத்தைப் பிடித்த சனியன் எப்படி ஆட்டுகிறது பிள்ளையாரை என்று பார்த்தீர்களா?

*கற்றான் அதிர்ப்பில்*
*பொருள் அதிர்க்கும்*

(பொருள் - பொருள் பொதிந்த பாடல். பாடலுக்குரிய மொழி.)

இனி பூகம்பமோ வெள்ளமோ வருகிறது நாட்டுக்கு. சமுதாயமே ஆடிப் போகும் அப்பொழுது. அப்படியானால் தேசமே ஆட்டம் காணத்தானே செய்யும். அரசாங்கம், நிர்வாகம், சட்டம் ஒழுங்கு, எல்லாம் சப்பள சளபுள என்று உலைந்து விடும் அல்லவா.

*பெற்றான் அதிர்ப்பில்*
*பிணைஅன்னாள் தானதிரும்,*
*கற்றான் அதிர்ப்பில்*
*பொருளதிரும் — பற்றிய*
*மண்ணதிர்ப்பின் மன்னவன்*
*கோலதிரும்: — பண்ணதிர்ப்பின்*
*பாடல் அதிர்ந்து*
*விடும்* *(12)*

---

*பண்ணுக்கும் பாட்டுக்கும் உள்ள தொடர்பு அப்படி. உயிருக்கும் உடம்புக்கும் உள்ள உறவுதான். பெற்றான் - கணவன். கற்றான் - கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்கிற முறையில் படித்துப் பாராயணம் செய்கிற புலவர் பெருமான். பொருள் - உண்மைப் பொருள், உணர்ச்சி பாவம். பற்றிய மண் - ஆளும் உரிமை பெற்ற நாடு. கோல் - செங்கோல். பாடலை மட்டும் அதிர்ந்து விடும் என்று அடித்துச் செல்கிறது தமிழ். மற்றவர்களை அதிரும் அதிரும் என்றே சொல்கிறது.*

மனையாள் இல்லை என்றால் வாழ்க்கையில் வேறு என்ன இருந்து என்ன புண்ணியம். வெறிச்சோடிப் போகும் வாழ்க்கை. மனையும் அப்படித்தான். அரண்மனை ஆனாலும் பாழடைந்த குகைதான்.

*மனைக்குப்பாழ் வாள்நுதல்*
*இன்மை*

பிழைக்கப் போகிறவனுக்கும் சரி, நாடு சுற்றிப் பார்க்கப் போகிறவனுக்கும் சரி, போகிற இடங்களில் அங்கங்கே நண்பர்கள் இருந்தால் உதவியாக இருக்கும். அப்படி இல்லை என்றால் ஒரு கை ஒடிந்த மாதிரிதான்.

*தான் செல்லும்*
*திசைக்குப்பாழ் நட்டோரை*
*இன்மை*

கலை மன்றம், இலக்கிய மன்றம், ஏன்அரசியல் ஆலோசனைக் கூட்டம் என்று எதானாலும் சரி. அனுபவம் மிக்க பெரியவர்கள் ஒன்றிரண்டு பேராவது இருக்க வேண்டும். அதில் இல்லை என்றால் ஒரே களபுளாதான்.

*இருந்த*
*அவைக்குப்பாழ் மூத்தோரை*
*இன்மை*

இனி படித்தும் ஒருவனுக்கு ஞானம் (புத்தி) என்கிற அறிவு வரவில்லை என்றால் கல்லாதவனைவிட மகா மகா மட்டம் அவன்.

ஸ்ரீமத் ராமானுஜரிடம் சிஷ்யர்களாக இருந்து பயிற்சி பெற்றவர்கள் சிலர். அவர்களில் பாடம் முடியப் பெற்றவர் விடைபெற்றுச் செல்வர். அப்படி ஒரு சிஷ்யர் விடை வேண்டிப் பணிந்து எழுந்தார். அவரிடம் ராமானுஜர் சொன்னார்.

''நீ கற்க வேண்டியதை எல்லாம் கற்று விட்டாய். மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் ஆற்றலும் உன்னிடம் இருக்கிறது. பதம் பிரித்து வார்த்தைக்கு வார்த்தை பதவுரை, குறிப்புரை, விரிவுரை என்று வியாக்யானம் செய்யும் திறமையும் இருக்கிறது உன்னிடம். ஆனால் உண்மையை உணர்ந்து அனுபவிக்கவும், ஆனந்தத்தில்

திளைக்கவும் உன்னால் இயலவில்லை. அதற்கு பகவத் பிரசாதந்தான் வேண்டும். அது உன்னிடம் இன்மையால் அதைப் பெறப் பாடுபடுவாயாக'' என்று விடை கொடுத்தார் ராமானுஜர்.

விடை வேண்டி நின்ற சிஷ்யன் வேறு யாரும் இல்லை. ராமானுஜரின் உடன் பிறந்த சகோதரியின் புதல்வர்தான். ஞானந்தானே லட்சியம். சீலந்தானே லட்சியம்.

*மனைக்குப்பாழ் வாள்நுதல்*
*இன்மை, தான் செல்லும்*
*திசைக்குப்பாழ் நட்டோரை*
*இன்மை — இருந்த*
*அவைக்குப்பாழ் மூத்தோரை*
*இன்மை; — தனக்குப்பாழ்*
*கற்றறி வில்லா*
*உடம்பு (13)*

(4)

புலவர் உலகம் என்பதாக ஒன்று. விசாலமானதுதான் புலவர் உலகம். நீள அகலம் மட்டுமல்ல, மிக்க ஆழமானதுங்கூட. இமயமலையையே உள்ளே போட்டாலும் மூழ்கி விடும். அடையாளம் தெரிய முடியாதபடியே மூழ்கி விடும் மலை. அவ்வளவு பெரிய சமுத்திரம் புலவர் உலகம்.

புலவர் உலகத்தின் நுட்பமும் ஆழமும் அப்படி. அந்தச் சமுத்திரத்தில், புலவர் உலகில்தான் பண்டிதமணிகள், சிரோன்மணிகள், புலவரேறுகள், வெண்பாப் புலிகள், கவிமேகங்கள், கல்விக் கடல்கள் என்று எத்தனையோ திட்டுகள், தீவுகள். இத்தனை இருந்தும் உணர்வில்லை என்றால் செத்த பிணந்தானே. ''கற்றறிவில்லா உடம்பு''

---

*வாள்நுதல் இன்மை - மனையாளை இழந்து நிற்கும் தனிமை. வாள் நுதல் - வாள் போல் பளபளவென்று ஜொலிக்கும் நெற்றி. செல்லும் திசை - போகிற நாடு. நட்டோர் - நண்பர். இருந்த அவை - பலர் சேர்ந்து கூடி இருக்கிற சபை. மூத்தோர் - அனுகூலம் மிக்க அறிஞர்.*

*குறிப்பு - பள்ளிக்கூடமே போகாதவர்களில் பலர் மனச்சாட்சியை விடாமல் அதன்படி ஒழுகுகிறார்கள். அவர்களுடைய பெருமையை எடுப்பாய் எடுத்துக் காட்டுகிறார்கள் படித்தும் உணர்வென்னும் பண்பில்லாதவர்கள்.*

இனி நான்மணிக்கடிகை ஆசிரியர் விளம்பி நாகனார் என்று இருக்கிறது. நாகன் என்பதுதான் பெற்றோர் வைத்த பெயர். பிறகு அதோடு 'ஆர்' என்பது ஒட்டியது. நாகனார் ஆனார். கண்ணுக்குத் தெரியாத நுட்பமான, நுட்பத்துக்கும் நுட்பமான உண்மையை கையில் எடுப்பது போல் எடுத்து அதை இழை இழையாக உதறிக் காட்டுவார் நாகனார். விளம்பரத்துக்கு உருக் கொடுப்பது போல உண்மைக்கு கண்ணும் மூக்கும் வைத்து உருக் கொடுத்து விடுவார் நாகனார். அவருடைய வாய்மொழி (விளம்பல்) அப்படி. அதனால் நாகனாருக்கு முன்னால் விளம்பி என்பது அடைமொழியாக வந்தது. அப்படியே விளம்பி நாகனார் என்பதே பெயராகி விட்டது.

விளம்பி நாகனார் புலவர் உலகின் சக்கரவர்த்தி. எந்த ஒரு புலவராலும் அவரை அசைக்க முடியாது. அத்தனை பேரையும் தரையோடு தரையாக உருட்டி விடுவார் அவர். அவ்வளவு புலமை. அவ்வளவு நுட்பம், அவ்வளவு ஆழம் அவரிடம்.

புலவர் உலகை வென்றவர் அவர். அவரை வெல்ல ஒருவரும் இல்லை. ஆனாலும் அவரை அவரே சில சமயம் வென்று காட்டுவார்.

அப்படி அவரே அவரை வெல்லும் இடங்களில் ஒன்று.

* * *

நாடு என்றால் மக்கள்தான். குடிமக்களைக் காப்பதுதான் அரசனின் தலையாய கடமை. அப்படியானால் குடிமக்கள் எல்லோரும் அரசனை நம்பியே வாழ்கிறார்கள் என்பதுதான் உண்மை. அரசனை, அதாவது அரசாங்கத்தை நம்பாமல் வேறு யாரை நம்புவது. மக்களுக்கும் நாட்டுக்கும் புகலிடம் அரசுதான்.

*கோல்நோக்கி வாழும்*
*குடிஎல்லாம்*

கோல் - செங்கோல். அரசு கொற்றம்.

* * *

குழந்தையோ, குட்டியோ எல்லாவற்றையும் காப்பது தாய்தான். தாயின் அமிர்தப் பாலை, கருணைமயமான அமிர்தப் பாலை நம்பியே இருக்கின்றன குழவி (குழந்தை)கள்.

*தாய்முலையின்*
*பால்நோக்கி வாழும்*
*குழவிகள்*

இனி உலகம் முழுவதும், வாணிக உலகமோ, தொழில் உலகமோ, விஞ்ஞான உலகமோ, மெய்ஞ்ஞான உலகமோ, ஏன், அரசியியல் உலகம் உள்ளிட்ட எல்லா உலகமும் சோற்றையும்

துணியையும் வைத்துத்தான். சரி அந்தத் துணியும் சோறும் சும்மா வருமா? உழுது பயிரிட்டால்தான் வரும். உழுது பயிரிட்ட பயிருக்கு உயிர் மழைதான். மழை இல்லை என்றால் பயிர் பச்சை இல்லை. அது இல்லை என்றால் சோறும் இல்லை. துணியும் இல்லை. பிறகு என்ன இருக்கும் உலகில்.

உலகமே மழையை நம்பித்தான் இருக்கிறது

*வானத்*
*துளிநோக்கி வாழும்*
*உலகம்*

உலகம் முழுவதுமே இப்படி ஒன்றுக்கொன்று ஆதாரமாகவே இருக்கிறது. அப்படி இருக்க அத்தனைக்கும் மத்தியில் மரணம் என்னும் ஒன்றும் இருக்கத்தானே செய்கிறது. பார்க்கப் போனால் அது (மரணமும்)வும் ஒரு ஆதாரந்தான். மரணம் இல்லை என்றால் வளர்ச்சி இல்லை. முன்னேற்றம் இல்லை. புதுமை இல்லை. மேலும் மேலும் உலகம் உயர வேண்டும் என்றால் வந்தது போய்க் கொண்டே இருக்க வேண்டும். வரவேண்டியது வந்து கொண்டே இருக்க வேண்டும். அதுதான் இயற்கையின் வரவு செலவுக் கணக்கு.

*கோல்நோக்கி வாழும்*
*குடிஎல்லாம், தாய்முலையின்*
*பால்நோக்கி வாழும்*
*குழவிகள் — வானத்*
*துளிநோக்கி வாழும்*
*உலகம்; — உலகின்*
*விளிநோக்கி இன்புறூஉம்*
*கூற்று (14)*

---

*மரணத்துக்கு அதிதேவதை எமன் (கூற்றுவன்). பெற்றெடுத்த குழந்தையைப் பார்த்து தாய் மகிழ்வாள் அப்படியே மரணத்தின் வாயில் வந்து விழும் உயிர்களைப் பார்த்து உள்ளம் பூரிப்பான் எமன் (கூற்று)வன்.*

*பாடலைப் பாடப் பாடக் கவிஞரின் வெற்றி - வெற்றிக்கு மேல் வெற்றி இன்னதென்று தெரியும்.*

*விளி - இறப்பு, மரணம். இன்புறூம் - மகிழ்ச்சியில் துள்ளி விளையாடுவான். யார்? கூற்று - உடல் வேறு உயிர் வேறு என்று கூறுபடுக்கும் கூற்றுவன் (எமன்)தான்.*

*எமனுடைய ஆனந்தம் ஒரு அதிசயமான ஆனந்தந்தான். அந்த ஆனந்தத்தை, (உலகின்) ''விளிநோக்கி இன்புறூஉம் கூற்று'' என கையில் எடுத்து தூக்கிக் காட்டுகிறது கடைசி அடி. வாழ்க்கையே செல்வந்தான்.*

(5)

வாழ்க்கையை விட மேலான உயர்ந்த செல்வம் வேறு என்ன இருக்கிறது. செல்வத்துள் செல்வம் என்றால் அது வாழ்க்கைதான்.

செல்வத்தை (திருமகள்) கடாட்சம் என்று உபசரித்துச் சொல்லி இருக்கிறது. வேறு எப்படிச் சொல்ல அதன் செழிப்பையும் வனப்பையும்.

வாழ்க்கை என்கிற செல்வம், செல்வத் திருமகள் வாடாமல் வதங்காமல் இருக்க வேண்டும். அதற்கு இடம், பொருள், ஏவல் என்று வேண்டும். பணம் இருந்தால்தான் இடம், பொருள், ஏவல் எல்லாம்.

உழைத்துப் பெற வேண்டும் பணத்தை. அதுவும் ஒழுங்காக உழைத்துப் பெற வேண்டும். உழைத்துப் பெறுகிற பணமும் அளவோடு இருக்க வேண்டும். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு.

வறுமை கொடியது. அதைவிடக் கொடியது அளவுக்கு அதிகமாகப் பணத்தைச் சேர்த்துக் குவித்தல். சாப்பாடு, தூக்கம், மூச்சு இந்த மூன்றும் அளவோடு இருக்க வேண்டும். பணமும் அப்படித்தான். கூடினாலும் ஆபத்து, குறைந்தாலும் ஆபத்து.

போதுமான அளவுக்கு பணத்தை நல்ல வழியில் உழைத்துச் சம்பாதிக்கிறவன் வாழ்க்கை அமைதியாக இருக்கும். நிம்மதியாக இருக்கும்.

அதுதான் திருமகள் கடாட்சம். திருமகள் கடாட்சம் இருந்தால் போதாதா? வேறு என்ன வேண்டும் மனிதனுக்கு.

*திருவில்த் திறல்உடைய(து)*
*இல்லை*

பணத்தைக் கொண்டு எத்தனை நல்ல காரியங்களைச் செய்யலாம். நல்ல காரியம் பெருகப் பெருக நாம் மட்டுமா, சமுதாயம், நாடு, உலகம் எல்லாமே சந்தோஷமாக இருக்கும். படை பட்டாளத்தால் வருமா அப்படி ஒரு சந்தோஷம்.

திருவில் - செல்வத்தைப் போல். திறல்உடையது - சக்தி வாய்ந்தது. இல்லை - வேறொன்றும் இல்லைதான்.

இனி ஆன்றோர், சான்றோர், மூத்தோர் இவர்கள் சொல்வதைக் கேட்டு உணர்ந்து தெளிய வேண்டும். வாழ்க்கை

அனுபவத்தை வைத்து அவர்கள் அறவுரையைப் பார்க்க வேண்டும். அப்படியே அவர்கள் அறவுரையை வைத்து வாழ்க்கையைப் பார்க்க வேண்டும். அப்படி உரசி உரசிப் பார்ப்பதுதான் கல்வி. அந்தக் கல்வி இருந்தால் போதும். வாழ்க்கை திருந்தி விடும். செம்மை நலம் பெற்று விடுவான் மனிதன். அப்படித் தெளிந்து சிறக்கும் மனிதனை உலகம் பாராட்டத்தானே செய்யும்.

*ஒருவற்குக்*
*கற்றலின் வாய்த்த*
*புகழ்இல்லை*

வாழ்க்கையின் குளுமையான நீர்ப்பாசனப் பகுதிகள் இப்படி செல்வம், கல்வி என்று பல. அவற்றை ஒருவாறு காட்டுகிறார் கவிஞர். நாமும் கண்டு களிக்கிறோம் அவற்றை. அப்படி அனுபவித்துக் கொண்டிருக்கிற பொழுதே தோசையைப் புரட்டிப் போடுவது போல், வாழ்க்கையின் இன்னொரு பகுதியையும் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் கவிஞர்.

* * *

கொடியதில் கொடியது என்றால் வறுமைதான். உற்றார், உறவினர், நண்பர் என்று எத்தனை பேர் இருந்தாலும் மனிதனை அநாதை ஆக்கி விடும் வறுமை. ஒரு குற்றமும் செய்ய வேண்டாம். வறுமை இருந்தால் போதும். அவனை எப்படிப் பார்க்கும் உலகம். பஞ்சமா பாதகனாகவே பார்க்கும் உலகம்.

உலகம் என்றால் என்ன, உற்றார் உறவினர், நண்பர் எல்லோருந்தான்.

மற்றவர் மனங்களையும் கல்லாக இரும்பாக வறண்ட பாலைவளமாகவே ஆக்கி விடுகிறது ஒருவனுடைய வறுமை.

வறுமையைப் போல வன்பட்டது (கரடு முரடானது) உண்டா உலகில்.

*எறறுள்ளும்*
*இன்மையின் இன்னாத(து)*
*இல்லை*

வறுமையை விடக் கரடு முரடானது ஒன்று உண்டென்றால் அது கருமித்தனந்தான். உயிருக்கு உயிராக உறவாடியவன் கஷ்டத்துக்கு உள்ளாகி விட்டான். துடியாய்த் துடிக்கிறது அவன் குடும்பம். இதுவரை ஒட்டி உறவாடியவனே நழுவுகிறான் அப்பொழுது. ஏதாவது அவனுக்குக் கொடுத்துத் தொலைக்கணும். ஏன் இந்த வம்பு'' என்று நழுவி விடுகிறான் கருமி.

அவன்தான் பாறையில் பாறை கரும்பாறை

*இலம் என்னும்*
*வன்மையின் வன்பாட்ட(து)*
*இல்*

இலம் என்னும் வன்மையின் - 'கையில் ஒன்றும் இல்லை கொடுக்க' என்று ஒதுங்கும் கருமியின் கல் மனம் போல். வன்பாட்டது இல் - இறுகினது உலகில் வேறு இல்லைதான்.

*திருவில்த் திறல்உடைய(து)*
*இல்லை, ஒருவற்குக்*
*கற்றலின் வாய்த்த*
*புகழ்இல்லை — எற்றுள்ளும்*
*இன்மையின் இன்னாத(து)*
*இல்லை; — இலம்என்னும்*
*வன்மையின் வன்பாட்ட(து)*
*இல் (15)*

## போனால்ப் போனதுதான் இளமை

லட்சம் லட்சமாய் மூட்டை கட்டி வைத்திருந்தாலும் ஒன்றுமே இல்லை என்று சொல்வதற்கு எவ்வளவு அழுத்தம் வேண்டும் மனத்தில். அவ்வளவு அழுத்தம் பெற்ற மனிதனும் இருக்கத்தானே செய்கிறான் உலகில்.

பொல்லாத பயல்தான் மனிதன் என்னும் அதிசயம், கவிஞரின் அதிசயந்தான்.

*இலம் என்னும்*
*வன்மையின் வன்பாட்ட(து)*
*இல்*

என அபிநயம் பிடித்துக் காட்டுகிறது. போனால்ப் போனதுதான் இளமை.

* * *

புகை வருகிறது ஒரு இடத்திலிருந்து என்றால் அங்கே தீ மூள்கிறது என்று தெரியும். மூண்டு எரியப் போகிறது தீ என்பதைப் புகையின் மூட்டம் காட்டி விடும்.

*புகைவித்தாப் பொங்கழல்*
*தோன்றும்*

வித்தா(க) - மூலமாக.

இனி விலை கொடுத்து வாங்க முடியுமா ஆனந்தத்தை (உவகையை) முத்து, பவளம் முதலிய மணிகளைக்கூட விலை கொடுத்து வாங்கலாம். சந்தோஷத்தை அப்படி வாங்க முடியாது.

ஒத்த உணர்ச்சி உடையவர்கள், அன்பர்கள், நண்பர்கள், மனம் விட்டுப் பேசி, சிரித்து, மகிழ்ந்து உறவாடும் போதுதான் சந்தோஷம். அப்பொழுதுதான் தேடி வரும் சந்தோஷம்.

*சிறந்த*
*நகைவித்தா தோன்றும்*
*உவகை*

இனி சிறு பையனாக இருக்கிற பொழுது பக்கத்து வீட்டுப் பையனுடன் கோலிக்காய் தெரித்து விளையாட நேர்ந்தது. விளையாட்டில் கடுமையாக அவனை அதட்டிக் கோபிக்கவும் நேர்ந்தது. இதை எல்லாம் மறந்து விடுவதுதான் இயல்பு. ஆனால்

அவன் மறக்கவில்லை. அவன் உள்ளத்தில் முள் குத்தியது போல் ஆழப் பதித்து விட்டது நம் கடுஞ்சொல். உள்ளுக்குள்ளேயே மூட்டம் போட ஆரம்பித்து விட்டது பகை உணர்ச்சி. வயதான பிறகும், குழந்தை குட்டி, பேரன், பேத்தி எடுத்த பிறகும் அவமான உணர்ச்சியும் பகைமையும் அவனை விட்டு ஒழியவில்லை. சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டே இருந்தான். நமது கெட்ட காலம் அவனுக்குக் கைகொடுத்தது. பெரிய பாறாங்கல்லையே தூக்கி மண்டையில் போடுவது போல் கேடு செய்து விட்டான். வஞ்சகமாகவே செய்து விட்டான். இவ்வளவுக்கும் மூலம் நம் கண்டிப்பில் அவனுக்கு ஏற்பட்ட அவமான உணர்ச்சிதான். அது ஒழியாத வரை பகைமை ஒழியாது. மூண்டு கொண்டே இருக்கும் (முளை விட்டபடியே இருக்கும்) விரோதம்.

*பகை ஒருவன்*
*முன்னம்வித் தாக*
*முளைக்கும்*

அது முளைத்த பின் சும்மாவா இருக்கும். புகை காணாமல் விடாது பகை. கேடுகளுக்கெல்லாம் மூலம் அதுதான்.

*புகைவித்தாப் பொங்கழல்*
*தோன்றும், சிறந்த*
*நகைவித்தாத் தோன்றும்*
*உவகை — பகைஒருவன்*
*முன்னம்வித் தாக*
*முளைக்கும்: — முளைத்தபின்*
*இன்னாவித் தாகி*
*விடும் (16)*

---

*முன்னம் வித்தாக - காலாவதியான சம்பவத்தை வைத்துக் கொண்டு செயல்பட்டால் பகைதான். இன்னா வித்தாகி விடும் - நாசத்துக்கு வித்தே கேடுதான். மனதில் ஒதுக்கி வைத்த கேடுதான்.*

*குறிப்பு - மனிதன் பெற்ற வரப்பிரசாதம் என்றால் அது வாழும் வாழ்க்கைதான். அதற்கு நிம்மதியான ஆனந்தமான போக்கு வேண்டும். பொறுமை இருந்தால்தான் அந்தப் போக்கு வரும் தவறை மறக்கிற அளவுக்குப் பொறுமை வேண்டும். அதை மறப்பது தானே தன்னையே வெல்லல் என்பது.*

(2)

நினைத்த மாத்திரத்தில் திடுதிப்பென்று தோன்றாது பண்பாடு. ஆயிரம் காலத்துப் பயிர் பண்பாடு. பதினாயிரம் காலத்துப் பயிரென்றே சொல்லலாம் பண்பாட்டை.

தவவாழ்க்கை என்றே சொல்லலாம் பண்பாட்டை. உயர்ந்த லட்சியத்தோடு வாழ்வதுதான் தவவாழ்க்கை. உயர்ந்த லட்சியம் என்றால் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையுமே உண்மைக்காகத் தத்தம் செய்யும் வீரவாழ்க்கையேதான்.

லட்சோப லட்சம் மக்களைப் பெற்ற ஒரு சமுதாயத்தில் ஒன்றிரண்டு பேரதான் பண்பட்ட நயமான தவவாழ்க்கை நடத்துவார்கள். அவர்களுடைய அருமை பெருமையைக் கண்டு ஒன்றிரண்டு பேர் அவர் களைப்பின் பற்றுவார்கள். நூற்றுக்கணக்கான வருஷங்களாக இப்படிப் பண்பட்ட வாழ்க்கை நடத்துகிறவர்களுக்குள் மெள்ள மெள்ள உறவு முறை ஏற்படும். கொள்வினை கொடுப்பினை நடக்கும். தனிக் குடும்பங்களாய், குறிப்பிட்ட ஒரு குழுவாய் உருவாகும் உயர்ந்தோர் கூட்டம்.

அந்தக் கூட்டத்துக்குத் தனியான மரியாதை உண்டு சமூகத்தில். இன்றைக்கும் பார்க்கலாம் அதை. சமூகம் பூராவும் ஒன்று சேர்ந்து மதிக்கும் அவர்களை. சாதிமத வித்தியாசம் பார்க்காமல் அரசாங்கமே (அரசனே) அவர்களை மதிக்கிறதுண்டு.

அந்த மரியாதை காரணமாகத்தான் கோவில் வழிபாட்டு முறைகளையே அவர்கள் கையில் ஒப்படைத்தது சமூகம். வழிபாட்டு முறையை ஏற்று நடத்துகிறவர்களுக்குக் குருக்கள் என்று பெயர். தேசிகர் என்றும் சொல்வதுண்டு. அந்தணர் என்பதும் அவர்களைத்தான்.

இவர்கள் ஒரு சாதியினர் அல்லர். ஒழுக்கமும், பண்பாடும் நிறைந்த ஒரு குழு.

அந்தணர்களின் ஒன்றிரண்டு பேர் வழி தவறி நடக்கலாம். தேவைஇல்லை என்று அவர்களை விட்டுவிட வேண்டியதுதான். அதற்காக பண்பாடே வேண்டாம் என்று விட்டுவிடக் கூடாது.

பண்பாடுடையவர்களை மதிக்க வேண்டும். அவர்களை மதிக்க மதிக்கத்தான் நாட்டில் பண்பாடு தழைக்கும். பண்பட்டு உயர்ந்த குடிப்பிறப்பை நான்மணிக்கடிகை ஆசிரியர் அபாரமாய் மதிக்கிறார்.

*அந்தணரின் நல்ல*
*பிறப்பில்லை*

இதைவிட வேறு எப்படி மதிக்க முடியும்.

இனி தாய்க்கு நிகரான பாசம் பரிவு வேறு எங்கு உண்டு உலகில். நீங்கா உறவென்றால் தாயின் கருணைதான். தாயேதான்! தீங்கு செய்யும் பிள்ளைகளிடம் கூடக் கருணை காட்டுகிறாள் தாய்.

தயையின் உருவம் அல்லவா தாய்

*என் செயினும்*
*தாயில்ச் சிறந்த*
*தமரில்லை*

இனி ஒருவரிடம் இடம், பொருள், ஏவல் மூன்றும் வாய்ப்பாய் இருக்கிறது. அன்பான மனையாள், பண்பு மிக்க பிள்ளைகள், உத்தமமான நண்பர்கள் என்று சந்தோஷமாய் இருக்கிறது வாழ்க்கை. வளம்பட்ட வாழ்க்கை என்றால் அதுதான். அந்த ஆனந்தம் சொர்க்கத்தில் கூடக் கிடைக்காது. என்ன எடுப்பு, என்ன தோரணை, என்ன அழகு அதில்.

வனப்பு என்னும் பேரழகு அதில் அல்லவா இருக்கிறது. கொத்துக் கொத்தாகப் பூத்து, மணத்தால் காட்டையே குலுங்க வைக்கும் பூங்காவனம் அல்லவா வளமையோடு ஒட்டிய அந்த வாழ்க்கை.

அதற்கு இணை அதுதான்

*ஆய*
*வளமையோ(டு) ஒக்கும்*
*வனப்பில்லை*

இனிக் கடைசியாக ஒன்று. செல்வம் இருக்கிறதே அது வரும் போகும். செல்வாக்கும் அப்படித்தான். நாட்டையே ஆட்டிப் படைக்கிற அதிகாரம்கூட, அமைச்சர் பதவி, ஆளுநர் பதவிகூட நிலையானதா என்ன? அதுவும் வரும், வந்தது போலவே போகவும் செய்யும். ஆனால் இளமை என்றும் ஒன்று இருக்கத்தானே செய்கிறது. அது எங்கிருந்து வந்தது. எப்படி வந்தது. ஏன் வந்தது ஒன்றுமே தெரியாது நமக்கு. இருக்கும் வரை இருந்தது. பிறகு

போய் விட்டது. போனது போனதுதான். கூவிக் கூவி அழைத்தாலும் மறுபடி வருமா அது? பணம் போலவோ, பதவி போலவோ மானம் கெட்டு மறுபடி மறுபடி எட்டிப் பார்க்குமா இளமை.

அப்படியானால் இளமையை மதிக்க வேண்டாமா? மதிக்கிறதென்றால் என்ன? பேணிப் பாதுகாக்க வேண்டும் அதை. அது போவதற்குள், துடிப்பும் ஊக்கமும் இருக்கிற பொழுதே செய்ய வேண்டிய காரியங்களை, அதாவது சமுதாயக் கடன்களை குறை ஒன்றும் இல்லாமல் செய்துவிட வேண்டும். ரத்தம் செத்தபின் அதைச் செய்யவில்லையே இதைச் செய்யவில்லையே என்று புலம்புவதில் என்ன பலன்.

சாகப் போகிறவன் சங்கரா சங்கரா என்று புலம்புகிற மாதிரிதான்.

ஈடு இணை அற்றது இளமை. தேடக் கிடைக்காத செல்வம் இளமை என்பது தெரிந்தால் போதும்.

*அந்தணரின் நல்ல*
*பிறப்பில்லை, என்செயினும்*
*தாயில்ச் சிறந்த*
*தமரில்லை — ஆய*
*வளமையோ(டு) ஒக்கும்*
*வனப்பில்லை; — எண்ணில்*
*இளமையோ(டு) ஒப்பதும்*
*இல் (17)*

---

*என்செயினும் - கொடுமையே செய்தாலும். தமர் - உறவினர், சொந்தக்காரர். ஆய வளமை - எல்லாம் ஒன்றாய்ப் பொருந்தி இருக்கிற செழிப்பு. வனப்பு - கண்கொள்ளா அழகு. எண்ணில் - கொஞ்சம் யோசித்துப் பார்த்தால். இளமையோடு ஒப்பதும் இல் - இளமை என்று ஒன்று வந்து போனதே அதுவும் இணை இல்லாததுதான்.*

*கனவு போலல்லவா இருக்கிறது அது வந்ததும் போனதும்.*

*குடிப்பிறப்பு, தாயன்பு, வளம்பட்ட வாழ்வு எல்லாம் தொடர்ந்து நிற்கிற தத்துவங்கள்தான். கொஞ்சம் உஷாராக இருந்தால் செல்வம்கூட நில் என்றால் கொஞ்சம் நிற்கவே செய்யும்.*

*ஆனால் இளமை அப்படி இல்லையே. நம்முடைய உத்தரவு அதனிடம் செல்லுபடி ஆவதில்லையே என்று தெரிய வேண்டாமா? தெரிந்தால் அது போவதற்குள் செய்து முடிக்க வேண்டியதை முடித்து விடலாந்தானே.*

(3)

மேலெழுந்தவாரியாகப் பார்க்கக் கூடாது பெண்ணை. அப்படிப் பார்த்தால் பெண்ணின் மெல்லிய, வலுவில்லாத உடல் தத்துவம் ஒன்றே தெரியும். பெண்ணின் உள்ளம் இன்னதென்று தெரியாது. அந்த உள்ளத்தில் நிறைந்திருக்கும் திடசித்தமும் தெரியாது. அன்பு, பொறுமை, பக்தி, தியாகம் முதலிய அருங்குணங்களுக்கெல்லாம் பெண்ணின் திடசித்தந்தான் ஊற்றுக் கண்.

உலகத்தையே, மன்னுயிர்த் தொகுதியையே தன் உதரத்தில் வைத்துக் காப்பாற்றுகிறாள் பெண். அப்படியே தன் உள்ளத்தில் வைத்து அருள்பாலிக்கிறாள் பெண். அவ்வளவும் எங்கிருந்து வந்தது. பெண்ணுக்கு அவளுடைய திடசித்தத்திலிருந்தே உறுதிப்பாட்டிலிருந்தே வந்தது.

ஆடவர்களிடம் முரட்டுத்தனம் இருக்கலாம். உறுதிப்பாடு பெண்களிடந்தான்.

பெண்களைப் பார்க்க வேண்டிய முறை இப்படி. இப்படிப் பார்த்தால் ஆடவர்களை வைத்துத்தான் பெண்கள் என்னும் அறியாமை அடிபட்டுப் போகும்.

பெண்களை (பெண்மையை, தாய்மையை) உண்மையாக மதிக்கிறது அப்பொழுதுதான். பெண்ணிடம் உள்ள தெய்வாம்சம் இன்னதென்று தெரியாமல் புகழ்வதும், அலங்காரச் சொற்களைக் கொண்டு உபசரிப்பதும் சாதாரணம். அது பெண்மையின் நயத்தையும், தாய்மையின் அருள் வேகத்தையும் உணர்ந்து மதிக்கிற காரியம் அல்ல. அவர்களுடைய தகைமையை அறிந்து உணர்ந்து மதிக்க வேண்டும் என்னும் உணர்வுதான் உண்மையில் மதிக்கிறது. வழிபடுகிறது எல்லாம்.

*தகவுடைய*
*பெண்இனிது பேணி*
*வழிபடின்*

இனி கவி என்பதும் பெண் மாதிரிதான். செங்கல்லை அடுக்கி வைப்பது போல் வார்த்தைகளை அடுக்கி வைத்து ஒரு கருத்தைச் சொல்லி விட்டால் அது கவியாகி விடுமா.

உண்மை உணர்ச்சியே செய்யுள் உருவம் பெற வேண்டும். கவியாகவே அவதாரம் எடுக்க வேண்டும் உணர்ச்சி.

உணர்ச்சியானது அப்படி ஒரு புதுப் பிறவி எடுப்பதற்கு இசையும், கூத்தும் (தாளமும்) வார்த்தைகளாய் வந்து கோலம் போட வேண்டும். அதுதான் பாடல். அந்தப் பாட்டோடு உறவாட உறவாட பண்ணுக்கு, அதாவது தோடி, மத்திமாவதி, சகானா முதலிய ராகங்களுக்கு மதுரம் பெருகும். இசையில் இருக்கிற ஒளி ஊற்று தெய்வ ஒளி அப்பொழுதுதான் தெரியும்.

*பண்இனிது*
*பாடல் உணர்வார்*
*அகத்து*

இனி அன்புடையார் ஒரு குழுவாகச் சேர்ந்திருந்து, மனம் விட்டுப் பேசி மகிழ்ந்து சிரிக்கிற சிரிப்புத்தான் சிரிப்பு. மற்றச் சிரிப்பெல்லாம் வெறும் கள்ளச் சிரிப்புத்தான்.

*நகை இனிது நட்டார்*
*நடுவண்.*

பணத்தைப் பாங்கில் போட்டு கணக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால், அதே ஞாபகத்தில் பெட்டியைத் திறந்து அடிக்கடி பார்க்கிறதும், மூடுவதுமாகவே இருந்தால் உருப்படுவானா மனிதன். அந்தப் பணத்தைத் தாறுமாறாக அள்ளி வீசுவது எப்படி அறிவீனமோ அப்படிப்பட்ட அறிவீனந்தான், உள்ளத்தில் குழி தோண்டி அந்தக் குழிக்குள் செல்வத்தைப் போட்டு மூடி மறைக்கிற பேதைமையும்.

இன்பத்தைக் கொடுக்க வேண்டும் பணம். நெறிமுறை பிசகாமல் வாழ்க்கையை ஆனந்தமாக நடத்த உதவ வேண்டும். மிச்சத்தை ஒழுங்கான, உண்மையான காரியங்களுக்குக் கொடுக்க வேண்டும். சமுதாயம் உருப்படியாகிற காரியங்களுக்கு ஆடம்பரம் இல்லாமல், ஆரவாரம் பண்ணாமல் கொடுத்து உதவ வேண்டும். அடக்கமாக, மரியாதையாகக் கொடுத்து உதவ வேண்டும்.

திருமகள் விலாசம் என்றால் அதுதான்.

*நகைஇனிது நட்டார்*
*நடுவண், பொருளின்*
*தொகைஇனிது தொட்டு*
*வழங்கில் — தகவுடைய*

*பெண்இனிது பேணி*
*வழிபடின்; — பண்இனிது*
*பாடல் உணர்வார்*
*அகத்து (18)*

(4)

பணம் இல்லை என்றால் வாழ்க்கை இல்லை. அதனால் பணத்தைத் தேட வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். ஒழுங்கான வழியிலேயே உழைக்க வேண்டும்.

உழைத்துத் தேடிய பணத்தை வைத்து சந்தோஷமாக, ஒழுங்காகவே வாழ வேண்டும். சந்தோஷமாக வாழ்வதற்கு உற்றார் வேண்டும், உறவினர் வேண்டும், நண்பர் வேண்டும், கலைஞர்கள் வேண்டும், கோவில் வேண்டும், வழிபாடு வேண்டும், தேர்த் திருவிழா வேண்டும். மொத்தத்தில் ஞானமும் பக்தியும் வேண்டும். அதாவது அன்பும் ஆதரவும் உணர்ச்சிமயமாய் உள்ளத்தில் ஊற வேண்டும்.

எப்பொழுதும் ஈரப்பதத்துடனேயே இருக்க வேண்டும் இதயம்.

இனி ஒருவர் மூட்டை மூட்டையாய் பணத்தைக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறான். இதர செல்வமும் அவனிடம் ஏராளம். அப்படி இருந்தும் கட்டின பெண்டாட்டிக்கே, அவள் நோய் வாய்ப்பட்டு அணு அணுவாய் சாகிற பொழுதுகூட மனசோடு வைத்தியம் செய்ய மறுக்கிறான். சேர்த்து வைத்த பணம் குறைந்து விடுமே என்கிற பயத்தினால்த்தான்.

ஏன் இப்படிக் கருமித்தனம் செய்கிறாய் என்று குடும்பத்தில் உள்ள முக்கியமான சிலர் இடித்துரைத்தால், எங்கே இருக்கிறது பணம் என்று கையை விரிக்கிறான்.

---

*நகை - சிரிப்பு. நட்டார் - நண்பர். பொருளின் தொகை - செல்வம். தொட்டு வழங்கில் - கையில் எடுத்து நீட்டுகிற (கொடுக்கிற) பொழுது. தகவு உடைய - பொறுப்போடு கூடிய. பெண் இனிது பேணி வழிபடின் - பெண்மையின் பெருமையை உணர்ந்து மதிக்கிறதுதான் பெண்ணின் பெருமையை அறிகிற காரியம். பாடல் உணர்வார் அகத்து - பாடிப் பாடி அனுபவிக்கிறவர்களுக்கே. பண் இனிது. இசையின் வளம் தெரியும்.*

உண்மையான கணக்கைக் காட்டாமல் கள்ளக் கணக்கையே காட்டுகிறான்.

கட்டிய மனையாளையே காப்பாற்ற உதவாதவன், நண்பர், கலைஞர், சுற்றத்தார், ஆன்றோர்களுககு உதவவா செய்வான்.

உதவ மாட்டான். ஆனால் அவன் கட்டி வைத்த பணம் அவனுக்கு உதவுமா, உதவாது. பொட்டணம் போட்டுக் கட்டி வைத்த பணம் அவ்வளவுமே அவனுக்கு உதவாது. நேரம் பார்த்து அவன் காலை வாரி விடும். அவன் பணம். எப்படி எல்லாம் ஓடும் அவன் மறைத்துப் புதைத்து வைத்த பணம்?

நீதிமன்றத்தை நோக்கி, நீதிமன்ற வழக்கறிஞரைத் தேடி, நீதிமன்றக் கட்டணம், முத்திரைத் தாள் கட்டணம், வக்கீலுக்கு அழுகிறது, குமாஸ்தாவுக்கு அழுகிறது, சாட்சிகளுக்கு அழுகிறது என்று ஓடிக் கொண்டே இருக்கும் அவன் பணம்.

அவன் பெற்றெடுத்த பிள்ளைகளே பாகப் பிரிவினை சம்பந்தமாக வழக்குத் தொடுப்பார்கள். சமயம் கிடைக்கிற பொழுது கலகமும் பண்ணுவார்கள். அதனால் காவல் நிலையத்தை நோககியும் போகும் இவன் பணம். அதுமட்டுமா, பேராசை காரணமாக பல நிதி நிறுவனங்களில் பணத்தைப் போட்டு வைப்பான். அவைகளில் பல திவாலாகும். பணம் போட்டதற்கான அட்டை (ரசீது)தான் இருக்கும். பணம் இருக்காது. அட்டையைப் பார்த்துப் பார்த்து அழுவான் பாவி மகன். வெறியில் சேர்த்துச் சேர்த்துக் குவித்து வைக்கிறவன். குவித்து வைத்த பணத்துக்கு காவல் (வாட்ச்மேன்) வேலை பார்க்கிறவன் கதி இப்படித்தான்.

கசவாளிப்பயல் (கயவன்) என்றால் இவன்தான். கருமி என்று இவனுக்கு ஒரு பெயருண்டு. கரப்பார், கரப்பாளர் என்பது பூர்வாஸ்ரநாமம்.

அவன் அமுக்கி வைத்த பணமே அவனைக் குப்புறத் தள்ளி விடுகிறது. அதன் லட்சியமே இவனைக் கவிழ்ப்பதுதான்.

இவனைக் குழி தோண்டிப் புதைக்காமல் விடாது இவன் ஒளித்து வைத்த பணம்.

*கரப்பார்க்குச் செல்சார்*
*கவிழ்தல்*

கரப்பவர்க்கு - (கடமையை நிறைவேற்றாமல் பணத்துக்குப் பயந்து அதை) மறைத்து ஒளித்து வைக்கிறவர்களுக்கு. செல்சார் - முடிவு (கடைசிப் புகலிடம்) கவிழ்தல் - இழத்தல்.

இனி இரக்க உணர்வு உள்ளவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். கோவில் குளம் என்று கொடுப்பார்கள். உற்றார் உறவினர்களுக்கு உதவுவார்கள். கலைஞர், புலவர்களை ஆதரிப்பார்கள். நண்பர்களுக்குச் சமயம் அறிந்து கொடுப்பார்கள். ஏழை எளியவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள். அவர்கள் இல்லை என்றால் தர்மம் ஏது, புண்ணியம் ஏது.

வறியவர்களின் புகலிடம் அல்லவா வள்ளல்கள்.

*எஞ்ஞான்றும்*
*இரப்பவர்க்குச் செல்சார்ஒன்(று)*
*ஈவோர்*

இரப்பவர் - ஏழைய எளிய மக்கள். ஈவோர் - அன்போடு கொடுக்கும் தர்மப் பிரபுகள்.

அவர்கள் அன்றும் உண்டு. இன்றும் உண்டு. அவர்கள் இல்லை என்றால் உலகம் இல்லை. அதாவது சமுதாய அமைதி என்கிற கட்டுக்கோப்பு உலைந்து போகும்.

இனி படை பட்டாளம் (ராணுவம்) அளவில் பெரிதாக இருந்தால் போதாது. வீரம் வேண்டும். வீரமும் ஊக்கமும்தான் படைக்கு (தானைக்கு) உயிர். வீரம் (தறுகண்) ஒன்றே குறியாக இருக்க வேண்டும் தானைக்கு. வேண்டியவர், வேண்டாதவர் என்கிற யோசனைக்கு இடம் இல்லை தறுகண்மையிடம்.

*பரப்பமைந்த*
*தானைக்குச் செல்சார்*
*தறுகண்மை*

பரப்பமைந்த தானை - கண்ணுக்கெட்டிய தூரம் நிறைந்திருக்கிற படை. பெரிய படைதான். செல்சார் - முக்கியம், லட்சியம். தறுகண்மை - வேண்டியவராயிற்றே என்று தாட்சண்யப்படாமைதான். வீரம் என்கிற ஒரே நோக்குத்தான்.

இனி மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் லட்சியம் அருள்தான். கருணைமயமான இரக்க உணர்வுதான்.

இரக்கம் என்னத்துக்கு, அது வேண்டாம் என்றால் மனிதனாகப் பிறந்திருக்கவே வேண்டாமே. பாம்பு, பல்லி, தேள், கடுவாய், ஓநாய் என்கிற நிலையிலேயே இருந்திருக்கலாமே.

எல்லா உயிரையும் தன்னுயிரைப் போல் பேணி உபசரிக்க வேண்டும் அதற்குப் புலனடக்கமே வேண்டும். புலனடக்கம் இல்லை என்றால் அருளில்லை, புலனடக்கத்தோடு கூடிய அருள்தான் வீரம். உண்மையான வீரம் என்றால் அருளுடைமைதான். புலனடக்கத்தில் முக்கியமானது நாவடக்கம்.

அரிசி, பருப்பு, காய், கனி, பால், நெய் என்று ருசியான பதார்த்தங்கள் நிறைய இருக்கவே செய்கின்றன. ஆனாலும் ஒரு பிராணியைக் கொன்று அதன் உடலை, முடை நாற்றம் எடுக்கும் பிணத்தைக் கொண்டு வா என்று அடம் பிடிக்கிறது நா என்றால், அதன் கொட்டத்தை அடக்க முடியாதவன் வேறு என்னத்தை அடக்கி விடுவான்.

அடக்கம் இல்லாதவனிடம் ஏது அருள்?

*கரப்பார்க்குச் செல்சார்*
*கவிழ்தல், எங் ஞான்றும்*
*இரப்பார்க்குச் செல்சார்ஒன்(று)*
*ஈவோர்; — பரப்பமைந்த*
*தானைக்குச் செல்சார்*
*தறுகண்மை; — ஊன்உண்டல்*
*செய்யாமை செல்சார்*
*உயிர்க்கு (19)*

(5)

அழகு கூடக் கூட ஆபத்து அதிகம்தான் பெண்ணுக்கு. முறை கெட்டுப் பெண்ணைப் பார்க்கிற கூட்டம் பெருகும். அதனால் மிக்க உஷாராக இருக்க வேண்டும் அழகான பெண். அழகு வேண்டும் என்றால் உஷாரும் தேவைதான். அந்த உஷார் இயல்பாகவே இருக்கிறது பெண் பாலரிடம். இனி ஒரு நாடு செல்வ வளம் பெருகப் பெருக அதன் மேல் எதிரிகளும் பெருகுவார்கள். வஞ்சகமாக, மறைவாகவே உரு ஆவார்கள் பகைவர்.

பொருள் வளத்துக்குத் தக்கபடி படை பலத்தைப் பெருக்க வேண்டும். பெருக்கினால் மட்டும் போதாது. விழிப்புணர்வு வேண்டும், எதிரிகளிடம். நண்பர்கள் போல் நடித்து, காலம் நேரம் பார்த்திருக்கும் வஞ்சக நண்பர்களிடம் விழிப்பாக இருக்க வேண்டும்.

அது கொஞ்சம் குறைந்து போனதினால் தானே புதிய சீனா நம்மை (இந்தியாவை) அவமானப்படுத்தியது.

*படை இன்றி*
*மன்னர்சீர் வாடி*
*விடும்*

இனி வீரர்களை, போர் வீரர்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு வேண்டியது போர்தான். தொடர்ந்து போரே இல்லை என்றால் தினவெடுத்து விடும் அவர்கள் வீரம். தோளும் தினவெடுக்கும் அவர்களுக்கு.

*போர்இன்றி வாடும்*
*பொருநர்சீர்*

பொருநர்சீர் - வீரர்களிடம் இயல்பாக இருக்கிற வீரதத்துவம்.

இனி மரம் ஒன்று பிரம்மாண்டமான மரம் ஆடாமல், அசையாமல் நிற்கிறது. சூறாவளிக் காற்றில்கூட அடிபிறழாமல் நிற்கிறது மரம். காரணம் அதன் வேர் மண்ணைக் கெட்டியாக பற்றி இருப்பதுதான். அதுதான் மரத்தைத் தாங்குவது.

வேரானது துளை போட்டு உள்ளே இறங்க வேண்டும் என்றால் மண் கண்டம் இளக்கமாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் பாறையாக இருந்தால் மளமளவென்று பூமிக்குள் இறங்காது வேர். சரியானபடி வேர் வேலை செய்யாத போது மரம் தள்ளாடத்தானே செய்யும்.

சரியானபடி இல்லை வேரின் பிடிமானம் என்றால் மரம் மட்டுமா, சிறிய செடி, கொடிகூடப் பட்டுப் போகும்.

*கீழ் வீழ்ந்த*
*வேர்இன்றி வாடும்*
*மரம் எல்லாம்*

கீழ்வீழ்ந்த - பூமிக்குள் கீழ்முகமாக இறங்குகிற (வேர் செயல்படாத போது.)

இனி குளத்தில், ஏரியில் நீர் இல்லை என்றாலும் அப்படித்தான். தண்ணீர் இல்லை என்றால் பிறகு நெல்லாவது, கரும்பாவது, வாழையாவது. இந்த நிலையில் ஆம்பலும் தாமரையும் சுருண்டு விழுவது அதிசயமா?

*போரின்றி வாடும்*
*பொருநர்சீர், கீழ்வீழ்ந்த*
*வேர்இன்றி வாடும்*
*மரம்எல்லாம் — நீர்பாய்*
*மடைஇன்றி நீள்நெய்தல்*
*வாடும்; — படைஇன்றி*
*மன்னர்சீர் வாடி*
*விடும்* *(20)*

---

*நீள்நெய்தல் - நெய்தல் மலரே வயலில் பூக்கிற அளவுக்கு நீர்வளம் மிக்க உரக்கால் நன்செய். அப்படி இருந்தும் நீர்வரத்து சுண்டி விட்டால் பயிர்ப் பச்சை எல்லாம் பட்டுப் போகும்.*

*குறிப்பு - வீரர்களுக்குப் போர், மரத்துக்கு வேர், வயலுக்கு நீர் முக்கியந்தான். இவை குறைந்தால், சரியானபடி இல்லை என்றால் வாட்டந்தான். தள்ளாட்டந்தான். நாட்டுக்கே குறைதான். ஆனாலும் அப்படி இப்படி என்று இந்தக் குறைகளைச் சமாளித்துவிட முடியும்.*

*இனி ஒரு நாடு தன்னைக் காத்துக் கொள்ளத் தேவையான படை பலம் இல்லாமல் இருக்கிறது. பாதுகாப்பில் கவனக்குறைவாக இருக்கிறது என்றால், பட்டே போகும் அது. மறுபடி தளிரெடுப்பது மிக்க சிரமம்.*

*இந்த உண்மை, உணர்ச்சிபூர்வமாய்*

*படைஇன்றி*
*மன்னர்சீர் வாடி*
*விடும்*

*வாடும் வாடும் என்று சொல்லியபடியே வாடி விடும் என்று முடிப்பதில் தானாக வந்து விழுகிறது. அதுவும் கடைசி அடியின் கடைச்சீரில் 'விடும்' என்று ஊன்றி வைப்பதில் பளிச்சென்று தெரிகிறது அது.*

## குடும்பத்தை வைத்துத் தான் ஒழுக்கமும் பண்பாடும்

கூச்சம், வெட்கம் இவை கொண்ட நாணம் எப்படி ஒரு பெண்ணுக்கு அழகூட்டுகிறதோ அப்படி ஒரு அழகை, அதைவிட ஒய்யார அழகைப் பெண்ணுக்கு ஊட்டுவது அவள் காட்டும் ஊடல்தான். நாயகனிடம் காட்டுகிற ஊடலின் அழகே அழகு.

பெண்ணுக்குக் கடவுள் கொடுத்த வரங்களில் எல்லாம் அரிய வரம் ஒன்று உண்டென்றால் அது அவளிடமிருந்து வெளிப்படும் ஊடல்தான். மலர்ந்து விரியும் மல்லிகைப் பூவிலிருந்து கமகம என்று மணம் வெளிப்படுவது போல் பெண்ணிடமிருந்து வெளிப்படுகிறது ஊடல். அடக்கமாக, மென்மையாக ஆனால் மிக்க உறுதிப்பாட்டோடு கூடியே வெளிப்படுகிறது ஊடல்.

ஊடலின் நயத்தையும் (காதல்) வேகத்தையும் காண்பவன்தான் ஆண்மகன். ஊடலை அனுபவிக்க வேண்டும். அதற்கு வளைந்து கொடுக்க வேண்டும். பணிந்தே போக வேண்டும். சரியான ஆம்பளை (ஆண்பிள்ளை) என்றால் அப்படித்தான் ஒத்துழைப்பான் ஊடலுக்கு.

இனி ஊடலின் உல்லாசம் தெரியவில்லை. அதன் ஒய்யாரம் விளங்கவில்லை. அன்பின் வேகமே தெரியவில்லை, விளங்கவில்லை ஒருவனுக்கு! விளங்காததால்தான் ஒரு கையில் செம்பையும், இன்னொரு கையில் குடையையும் எடுத்துக் கொண்டு காசி யாத்திரை போகிற மாதிரி போய் விடுகிறார்கள் பலர். அதுவே போதும் என்று கிளம்புகிறான் ஒருவன் என்றால் காதல் தெய்வம் அவளைப் பார்த்துச் சிரியோ சிரி என்று சிரிக்கத்தானே செய்யும்.

எள்ளி நகையாடுதல் என்றால் அந்தச் சிரிப்புத்தான். ஊடலின் மரணந்தான் காதலின் கசந்த சிரிப்பு.

*ஊடல்சாம்*
*ஊடல் உணரார்*
*அகத்து*

ஊடல்சாம் - ஊடலின் தெய்வ மணமே ஒழிந்து போய் விடும். சாம் - செத்து மண்ணோடு மண்ணாய் மக்கும். (சாகும் = சாம்) ஊடல் உணரார் அகத்து - சுத்த அசடுகளிடம்.

* * *

கவியின் அற்புதமும் கிட்டத்தட்ட அப்படித்தான். பாடலை உருவாக்குகிற இசைப் பண்பையும், தாள (நடன)ப் பண்பையும் தெரிந்து அந்த அற்புதத்தில் கரையவில்லை ஒருவன் என்றால்,

அவனுக்கும் கவிக்கும் என்ன சம்பந்தம். கவிதா தெய்வமே முகம் வாடி விடும் அவன் மூலம். கவிக் கலைக்கும், கவிப் பண்புக்கும் சமாதி கட்டுகிற காரியந்தான் இசையும் தாளமும் சேர்ந்து செய்கிற சிருஷ்டியை அனுபவிக்காமல் பாடலை தும்பு தும்பாய்க் கிழிக்கிறதும், வியாக்யானம் செய்கிறதும்.

*அரும்புணர்ப்பின்*
*பாடல்சாம் பண்அறியா*
*தார்முன்னர்*

இனி ஆசையோடு நாடி வந்த விருந்தினரை வரவேற்று உபசரிக்கவில்லை ஒருவன் என்றால், அலட்சியமாக நடந்து கொள்கிறான் தேடி வந்த விருந்தினரிடம் என்றால் என்ன பாடுபடும் விருந்தினர் மனம். அப்படித்தான் அல்லல்படுத்தும் நன்றி உணர்வில்லாதவர்களின் செயலும்.

*நன்றிசாம் நன்றறியா*
*தார்முன்னர், சென்ற*
*விருந்தும் விருப்பிலார்*
*முன்சாம் — அரும்புணர்ப்பின்*
*பாடல்சாம் பண்ணறியா*
*தார்முன்னர்; — ஊடல்சாம்*
*ஊடல் உணரார்*
*அகத்து (21)*

---

*சென்ற விருந்து - தேடி வந்த விருந்து (விருந்தினர்). விருப்பிலார் முன்சாம் - அன்பில்லாதவர் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அனலில் பட்ட செந்தாமரைப் புஷ்பம் போல் சாம்பி விடுவார்கள்.*

*குறிப்பு - நன்றறியாதார் முன்னர் என்பதை 'நன்றறியா - தார்முன்னர்' என்று துண்டு (வகைப்)படுத்துகிறது இசைப் பண்பு. அப்படியே 'பண்ணறியா - தார்முன்னர்' என்றும் வகைப்படுத்துகிறது. அப்படி வகைப்படுத்துவதன் மூலம் நட்டுவனாரே அந்த வகைக்குள் இருந்து தாளத்தைத் தட்டுகிற மாதிரி இருக்கிறது செய்யுளின் நடன இயல் அதுதான். யாப்பியலில் இதற்கு வகையுளி என்று பெயர். நான்மணிக்கடிகை ஆசிரியர் குறிப்பிடுகிற அரும்புணர்ப்பை (வகையுளி)யை, அவர் பாடலிலேயே வைத்துக் காட்டுகிறார். இந்த வகையிலிருந்து பிறக்கிறது. தொகை (யறா) என்னும் தாளம். தொங்கல், தூக்கு என்றும் பெயர். வகையுளி என்னும் அரும்புணர்ப்புக்கு.*

(2)

ஒவ்வொருவரிடமும் முகம் இருக்கிறது. தனித்தனிச் சாயலில் இருக்கிறது முகம். அப்படியே மனமும் இருக்கிறது. எத்தனை மனிதர் உண்டோ அத்தனை முகச் சாயல். அத்தனை மனப்போக்கு.

ஆனால் முகம் கண்ணுக்குத் தெரிகிறது. மனத்தை அப்படிக் கண்கொண்டு பார்க்க முடியாது. ஆனாலும் மனத்தில் உண்டாகும் அதிர்வுகளை எல்லாம், உணர்ச்சிகளை எல்லாம் முகம் எடுத்துக் காட்டுகிறது. கையில் எடுத்துக் காட்டுவது போலவே காட்டுகிறது முகம்.

பேச்சில்கூட மறைத்து விடுவான் தன்மன ஓட்டத்தை மனிதன். செயலிலும் அப்படியே. ஆனாலும் முகமானது செந்தூக்காய்த் தூக்கி மனத்தையே காட்டி விடும். பேச்சு (பசப்பு மொழி) செயல் (நடிப்பு) இரண்டையும் கையமர்த்தி உட்கார வைத்து விடும் முகம். வயிரத்தில் நீரோட்டம் எவ்வளவு துல்லியமாய்த் தெரிகிறது. அப்படித் தெரியும் ஒருவனுடைய எண்ணம் அவன் முகத்தில்.

முகம் முகந்தான். அதற்கு இணை அதுதான்.

*யாதும்*
*முகம்போல முன்உரைப்ப(து)*
*இல்*

இனி குடலைக்குள் வைத்து பசிய இலைகளால் மூடி இருக்கிறது பூவை. இருந்தாலும் குடலைக்குள் இருப்பது பிச்சியா, சண்பகமா என்பதை அதனதன் மணம் காட்டி விடும். இனி வார்த்தையில் ஒலி மட்டுமா இருக்கிறது. பேசும் மனிதனே இருக்கிறான். அவன் தரம், குறை, நிறை எல்லாம் சேர்ந்தே கிடக்கின்றன. என்னதான் மூடி மறைத்தாலும் அவன் செயல்பாட்டை, ஏன் திட்டத்தையே 'அவன் பேச்சு காட்டிக் கொடுத்து விடும். இனி ஒருவனுடைய காரியத்தை (செயலை) தொடர்ந்து கவனித்தால் அவன் யோக்கியதை இன்னதென்று தெரிந்து விடும். உள்ளுக்குள்ளேயே பொருமிக் கொண்டிருக்கிற வஞ்சகம், சூது, பொய் அத்தனையும் அவன் செயல் மூலம் வெளிப்படும்.

எது எப்படியானாலும் சரி. முகம் போல் டாண் டாண் என்று காட்ட வேறு ஒன்றும் இல்லை.

*நாற்றம் உரைக்கும்*
*மலருண்மை கூறிய*
*மாற்றம் உரைக்கும்*
*வினைநலம் — தூக்கின்*
*அகம்பொதிந்த தீமை*
*செயல்உரைக்கும்; முன்னம்*
*முகம்போல முன்உரைப்ப(து) (22)*
*இல்*

(3)

மனிதர்கள், சாதாரண மனிதர்கள்தான். எல்லோரும் அவரவர் காரியத்தை ஒட்டியே ஓடிக் கொண்டிருக்கிறார்கள். உழுகிறவன் உழுகிறான். நெய்கிறவன் நெய்கிறான். கவிபாடுகிறவன் கவிபாடிக் கொண்டிருக்கிறான். கொல்லன், தச்சன், குயவன், கொத்தன், எண்ணெய் ஆட்டுகிறவன், ஆடு மாடு மேய்க்கிறவன், மருத்துவன், ஜோசியன், எழுத்தாளன், பேச்சாளன், மீன் பிடிக்கிறவன், மாலுமி, விமானி என்று ஒவ்வொருவனும் அவனவன் காரியத்தைச் சத்தம் இல்லாமல் செய்து கொண்டிருக்கிறான்.

அக்கம் பக்கம் பார்ப்பதில்லை ஒருவனும்.

இனி மனைவி, மக்கள், தாய், தந்தை என்று குடும்பம். அப்படிக் குடும்பம் குடும்பமாக இருக்கிறது மன்பதைக் கூட்டம். இந்த ஒரு குடும்ப அமைப்புத்தான் மானுட வளர்ச்சிக்கு அடிப்படையான மூலம். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் மனிதப் பயிரை நீர்பாய்ச்சி, உரம் போட்டு, காவல் காத்து வளர்ப்பதே குடும்ப உறவுதான் என்று தெரியும். உலகமே அதன் கையில்தான்.

குடும்பம் இல்லை, குடும்ப காரியம் இல்லை என்றால் மக்கள் மக்களாகவா இருப்பார்கள். அந்த நிலையில் அரசு ஏது. சட்டம் ஏது, நீதி ஏது.

---

*நாற்றம் - வாசனை. கூறிய மாற்றம் - பேசும் பேச்சு. தூக்கின் - யோசித்துப் பார்த்தால். அகம் - மனம். முன்னம் - குறிப்பு. எண்ண ஓட்டம் நம்மைச் சுற்றி எத்தனையோ காரியங்கள். அதிசயம் அதிசயமாக உள்ளன ஒவ்வொன்றும். அதனால் நம்ப முடியவில்லை. ஆனாலும் உண்மைதான் அவை.*

ஆன்றோர், சான்றோர் என்று தவசிகள்தான் முளைப்பார்களா?

இனி மழை என்கிற அற்புதம் தோன்றாத் துணையாக இருந்து உலகைக் காக்கிறது. அப்படித்தான் தாய், தந்தையர், மனைவி, மக்கள் என்கிற குடும்பப் பாங்கும் அதாவது இல்லற தர்மமும் உலகைப் பாதுகாக்கிறது.

*மழைஇன்றி மாநிலத்தார்க்(கு)*
*இல்லை, மழையும்*
*தவம்உளார் இல்வழி*
*இல்லை — தவமும்*
*அரசன் இலாவழி*
*இல்லை; — அரசனும்*
*இல்வாழ்வான் இல்வழி*
*இல் (23)*

(4)

அடக்கம், பணிவு இரண்டும் சேர்ந்ததுதான் மரியாதை. அது இல்லை ஒருவனிடம். அப்படி என்றால் அவனை யார் மதிப்பார்கள். தள்ளு குப்பையை என்று தள்ளி விடுவார்கள் அவனை.

மற்றவர் இகழ்ச்சிக்கு அப்படி ஒரு இலக்காக இருக்கிறான் மரியாதை இல்லாதவன்.

*எள்ளல் பொருளது*
*இகழ்தல்*

இகழ்தல் - யாரையும் இகழ்ந்து பேசும் அகம்பாவம்.

---

*மாநிலத்தார் - உலகில் வாழ்பவர். தவம்உளார் - உலகுக்கு வழிகாட்டும் ஞானியர், அருளாளர். தவமும் அரசன் இலாவழி இல்லை - நாட்டில் அமைதியும் ஒழுங்கும் இருக்கும் வரைதான் செல்வாக்கோடு இருக்கும் தவம். அதற்காகத்தான் அரசன், அரசாங்கம் இவ்வளவும் சாதாரண மனிதனை, அவன் குடும்பத்தை வைத்தே நடக்கின்றன.*

*குறிப்பு - துண்டு துண்டாக மனிதக் கூட்டம் சிதறிக் கிடந்தாலும் ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாகவல்லவா இருக்கின்றன. அதுதான் உலகம்.*

எள்ளல் பொருள - மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்படுகிற பொருள் என்றால் அது இவன்தான்.

இகி ஒருவன் வறியவன்தான். கூலி வேலை செய்து பிழைக்கிறவன்தான். ஆனால் சொன்ன சொல் மாற மாட்டான். வாக்குக் கொடுத்து விட்டால் அதை நிறைவேற்ற உயிரை வேண்டுமானாலும் கொடுத்து விடுவான். அவனை மறக்குமா உலகம். குழந்தை முதல் முதியோர் வரை அவனை நினைத்து நினைத்து பெருமிதம் அடைவார்கள்.

*ஒருவனை*
*உள்ளல் பொருளது*
*உறுதிச்சொல்*

இனி அணுவையே பிளந்து இன்னும் இன்னும் உள்ளே உள்ளே என்று இறங்கிப் பார்க்கிறவர்கள் சிலர். அந்த அளவுக்கு விருத்தி ஆகி இருக்கிறது விஞ்ஞானம். விருத்தி ஆகட்டும். நல்லதுதான் அறிவின் பெருக்கம். ஆனாலும் உலகுக்கு (மனிதனுக்கு) இன்றியமையாத தேவை அமைதிதான். அச்சம் இல்லாத நிம்மதிதான். அப்படிப்பட்ட வாழ்க்கைக்காகத்தானே தவமிருந்து தவமிருந்து பிறக்கிறான் மனிதன்.

நிம்மதியும், அச்சம் இன்மையும், அமைதியும் எதிலிருந்து வரும். ஒருவருக்கொருவர் ஆதரவாய், உதவியாய் வாழ்கிறதிலிருந்துதான் பிறக்கும் அறநெறி என்னும் ஒன்று இருந்தால் போதும். அன்பும் ஆதரவும் தேடி வரும்.

*உள்அறிந்து*
*சேர்தல் பொருள*
*அறநெறி*

இனி இன்னொரு உண்மை. அது கொஞ்சம் வியப்பானதுதான். அதாவது பொய் சொல்லாதே, திருடாதே, பள்ளிக்கூடம் போ, பாடத்தைப் படி, ஒழுங்காக இரு, வம்பு தும்பு பண்ணாதே என்று உபதேசம் பண்ணுவதற்காகவா தெய்வப் புலவர் அவதாரம் எடுத்து நம்மிடையே தோன்றினார்.

உபதேசம் பண்ணத்தான் தாய் தந்தையார் இருக்கிறார்களே. போதாக்குறைக்கு மனைவியும் அதற்காகத்தானே வந்திருக்கிறாள். சமயம் கிடைக்கும் போதெல்லாம் உபதேசத்தை அவிழ்த்து

விடத்தானே செய்கிறார்கள். புத்திமதி ஒவ்வொன்றும் ராம பாணம் போல வந்து இதயத்தைத் துளை போடத்தானே செய்கின்றன. அப்படி இருக்க இதற்காகவா வரவேண்டும் திருவள்ளுவர்.

உபதேசம் செய்ய வரவில்லை திருவள்ளுவர். உண்மையைச் சொல்ல வந்தார் அவர். உண்மையை அனுபவித்த அனுபவத்தோடு தாம் பெற்ற ஆனந்தத்தையும் சேர்த்துப் பிசைந்து அமிர்தமாகக் குழைத்துக் குழைத்து திரட்டிக் கொடுக்கவல்லவா வந்தார் குறளாசிரியர்.

கம்பரோ, மாணிக்கவாசகரோ, முத்தொள்ளாயிரமோ, குறளோ இவை எல்லாம் கவி. தெய்வ சிருஷ்டி. ஒவ்வொன்றும் கலைக் கோவில். கலைக் கடவுள் எழுந்தருளி இருக்கும் சந்நிதானம்.

வெறும் உபதேச மாலை அல்ல அவை.

அப்படியானால் என்ன செய்ய வேண்டும் நாம். அது இது என்று விஷயத்தை மட்டும் தேடி அலையக் கூடாது. கவிஞரின் அனுபவம், ஆனந்தம், சிருஷ்டி இவைகளைப் பார்க்க வேண்டும் கவியில். பார்த்துப் பார்த்து அதில் கரைய வேண்டும்.

எந்த நூலைப் படித்தாலும், எத்தனை நூல் படித்தாலும் இதுதான் உண்மை. மெய்ப்பொருள் என்றால் இதுதான்.

*எள்ளல் பொருள(து)*
*இகழ்தல், ஒருவனை*
*உள்ளல் பொருள(து)*
*உறுதிச்சொல் — உள்அறிந்து*
*சேர்தல் பொருள(து)*
*அறநெறி; — பன்நூலும்*
*தேர்தல் பொருள*
*பொருள் (24)*

---

*எள்ளல் பொருள - வெறுத்து ஒதுக்கத்தக்கது. உள்ளல் பொருள - மறவாமல் மாறி மாறி நினைக்கக் கூடியது. உள் அறிந்து - உண்மையை உணர்ந்து. தேர்தல் பொருள - தெளிந்து அனுபவிக்கத்தக்கது. பொருள் - விஷயம் அல்ல. மெய்ப்பொருள். அதாவது அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்து உருவெடுத்த உண்மை.*

*உணர்ச்சிமயமான உண்மை என்பது அதுதான்.*

(5)

பசியோடு ஒட்டிப் பிறந்தவன் மனிதன். உயிரினம் முழுவதும் அப்படித்தான். பசியை ஆற்ற ஆகாரம் வேண்டும். ஆகாரத்துக்காக என்னென்ன பாடுபடுகிறது உயிரினம். மனிதன்பட்டபாடு கொஞ்சம் அல்ல.

வேட்டை ஆடி பிற உயிரைக் கொன்று அதன் ஊனை, உடம்பைத்தான், செத்த சவத்தைத்தான் உண்டு பசியாறி வந்தான் மனிதன். பல ஆயிரம் வருஷங்களாக இப்படித்தான் நடந்தது. ஆனாலும் தனக்கு வேண்டிய உணவை பூமியிலிருந்து எப்படியோ உண்டாக்கி விட்டான். அப்படியே உடுத்திக் கொள்ள உடையையும், உடைக்கு உரிய பருத்தியையும் உண்டாக்கி விட்டான்.

உடலை மறைக்க உடையை உடுத்திய பிறகே அவளிடம் மானம், வெட்கம், சூடு, சுரணை எல்லாம் வந்தது. உழுது பயிரிடப் பயிரிட அன்பு, அருள், அறநெறி எல்லாம் மனிதனிடமிருந்து தொடர்ந்து வந்தன.

எங்கே இருக்கிறான் மனிதன் என்று கேட்டால் அவன் உண்டாக்கிய தானிய தவசங்களிலும், பருத்தியிலுமே இருக்கிறான் என்று தாராளமாகச் சொல்லலாம்.

ஆன்ம தத்துவமே தவம் செய்து தவம் செய்து பெற்றதுதான் வேளாண்மை.

*வேளாண்மை*
*வேள்வியோ(டு) ஒப்ப*
*உள*

இனி அறிவுத் தத்துவம் உண்மையைப் புதிது புதிதாகக் கண்டு களிக்கிறது. அப்படிக் கண்டு களிக்கும் உண்மை ஒளிக்கு உருவம் கொடுப்பது. ஏன், வாழ்வு கொடுப்பதே கவிதான். தொன்மைக்கும் தொன்மையான பூர்வ காலத்திலிருந்து இதுதான் நிலைமை.

*தொன்மரபின்*
*வேதம் உறுவன*
*பாட்டுள*

வேதம் - மெய்ப்பொருள், சயன்ஸ்.

இனி செங்கல்பட்டு வட்டாரம், இராமாநாதபுரம், சிதம்பரம், மதுராந்தக வட்டாரம் இங்கெல்லாம் பெரிய பெரிய குளங்கள். கடல் போல் விரிந்து பரந்த ஏரிகள். அந்த ஏரிகளைப் பார்க்கப் பார்க்க என்ன தோன்றும். பாலாறு, வைகை, தாமிரபரணி, முதலிய ஆறுகள் எல்லாம் இந்த ஏரிகளுக்குள்தான் அடக்கம் என்று சொல்லவே தோன்றும்.

*யாறுள் அடங்கும்*
*குளம்உள*

நீர்வளம், நிலவளம், வேளாண்மை ஒவ்வொன்றும் நம் அறிவுக்கு அப்பாற்பட்டவை என்றே சொல்லத் தோன்றுகின்றன. கவியும் அப்படித்தான். எப்படி வந்தது கவி என்று யோசிக்க யோசிக்க ஒரே அற்புதந்தான். இனி இன்றும் நம் கண் காண ஒரு அதிசயம் இருக்கத்தானே செய்கிறது.

ஏழை, பரம ஏழை, பட்டம், பதவி, உத்தியோகம் ஒன்றும் இல்லை அவனிடம். ஆனால் ஞானம் இருக்கிறது. ஒழுக்கம் இருக்கிறது, பண்பாடு இருக்கிறது. அது வேண்டும், இது வேண்டும் என்கிற ஆசை மட்டும் இல்லை. வறுமையில் செம்மை என்பார்களே அப்படி ஒரு சீலம், சான்றாண்மை பொங்கித் ததும்புகிறது அவனிடம். சாதாரண மனிதன்தான் அவன்.

ஆனாலும் மன்னாதி மன்னர்களும் அவன் காலடியில் வந்து அமரத்தானே செய்கிறார்கள். சாதாரணப்பட்ட ஒரு ஜோசியனையே ஜமீன்தார், தொழிலதிபர் என்று தேடி வரத்தானே செய்கிறார்கள். அப்படியானால் கம்பர், வள்ளுவர், ஔவையார், மாணிக்கவாசகர் இவர்களை எல்லாம் எத்தனை எத்தனை பேர் சுற்றிச் சுற்றி வந்திருப்பார்கள். எங்கள் புகழேந்தி, எங்கள் ஒட்டக்கூத்தர் என்றல்லவா உரிமை கொண்டாடி வந்திருக்கிறார்கள் சோழ பாண்டிய அரசர்கள்.

சாமான்யப்பட்ட அரசர்களா அவர்கள். வீறுசால் மன்னர் அல்லவா அவர்கள்.

*வீறுசால்*
*மன்னர் விளையும்*
*குடிஉள*

பண்பட்ட குடிப்பிறப்பு என்றால் அதற்கு ஒரு தனி மரியாதைதான். பூமா தேவி, கங்கா தேவி, சரஸ்வதி தேவி போல் போற்றி வழிபடக்கூடிய தத்துவந்தான்.

அப்படி வழிபட்டு வந்திருக்கிறார்கள் நம்மவர்கள்.

*யாறுள் அடங்கும்*
*குளம்உள, வீறுசால்*
*மன்னர் விழையும்*
*குடிஉள — தொன்மரபின்*
*வேதம் உறுவன*
*பாட்டுள; வேளாண்மை*
*வேள்வியோ(டு) ஒப்ப*
*உள (25)*

---

*யாறு - காவிரி முதலிய ஆறுகள். வீறுசால் - வீரமும் கொற்றமும் மிக்கோங்கிய. விழையும் - விரும்பும். வேள்வியோடு ஒப்ப உள வேளாண்மை. தவம் என்றால் உழுது பயிரிடல்தான்.*

*குறிப்பு - யோகம் யாகம், தியாகம் எல்லாம் வேளாண்மையிலிருந்துதான். உழவனுடைய கொழு முனையில்தான் உலகமே தொங்கிக் கொண்டிருக்கிறது. ஞானம், பக்தி, குடும்பம், சமூகம், நாடு, அரசியல், பொருளியல், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் அத்தனைக்கும் தாயகம் உழவன்தான். கலப்பைதான். கொழுதான்.*

*இனி பொது உடைமைத் தத்துவத்தின் பிதா மகர் காரல்மார்க்ஸ். அவர் சொல்வது ''உலகில் உண்மையான அதிசயம் எது என்றால் அது இந்தியர் கண்டுபிடித்த வேளாண்மையும், அதற்குரிய கொழுவுந்தான்'' இதோடு நிற்கவில்லை மார்க்ஸ் ''எகிப்திய பெர்மிட் கோபுரங்களும், அதன் உச்சியிலுள்ள ஊசி முனைக் கலசங்களும் இந்தியர்களின் கண்டுபிடிப்பான கொழுவுக்குப் பின்னால்தான்.''*

*ஆனால் உழவர்களுக்குத் தெரியவில்லை. நாம்தான் உலகின் அச்சாணி என்று. அதுவும் ஒரு அதிசயமே.*

## குடும்பம் கோவில் என்றால் தாய் தானே தெய்வம்

கண்ணுக்கு நிகராக வேறு என்ன இருக்கிறது. கண்ணுக்கு நிகர் கண்தான். இனி பெண்ணுக்கு கணவன்தான் லட்சியம். திருமணம் ஆகிற வரை தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் என்று இவர்களையே வளைய வளையச் சுற்றி வருவாள் பெண். திருமண மேடையில் ஏறி கணவன் கையைப் பிடித்த மாத்திரத்திலேயே அவன் ஒருவன்தான் லட்சியம். கணவன் எங்கு போனாலும் அவன் பின்னால் போவாள் பெண். உற்றார், உறவினர், தோழியர் எல்லோரையும் விட்டு விட்டே அவனுடன் போவாள் பெண்.

கணவனுக்கு நிகரான உறவு வேறு எதுவும் இல்லை பெண்ணுக்கு.

எந்த ஒரு மனிதனும் வயதானால் இறப்பது உறுதிதான். இறக்கிற பொழுது மகனைக் கூப்பிடு, மகளைக் கூப்பிடு என்றுதான் சொல்வான். அவர்களை ஆசை தீர நோக்குவான். அவர்கள் கையைப் பிடிப்பான். கண்ணில் ஒத்துவான். அப்பொழுது அவன் கண் கலங்கும். ஈரத்தில் நனையும் அவன் கண்.

குழந்தைகளை விட்டு விட்டு பத்திரங்களை எடுத்து வா, நகையைக் கொண்டு வா, வங்கிக் கணக்கை எடுத்து வா என்று சொல்ல மாட்டான் தந்தை. ஒவ்வொரு மனிதனுக்கும் கண்கண்ட செல்வம் மக்கள்தான்.

இனி கருணையே உருவானவர் கடவுள். அவருடைய கருணையும் தாயன்புக்கு ஈடாகாது. தெய்வத்தைவிட ஒரு முழம் உசத்திதான் தாய்.

தாய்க்கு நிகர் தாய்தான். உலகம் முழுவதுக்கும் இதுதான் உண்மை. மனிதனுக்கு மட்டுமா எல்லாப் பிறவிகளுக்கும் இதுதான் உண்மை.

*கண்ணில் சிறந்த*
*உறுப்பில்லை, கொண்டானில்*
*துன்னிய கேளிர்*
*பிறர்இல்லை — மக்களின்*

*ஒண்மையவாய்ச் சான்ற*
*பொருள் இல்லை; — ஈன்றாளோடு*
*எண்ணக் கடவுளும்*
*இல் (26)*

(2)

கவியினிடத்து, தமிழினிடத்து ஆசை வரவேண்டும். ஆசை (ஆர்வம்) பெருகப் பெருக ஞானம் வந்து விடும். கவியை மதிக்கிறது போலவே கவிஞரையும் மதிக்கும் பண்பு வந்து விடும். அது வந்து விட்டால் போதும். கற்றறிந்த மேதைதான் அவன்.

பள்ளிக்கூடம், கலாசாலை என்று போய் அது இது என்று பாடம் எடுத்துப் படிக்கத் தேவை இல்லை அவன்.

*கற்றன்னர் கற்றார்மேல்*
*காதலர்*

இனி தாம் கெட்ட கயவன் ஒருவன். உத்தமமான சான்றோரிடமே தடித்தனமாக நடந்து கொள்கிறான். ஒருவரும் அவனைத் தட்டிக் கேட்கிறதாக இல்லை. காவல் துறை அதிகாரிகள்கூடப் பார்த்தும் பார்க்காதது போல் நடந்து கொள்கிறார்கள்.

ஒன்றிரண்டு பேர் அவர்களிடம் போய் ''என்னையா ஞாயம் இது. யாருக்கு என்ன கேடு செய்தார் அவர். அப்படி ஒதுங்கி இருக்கிறவரிடமே போய் வலியச் சண்டைக்கு இழுக்கிறானே இவன். இவனைக் கண்டிக்கக் கூடாதா நீங்கள்'' என்று கேட்டால், அவர்கள் என்ன சொலகிறார்கள்.

''இதெல்லாம் சகஜந்தான். நாம்தான் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். சரிசரி என்று போய்விட வேண்டியதுதான்'' பொறுப்பு மிக்கவர் பேசுகிற பேச்சா இது. இவரும் அந்த வர்க்கந்தான். அவனுக்கும் இவருக்கும் என்ன வித்தியாசம். உத்தியோகமும் வருமானமுந்தான் வித்தியாசம்.

---

*கொண்டாளில் - கணவனுக்கு நிகராக. துன்னிய கேளிர் - நெருங்கிய உறவினர். ஒண்மையவாய்ச் சான்ற பொருள் - மனதுக்கு அமைதி தரும் உயர்ந்த செல்வம். ஈன்றாள் - தாய். எண்ண - நினைத்துப் பார்க்கவே. கடவுளும் - எந்த ஒரு தெய்வமும். இல் - இல்லை. தாய்க்கு நிகராக எந்த ஒரு கடவுளும் இல்லை.*

*கண்ணோடா*
*செற்றன்னர் செற்றாரைச்*
*சேர்ந்தவர்*

கண்ணோடா - கண்ணோட்டம் (தரம்) இல்லாமல். செற்றன்னர் - செயல்படும் கயவனை ஒத்தவர்தான். செற்றாரைச் சேர்ந்தவர் - கயவனுக்கு வக்காலத்து வாங்குகிறவரும்.

இனி ஆண்டுக் கணக்கில் அல்லும் பகலும் கூடவே இருந்து உறவாடுகிறான் ஒருவன். நம்முடைய காரியம் ஒவ்வொன்றையும் எப்படி எல்லாமோ பிரயாசைப்பட்டு தெரிந்து கொள்கிறான். ஆனால் அவன் காரியம் எதுவானாலும் அதை மறைத்து விடுகிறான். கடுகளவுகூடக் காட்டாமல் ஒளித்துக் கொள்கிறான். கேட்டாலும் மழுப்புகிறான். அப்படி என்றால் இவனைவிட வேறு ஒற்றன் இருக்கவா செய்கிறான். வேவுகாரன் என்றால் இவன்தான்.

*ஒற்றன்னர்*
*உற்று(து) உரையாதார்*

கயவனைப் பற்றிச் சொல்லியாகி விட்டது, ஒற்றனைப் பற்றியும் சொல்லியாகி விட்டது. இனி கயவன், ஒற்றன் இருவரையும் தூக்கி அடிக்கும் அற்பன் வருகிறான்.

அற்பனுக்குப் புல்லறிவாளன் என்று பெயர். மடையனைவிட மட்டம் புல்லறிவாளன். மடையனாவது வாயைத் திறக்கப் பயப்படுவான். இவன் அப்படி இல்லை. நாற்றம் பிடித்த ஊத்த வாயை மூடவே மாட்டான்.

எப்படிச் சமாளிக்க இவனை. ஆயிரம் கயவர்களைச் சமாளிக்கலாம். பதினாயிரம் துரோகிகளைக்கூடச் சமாளித்து விடலாம். ஒரே ஒரு அற்பனை, உணர்ச்சி இல்லாத, விபரமே இல்லாத பகட்டுக்காரனைச் சமாளிக்க முடியாது.

கருநாகம் குடி இருக்கும் புற்றை ஒட்டி படுத்தால் தூக்கம் வருமா? அற்பன்கூட இருக்கும் வரை நிம்மதியே இல்லை என்கிறார் நான்மணிக்கடிகை ஆசிரியர்.

*கற்றன்னர் கற்றார்மேல்க்*
*காதலர், கண்ணோடா*
*செற்றன்னர் செற்றாரைச்*
*சேர்ந்தவர் — ஒற்றன்னர்*

*உற்ற(து) உரையாதார்; —*
*உள்கரந்து பாம்புறையும்*
*புற்றன்னர் புல்லறிவி*
*னார் (27)*

(3)

தாயைப் போலப் பிள்ளை நூலைப் போல சேலை என்று ஒரு பழமொழி. நூல் தானே உடை ஆகிறது. அதுபோலவே தாயும் தந்தையுமே குழந்தை ஆகிறார்கள். அதனால் எல்லாம் அப்படி அப்படியேதான் இருக்கும். அது ஓரளவு இயல்பான காரியந்தான்.

இனி நான் யோக்கியன் என்கிறான் ஒருவன். அவன் யோக்கியன்தான் என்பதை எப்படிக் கணக்கில் எடுப்பது. எந்த அளவுக்கு யோக்கியப் பொறுப்பு அவனிடம் உண்டு என்பதை எதை வைத்துக் கண்டுபிடிப்பது. ஒரே ஒரு வழிதான் இருக்கிறது அதற்கு. அவன் தாய் தந்தையரை வைத்தோ இல்லை.

அவன் பெற்றெடுத்த பிள்ளைகளின் போக்கை வைத்தா கண்டுபிடிக்க. அதுவும் ஓரளவுக்குத்தான்.

*பழிஇன்மை மக்களால்*
*காண்க*

இனி கையில் இருந்த பணத்தை எல்லாம் விட்டு விட்டான் ஒருவன். சொத்து சுகம் எல்லாம் போய் விட்டது. செல்வம் அவளிடமிருந்து நழுவ நழுவ அவன் சிநேகிதர்களும் ஒவ்வொருவராய் உருவ ஆரம்பித்து விட்டார்கள்.

*கிட்டத்தட்ட அநாதைதான் அவன்.*
*கையில் பசை இல்லை என்றால் சுற்றமாவது, நட்பாவது.*

*ஒருவன்*
*கெழிஇன்மை கேட்டால்*
*அறிக*

---

*குறிப்பு - கயவனையும் வஞ்சகனையும் இடையில் வைத்திருக்கிறது. முகப்பில் கலை உணர்வுள்ள பண்பாளன். முடிப்பில், கலை உணர்வே இல்லாத சலம்பல். ரசமான கட்டிடக் கலைதான்.*

கெழிஇன்மை - நாதியற்ற நிலை. கேட்டால் அறிக - செல்வத்தை இழந்து நிலை கெட்டு விட்டான் என்பதை நெற்றியில் எழுதிக் காட்டுகிற மாதிரி காட்டி விடும் நாதிஅற்றநிலை.

இனி நல்ல காரியம் எங்கு நடந்தாலும் சரி. அதற்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறான் ஒருவன். கலியுக கர்ணனாகவே வாழ்கிறான். அதன் மூலம் அவன் செல்வ வளம் தெரியும். அதைவிட நன்றாகத் தெரியும் அவனுடைய மனவளம். எல்லாவற்றுக்கும் மேலாகத் தெரியும் அவனுடைய ஆன்ம வளம். இந்த மூன்று வளமும் சேர்ந்தால்தான் ஆக்கம்.

*பொருளின்*
*இகழ்ச்சியால் ஆக்கம்*
*அறிக*

பொருளின் இகழ்ச்சி - கருமித்தனம் இல்லாமல் கைநிறைய எடுத்து பொருளை வழங்குகிற வீரம். பொதுவாக எல்லோருக்குமே பணத்தைக் கண்டால் ஒரு பயம். கொடுத்தால் குறைந்து விடுமே என்கிற பயம். வீராதி வீரனும் பணத்தின் முன் கோழை ஆகிவிடுகிறான். பயந்தாங்கொள்ளியே ஆகிறான். அப்படிப் பயப்படாமல் தைரியமாக எடுத்துக் கொடுக்கிறவன் வீரன். சாதாரண வீரன் அல்ல. ஆன்ம வீரன். கேவலம் ரூபாய், அணா, பைசாவுக்கு அவன் கட்டுப்படுவானா. பணம் சாதாரணம் என்று நினைக்கிறவன் அவன். தர்மமும் புண்ணியமுமே மேல் என்று நினைக்கிறவன் அவன். அதுதான் பொருளின் இகழ்ச்சி.

இனி அள்ளிக் கொடுக்கும் கொடையைவிட மேலானது ஒன்று இருக்கிறது. அது சாதாரண காரியம் இல்லை. மனுச காரியம் என்று சொல்லக் கூடாது அதை. தெய்வச் செயல் என்றே சொல்ல வேண்டும்.

மற்றவர்களிடம் குற்றம் குறை பல இருக்கலாம். இருக்கவே செய்யும். அந்தக் குற்றம் குறையை ஒதுக்கி விட்டு ஏதாவது நல்ல பண்பு இருக்கிறதா என்று தேடிப் பார்க்க வேண்டும். ஆர்வத்தோடு தேடினால் ஒன்றிரண்டு இருப்பது தெரியும். அரைகுறையாகக்கூட இருக்கும் அவை.

அந்த நல்ல பண்புகளையே அடிக்கடி நினைக்க வேண்டும். தப்புத் தண்டாவை நினைக்கக் கூடாது. நல்லதை மட்டும்

நினைத்து நினைத்து இன்புற வேண்டும். அதோடு விட்டுவிடக் கூடாது. அந்த நல்ல பண்புகளை அன்பர்கள், நண்பர்கள், ஊரார் என்று எல்லோரிடமும் எடுத்துச் சொல்ல வேண்டும். அதிலும் இன்பம் காண வேண்டும். அப்படி இன்பம் காண்பவனுக்கு விரோதிகள் யார். ஒருவரும் இல்லை. எல்லோரும் நண்பர்களே.

வெறும் புகழ்ச்சி அல்ல இது. சீலத்தின், சான்றான்மையின் தெய்வ உருவம் இது. மகாத்மா காந்தி போன்ற உத்தமர்களிடம் இந்தப் பண்பாடு இருந்தது. பல பேரிடம் அது வரவேண்டும்.

*பழிஇன்மை மக்களால்*
*காண்க, ஒருவன்*
*கெழிஇன்மை கேட்டால்*
*அறிக — பொருளின்*
*இகழ்ச்சியால் ஆக்கம்*
*அறிக; புகழ்ச்சியால்*
*போற்றாதார் போற்றப்*
*படும்* *(28)*

போற்றாதார் போற்றப்படும் - பகைவர்களும் கை எடுத்துக் கும்பிடுவார்கள் அவனை. காலில் விழுந்தே கும்பிடுவார்கள்.

(4)

எறும்பு முதல் யானை வரை, புல்லிலிருந்து மனிதன் வரை உயிரினங்கள் கோடான கோடி. இத்தனையிலும் மனிதன் தனி. மற்றைய எல்லாம் தனி. இனி, மனிதனுக்கும், ஏனைய பிராணிகளுக்கும் இடையில் இன்னொரு ஜென்மமும் உண்டு. அதை இனம் காண்பது சிரமம். அது விலங்கும் அல்ல. மனிதனும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்டது. அதாவது உருவத்தில் மனிதன். உணர்ச்சியில் விலங்கு.

மனிதனுக்கோ ஆகாரம், உடை இரண்டு மட்டும் அல்ல. அறிவும் வேண்டும். அதில் தெளிவும் வேண்டும். நம்பிக்கை, லட்சியம் என்கிற உறுதியும் வேண்டும். இல்லை என்றால் வாழ்க்கை இல்லை மனிதனுக்கு.

அறிவு, தெளிவு, உறுதி இவற்றுக்காகத்தான் கல்வி, கல்வி கேள்வி நிரம்பிய மனிதன் திருவிளக்குப் போன்றவன். கல்வி கேள்வி இல்லாத மூடன் சுடுகாட்டில் எரியும் பிணத் தீ போன்றவன்.

விளக்கொளியைக் கண்டால் தானாகக் குவியும் இரண்டு கையும், பிணத் தீயைப் பார்த்தால் அப்படிக் குவியுமா கை?

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்றாலும் அறிவில்லாதவனை யார் அங்கீகரிப்பார்கள். தலைப் பிள்ளையாக இருந்தாலும் அங்கீகாரம் இல்லை அவனுக்கு. அறிவுள்ள பிள்ளை இளையவன் கடைக்குட்டிதான் என்றாலும் சமூகம் அவனையே கைநீட்டி வரவேற்கும்.

*திரிஅழல் காணில்*
*தொழுப, விறகின்*
*எரிஅழல் காணின்*
*இகழ்ப — ஒருகுடியில்*
*கல்லாது மூத்தானைக்*
*கைவிட்டுக்: — கற்றான்*
*இளமைபா ராட்டும்*
*உலகு* *(29)*

(5)

மான் முதலிய பிராணிகளை அடித்துச் சாப்பிடச் சாப்பிட புலி முதலிய பிராணிகளுக்கு உடம்பில் திமிர் ஏறும், மாமிச பட்சிணிகள் அவை. இனி பசு, எருமை, மான் முதலிய பிராணிகளுக்கு மாமிசம் தேவை இல்லை. வயல் வரப்பிலும் காட்டிலும் வளர்கிற புல்லே போதும். யானை, குதிரை, காண்டாமிருகம் போன்றவைகளும் அப்படியே.

விலங்கில் அப்படி இரண்டு வகை. மனிதர்களிலும் அப்படி இரண்டு வகை உண்டு. ஒருவகைப்பட்டவர்கள் சாதாரண மக்கள். அவர்கள் உண்டு, அவர்கள் காரியம் உண்டு என்று

---

*திரிஅழல் - திரியைத் திரித்திப் போட்டு நெய் ஊற்றி ஒளி ஏற்றிய திருவிளக்கு அதன் தெய்வ ஒளி. விறகின் எரிஅழல் - பிணத் தீயின் வெளிச்சம்.*

இருக்கிறவர்கள். வம்பு தும்பு எதிலும் மாட்டிக் கொள்ள மாட்டார்கள். உழைப்பு இருந்தால் போதும். அதற்காக உணவு வேண்டும். அவ்வளவுதான். காலத்தை அப்படியே தள்ளி விடுவார்கள் அதில்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், பழக நாலு பேர், படிக்க இரண்டு ஏடு, அதுவும் இல்லை என்றால் மூத்தோரின் நல்லுரை, உழைப்பு இவை போதும் அவர்களுக்கு. நிம்மதியாய் வாழ்வார்கள். அமைதியும் ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கை அவர்கள் வாழ்க்கை. அவர்களை சாதாரண (கீழ்) மக்கள் என்கிறது உலகம்.

இன்னொரு வகைப்பட்டவர் சிலர். அவர்களுக்கு இவற்றில் எல்லாம் நிறைவு இல்லை. அகடவிகட சாமர்த்தியம் பண்ண வேண்டும். பட்டம், பதவி, அதிகாரம் எல்லாம் வேண்டும். தனக்கென்று ஒரு தோரணை வேண்டும். இவ்வளவும் இருந்தால்தான் அவர்களுக்குத் தூக்கம் வரும். ஒன்று குறைந்தாலும் ஒழிந்தது காரியம். அப்படிப்பட்டவர்களையே உயர்ந்தோர் (மேல் மக்கள்) என்கிறது உலகம்.

பிரம்ம சிருஷ்டியில் எத்தனை கோணல் மாணல்கள்.

*ஊன்உண்டு உழுவை*
*நிறம்பெறூஉம் நீர்நிலத்து!*
*புல்லினால் இன்புறூஉம்*
*காலேயம் — நெல்லின்*
*அரிசியான் இன்புறூஉம்*
*கீழ்எல்லாம்; — தாம்தம்*
*வரிசையான் இன்புறூஉம்*
*மேல்* *(30)*

---

*ஊன் - மாமிசம். உழுவை - புலி. நிறம் பெறும் - தளதளவென்று பூரிக்கும். நீர்நிலம் - நன்செய். காலேயம் - பசு முதலிய கால்நடைகள். அரிசியால் - உணவால். கீழ் - பொதுப்படையான மக்கள். தாம் தம் வரிசையால் - தம் தமக்கென்று தனித்தனி சிறப்புப் பெற்று, பட்டம், பாராட்டுப் பெற்றே. இன்புறும் மேல் - திருப்தி அடைவார்கள் சிலர். அவர்களுக்கு மேல் தட்டு மக்கள் என்று பெயர்.*

*செய்யுளின் இன்னோசைக்காக நிறம் பெறும் என்பது நிறம் பெறூஉம் எனவும், இன்புறும் என்பது இன்புறூஉம் எனவும் நீண்ட*

ஓசையில் வந்துள்ளன. விபரம் இல்லாமல் மேடு பள்ளத்தை உண்டாக்கிக் கொள்கிறதே சமுதாயம் என்னும் ஆற்றாமையே தொனிக்கிறது அதில்.

*குறிப்பு - சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன் புதுவை மாநிலம் பாண்டிச்சேரியில் கம்பர் விழா நடந்தது. அதுதான் முதல் கம்பர் விழா பாண்டிச்சேரியில். தலைசிறந்த அறிஞர் பெருமக்கள் பலர் திரு. கிருபானந்தவாரியார், சா. கணேசன், கி.வா. ஜகந்நாதன், அ.ச. ஞானசம்பந்தம், நீதிபதி மகாராஜன், கு. அருணாசலக் கவுண்டர் என்று பலர் விழாவில் பங்கேற்றார்கள். பாண்டிச்சேரியையும், அதை ஒட்டிய பகுதியையும் சேர்ந்த புலவர் பெருமக்களும் பங்கேற்றார்கள் விழாவில்.*

*அண்ணாமலை சர்வ கலாசாலையைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியரும் பங்கேற்றார். எனக்கும் அதில் பங்கேற்க நேர்ந்தது.*

*காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. வெங்கட சுப்பு ரெட்டியார், புதுவை முதலமைச்சர் அவர்களே, விழாவை முன்னின்று நடத்தினார்கள். அதனால் விழா எடுப்பாகவும் தோரணையாகவும் நடந்தது.*

*மூன்று நாள் விழாவும் இனிதே முடிந்தது. எல்லோரும் விடை பெற்றோம். விடை கொடுக்கிற பொழுது விழாக் கமிட்டியார் விழாவில் பங்கு பெற்ற பேச்சாளர் ஒவ்வொருவரிடமும் ஒரு கவரைக் கொடுத்தார்கள். கவரில் நூறு ரூபாய் நோட்டு இருந்தது. அந்தக் காலத்தில் நூறு ரூபாய் என்பது பெரிய தொகைதான்.*

*இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் உள்ளூர்க்காரர், வெளியூர்க்காரர், கிருபானந்தவாரியார் போன்ற பெரிய மேளம், புதுப் பேச்சாளர் என்கிற சின்ன மேளம் என்றெல்லாம் வேற்றுமை காட்டவில்லை விழாக் குழுவினர். எல்லோருக்கும் நூறு ரூபாய் நோட்டுத்தான்.*

*திரு. கிருபானந்தவாரியாரும், திரு. சா. கணேசனும் கம்பர் கழகத்துக்கே நன்கொடை என்று தங்கள் சன்மானத்தை வரவு வைத்து விட்டார்கள். திரு. மகாராஜன் நீதிபதி ஆகையால் அவர்களுக்கு சன்மானம் இல்லை. அதாவது வழங்கவில்லை.*

*மற்றவர்கள் அவரவர் சட்டைப் பையில் கவரை வைத்துக் கொண்டார்கள். திறந்து பார்க்கவில்லை கவரை. ஆனால் பல்கலைக் கழகப் பேராசிரியர் கவரைத் திறந்து பார்த்தார். உடனே என் கவரைப் பிரித்துக் காட்டச் சொன்னார். இரண்டிலும் நூறு நூறுதான் ரூபாய் நோட்டு.*

*அவ்வளவுதான். ஆவேசமே வந்து விட்டது பேராசிரியருக்கு. ''சாதாரண ஹைஸ்கூல் பண்டிதருக்கும் நூறு ரூபாய், பல்கலைக் கழகப் பேராசிரியருக்கும் நூறு ரூபாய். இதுதான் விழா நடத்துகிற லட்சணமா'' என்று பேயாட்டமே ஆடி விட்டார். ஆட்டத்தை அமர்த்தி அவரை வழிக்குக் கொண்டு வருவதற்குள் அவர்கள் பட்டபாடு என் என்று சொல்ல அதை ஆனால் பேராசிரியருக்கோ அவர் போட்ட ஆட்டந்தான் ஆனந்தமாக இருந்தது. இந்தப் பேயாட்டந்தான் வரிசை, மேல் மட்டத்தார் வரிசை.*

## கலைஅரசி என்றால் அது கவிதான்

மிக்க வசதியானவன்தான். ஒன்றுக்கும் குறைவில்லை அவனிடம். குடும்பமும் பெரிய குடும்பம்தான். மூன்று வேளை என்ன, நான்கு வேளை, ஐந்து வேளை என்று நாள்தோறும் சமையல் நடக்கும் அவன் இல்லத்தில். அதுமட்டுமல்ல, பழைய (சாதத்)தில் ஒரு பானையும், சுண்டக் கறியில் ஒரு சட்டியும் இருக்கும் அங்கு.

இனி பசியோடு ஒருவன் வருகிறான் அங்கு. அப்படி வருகிறவனும் மனிதன்தான். கண்ணைப் பிடுங்குகிற பசி அவனுக்கு. அந்தக் கொடுமையில் ''பசிக்கிறது ஏதாவது கொடுங்கள்'' என்கிறான் வந்தவன் வீட்டுக்காரனிடம்.

என்ன சொல்லி விரட்டுகிறான் அவனை வீட்டுக்காரன். ''ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை. ஓடு, ஓடு'' என்றே விரட்டுகிறான். பிறகு என்ன இருக்கும் உருப்படியா இவனிடம். ஈகை இருக்குமா, இரக்கம் இருக்குமா, அன்பு இருக்குமா, ஆதரவு இருக்குமா இவனிடம்? ஒன்றும் இல்லாதவனாகவே இருந்தான். அப்படியே போயும் தொலைந்தான்.

ஒன்றும் இல்லாதவன் என்றால் இவன்தான். இவனுக்குப் பெயர்தான் கருமி. அதாவது கரப்பான். (கரப்பவன்)

ஈரல் குலையைக் கவ்வுகிறது பசி என்று அலறினானே, அவனைவிட தரித்திரன் இவன் தான். அவன் மனிதன்; உண்மையைச் சொன்னான். இவன் அப்படி இல்லை. பொய்யன். விலங்கைவிடக் கொடியவன் கடுவாய்ப் புலியைவிட மோசமானவன் இவன்தான்.

*கைத்தில்லார் நல்லர்*
*காப்பாரின்*

இனி இன்னொருவன் வருகிறான் மேடைக்கு. நாடக மேடைக்குத்தான். அவன் பண்ணையாராக இருந்து வணிகனாகி, தொழிலதிபரே ஆகிவிட்டான். நல்ல வருமானம். பூர்வீக சொத்தும் ஏராளம். இவ்வளவிருந்தும் அனுபவிக்க மாட்டான். துட்டைத் தொடவே பயப்படுவான்.

செய்ய வேண்டியதைச் செய்ய மாட்டான்.

செய்தாலும் அரைகுறையாகத்தான் செய்வான். நோய் நீங்கச் செய்யும் மருத்துவத்தில்கூட அப்படித்தான். மகாலோபி இவன்.

இவனை நோக்குகையில் கையில் ஒன்றும் (தம்பிடிகூட) இல்லாத ஏழை எளியவர்கள் எவ்வளவோ மேல் (நல்லர்) என்று தானே தோன்றுகிறது.

கையில் பணம் இருந்தால் போதும். வஞ்சகம் இல்லாமல் செலவு செய்வார்கள் ஏழை எளியவர்கள். அள்ளி வீசுவார்கள். அவர்களுக்கு மனிதர்கள் வேண்டும். மனிதர்களுக்காக, மனித உறவுக்காக் கொடுத்துக் கொடுத்து உபசரிப்பார்கள். அப்படிச் செய்வானா லோபி.

வாழ்க்கையில் அனுபவம் என்றால் ஆனந்தம் என்றால் அதுதானே. அந்த ருசியை அனுபவிக்க முடியவில்லையே லோபியால்.

கை நிறைய இருந்தும் உண்ணாமல் உறங்காமல் அதை மூட்டை கட்டிக் காவல் காக்கிறவன் மகா மூடன். வசதி இல்லை என்றாலும் வறியவன் (ஏழை) எவ்வளவோ மேல்தான்.

*கைத்துண்ணா*
*வைத்தாரின் நல்லர்*
*வறியவர்*

கைத்து உண்ணா வைத்தாரின் - கையில் பணம் இருந்தும் அதை (உண்ணாமல்) அனுபவிக்காமல் கட்டி வைத்து அடுக்குகிறவனைவிட. வறியவர் நல்லர் - ஏழையே உயர்ந்தவன்.

இனி நாடகக் காட்சி மாறுகிறது. கொடிய விலங்குகள் உலவும் காடு மறைகிறது. அன்னப்புள் நீந்தி விளையாடும் தாமரைத் தடாகங்களோடு கூடிய பூங்காவனங்களும், மருத நிலப் பண்ணைகளும் வருகின்றன. எல்லாம் பகல் கனவில்தான் கவிஞரின் கற்பனைக் கனவில்தான். அதுதானே நாடகம்.

ஆங்கார வெறி கண்ணை மறைத்து விட்டது ஒருவனிடம். யாரைப் பேசுகிறோம், என்ன பேசுகிறோம் என்னும் விதரணை இல்லாமல் கன்னா பின்னா என்று திட்டுகிறான். வசவிலேயே இறங்கி விடுகிறான். அவ்வளவையும் தாங்கிக் கொள்கிறார் ஒருவர். கேட்டும் கேட்காதது போல் இருக்கிறார் அவர்.

மேலும் கீழும் குதிக்கிறானே தடியன் அவன். வீரனா, பொறுமை தளராமல் தாங்கிக் கொள்கிறாரே அவர் வீரரா. கவிஞரே சொல்லட்டும் யாரென்று.

*பைத்தெழுந்து*
*வைதாரின் நல்லர்*
*பொறுப்பவர்*

தீர்ப்பே வழங்கி விட்டார் கவிஞர். சரியான தீர்ப்பு. 'வைதாரின் நல்லர் பொறுப்பவர்' சுப்ரீம் கோர்ட் தீர்ப்பேதான்.

கடைசியாக ஒன்று.

கோவில் கட்டுவது, கோபுரம் கட்டுவது, அறக்கட்டளை நிறுவுவது இவை எல்லாம் உயர்ந்த காரியமே. ஆனாலும் நாளாக நாளாக அறநிலையங்களின் லட்சியம் பழுதுபடும். நேர்மாறான காரியங்களுக்கே லட்சியமாகி விடுவதுண்டு அவை.

அப்படி எல்லாம் அவை போய் விடாதபடி காப்பது பெரிய புண்ணியம். அறப்பணியை ஒழுங்குபடுத்தி, அப்போதைகப் போது பழுது பார்ப்பதும், அதன் உண்மை லட்சியத்தைக் கட்டிக் காப்பதும் அறநிலைகளை நிறுவியதைவிட மேலானது.

கோவில் முற்றங்கள் சாராயக் கடைகள் ஆவதையும், அன்ன சத்திரங்களும், மடங்களும், சூதாட்ட அரங்கங்கள் ஆவதையும் தடுத்து நிறுத்த வேண்டாமா. அப்படி நிறுத்த ஒருவன் வருகிறான், வந்து விட்டான் என்றால் அவனல்லவா தேவதூதன்.

*கைத்திலார் நல்லர்*
*கரப்பாரின், கைத்துண்ணா*
*வைத்தாரின் நல்லர்*
*வறியவர் — பைத்தெழுந்து*
*வைதாரின் நல்லர்*
*பொறுப்பவர்; செய்தாரின்*
*நல்லர் சிதையா*
*தவர்* *(31)*

---

*பைத்து எழுந்து - புலி போல் துள்ளிப் பாய்ந்து பிறகு பம்மியும் பிறகு ஒரே பாய்ச்சலில் பாய்ந்தும். செய்தாரின் - அறப்பணியைச் செய்து முடித்தவரைவிட. சிதையாதவர் - பழுதுபடாது காப்பவர்.*

(2)

உத்தமர் போல் நடிப்பதில் வல்லவர் கயவர். அதனால் கயவர்களுக்கு 'ஒப்பாரி' என்று பெயர்.

இனி உத்தமர்களாகிய தேவர்களை எடுத்துக் கொண்டால் நினைத்ததை நினைத்த உடனேயே செய்து முடிப்பார்கள். உலக ஷேமத்துக்காக ஒரு யாகம் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் வந்தால் போதும். உடனே செய்து முடித்து விடுவார்கள். அப்படியே தவம், தியானம், யோகம் என்று எதை நினைக்கிறார்களோ அதை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள்.

கயவர்களும் அப்படியே, ஒருவனை ஏமாற்ற வேண்டும் என்கிற நினைப்பு வந்தால் போதும். ஏமாற்றாமல் விடமாட்டார்கள். காரியத்தை உடனே செய்து முடிப்பார்கள். ஒருவனுடைய வைக்கோல் போரில் தீ வைக்க வேண்டுமா? ஒரு வீட்டில் கன்னம் போட்டு திருட வேண்டுமா, இரண்டு நண்பர்களையும் பிரித்து அவர்களை ஒருவருக்கொருவர் விரோதிகள் ஆக்க வேண்டுமா, ஒழுக்கமும் சீலமும் நிறைந்த ஒரு் பெண்ணை இல்லாததும் பொல்லாததும் சொல்லி அவனைக் கண்ணீரும் கம்பலையுமாக அலற வைக்க வேண்டுமா, இப்படிப்பட்ட எண்ணங்களே கயவன் உள்ளத்தில் உதிக்கும். உதிக்க உதிக்க உடனுக்குடன் நிறைவேற்றி விடுவார்கள் கயவர். அப்படியானால் கயவர்களும் தேவர்களை ஒத்தவர்கள்தான். நினைத்ததை நினைத்தபடி முடிப்பதில்.

உடனுக்குடன் எண்ணத்துக்குச் செயல் வடிவம் கொடுப்பதில் தேவர்கள் போல்தான் கயவர்களும்.

இப்படிச் சொன்னார் தெய்வப் புலவர்.

*தேவர் அனையர் கயவர் அவருந்தான்*
*மேவன செய்தொழுக*
*லான்*

இதற்கு மேல் எப்படி நையாண்டி பண்ணிக் காட்ட முடியும் கயவர்களை. சரியான சாட்டையடி கயவர்களுக்கு. தேள்க் கொடுக்கால் ஆன சாட்டை அடி.

இனி நையாண்டியை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் தேவர்கள் தேவர்கள்தான். கயவர்கள் கயவர்கள்தாம்.

கலைப் பண்போடு வருகிற இந்த நையாண்டிக்கு அயரனி என்று மேல் நாட்டார் பெயர் வைத்திருக்கிறார்கள். இனி கவியில் அதுவும் கவியால் ஆகிய காவியங்களில் இப்படி எல்லாம் நையாண்டி பல பல உருவங்களில் வரும். அப்படி வரும் நையாண்டிக்கு 'இதிகாச ஏளனம்' என்று பெயர்.

கயவர்களைத் தேவர்கள் போலச் சித்தரித்து கவியின் மூலம் நையாண்டி பண்ணுகிறார் குறளாசிரியர். குறளாசிரியரின் நையாண்டி இதிகாச ஏளனம்தான்.

தேவர்கள் என்றால் நம்முடன் வாழும் பண்பாடு உடையார்கள்தான். ஆன்றோர் என்றும் சான்றோரென்றும் பாராட்டப்படுகிற பண்பாளர்கள்தாம்.

ஏதோ நட்சத்திர மண்டலத்திலிருந்து குதித்து வருகிறவர் அல்லர் தேவர்.

கம்பர், குறளாசிரியர், மாணிக்கவாசகர், முத்தொள்ளாயிர ஆசிரியர், ஒளவையார், ஆண்டாள் இவர்கள் எல்லோரும் தேவர்கள்தான். புலமை மிக்க புலவர்களைத் தேவர் (தெய்வப் பிறவிகள்) என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது!

நான்மணிக்கடிகை ஆசிரியர் எப்படிச் சொல்கிறார், புலவர் பெருமக்களை.

*தேவர் அனையர்*
*புலவரும்*

அப்படியானால், அதாவது ஞானியரும் பக்தருமாகிய புலவர் (கவிஞர்) பெருமக்களே தேவர் என்றால், அவர்கள் வாழும் (குடி இருக்கும்) ஊர் தேவலோகத்து ஊர்தான். அந்த ஊரில் வாழ்கிறவர்கள் அனைவருமே தேவர்கள் மாதிரித்தான். தேவலோகத்தில் வாழ்கிறவர்களை வேறு என்ன சொல்ல.

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறத்தானே செய்யும்.

*தேவர்*
*தமர்அனையர் ஓரூர்*
*உறைவார்*

* * *

தேரழுந்தூர்க்காரர் ஒருவர் காசிக்குப் போகிறார். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் காசிக்கு வந்திருக்கிறார்கள். குழாம் குழாமாகவே வந்திருக்கிறார்கள். காசியில் பல இடங்களை கோவில் என்ன, கங்கை என்ன கடைத்தெரு என்ன பல இடங்களையும் கண்டு களிக்கிறார்கள் எல்லோரும்.

தேரழுந்தூர்க்காரரை அங்கங்கே பார்க்கிறவர்கள் 'எந்தப் பிரதேசம்' என்று கேட்கிறார்கள். 'தமிழ்நாடு' என்கிறார் இவர். தமிழ் நாட்டில் எங்கு, எந்த ஊர் என்கிறார்கள் அவர்கள். மாயவரம் பக்கம் தேரழுந்தூர் என்கிறார் இவர். ஒரே உத்சாகம் கேட்கிறவர்களுக்கு, உத்சாகத்தில் 'கம்பர், கம்பர்' என்று ஆரவாரிக்கிறார்கள். சடையப்ப வள்ளல் கம்பரை மதித்து உபசரித்த மாதிரியே வங்காளிகள், குஜராத்திகள், நேபாளிகள், ஆந்திரர், கன்னடர் உள்ளிட்ட எல்லோருமே தேரழுந்தூர் ஆசாமியை மதிக்கிறார்கள், உபசரிக்கிறார்கள். கவியிடத்தும் கவிஞரிடத்தும் அப்படி ஒரு பக்தி. இந்த பக்தி என்றும் உண்டு. எங்கும் உண்டு.

அறுபது வருடங்களுக்கு முன் இந்தியர் ஒருவர் ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சீனா என்று போனால், அவரை உங்கள் நாடு எது என்று கேட்பார்கள். வேறு எந்த நாட்டைச் சொன்னாலும் அப்படியா என்று கேட்பதோடு சரி. ஆனால் இந்தியாவிலிருந்து வருகிறேன் என்று ஒருவர் சொன்னால் போதும். "ஓ, ரவீந்திரநாத் தாகூர் பூமியா நீங்கள்" என்று அகமும் முகமும் மலர்வார்கள்.

கவிஞர் பிறந்து வளர்ந்து வாழும் மண்ணுக்கு அப்படி ஒரு மதிப்பு. அவர் வாழும் ஊரில் வாழ்கிறவர்கள் அவர் (கவிஞர்) மாதிரியேதான்.

*தேவர்*
*தமரனையர் ஓரூர்*
*உறைவார்*

இனி மகாத்மா காந்தியை இந்தியா முழுவதும், அகில உலகமுமே போற்றி உபசரித்தது. ஆனாலும் காந்தியின் அருள் ஒளியில் கரைந்து தங்களையே காந்தியிடம் ஒப்படைத்தவர் சிலர். ஜம்னால் லால் பஜாஜ் என்னும் தொழிலதிபர் அவர்களில் ஒருவர். அவரை என்னுடைய அருந்தவப் புதல்வர் என்பார் காந்தி.

இனி மகாதேவ தேசாய் என்னும் மாசறு காட்சியர் (தியாக சீலர்) ஒருவர். இந்த மெய்யடியாரை தன்னுடைய தலைமகன் என்றே மதித்தார் காந்தி மகான்.

*தமருள்ளும்*
*பெற்றன்னர் பேணி*
*வழிபடுவார்*

பெற்றன்னர் - பெற்றெடுத்த பிள்ளைகள்தான். பேணி வழிபடுவார் - ஞானியர், பக்தர், புலவர் இவர்களின் லட்சியத்தில் உறுதியாக நிற்கிறவர்கள். பேணி வழிபடுதல் என்பது அதுதான். அப்படி நிற்கிறவர்கள் அந்த லட்சிய உலகுக்கு நேரடி வாரிசு தானே.

இனி உண்மையைத் தேடிக் கண்டு அனுபவித்தவர் ரசிகமணி, டி.கே. சிதம்பரநாத முதலியார். ரசிகமணி கற்ற கல்வி அதுதான். மெய்ஞ்ஞானச் சித்து என்றால் இதுதான். இந்த ஞானச் சித்தில் கிறங்கிப் போய் பலர் ரசிகமணியின் சிஷ்யர்கள் ஆனார்கள். அவருள்ளும் ஒரு சிலர், நீதிபதி, மகாராஜன், கவிஞர், தேசிக விநாயகம் பிள்ளை ராஜாஜி, கல்கி, முதலியவர்கள் ரசிகமணியின் ஞானச் சித்தினிடத்து பக்தியே கொண்டார்கள். மோக வெறிக்கே ஆளாக்கி விட்டது அவர்களுடைய பக்தி.

பக்திப் பரவசத்தில் டி.கே.சி.யின் உண்மைச் சாயல்களை, சாயல்களின் நவநவமான ஒளியை எப்படி எல்லாம் பார்த்தார்கள் அவர்கள். பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார்கள். அவர்கள் அனுபவத்தை என்னென்று சொல்ல.

காதல் என்றால் அதுவல்லவா காதல். டி.கே.சி. மேல் அப்படிக் காதல் கொண்டவர்களும் உண்மைக் கல்வி கற்றவர்தாம். டி.கே.சி. போலவே கற்றவர்கள்தான். அதாவது உண்மையைக் கண்டு அதை வழிபடுகிறவர்கள்தான்.

*தேவர் அனையர்*
*புலவரும், தேவர்*
*தமர்அனையர் ஓரூர்*
*உறைவார் — அவருள்ளும்*
*பெற்றன்னர் பேணி*
*வழிபடுவார்; கற்றன்னர்*
*கற்றாரைக் காத(ல்)*
*லவர் (32)*

(3)

''உலகம் முழுவதும் ஒரே உலகம். மனிதர்கள் எல்லோரும் ஒரே மனிதர். ஏன் உயிரினம் முழுவதும் ஒரே உயிர்'' இதுதான் உண்மை. இந்த உண்மை ரத்தத்தோடு ரத்தமாய்க் கலக்க வேண்டும். உணர்ச்சியோடு உணர்ச்சியாய் ஒன்ற வேண்டும். அதற்காகப் பழகுகிற பழக்கந்தான் கல்வி.

அப்படி ஒரு கல்வியைக் கற்றவர்கள் நமக்குத் தெரிய மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, ரவீந்திரநாத் டாகுர் முதலிய ஒரு சிலர்தான்.

இவர்களுக்குத்தான் நல்லர், நல்லவர் என்று பெயர்.

சொந்த இடம், அன்னிய இடம் என்கிற வேற்றுமை இல்லை இவர்களிடம். எல்லா ஊரும் சொந்த ஊரே. உலகோர் அனைவரும் சொந்தக்காரர்களே. காந்தி முதலியவர்களுக் குத்தான்.

*நல்லார்க்குத் தம்ஊர்என்(று)*
*ஊரில்லை*

இனி சுவாமி விவேகானந்தர் போன்று அறநெறி (நன்னெறி)யைக் கைப்பிடித்து மற்றவர்களும் அதன் அருமை பெருமை தெரிந்து பின்பற்ற நேர்வழியில் நடக்கிறவர்களும் அப்படியே. ''யாதும் ஊரே யாவரும் கேளிர் தான்'' அவர்களுக்கும்.

*நன்னெறி*
*செல்வார்க்கும் தம்ஊர்என்(று)*
*ஊரில்லை*

இனி சிருங்கார ரசத்தில் மூழ்கிக் கிடக்கிறவர்களை எட்டாத பேரின்ப (பக்தி) உலகத்துக்குத் தூக்கிக் கொண்டு போகிறதும், பக்தி ரசத்தில் நீந்துகிறவர்களைச் செந்தூக்காகத் தூக்கி சிருங்கார ரசத்தில் அமிழ்த்துவதும் நாடக இயல்.

நாடக இயலோடு சேர்ந்தே தமிழ்ச் செய்யுள் வரும். செய்யுளுக்குள்ளே உருவம் கொடுக்கிற நாடக இயலையே தாள இயல் (ரிதும்) என்று சொல்கிறார்கள் அறிஞர் பெருமக்கள்.

அந்த நாடக இயலே, தனியாக ஒரு உடை உடுத்தி ஒரு நடை நடந்து நடனமாடி வருகிறது. அதை இனிப் பார்க்கிறோம்.

நல்லவர், வல்லவர் என்று இனம் காட்டிக் கொண்டு வந்த செய்யுள் நடை சட்டென்று பம்முகிறது. பம்மி ஒரே பாய்ச்சலில் வேறொரு உலகத்தில் கயவர் உலகத்திலேயே இறங்கிவிடுகிறது அதையே ஒரு கலக்குக் கலக்குகிறது.

அறிவும் இல்லாமல் ஒழுக்கமும் இல்லாமல் திரியும் ஜென்மங்கள் தானே கயவர் என்கிற கீழ்மக்கள். அவர்கள் எங்கு போனாலும், எங்கெங்கு போனாலும் ஒரே மாதிரி மரியாதைதான்.

சொந்த ஊரில் கிடைக்கிற விளக்கு மாற்றுப் பூசைதான் உலகின் எந்த மூலை முடுக்குக்குப் போனாலும் தப்பாமல் கிடைக்கும் அவர்களுக்கு.

அப்படியானால் கேடு கெட்ட கயவர்களுக்கும் எல்லா ஊரும் சொந்த ஊர்தான்.

*அல்லாக்*
*கடைகட்கும் தம்ஊர்என்(று)*
*ஊர்இல்லை*

இனி கை நிறைய பணம் உள்ளவர்கள் பலர். வங்கியில் வைப்புத் தொகையும் ஏராளம் அவர்களிடம். நாடு சுற்றிப் பார்க்கப் போகிறான் ஒரு செல்வந்தன். எல்லா நாடுகளிலும் செல்லுபடியாகிற சர்வதேச நிதி, சுற்றுலாக் காசோலைகளாகப் போதிய மட்டும் கையோடு வருகின்றன அவனுடன். நாலா விதத்திலும் வசதி உள்ளவன் ஆனதால் அங்கங்கே நண்பர்களும் இருக்கிறார்கள் அவனுக்கு.

அவர்களும் இடம், பொருள், ஏவல் என்று வசதியோடுதான் இருக்கிறார்கள். இனி அவன் எங்கு போனாலும் சொந்த ஊர்தானே.

*நல்லார்க்குத் தம்ஊர்என்(று)*
*ஊரில்லை, நன்நெறி*
*செல்வார்க்கும் தம்ஊரென்(று)*
*ஊரில்லை — அல்லாக்*
*கடைகட்கும் தம்ஊர்என்(று)*
*ஊரில்லை; — தம்கைத்(து)*
*உடையார்க்கும் எவ்ஊரும்*
*ஊர் (33)*

---

*கடைகள் - கீழ்மக்கள், கயவர். கைத்து உடையார் - செல்வர், புலவர், அருளாளர், போக்கிரி இவர்களை ஒரு போக்கில் போக விட்டு, செல்வந்தனிடம் வரும் போது நடையை ஒரு திருப்புத் திருப்பி ''தம்கைத்து உடையார்க்கும் எவ்ஊரும் ஊர்'' என்று சுழற்றி அடிக்கிறது தமிழ். அதாவது தமிழில் உள்ள தாள இயல்.*

(4)

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் போதும். உண்மை முன்வந்து நிற்கும். அதாவது எமன் வெளியிலிருந்து வருவது இல்லை. ஒவ்வொரு பொருளோடும் சேர்ந்தே கிடக்கிறான் எமன் இரண்டறக் கலந்தே இருக்கிறான் அவன் என்பது தெரியும்.

எமன் இல்லாத இடம் எது. படியாதவனுக்கு எமன் அவன் அறியாமை தானே.

கல்வி, கேள்வி இல்லை ஒருவனிடம். சுய அறிவும் இல்லை அவனிடம். முழுமூடன் அவன். ஆனாலும் சகலகலா வல்லவன் போலப் பகட்டுகிறான். வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க முடியுமா அவனால்? அறிஞர்கள் சேர்ந்து ஒரு பொருளை எடுத்து ஆராய்கிற சபை ஞான சபைதான். அதைப் பார்த்தால் போதும் மூடன். அவன் நாவை அரி அரி என்று அரிக்கும் தினவு. சம்பந்தம் இல்லாமல் எதை எதையோ உளறுவான்.

அவனுக்கு எமன் அவன் நாவில் தானே குடி இருக்கிறான்.

*கல்லா ஒருவற்குத்*
*தம்வாயிற்ச் சொல்கூற்றம்*

கூற்றம் - எமன். உடல் வேறு, உயிர் வேறு என்று கூறு போட்டுக் காட்டுகிறவன் அல்லவா அவன்.

* * *

எப்பேர்ப்பட்ட கனி மரம் வாழை. கற்பக விருட்சம் அல்லவா வாழை. அப்பேர்ப்பட்ட வாழைக்கு எமன் அதன் கூடவேதான் இருக்கிறது. பிரசவ வேதனை எடுத்து வெளியே தள்ளுகிறதே குலையை வாழை, அந்தக் குலைதான் வாழைக்கு எமன். பிரசவத்திலேயே (பிறப்பிலேயே இருக்கிறது இறப்பு) மரணம்.

*மெல்லிணர் வாழைக்குத்*
*தான்ஈன்ற காய்கூற்றம்*

மெல்லிணர் - குளிர்ந்த பூங்கொத்தோடு கூடிய. வாழை - வாழை மரத்துக்கே.

இனி தப்பான காரியம் செய்கிறான் ஒருவன். தொடர்ந்து செய்கிறான். தண்டிக்க நாதி இல்லை. ஆனாலும் மனச்சாட்சி என்று ஒன்று அவனிடமும் இருக்கத்தானே செய்கிறது. அந்த மனச்சாட்சிதான் அவனை ரம்பம் போட்டு அறுக்கும். தூங்க விடாது அவனை. உடனுக்குடன் அல்ல. தளர்ந்து தள்ளாடி அவன் கொட்டம் அடங்க அடங்க மனச்சாட்சி நிமிரும்.

*அல்லவை செய்வார்க்கு*
*அறம்கூற்றம்*

அல்லவை - ஒழுங்கில்லாதவை. அறம் - அறக்கடவுள். அதாவது மனச்சாட்சி.

இனி குடும்பம், வீடு, குழந்தை, மானம், மரியாதை எல்லாவற்றையும் பெண்ணிட (மனையாளிட)மே ஒப்படைத்திருக்கிறது இயற்கை.

குழந்தை என்றால் பி, ஆர், சன்ஸில் வாங்கும் பொம்மையா? தச்சன் செய்கிற சாதாரண உருப்படியா. கொஞ்சம் முன்நோக்கிப் பார்த்தால் ஒவ்வொரு குழந்தையும் எத்தனையோ ஜன்மத்து உறவைக் காட்டும். தந்தையை, தந்தைக்குத் தந்தையின் தந்தையை என்று போகப் போகப் போய்க் கொண்டே இருக்கும் தொடர்பு. பிரிக்க முடியாத தொடர்பு. பின்நோக்கிப் பார்த்தாலும் அப்படியே. ஏதோ வானிலிருந்து குதித்து வந்த, சரக்கல்ல குழந்தை.

வானத்துக்கும் பூமிக்குமாகத் தொங்கும் பாசக் கயிறல்லவா குழந்தை.

இனி, தாயின் நடவடிக்கை சரி இல்லை என்றால், ஏறுக்கு மாறாக நடக்கிறாள் தாய் என்றால் அறுபட்டு விடுமல்லவா பாசக் கயிறு. பிறகு அநாதைகள் தானே குழந்தைகள்.

குடும்பம், சமூகம், சமுதாயம் எல்லாவற்றுக்கும் எமனாகி விடுகிறாளே பெண். நடை பிசகிய பெண்.

*கல்லா ஒருவற்குத்*
*தம்வாயில்ச் சொல்கூற்றம்,*
*மெல்லிணர் வாழைக்குத்*
*தான்ஈன்ற — காய்கூற்றம்*
*அல்லவை செய்தார்க்(கு)*
*அறம்கூற்றம்; — கூற்றமே*
*இல்லத்துத் தீங்கொழுகு*
*வாள் (34)*

---

*அல்லவை செய்வார்க்கு - கேடான செயல்களையே செய்பவர்களுக்கு. இல்லத்து தீங்கொழுகுவாள் - வீட்டிலிருந்து குடும்பம் நடத்திக் கொண்டே அடாத காரியம் செய்கிற பெண். அவளுக்கு மட்டும் அவள் எமன் இல்லை. குடும்பத்துக்கே எமன் அவள்.*

*குறிப்பு - பண்பாடு, சீலம், ஞானம், பக்தி எல்லாவற்றுக்கும் ஊற்றுக் கண் குடும்பம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் குடும்பம் என அதன் கட்டுக்கோப்பு என ஒன்றை ஒன்று பற்றிக் கொண்டு உறுதிப்பட்டு வந்திருக்கின்றன. அன்பு, பொறுமை, ஆதரவு, நீதி, கண்ணியம் எல்லாம் அந்த உறுதிப்பாட்டிலிருந்துதான் வருகின்றன.*

(5)

பிறந்த ஒன்றிரண்டு நாளிலேயே கையைக் காலை ஆட்டுகிறது குழந்தை. துள்ளி எழுவதைப் போல உன்னுகிறது குழந்தை. நிற்பதற்கு முன்பே, உட்காருவதற்கு முன்பே கையை உதறுகிறது. காலை உதறுகிறது குழந்தை. ஏதோ ஆகாயத்தையே கட்டிப் பிடித்து மல்லுக் கட்டுவது போலக் கையைக் காலை உதறி வீசுகிறது குழந்தை. குழந்தையின் ஆட்டம் என்று தானே சொல்ல வேண்டும் இதை. இந்த ஆட்டந்தான் படிப்படியாக வளர்ந்து நடனம் ஆகிறது.

நடனக்கலை பண்பட்டுப் பண்பட்டு அபிநயக் கலை அதாவது பரதநாட்டியக் கலை ஆகிறது.

பரதநாட்டியத்தின் பிறப்பிடமே தமிழகம்தான். இங்கு தானே எல்லாம் வல்ல இறைவனுக்கு. கூத்தன் (நடராஜன்) என்று பெயர்.

அணு முதல் அண்டம், பேரண்டம் சகலவற்றையும் ஆட்டி வைக்கும் ஆட்டக்காரன் (கூத்தன்) அல்லவா இறைவன்.

நாடகம் நாடகம் என்று சொல்கிறோமே அதற்கு மூலம் நடனந்தான்.

இவ்வளவு சீரும் சிறப்பும் வாய்ந்த கூத்தை (நடனம், நாடகம் எல்லாவற்றையும்) இயக்குவது எது. இசைதான், கூர்ந்து பார்த்தால் கூத்து என்னும் அருங்கலையே, அதாவது தாள இயலே இசைக்குள் இருப்பது தெரியும். இசைக்குள்ளிருந்து அது வெளிப்படுவதும் தெரியும்.

தாமரைப் புஷ்பத்துள் எப்படி பிரும்மா, சரஸ்வதி, மகாலட்சுமி குடி இருக்கிறார்களோ அப்படியே இசையில் குடி இருக்கிறது கூத்து. நடனம், நாட்டியம், நாடகம் எல்லாம்.

---

*பண்பாடு என்பது அதுதான். ஆயிரம் காலத்துப் பயிர் பண்பாடு. அதற்கு நாற்றங்கால் குடும்பம். குடும்ப நலன் பெற்றெடுத்த குழந்தைதான் பண்பாடு. அது காரணமாகவே குடிப்பிறப்பு என்று பெயர் பண்பாட்டுக்கு.*

*குடிப்பிறப்புக்கு மாறாக நடந்து கொள்கிறாள் பெண் என்றால் உயிரற்ற வெறும் கூடுதானே குடும்பம்.*

*கூற்றமே*
*இல்லத்துத் தீங்கொழுகு*
*வாள்*

இனி இசையை எடுத்துக் கொண்டால் அது வெறும் சத்தந்தான். அதாவது பொருளற்ற ஒலிதான். ஓசைதான். அந்த ஒலி எப்படி அண்ட பிண்ட சராசரம் அவ்வளவையும் ஆட வைக்கிறது. அப்படி எல்லாம் ஆட்டுவதற்குரிய ஆற்றல் இசைக்கு எங்கிருந்து வந்தது.

பாடலிலிருந்துதான் பெற்றது அந்த ஆற்றலை இசை. பாடலில் உள்ள உணர்ச்சியோடு தோய்ந்து தோய்ந்து மெருகேறி விட்டது இசைக்கு. உணர்ச்சியின் வேகம், நயம் எல்லாம் மணம் மிக்க மதுரமாய் இசையோடு கலந்து விட்டது.

பாட்டை வைத்துத்தான் இசை. இசையை வைத்துத்தான் கூத்து.

*கூத்தொருவன்*
*பாடலால் பாடு*
*பெறும்*

இனி பொன் விளையும் பூமி என்றாலும் அதில் பயிர் ஏறவில்லை. பச்சை படரவில்லை என்றால் அது வெறும் மண்தான். கரிசல், செவல், வண்டல், மணல், புழுதி என்கிற மண்தான். இனி நெல், கரும்பு, வாழை வெற்றிலை என்று பயிர் பச்சையோடு காட்சி அளிக்கிற விளை நிலம் இருக்கிறதே அது எதை வைத்து அப்படித் தளதள என்று ஜொலிக்கிறது.

நீரை வைத்துத்தான். நீர் வளம் இருந்தால்தான் நிலவளம்.

*நீரான்வீ(று) எய்தும்*
*விளைநிலம்*

இனி நகரத்தை எடுத்துக் கொள்வோம். பட்டினம் என்று பாராட்டப்படுகிற துறைமுக நகரத்தையே எடுத்துக் கொள்வோம். பணப் புழக்கத்துக்குக் கேட்கவே வேண்டாம் அங்கு. கலகல என்று இருக்கும். இருபத்து நான்கு மணிநேரமும் ஒரே முழக்கந்தான். ஜே, ஜே என்று இருக்கும் துறைமுகப் பட்டிணம்.

இத்தனை ஆரவாரத்துக்கும் மூலம் எது. ஏற்றுமதிக்காக நாலா பக்கங்களிலிருந்தும் நாலா விதமான பொருள்கள் அங்கு வந்து குவியும். அப்படியே பல்வேறு பக்கங்களிலிருந்து வந்து இறக்குமதியாகும் பொருள்கள் நாலா திசைகளையும் நோக்கிச் செல்லும்.

*பண்டங்களை (பொருள்களை) வைத்துத்தான் பட்டினம்*

*நீர்வழங்கும்*
*பண்டத்தால் பாடெய்தும்*
*பட்டினம்*

விளைநிலம் நீரை வைத்துத்தான். பண்டங்களை ஏந்தி வரும் மரக்கலங்களும் நீரை (கடல் நீரை) வைத்துத்தான்.

*நீர்வழங்கும்*
*பண்டத்தால் பாடெய்தும்*
*பட்டினம்*

இனி அரசனுக்குப் பெருமை. அரசாங்கத்துக்குப் பெருமை என்பதெல்லாம் நாட்டை வைத்துத்தான். நாட்டின் செல்வ வளத்தை வைத்துத்தான்.

செல்வ வளம் சும்மா வருமா? விவசாயம், வணிகம் இவைகளின் மூலமே வரும். அப்படியானால் உழைப்பாளிகளான உழவர்களும், வணிகர்களுமே அரசாங்கத்துக்கு உயிர்.

பெரிய சாம்ராஜ்யமே ஆனாலும் மக்களையும், அவர்கள் பண்பாட்டையும் வைத்தே உயர்வு பெறும்.

*நீரான்வீ(று) எய்தும்*
*விளைநிலம், நீர்வழங்கும்*
*பண்டத்தால் பாடெய்தும்*
*பட்டினம் — கொண்டாளும்*
*நாட்டான்வீ(று) எய்துவர்*
*மன்னவர்; — கூத்தொருவன்*
*பாடலால் பாடு*
*பெறும் (35)*

---

குறிப்பு - கலை அரசி என்றால் கவிதான். கவியை வைத்துத்தான் இசை. கவியையும் இசையையும் வைத்தே நாடகம். எவ்வளவு பெரிய அற்புதம் கிடக்கிறது கவியில். அதைக் காட்ட வேண்டும். உருவம் கொடுத்தே காட்ட வேண்டும். விளை நிலம், பட்டினம், நாடு இவைகளை வைத்தே காட்டுகிறது தமிழ்.

## அழகும் ஆரோக்கியமும் மனச்சுத்தத்தில்தான்

''வரவே மாட்டேன் என்கிறீர்களே, வந்தாலும் ஒருவேளை கூடக் கை நனைக்க (சாப்பிட) மாட்டேன் என்கிறீர்களே. அப்படி என்ன பாவம் பண்ணினோம் உங்களுக்கு நாங்கள்'' இப்படி குழைந்து நெளிகிறவர்கள் பலர்.

இப்படிப்பட்ட உபசரணை அங்கங்கே ஒவ்வொருவருக்கும் நடக்கத்தான் செய்யும்.

உபசரிப்பை மட்டும் பார்க்கக் கூடாது. உபசரிப்பில் உண்மை இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும்.

உண்மையான அன்பர் என்றால் அவர் உபசரிக்கும் உபசரிப்பில் உண்மை இருக்கும். அன்பர் போல் வேஷம் போடுகிறவர் என்றால் அவர் உபசரிப்பில் நஞ்சுதான் இருக்கும். ஆலகால விஷமே மறைந்திருக்கும் அதில்.

உண்மையான அன்பர்தான் உறவினர் (தமர்).

தமரல்லார் வீட்டில் உண்ணும் உணவு பெரிய கேவலத்துக்கு அச்சாரம். கழுவ முடியாத கறை அது. பெரிய குற்றம் (கிரிமினல்) அது.

*குற்றம்*
*தமரல்லார் கையத்(து)*
*ஊண்*

குழந்தைப் பருவத்திலிருந்தே வரவேண்டும் பண்பாடு. அதற்குரிய கல்வியை இளமைப் பருவத்திலேயே பெற்றுவிட வேண்டும் குழந்தை. வயதான பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டால் உருப்படாது காரியம்.

*இளமைப் பருவத்துக்*
*கல்லாமை குற்றம்*

வசதிக்கு ஏற்றபடி தான தருமம் செய்ய வேண்டும். அதுதான் நிலைத்து நிற்கும். கையில் பசை இல்லை ஒருவனிடம். அகட விகட சாமர்த்தியத்தில் அன்னக் கொடி கட்டுகிறான். எத்தனை நாள் ஓடும் அது.

*வளம்இலாப் போழ்தத்து*
*வள்ளன்மை குற்றம்*

இனி சுற்றம் நட்பு என்கிற பலம் ஒருவனிடம் இல்லாத போது எதிரியிடம் பம்மிப் போவது நல்லது. விட்டேனா பார் என்று பாய்ந்தால் அவமானத்துக்கு ஆளாக வேண்டியதுதான். கிளைஞர் இல். போழ்தில் சினம் குற்றம்.

*இனிப் பாடலின் மொத்த வடிவம்.*
*இளமைப் பருவத்துக்*
*கல்லாமை குற்றம்*
*வளம்இலாப் போழ்தத்து*
*வள்ளன்மை — குற்றம்,*
*கிளைஞர்இல் போழ்தில்*
*சினம்குற்றம்; குற்றம்*
*தமரல்லார் கையகத்து*
*ஊண் (36)*

(2)

நல்லது கெட்டது என்பதெல்லாம் வாழ்க்கையில்தான். மனித வாழ்க்கையில்தான்.

இனி நல்லதில் பலவகை. அதுபோல் கெட்டதில் பலவகை.

கெட்டதில் உள்ள ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு விதமான கொடுமை. அத்தனை கொடுமைகளிலும் கொடூரமான கொடுமை கொலைதான். உடம்பைச் சிதைத்து உயிரைப் பறிப்பது கொடுமையிலும் கொடுமை. புனிதமான கோயில்களை இடிப்பதும் விக்ரகங்களை உடைப்பதும் போலத்தான் அது.

எங்கு நடந்தாலும் கொலை கொலைதான். எப்பொழுது நடந்தாலும் கொலை கொலைதான்.

ஆளைக் கொல்வது மட்டுமல்ல கொலை, பண்பாட்டை ஒழுக்கத்தை, கொள்கையை, உணர்ச்சியைக் கொல்வதும் கொலைதான்.

ஆளைக் கொல்வதைவிட மோசமான கொலை சமுதாயம் கட்டி வளர்த்த நம்பிக்கையை, உயிருக்குயிரான லட்சியத்தைச் சிதைப்பது. சின்னா பின்னமாக அடித்து நொறுக்குவது.

கெட்டது (தீது) என்றால் நல்லதைச் சிதைப்பதுதான். இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அடிகல்லில் வைத்து சம்மட்டியால் சதைக்கிறது மாதிரித்தானே கொலை.

*எலா இடத்தும்*
*கொலைதீது*

இனி செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் விடுவதும் கொலைதான். அதனால் வரும் கேடு ஒன்றா இரண்டா?

பத்து மாதம் வயிற்றில் வைத்துப் பாதுகாக்கிறாள் குழந்தையைத் தாய் தங்க விக்ரகத்தையே கையில் எடுத்துக் கொடுப்பது போல் பெற்றெடுத்துக் கொடுக்கிறாள் குழந்தையைத் தாய். ஊட்டி உறக்காட்டி வளர்த்தும் விடுகிறாள்.

எவ்வளவு பெரிய கடமை. அவ்வளவையும் செய்யத்தானே செய்கிறாள் தாய்.

தந்தைக்கும் தாய்போல் கடமை உண்டு. அளவில் சிறிதானாலும் கடமை என்று ஒன்று இருக்கத்தானே செய்கிறது. மளமளவென்று வளரும் குழந்தையை சீலமும், பண்பாடும் பொருந்திய மனுசனாக்க (சான்றோனாக்க) வேண்டாமா தந்தை. சான்றாண்மையோடு குழந்தையை உருவாக்குவதற்குத்தான் கல்வி. அந்தக் கல்வியை குழந்தை பெற உதவ வேண்டும் தந்தை. அதுதான் அவன் (தந்தையின்) கடமை.

அந்தக் கடமையை நிறைவேற்றவில்லை என்றால் அது கொலையைவிட மோசம்.

சான்றாண்மை இல்லை என்றால் அவன் மட்டுமா கெடுகிறான். குடும்பம், வழி வழி வருகிற பரம்பரை, சமூகமே பாழடைந்து தானே போகும்.

அப்படியானால் அது ஒரு பொல்லாத தீது (கொலை)தான்.

*மக்களைக்*
*கல்லா வளர*
*விடல்தீது*

இனி ஒரு பெண். அழகான பெண். கண்ணைப் பறிக்கிற அழகுதான். அழகே வரைந்த அழகோவியந்தான் அவள். அந்த

அழகுப் பெட்டகத்திடம் கூச்சம் இல்லை. நாணம் இல்லை. வெட்கம் இல்லவே இல்லை. ஆடுமாடு நடமாடுகிற மாதிரிதான் நடமாடுகிறாள் பருவ நங்கை.

அதைப் போல மட்டமானது உண்டா. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய், ஆயிரம் ஆயிரம் தாய்மார்கள் பேணிப் பாதுகாத்து வருகிற பெண்மையையே கேவலப்படுத்துகிற காரியந்தானே அது. அழகு என்கிற ஆனந்தக் கடவுளையே அவமானப்படுத்துகிற காரியந்தானே அது.

*அதுவும் பெரிய கொலை (தீது)தான்.*
*நல்லார்*
*நலம்தீது நாணற்று*
*நிற்பின்*

இனி இன்றைக்கொரு கட்சி, நாளைக்கொரு கட்சி என்று மாறுகிறானே, அதுவும் மார்பையும், தோளையும் தட்டியபடியே மாறுகிறானே, அவனைவிட உண்டா கொலைகாரன்.

லட்சோப லடம்சம் தொண்டர்களின் கண்ணீரிலும் செந்நீரிலும் ஒரு கொள்கையை உருவாக்கி, கேவலம் காசு பணம் என்ற உடன் விலை போவதும், பதவிக்காக லட்சியத்தின் கழுத்தை நெறிப்பதும். கண் விழி பிதுங்க நெறித்துக் கொல்வதும் எவ்வளவு பெரிய கொலை.

பிறகு எப்படி உருப்படும் சமூகம். குடிப்பிறப்பு என்கிற சமுதாயப் பண்பு சுக்கல் சுக்கலாய் நொறுங்கத்தானே செய்யும் அவன் செய்கையால்.

கொள்கையைக் கொலை செய்து ஆடம்பரத்தில் திளைக்கிறதெல்லாம், பெற்ற குழந்தையின் மண்டை நெறிபட ஆணிகட்டிய செருப்புக் காலால் மிதித்து ஓடியபடியே விலை மாதின் புன்முறுவலைக் கண்டு மயங்கும் கயமைதான்.

*எல்லா இடத்தும்*
*கொலைதீது, மக்களைக்*
*கல்லா வளர*
*விடல்தீது - நல்லார்*

*நலம்தீது நாணற்று*
*நிற்பின்; — குலம்தீது*
*கொள்கை அழிந்தக்*
*கடை (37)*

கல்லா வளரவிடல் - பண்பாடு ஒழுக்கம் இவற்றைக் கொடுப்பது கலை. கலைப் பொருளோடு உறவாட உறவாட அறிவு வரும். அதுதான் கல்வி. அப்படிப்பட்ட கல்வியைக் கொடுக்காமல் (கல்லாமல்) குழந்தையை வளர்க்கிற காரியம்.

மனவளர்ச்சியை ஒட்டியே இருக்க வேண்டும் உடல் வளர்ச்சி. அப்படி இல்லாமல் உடல் வளர்ச்சிதான் முக்கியம். அது ஒன்று போதும். மனவளர்ச்சி தேவை இல்லை என்று வளர்த்தால் அதனால் வருகிற கொடுமை சொல்லி மாளாது.

மனிதப் பண்பையே கொன்று தீர்க்கிற காரியந்தான் அது.

நல்லார் - பெண்கள். நலம் - அழகு. குலம் - குடிப்பிறப்பு. கொள்கை - கடைப்பிடித்து வந்த நம்பிக்கை.

(3)

நாடு முழுவதும் பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர் என்று எங்கு பார்த்தாலும் பள்ளிக்கூடங்கள்தான்.

தினந்தோறும் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறார்கள். காலை ஒன்பது மணிக்கே போகிறார்கள். மாலை ஐந்து மணி வரை பள்ளியில் இருக்கிறார்கள்.

---

*குறிப்பு - உயிருக்கு உயிராக உறவாடி வந்த ஒழுக்கத்தை கைவிட்டு விட்டான், உணர்ச்சியே இல்லாமல் உண்மையை (சத்தியத்தை)யே தீர்த்துக் கட்டி விட்டான் என்றால் அதனால் வருகிற பழி அவனுக்கு மட்டுமா, அவன் தாய் தந்தைக்கும்தான், பாட்டன் பூட்டனுக்குந்தான். மனைவி மக்களுக்குந்தான். பேரன் பேத்தி, உற்றார் உறவினர், நண்பர் எல்லோருக்குமேதான்.*

*அவனால் அவன் குடும்பம், குலம், சமூகம் எல்லாம் இழிவு படும்.*

*குலம்தீது*
*கொள்கை அழிந்தக்*
*கடை*

பள்ளிக்கூடத்தில் பல வகுப்புகள். ஒவ்வொரு வகுப்பிலும் சில சில பிரிவுகள். அத்தனை வகுப்புகளுக்கும், பிரிவுகளுக்கும் தனித்தனி அறைகள். விசாலமான காற்றோட்டமான அறைகள்தான் எல்லாம்.

காலை ஒன்பதரை மணிக்கு மைதானத்தில் கொடிக் கம்பத்தின் கீழ் ஆசிரியர்களும், மாணவர்களும் கூடுகிறார்கள். பிரார்த்தனை, உறுதி. மொழி, நாட்டுப்பண், கொடி வணக்கம் என்றெல்லாம் முறைப்படி நடக்கின்றன.

அது முடிந்ததும் அவரவர் வகுப்புக்கும் பிரிவுக்கும் அறைக்குள் வருகிறார்கள் மாணவர்கள். பெஞ்சு, மேஜை எல்லாம் வசதிதான்.

காலை மணி பத்திலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை நான்கு பாட வேளைகள். பிறகு பிற்பகல் இரண்டு மணி முதல் நான்கரை மணி வரை மூன்று பாட வேளைகள். முக்கால் முக்கால் மணிநேரம் ஒவ்வொரு பாட வேளையும்.

தமிழ், ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், அறிவியல், சமூக இயல் என்று பாடப் பிரிவுகள். ஒவ்வொரு பாடத்துக்கும் ஒவ்வொரு ஆசிரியர் வருகிறார்.

நாடக மேடையில் ராஜா, ராணி, மந்திரி, தளகர்த்தன், ஒற்றன், வில்லன் என்று வந்து வந்து போவார்கள். அப்படியே ஆசிரியர்களும் முக்கால் மணிநேரத்துக்கு ஒரு தரம் வருகிறார்கள். போகிறார்கள்.

மாணவர் கையிலிருக்கும் புத்தகந்தான் ஆசிரியர் கையிலும், அதைத்தான் படித்துக் கொண்டு வருகிறார் ஆசிரியர். படித்ததையே சொல்கிறார். அவர் சொல்வதையே இவர் (மாணவர்)கள் கேட்கிறார்கள். ஒரே ஒரு வித்தியாசம், இன்று சொல்லிக் கொடுத்ததை இன்றே அவர் மறந்து விடுவார். இவர்கள் மறக்க மாட்டார்கள்.

'இளைமையில் கல்' என்று கருங்கல்லாய் அழுத்தி விடுகிறது குழந்தைகளைப் பள்ளிக்கூடம்.

மணி நான்கரை எப்பொழுது வருகிறது. டாங்கா மணியை எப்பொழுது அடிப்பான் சேவகன் என்று துடித்துக் கொண்டிருப்பார்கள். மணியோசை கேட்டதும் ஆசிரியர், மாணவர் எல்லோருமே ஓடிவிடுவார்கள் பள்ளியை விட்டு.

வீடு நோக்கி மாணவர்கள் ஓடி வரும் பொழுதுதான் ஆசிரியர் சொல்லிக் கொடுத்த பாடம், கல்லாய் அழுத்தியது, நெஞ்சை விட்டு அகலும்.

புத்தகத்தில் இருந்தது மாணவர் நெஞ்சில் எப்படி ஏறியது, எப்படி இறங்கியது என்பதைச் சோதிக்கவே தேர்வுகள். அதற்கேற்ற மதிப்பெண்கள்.

பட்டங்கள், பதவிகள் எல்லாம் அதை அதை அனுசரித்தே.

குழந்தைப் பருவத்திலிருந்து விடலை (வாலிப)ப் பருவம் முடிகிற வரைக்கும், ஒவ்வொருவருக்கும் விதித்த விதி இதுதான்.

இதையே கல்வி என்கிறோம். உலகம் பூராவும் ஒத்துப் பேசி அப்படியே சொல்கிறது. பள்ளிக்கூடம், புத்தகம், பரீட்சை என்று இருக்கிற வரை, இவைதான் கல்வி என்று இருக்கிற வரை வருமா புத்தி.

புத்தி இருந்தால், அறிவிருந்தால் உண்மையைத் தேட வேண்டும், உணர்ச்சியைப் பார்க்க வேண்டும், குடும்பம், சமூகம், ஆன்றோர், சான்றோர் இவர்களுடைய வாய் மொழியைக் கேட்க வேண்டும். அவர்களுடைய காரியங்களை நோக்க வேண்டும். அவை பற்றிச் சிந்திக்க வேண்டும். அடிக்கடி சிந்திக்க வேண்டும். என்று ஆசை வரும். அறிஞர்களின் பொன்னுரைகளை, அவர்களுடைய அனுபவங்களை, நூல்கள் வாயிலாகப் படிக்க வேண்டும். தானாகவே படிக்க வேண்டும். சந்தேகம் வந்தால் தக்கவர்களிடம் கேட்டுத் தெரிய வேண்டும் என்று துடியாய் துடிக்கும் ஆசை. அப்படி ஆசைபெருகப் பெருகப் படிப்பதுதான் படிப்பு. இன்னொருவர் சொல்லிக் கொடுக்கிறதை மனனம் பண்ணுவது என்ன படிப்பு.

அப்படிக் கல்லாது கற்கும் கல்வியில் அல்லவா வரும் ஞானம். அந்த ஞானம் வந்தால்தான் பக்தி வரும்.

பக்தியின் ஊற்றுக் கண்ணைத் திறந்துவிட வேண்டும் (ஞானம்) அறிவு.

ஆசாரம் என்கிற ஒழுக்கமும், பண்பாடும், பள்ளிக்கூடத்திலோ, பாடப் புத்தகத்திலோ இல்லை. இருப்பதெல்லாம் வெறுப்பும், கசப்பும், எரிச்சலுந்தான். அதனால்தான் நாட்டில் அலௌகீகம் பெருகுகிறது.

*நான்மணிக்கடிகை ஆசிரியர் சொல்கிறார்.*
*ஆசாரம் என்பது*
*கல்வி*

மனிதனாகப் பிறந்த அத்தனை பேருக்கும், ஒவ்வொருவருக்கும் படிப்பு என்றால் ஆசாரம் (ஒழுங்கு, பண்பாடு)தான். அதில் தானே அழகு, அதில் தானே ஆனந்தம், ஒற்றுமை, ஆதரவு, வீரம், தியாகம் என்றெல்லாம் சமுதாயம் உயர்ந்தோங்க அதுதானே வேண்டும்.

* * *

இனி மனிதன் என்றால் உற்சாகம் வேண்டும். ஊக்கம் வேண்டும். இரண்டும் உழைப்பில்தான் உள்ளன.

செல்வத்தை வைத்து எத்தனையோ நல்ல காரியம் செய்யலாம்.

ருசியான உணவு, தூய்மையான உடை, அன்பான மனைவி, ஆசாரமான பிள்ளைகள், அழகான வீடு, ஆரோக்கியமான உடம்பு, உத்தமமான நண்பர்கள், நல்ல தூக்கம், நல்ல எண்ணம், நாலு பேருடன் பேசிப் பழகும் இனிமை, இவை தானே வாழ்க்கை. இந்த வாழ்க்கையைவிட உயர்ந்தது என்ன இருக்கிறது உலகில்.

இப்படிப்பட்ட ஒரு அருங்கலை வாழ்வுக்கு ஆனந்த வாழ்வுக்கு உதவியாக இருக்க வேண்டும் செல்வம். அதுதான் அறம் சேர்ந்த போகம்.

*அறம்சேர்ந்த*
*போகம் உடைமை*
*பொருள்ஆட்சி*

போகம் உடைமை - அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்த வளம். ஆனந்த வாழ்வு. அது அறவழியில் உருவாக வேண்டும். அப்படி உருவாகும் போகந்தான் செல்வம். திருமகள் கடாட்சம்.

* * *

இனி எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும், பிரியமாக இருக்க வேண்டும். மரியாதையாகவும் இருக்க வேண்டும். அதற்காக நேர்மை தவறக் கூடாது. நீதி பிசகக் கூடாது.

ஒருவரிடம் என்னதான் அன்பிருந்தாலும் அவர் செயல் தவறு என்றால் கண்டிக்க வேண்டியதுதான். தண்டிக்க வேண்டியதைத் தயங்காமல் தண்டிக்க வேண்டும். அதுதான் நீதி.

நீதியை மதிக்கிறது என்றால் அவர் இவர் என்று பார்க்கக் கூடாது. உறுதியாகவே (கடினமாகவே) இருக்க வேண்டும் நெறிமுறையில்.

தாட்சண்யம் (கண்ணோட்டம்) இல்லை இவரிடம் என்று நான்கு பேர் குறைபட்டுக் கொள்ளலாம். அதைப் பொருட்படுத்தக் கூடாது. நீதி இருந்தால் போதும். அறம் சேர்ந்த போகம் அதுவுந்தான்.

*யார்மாட்டும்*
*கண்ணோட்டம் இன்மை*
*முறைமை*

எழுபது வருடங்களுக்கு முன் திருநெல்வேலி மாவட்டத்துக்கு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவர் சுப்பையா பிள்ளை. அவர் மேல் புகார். காந்தி அடிகளிடமே போனது புகார்.

வரவு செலவில் ஊழல். கணக்கு வழக்கில் கள்ளத்தனம் என்று புகார்.

கணக்குப் புத்தகங்களோடு வார்தாவுக்கு வரும்படி சுப்பையா பிள்ளைக்குக் கடிதம் எழுதினார் காந்தி.

சுப்பையா பிள்ளையும் போனார். வரிவிடாமல் கணக்குப் பார்க்கப்பட்டது. குற்றம் குறை ஒன்றும் இல்லை கணக்கில் என்று தெரிந்தது காந்திக்கு.

சுப்பையா பிள்ளையைப் பாராட்டினார் காந்தி. ஊருக்குப் போகலாம் என்று அனுமதியும் வழங்கினார் காந்தி மகான்.

சுப்பையா பிள்ளையிடம் கையில் காசில்லை. ரயில் டிக்கட்டுக்கே பணம் இல்லை. காலைத் தேய்த்தார் சுப்பையா பிள்ளை. என்னவென்று கேட்டார் மகாத்மா. விபரத்தைச் சொன்னார் சுப்பையா பிள்ளை.

“பணம் இல்லை என்றால் என்ன, கால் இருக்கத்தானே செய்கிறது என்று தன் காலையே தொட்டுக் காட்டினார் மகாத்மா.

மேலும் சொன்னார் காந்தி மகான். நடந்து போனால் பல ஊர்களையும் பார்க்கலாம். பல திறப்பட்ட மக்களையும் சந்திக்கலாம். ஒவ்வொரு ஊரிலும் ஏதாவது ஒரு குறை இருக்கும். அதை நிவர்த்திக்க வேண்டும்.

தெருவில் உள்ள குப்பை கூளங்களை அப்புறப்படுத்தி சுத்தம் செய்யலாம். பொறாமை, சண்டை, சோம்பல் என்று இருக்கும் கிராமங்களில். மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கிக் கோளாறுகளைக் களையலாம்.

இப்படி எத்தனையோ விதத்தில் உதவலாம் மக்களுக்கு.

உண்மையான தொண்டை மதிப்பார்கள் மக்கள். தொண்டு செய்கிறவனைத்தான் நம்புவார்கள் மக்கள்.

நம்பிக்கை வந்த பிறகுதானே தேச விடுதலை பற்றி நாம் சொல்வது அவர்களுக்கு விளங்கும் சத்தியாக்கிரகம், அஹிம்சை எல்லாம் அப்பொழுது தானே புரியும் அவர்களுக்கு.

அதுமட்டுமல்ல தொண்டு செய்யும் உங்களையும் ஊர் ஊருக்கு மதித்து உபசரிப்பார்கள் மக்கள். நல்ல தேச சேவை இது.

இப்படிச் சொன்னார் காந்தி மகான். ''அதுமட்டுமல்ல, பாரத நாட்டின் சீலமும் பண்பாடும் தேசாந்திரிகளின் சேவையாலும், உபதேசத்தாலும் கட்டப்பட்டதுதான். யாரோ ஒருத்தர் கனவில் கண்ட காட்சி அல்ல பாரதத்தின் பண்பும் சீலமும் என்று முத்தாய்ப்பு வைத்தார் காந்தி மகான்.

சுப்பையா பிள்ளைக்கு உற்சாகம் வந்து விட்டது. அப்படியே செய்கிறேன் என்று விடை பெற்றார். நடையையும் கட்டினார்.

இவ்வளவையும் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். தீனபந்து ஆண்ட்ரூஸ். சுப்பையா பிள்ளையின் பின்னாடியே வந்தார். சிறிது தூரம் வந்தபின் ஒரு வளைவு. அதில் சுப்பையா பிள்ளையை நிறுத்தினார் ஆண்ட்ரூஸ். சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்தார். செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று சுப்பையா பிள்ளையிடம் கொடுத்தார்.

வாங்குவதற்கு மிகவும் கூச்சப்பட்டார் சுப்பையா பிள்ளை. வேண்டாம் பணம் என்று பணிவோடு சொன்னார் பிள்ளை.

ஆனால் ஆண்ட்ரூஸ் விடவில்லை. வாங்கித்தான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினார். தயங்கித் தயங்கியே வாங்கினார் சுப்பையா பிள்ளை. ஏதோ தவறு செய்வது போலவே இருந்தது சுப்பையா பிள்ளைக்கு.

சுப்பையா பிள்ளை நன்றி கூறி நடந்தார். ஆண்ட்ரூஸும் காந்தியின் பக்கம் வந்து அமர்ந்தார்.

தொடர்ந்து ராட்டையைச் சுற்றிக் கொண்டிருந்த காந்திஜி ஒன்றும் பேசவில்லை ஐந்து நிமிஷம் வரை. பிறகு சிரித்துக் கொண்டே தீனபந்துவிடம் கேட்டார். "எவ்வளவு ரூபாய் கொடுத்தீர்கள் சுப்பையாவிடம்" என்று.

பத்து ரூபாய் என்றார் தீனபந்து. அதைக் கேட்ட காந்திஜி சிரித்துக் கொண்டே ஆண்ட்ரூஸிடம் சொன்னார். "உங்களிடம் பணம் இருக்கிறது. என்னிடம் ஒரு தம்பிடி இல்லை. என்னிடம் இருப்பதெல்லாம் கட்சிப் பணந்தான். அதை என் இஷ்டப்படி எப்படிச் செலவு செய்ய முடியும் நான் என்று.

*யார்மாட்டும்*
*கண்ணோட்டம் இன்மை*
*முறைமை*

முறைமை தவறாத பலர் கவிஞர் காலத்தில் இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களோடு பழகி உறவாடி ஆனந்தத்தில் திளைத்திருக்கிறார் கவிஞர் என்றும் தெரிகிறது.

அவர்கள் மறுபடி எப்பொழுது வருவார்கள்!

* * *

இனி தம்பி விபீஷணனைப் பற்றி ராமனிடம் வேண்டுகோள் விடுக்கிறான் கும்பகர்ணன்.

ராமனுடைய அம்பால்அடிபட்டுச் சிதைந்து உயிர் போகும் வேளையில், ரத்த வெள்ளத்தில் கிடந்தபடியே முறையிடுகிறான் கும்பகர்ணன். எப்படி?

*நீதியால் வந்த*
*நெடுந்தரும நெறிஅல்லால்*
*சாதியால் வந்தசிறு*
*நெறிஅறியான் என்தம்பி*

‘‘அதனால் விபீஷணனைக் காக்க வேண்டும். அது உன் பொறுப்பு. ராவணன் கண்ணில் அவன் படக்கூடாது, இப்படி வேண்டுகிறான் கும்பகர்ணன்.

கும்பகர்ணன் குறிப்பிடுகிற நீதி, நேர்மை, நெடுந் தரும நெறி எங்கிருக்கிறது. வானத்திலிருந்து குதித்தா வருகிறது அது.

கருணை என்கிற எல்லை அற்ற அருளிலிருந்தே பிறக்கிறது அது.

எல்லாம் ஒன்று. சகலமும் இறைவனுடைய காரியம். அவனும் மனிதன், இவனும் மனிதன், நம்மைப் போலத்தான் பிறரும் என்னும் ஒருமை உணர்ச்சியில்தான். ஒன்றாகக் காணும் காட்சியில்தான் இருக்கிறது நேர்மை. நீதி, கருணை அத்தனையும்.

அதைப் பார்க்க வேண்டும். கண்கொண்டு பார்ப்பது போல் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கிற பார்வைக்கு உள்ளுணர்வு என்று பெயர். உள் ஒளி என்றும் சொல்வார்கள். நான்மணிக்கடிகை ஆசிரியர் உள்நாட்டம் என்கிறார்.

உண்மையைக் கண்டு களிக்கிற உள்நாட்டம் இல்லை என்றால் நேர்மையாவது, நீதியாவது.

*ஆசாரம் என்பது*
*கல்வி, அறம்சார்ந்த*
*போகம் உடைமை*
*பொருள்ஆட்சி — யார்கண்ணும்*
*கண்ணோட்டம் இன்மை*
*முறைமை; — தெரிந்தாள்வான்*
*உள்நாட்டம் இல்வழி*
*இல்* *(38)*

---

*அறம் சார்ந்த போகம் - நெறிமுறை பிசகாத இன்ப வாழ்க்கை. பொருள் ஆட்சி - செல்வத்தை முறைவழிப்படுத்தும் பண்பாளன். செல்வ நாயக(ம்)ன் என்றால் அவன்தான். தெரிந்து ஆள்வான் - எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்பவனுக்கு. உள்நாட்டம் - உண்மையை நேருக்கு நேராகப் பார்க்கும் பார்வை. உள்ளுணர்வு. இல்வழிஇல் - அது இல்லை என்றால் என்ன இருக்கும் மிச்சம் ஒருவனிடம்.*

*சோளக் காட்டுப் பொம்மைதான் அவன்.*

மகாத்மா காந்தியிடம் அமெரிக்க அறிஞர் ஒருவர் கீழ்க்கண்டபடி ஒரு முறை கேட்டார். ''வாழ்க்கையில் என்றைக்காவது ஒரு நாளோ, பல நாளோ கவலைப்பட்டிருக்க வேண்டும் மனிதன். அப்படி நீங்கள் கவலைப்பட்ட நாள் ஞாபகம் இருக்கிறதா, எது பற்றிய கவலை என்பதும் நினைவிருக்கிறதா'' என்று.

கடகடவென்று சிரித்தார் காந்தி. அப்படி அவர் சிரிப்பது வழக்கம் இல்லை. ஆனாலும் அப்படி வந்து விட்டது சிரிப்பு.

சிரித்தபடியே சொன்னார். ''எனக்கா? கவலையா? என்ன புதிதாக இருக்கிறதே இது'' என்று. ஆனால் அறிஞர் விடவில்லை. ''கடவுளே மனிதனாக அவதாரம் எடுத்தாலும் ஒரு நாளாவது கவலைப்பட்டுத்தான் ஆகவேண்டும். யாரையும் விடாது அது. இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். யோசித்து ஞாபகப்படுத்திப் பாருங்கள்'' என்று வேண்டிக் கொண்டார்.

மறுநாளே அறிஞரை அழைத்தார் காந்தி. ''ஞாபகம் வந்து விட்டது. ஒரு நாள் அல்ல பல நாள் நினைத்து நினைத்து கஷ்டப்பட்டிருக்கிறேன். அது இதுதான். இந்தியா இப்பொழுது அடிமைப்பட்டுக் கிடக்கிறது. அதனால் படித்தவர் தொகை இங்கு குறைவுதான். இந்தியாவில் எத்தனையோ கொடுமைகளும், பித்தலாட்டங்களும் நடந்து கொண்டே இருக்கன்றன. அத்தனைக்கும் மூல காரணம் பிரிட்டிஷ் அரசு கொடுத்த அடிமைக் கல்விதான். சுயநலத்துக்காகவே படித்தவர்களிடம் அன்பு எப்படி இருக்கும், நேர்மை எப்படி இருக்கும், உண்மை எப்படி இருக்கும்.

உணர்ச்சியே இல்லாத செத்த எருமை மாட்டுத் தோலாகி விட்டார்கள் படித்தவர்கள். இவர்களிடம் தேச பக்தியும் இல்லை. தெய்வ பக்தியும் இல்லை.

இனி இந்தியா விடுதலை பெறுவது உறுதி. விடுதலை பெற்ற இந்தியாவில் இந்தப் படிப்புப் படிக்கிறவர் கூட்டம் பன்மடங்கு பெருகி விடும்.

குறைந்த எண்ணிக்கையில் உள்ள இவர்களின் கொடுமையே இப்படி என்றால் ஒன்றுக்குப் பத்தாய், பத்துக்கு நூறாய்ப் பெருகும் படிப்பாளிகளால் என்ன பாடுபடும் இந்தியா.

இதை நினைத்தால் என் தூக்கமே போய் விடுகிறது. அவஸ்தைப்படுகிறேன்.''

இப்படிச் சொன்னார் காந்தி மகான் என்கிற அந்தத் தர்மப் பிரபு. அவர் விரும்பியது ஆசாரக் கல்வி. அதுதான் ஆதாரக் கல்வி. அது என்று வருமோ? நமக்குத் தெரியாது. கடவுளுக்குத்தான் தெரியும் அது.

## *ஆசாரம் என்பது கல்வி*

குறிப்பு - மாவட்ட நீதிபதி ஒருவர். நீதித்துறையில் மிக்க அனுபவம் அவருக்கு. கலை உணர்வு மிக்கவர். பண்பாடு நிறைந்தவர். பளிங்கு மாதிரி சுத்தமான மனது அவர் மனது. நேர்மைக்கு மாறுபட்ட எதையும் நினைத்துக்கூடப் பார்க்காது அந்தப் பொன் மனம். பூமணம் கமழும் பொன் மனம். வழக்கறிஞராக இருந்து மாவட்ட முன்சீப்பாகி, படிப்படியாக உயர்ந்து மாவட்ட நீதிபதியானவர். அவர் பதவி ஏற்றவுடன் ஒரு பயங்கரமான கொலை வழக்காக விசாரித்தார். தீர்ப்புக் கூறவேண்டி வந்தது.

தூக்குத் தண்டனைதான் தீர்ப்பு. அதை ஜட்ஜ்மெண்டாக எழுத வேண்டுமே. எழுதுவதற்குள் அவன் (குற்றவாளி) தூக்குக் கயிற்றில் தொங்குகிறதே தெரிந்தது இவருக்கு. அவன் குடும்பமே நிர்க்கதியாகி, குழந்தைகள் அநாதைகளாய் அலைகிற காட்சியே தெரிந்தது இவருக்கு.

பதறிப் போனார் நீதிபதி. காய்ச்சல் வந்தது. அதோடு நின்றதா? வயிற்றோட்டமே வந்து விட்டது. கையும் காலும் குழலாடி விட்டன நீதிபதிக்கு. குடும்பத்தார் எல்லோரும் பதறிப் போனார்கள். இந்த நிலையில் தற்செயலாக நீதிபதி வீட்டுக்கு விருந்தினனாகப் போக நேர்ந்தது. நிலைமையைப் பார்க்கப் பார்க்க பரிதாபமாகவே இருந்தது.

ஆனாலும் யோசனை ஒன்று வந்தது. ''இப்படி ஒரு இக்கட்டான நிலை வந்தால் ரசிகமணி இடம் நாம் போவோம். ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்து அதற்கு விளக்கம் கொடுப்பார்கள் ரசிகமணி. அதை வைத்து ஒரு பாட்டையும் பாடிப் பாடி அனுபவிப்பார்கள். எப்படியோ நம் சிக்கல் விடுபட்டு விடும். வழி பிறந்துவிடும் நமக்கு.

இப்பொழுது டி.கே.சி. இல்லை. அவர்களின் பிரதிநிதி போல ராஜாஜி இருக்கிறார்கள். அவர்களிடம் 'என்ன வழி இதற்கு' என்று எழுதிக் கேளுங்கள். அவர்கள் வழிகாட்டுவார்கள்'' என்று சொல்ல நேர்ந்தது.

நீதிபதிக்கு ஒரே மகிழ்ச்சி. விப்ரமாகக் கடிதம் எழுதி விட்டார் நீதிபதி.

இரண்டு நாளில் பதிலும் வந்து விட்டது. பொதுவாக ராஜாஜி கார்டுதான் போடுவார். இது என்னவோ கவரில் வந்தது. கவருக்குள் சிறு கடிதம். பத்து வரியில்தான் கடிதம்.

''நீங்கள் தூக்கில் தொங்கப் போகும் குற்றவாளியை மட்டும் பார்க்கிறீர்கள். அது சட்டத்தை மட்டும் பார்க்கிற காரியம். அவனைப் பார்க்கிறது போலவே அவனால் பாதிக்கப்பட்டவனையும் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் சட்டத்தை இயக்குகிற நீதி தெரியும். கருணை தெரியும்.

அப்படி இரண்டு பேரையும் சேர்த்துப் பார்க்கிறதின் மூலம் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தெளிவு பிறந்து விடும்.

அப்பொழுதுதான் ''நாம் நீதி வழங்கும் நீதிபதி அல்ல. நீதிதான் நீதியை வழங்குகிறது என்பது விளங்கி விடும்.''

இப்படி எழுதி இருந்தார் ராஜாஜி. காய்ச்சல் ஓடிவிட்டது. வயிற்றோட்டம் நின்று விட்டது. முறைப்படி நடந்தது காரியம் உண்மையை உணர்ச்சியோடு பார்க்கிற பார்வையில் இருக்கிறது ஒளி. அதுதானே உள்ளொளி என்னும் உள்நாட்டம். அது இல்லை என்றால் வேறு என்ன இருந்தும் பிரயோசனம் இல்லைதான்.

*தெரிந்தாள்வான்*
*உள்நாட்டம் இல்வழி*
*இல்*

(4)

செல்வ வளம் பலவகை. லட்சாதிபதி கோடீஸ்வரன் என்று பலவகை. ஆனால் அத்தனை வகைச் செல்வந்தர்களும் ஒரே மாதிரி இன்பத்தையே அனுபவிக்கிறார்கள். இன்பத்தில் ஏது பிரிவு.

வறுமையிலும் பலவகை உண்டு. கார் வாங்கப் பணம் இல்லாத நிலை ஒருவகை வறுமை. கஞ்சிக்குப் போட

உப்பில்லாத நிலை, உப்பு வாங்கக்கூடப் பணம் இல்லாத நிலை வேறொரு வகை வறுமை. அவன் படுகிற துயரம் வேறு. இவன் படுகிற துயரம் வேறு.

உப்பு, புளி, மிளகு, வற்றல்கூட வாங்க வசதி அற்றவன் படும் இன்னலை அமெரிக்காவுக்கு ஆகாய விமானத்தில் போய்வர முடியவில்லையே என்று ஏங்குகிறவனால் உணர முடியாது.

ஒவ்வொரு ஏழையும் ஒவ்வொரு விதமாகக் கஷ்டப்படுகிறான். வசதி படைத்தவர் எல்லோரும் ஒரே மாதிரி இன்பத்தில் திளைக்கின்றனர்.

துன்பம் (இடும்பை) பல. இன்பம் ஒன்று.

* * *

குடிகாரனுக்குத்தானே தெரியும் சாராயம் உள்ளே போய்' செய்கிற காரியம். கள்ளின் வேகம் மற்றவர்களுக்குத் தெரியவா செய்யும்.

*கள்ளின் இடும்பை*
*களிஅறியும்*

இடும்பை - துன்பம். அது அழுத்துகிற அழுத்தம். களி - குடிகாரன்.

* * *

பறவைகள் பல. எத்தனையோ பிரிவுகள் அவற்றில். எல்லாப் பறவைகளும் தண்ணீர் குடிக்கும். தண்ணீரை இரைத்து மேலே விட்டுக் குளிக்கவும் செய்யும். ஆனால் தண்ணீரிலேயே நீந்தி வாழ்வது அன்னப் பறவைதான். அதைச் சேர்ந்தது தானே வாத்து முதலியனவும்.

இனி அன்னப் பறவைக்கு புள்ளினுள் ஓங்கல் (பறவை அரசன்) என்று பெயர். தண்ணீரோடு சேர்ந்தே வாழ்வதால் நீரின் ஓட்டம் (நீரோட்டம், அதாவது தரம்) இன்னதென்று தெரியும்.

பெரிய பெரிய அணை நீரிலோ, ஏரியிலோ, ஆற்றிலோ நீந்தி வாழாது அன்னம், கடல் பக்கம் போகவே போகாது அன்னம். சிறு சிறு பொய்கை, தடாகம், குட்டம், குளம் இவையே அன்னம் உல்லாசப் படகு விடும் நீரகம்.

இந்தக் குளம் குட்டைகள், தடாகம், பொய்கைகளும் கெட்டுப் போனால், அசுத்தம் ஆகிவிட்டால் வேறு இடம் தேடிப் போய் விடும் அன்னம்.

நீரின் போக்கு என்ன, நிலை என்ன என்பது அதனோடு உறவு கொண்ட அன்னப் புள்ளுக்குத்தானே தெரியும். மற்றப்படி காக்காய், குருவிக்குத் தெரியவா செய்கிறது அது.

*நீர்இடும்பை*
*புள்ளினுள் ஓங்கல்*
*அறியும்*

நீர் இடும்பை - தண்ணீரின் தரக்கேடு. அதனால் வரும் துன்பம். புள்ளினுள் ஓங்கல் - பறவை இனத்தின் தனிப்பெரும் தகைமை பெற்ற அன்னப் பறவை.

* * *

இனி ஒருவன் ஒரு பெண்டாட்டியை வைத்துக் காலம் கழிப்பதே பெரும்பாடு. குடும்பத்தை அரித்துப் பறித்துக் கொண்டு போகும் செலவு. இனி ஒருவன் அங்கொரு பெண்டாட்டி, இங்கொரு பெண்டாட்டி என்று பொம்மை விளையாட்டு விளையாடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவர் படுகிற அவஸ்தை அவருக்குத்தான் தெரியும். அது வேண்டும் இது வேண்டும் என்று பெண்டிர் நச்சரிக்கிற பொழுது தானே இல்லாமையின் கொடுமை (நிரப்பு இடும்பை) இன்னதென்று தெரியும்.

*நிரப்பிடும்பை*
*பல்பெண்டி ராளன்*
*அறியும்*

பல் பெண்டிராளன் - ஒன்றுக்கு இரண்டு. உபத்திரவத்துக்கு மூன்று என்று பல பெண்களையும் பெண்டாட்டியாக வைத்திருக்கிறவன். நிரப்பு இடும்பை - வறுமையின் கொடுமை.

* * *

இனி தானும் அனுபவிக்காமல் வேண்டியவர்களுக்கும் உதவாமல் செல்வத்தைப் பெருக்கிப் பெருக்கி மறைத்து வைக்கிறவர் பலர். அவர்கள் பணத்தை ஒளித்து வைத்திருக்கிற இடம் அவர்களுடைய மனைவி மக்களுக்குக்கூடத் தெரியாது. ஆனால் திருடர்களுக்கு அது நன்றாகவே தெரியும்.

மாதக் கடைசியில் சம்பளம் வாங்கிக் கொண்டு பஸ்ஸில் போகிறார்கள் பணியாளர்கள். களவாணிப் பயல்களின் நடமாட்டம்

அவர்கள் அறிந்ததுதான். அதனால் சட்டையின் உள் பையிலும் பேண்டின் ரகஸ்யப் பையிலும் பணத்தை வைத்துக் கொண்டு போகிறார்கள். கையைப் பையில் போட்டே போகிறார்கள். ஆனாலும் எப்படியோ அவர்களின் கவனத்தைத் திசை திருப்பி பணத்தை எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள் கள்வர்கள்.

மறைத்து வைக்கிறவன் ரகஸ்யம் திருடனுக்கல்லவா தெரிகிறது.

பொல்லாத பயல்கள்தான் களவாணிப் பயல்கள்.

*கள்ளின் இடும்பை*
*களிஅறியும், நீர்இடும்பை*
*புள்ளினுள் ஓங்கல்*
*அறியும்; — நிரப்பிடும்பை*
*பல்பெண்டி ராளன்*
*அறியும்; — கரப்பிடும்பை*
*கள்வன் அறிந்து*
*விடும் (39)*

(5)

சுத்தம் என்றால் அது பெண்கள்தான். அவர்கள் உடம்பு பளபள என்று பளிங்கு போலச் சுத்தமாக இருக்கும். மனமும் அப்படியே தெளிந்து சுத்தமாக இருக்கும்.

ஒரு பெண் வீட்டுப் பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தாலும் சரி, துணிமணி துவைத்துக் கொண்டிருந்தாலும் சரி சமையல் செய்து கொண்டிருந்தாலும் சரி, குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாலும் சரி. அந்தந்தக் காரியத்திலேயே

---

*கரப்பு - மறைப்பு. இடும்பை - சிரமம், கஷ்டம், வேதனை. திருடர்களிடமிருந்து காக்க எப்படி எல்லாம் மறைத்து வைக்கிறான் பணத்தை மனிதன். அதற்காக எவ்வளவு சிரமப்படுகிறான் (நிரப்பிடும்பை) மனிதன். உயிரையே அதில் வைத்திருந்தான். கிட்டத்தட்ட திருடன் போலவே அதே (பணமே) குறியாக இருந்தான். ஒளித்து வைத்தவன். ஆனாலும் கள்வன் அறிந்து விடும் - என்ன செய்ய, அவனையே முதுகு மண் காட்டும் கள்வனும் இருக்கத்தானே செய்கிறான். பிரயோசனப்படாமலே போய் விட்டது எல்லாம்.*

அவள் மனம் நிற்கும். மற்றொன்றை நோக்கித் தாவி ஓடாது பெண் மனம். மற்ற நினைப்புக்கு இடம் தராது பெண் உள்ளம்.

சுத்தம் என்றால் மனச்சுத்தம் என்றால் வேறென்ன. அதுதான். இனி சமையல் வேலை பார்க்கிறவன் ஒருவன். அவனை அந்த வேலை நேரத்தில் பார்த்தால் அலங்கோலமாக இருக்கும். கரித்துண்டாக இருக்கும் வேட்டி. வேர்த்து விறுவிறுத்து அசிங்கமாகத் தோன்றுவான் அவன்.

இனி பெண்ணை எடுத்துக் கொண்டால் சமையல் அறையிலும் அழகாகவே இருக்கிறாள். காரணம் சுத்தமாக இருக்கிறாள். எந்த நேரத்திலும், எந்த வேளையிலும் அசுத்தத்துக்கு இடம் கொடுக்க மாட்டாள் பெண்.

பெண்ணுக்கு அழகு சேர்க்க எத்தனையோ அம்சங்கள் உண்டுதான். அத்தனை அம்சங்களிலும் தலையாய அம்சம் அவளிடமுள்ள சுத்தந்தான்.

பெண்ணின் அழகுக்கு அழகூட்டுகிறது அவளுடைய துப்புரவு (சுத்தம்).

* * *

ஒரு பெண். கொஞ்ச வயதுப் பெண்தான். முக்கிய வேலை நிமித்தம் அயலூர் போனான் அவள் கணவன். இரண்டு நாளில் வருவதாகத்தான் சொல்லிப் போனான். நான்கு நாளாகியும் வரவில்லை. ஐந்தாம் நாள் பிற்பகல் ஒரு மணிக்கு தகவல் வந்தது. இன்று இரவு ஏழு மணி அளவில் வருவதாக அவனே செய்தி அனுப்பி இருந்தான்.

மட்டற்ற மகிழ்ச்சி பெண்ணுக்கு. ஆனாலும் நிதானம் அப்படியேதான் இருந்தது. கடுகளவுகூடக் குறையவில்லை. ஆரஅமரச் சாப்பிட்டாள். ஓய்வுக்காகக் கொஞ்ச நேரம் படுத்தாள். சிறிது நேரம் தூங்கவும் செய்தாள்.

பிற்பகல் நான்கு மணி. உலரப் போட்ட துணிமணிகளை எடுத்து மடித்தாள். பாத்திரங்களைக் கழுவினாள். வீடு முழுவதையும் பெருக்கினாள். ஸ்நானம் செய்தாள். அழகிய புடவையை அழகாகக் கட்டினாள். நெற்றிக்குத் திலகம் இட்டாள். சீவி முடித்த தலையில் மல்லிகை மலரைச் சூடினாள்.

திருவிளக்கை ஏற்றி அதன் தெய்வச் சுடரை வழிபட்டாள். உல்லாசமும் சந்தோஷமும் பொங்கிப் பூரிக்க அடக்கமாக நாயகனை எதிர்பார்த்து இருக்கிறாள்.

அவளுடைய அடக்கம், நிதானம், பொறுமை, இத்தனையும் சேர்ந்து அவளுக்கு அழகூட்டுகிறது. அதுதான் சுத்தம் மகாலெட்சுமி மாதிரி ஜொலிப்பாய், தோரணையாய், எடுப்பாய், அடக்கமாய் இருக்கிறாள் பெண். நாயகனை எதிர்பார்த்தபடியே இருக்கிறது அவள் உள்ளம்.

சுத்தமாய், அழகாய் இருக்கிறாள் பெண். அதனால்தான் வீடு, வாசல், பண்டம், பாத்திரம், உடை, தட்டு முட்டுச் சாமான் எல்லாவற்றையும் சுத்தமாக, அழகாக, நேர்த்தியாக வைத்திருக்கிறாள்.

குழந்தைகளை எவ்வளவு துப்புரவாக வைத்திருக்கிறாள் பெண். நாயகன்கூட துப்புரவாக இருப்பதையே விரும்புகிறாள் பெண். அழகாக, சுத்தமாக, எடுப்பாக இருக்கிற பொழுது நாயகனை ஆர்வத்தோடு நோக்குவாள் பெண். வேலை காரணமாக சுத்தம் கலைந்திருந்தால் நாயகனுக்கு ஆசையோடு உதவுவாள் பெண். நாயகனை அழகுபடுத்துவதில் பெண்ணுக்கு எவ்வளவோ ஆசை. ஆனால் பொறுப்பில்லாமல் எப்பொழுதும் அசிங்கமாக இருப்பதையே விரும்புகிறான் நாயகன் என்றால், அலங்கோலந்தான் அவன் இயல்பென்றால் பெண் மனம் இடிந்து நொறுங்கும்.

உயர்வாக மதித்துப் பேணி வழிபட முடியாமல் தத்தளிக்கும் பெண்ணுள்ளம்.

பெண்ணின் உள்ளுணர்வு நாயகனின் அழகையும், சுத்தத்தையும், கம்பீரயத்தையுமே எதிர்பார்க்கிறது. அதன் மூலம் மதிக்கிற மதிப்பு தனிதான்.

*வாலிழையார் முன்னர்*
*வளப்பிலார் பாடிலரே*

வால் இழையார் - பெண். நூலில் பிரகாசமான முத்துக்களைக் கோர்த்து மாலையாகக் கழுத்தில் அணிந்திருக்கும் பெண். வால் - வெண்மை. இழை - நூலில் கோத்த முத்தாரம்.

வனப்பு இ(ல்)லார் - அழகில்லாதவர். பாடுஇலர் - அவர்கள் பாடு திண்டாட்டந்தான். எடுபடாது அவர்கள் காரியம் எளிதில்.

* * *

ஆராய்ச்சி, நுட்பம், அனுபவம் மிக்க அறிஞர் நிரம்பிய கூட்டம் (அவை = சபை) ஒன்று. மூடன் ஒருவன் அதனுள் போய் அமர்ந்தான். வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருக்கக் கூடாதா மூடன். அப்படி இருந்தால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகலாம் இவன். என்ன அடக்கம் இவனிடம் என்று மரியாதையாக நினைப்பார்கள் இவனை அவையோர்.

ஆனால் சும்மா இருக்க முடியவில்லை அவனால். எதை எதையோ உளறுகிறான். சபை முழுவதும் இவனைக் கேவலமாகப் பார்க்கிறது. ஒன்றும் எடுபடவில்லையே என்கிற ஏமாற்றத்தோடு, அவமரியாதையோடுந்தான் சபையை விட்டு வெளியேறுகிறான் மூடன்.

*சாலும் அவைப்படின்*
*கல்லாதான் பாடிலனே*

சாலும் அவை - அறிவு நிரம்பியவர் கூடி அமர்ந்த சபை. ஞான சபையேதான் அது. சாலும் - நிறைந்த.

* * *

இனி அழகில்லாதவன் படுகிற பாட்டை (திண்டாட்டத்தை) விட அறிவில்லாத மூடன் படும்பாடு அதிகம். சில சமயம் மூடன் படும் பாட்டைவிட அறிஞர் படுகிற பாடு. ஒரே பெரும் பாடுதான்.

அறிவில்லாத, உணர்ச்சியே இல்லாத (கல்லாத) பேதையர் கூடிய சபை. தடபுடலான தோரணையோடு அமர்க்களப்படுகிறது விழா. வெற்றுரை, செளடால்த்தனம், தற்புகழ்ச்சி இப்படிப் போகிறது சொற்பொழிவு.

ஞானமும் உணர்ச்சியும் நிறைந்த அறிஞர் விபரம் தெரியாமல் அதில் பங்கேற்றார். நுட்பமான நயமான, அனுபவங்களை அங்கு அவர் வெளியிட்டால் என்னவாகும் நிலை. அந்தோ பரிதாபந்தான். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் திணறுகிறார் அறிஞர். எடுபடவில்லை தானே அவர் பாடு.

*வாலிழையார் முன்னர்*
*வனப்பிலார் பாடிலரே,*
*சாலும் அவைப்படின்*
*கல்லாதான் — பாடிலனே,*
*கற்றான் ஒருவனும்*
*பாடிலனே — கல்லாத*
*பேதையார் முன்னர்*
*படின் (40)*

(6)

எப்பொழுது நீர் அருந்த மான் வரும் என்று காத்திருக்கும் புலி. நீர்த்துறையை ஒட்டிய புதரிலேயே பதியம் போட்டு எதிர்பார்த்திருக்கும் புலி.

மானும் அங்கு வரும். நீர்த்துறையில் இறங்கும். சுற்று முற்றும் பார்க்கும். பிறகு ஆவலோடு நீர் அருந்தும்.

இதுதான் சமயம் என்று ஒரே பாய்ச்சலில் மான் மேல் பாயும் புலி. மானின் கழுத்தைக் கவ்வியபடியே புதருக்குள் இழுத்துக் கொண்டு போய் விடும் புலி.

நோயும் அப்படித்தான். எலும்புள், நரம்புள், ரத்தத்துள்ளேயே பம்மிக் கிடக்கிறது நோய். ஆரோக்கியம் எப்பொழுது குன்றும் என்று எதிர்பார்த்தபடியே இருக்கிறது. ஆரோக்கியம். குன்றய வேண்டியதுதான். ஒரு பாய்ச்சல், ஒரே தட்டு. கையைக் காலை, கண்ணை, மூளையை, எதை வேண்டுமானாலும் அடித்து நொறுக்கி விடும் நோய்.

உலகமே இப்படித்தான். உலகம் முழுவதும் இதே கூத்துத்தான். ஒன்றை ஒன்று எதிர்பார்த்தபடியே இருக்கிறது. தட்டி நொறுக்கத்தான். அள்ளிக் கொடுத்து ஆதரிக்க அல்ல.

* * *

ஆற்றை மறித்து கால்வாய் வெட்டி அதன் வழியே நீரைக் கொண்டு வந்து நிரப்புகிறார்கள். ஏரிகள் ஆயிரக்கணக்கில் நாடு முழுவதும் இருக்கின்றன.

பெரிதாகத்தான் வெட்டி வைத்தார்கள் ஏரியை. ஆனால் பண்ணையார்கள் அடிக்கடி ஏரிக்கரையைத் தறிப்பார்கள். மடை தாண்டி உள்ளே உள்ளே போகும் வயல். ஏரிக்கு உள்ளேயே வரும். ஏரியோ குலமகள் போல நாணிக் கோணி சுருங்கும். இது ஒரு கூத்து. இன்னொரு கூத்தும் உண்டு. ஆற்று நீரோடு வண்டல் வரும். நிறையவே வரும். வந்த வண்டல் ஏரியில் தானே தங்கும். அப்படி வந்த வண்டல் படிந்து படிந்து மேடாகும் ஏரி. அது காரணமாகச் சுருங்கத்தானே செய்யும் ஏரி.

இப்படி எல்லாம் ஏரி சுருங்கினால் தண்ணீருக்குக் கொழுப்பு உண்டாகி விடும். வலியச் சண்டைக்கு இழுப்பது மாதிரி ஏரியை அப்படியும் இப்படியும் உரசிப் பார்க்கும் நீர்.

*ஏரி சிறிதாயின்*
*நீர்ஊரும்*

இனி மனைவி, மக்கள் எல்லோருமே சொன்னபடி கேட்கிறவர்கள்தாம். ஒரு முழி முழித்தால் போதும். சப்த நாடியும் ஒடுங்கும் மனையாளுக்கு. நாயகனிடம் அப்படி ஒரு அடக்கம் பெண்ணுக்கு. அம்மா பாடே இப்படி என்றால் பாவம் குழந்தைகள் நிலை என்ன. கப்சிப் என்று ஒடுங்குவார்கள் அப்பாவின் அதிகார தொனியில்.

இவ்வளவும் வருமானம் ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறவரைதான். நாயகனின் வருவாய் சுருங்கச் சுருங்க,

*இல்லத்து*
*வாரி சுருங்கின்*
*மனைஊரும்*

மனையாளே கொஞ்சம் முறைத்துத்தான் பார்ப்பாள் நாயகனை.

* * *

இனி பல கோடி வருஷங்கள் தவம் செய்து தவம் செய்து பெற்றதுதான் மனிதப் பிறவி. பல கோடி பிறவிகள், யானை, திமிங்கலம், காண்டாமிருகம், புலி, பூனை என்று எத்தனையோ கோடி பிறவிகள், புழுப் பூச்சியிலிருந்து மனிதன் வரை எத்தனை

எத்தனை பிறவிகள், அத்தனையையும் ஊடுருவிக் கடந்து வந்திருக்கிறது மனிதப் பிறவி. தவம் செய்த தவந்தான் மனிதப் பிறவி.

நல்வினை பல செய்தாலும் தீவினையும் ஒன்றிரண்டு வந்திருக்கத்தானே செய்யும். அதையும் பொட்டணம் கட்டி தொங்கத்தான் விட்டிருக்கிறது.

தீவினையைவிட நல்வினை அதிகப்படியாக இருக்கும் வரை பெட்டிப் பாம்பாய் சுருண்டு கிடக்கும் தீவினை. நல்வினை (மேலைத் தவம்) சுருங்கச் சுருங்க படம் எடுத்துச் சீற ஆரம்பித்து விடும் அதே தீவினை.

அதுவும் மனிதர்கள் மாதிரித்தான்.

*மேலைத்*
*தவம்சிறி தாயின்*
*வினைஊரும்*

* * *

இனி ஒருவன் மிக்க ஆடம்பரத்தோடு வாழ்ந்தான். அவனைக் கண்டால் எல்லோரும் மேல் துண்டை எடுப்பார்கள். அதை அரையில் (இடுப்பில்) சுற்றுவார்கள். கூனுவார்கள், குறுகுவார்கள். வளைவார்கள், நெளிவார்கள். ஏன் சாஷ்டாங்கமாக அவன் காலில் விழுந்தே வணங்குவார்கள்.

எதிரி என்று ஒருவன் உண்டா அங்கு அவனுக்கு. பல வருடங்கள் இந்தப் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தான அவன். என்னமோ, ஏதோ ஒன்றும் தெரியவில்லை.

திடுதிப்பென்று திசை மாறி அடித்தது காற்று. அவனிடமிருந்த செல்வம் போனது. அதை ஒட்டியே செல்வாக்கும் போய் விட்டது. சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் என்கிற பதவியும் போய் விட்டன. அதிகாரமோ போயே போய் விட்டது.

எத்தனை ஊக்கம், எத்தனை முனைப்பு அவனிடம்! இப்பொழுது என்ன இருக்கிறது அவனிடம். ஒன்றும் இல்லை.

அருமை நண்பர்கள், ஆருயிர் நண்பர்கள், அடியாட்கள், உடன்பிறப்புகள், இடிதடியர்கள் என்று இருந்ர்தாகளே பட்டாளம்

பட்டாளமாக. அவர்களை எல்லாம் எங்கே? ஒருவர்கூட இல்லையே துணைக்கு. பேச்சுத் துணைக்குக்கூட இல்லையே ஒருவரும்.

எல்லாம் இவனைக் கைகழுவி விட்டன. எல்லோரும் கைகழுவி விட்டார்கள் இவனை.

ஆனால் புதிய பட்டாளம் ஒன்று இவனை நோக்கி எழுந்து வருகிறது. அதுதான் பகை. கைகட்டி வாய் பொத்தியவர்கள்கூட ''என்னையா, முறைத்துப் பார்க்கிறாய்'' என்று அதட்ட ஆரம்பித்து விட்டார்கள் இவனை.

''அண்ணனுக்காக என் உயிரையே கொடுப்பேன்'' என்று மார்தட்டியவர்கள் எல்லாம் எதிரணியில் தளகர்த்தர்கள் ஆகிவிட்டார்கள்.

ஆற்றல் குன்றக் குன்ற உலகமே எதிர்த்து நிற்க ஆரம்பித்து விடுகிறது.

*ஏரி சிறிதாயின்*
*நீர்ஊரும், இல்லத்து*
*வாரிசிறி தாயின்*
*மனைஊரும் — மேலைத்*
*தவம்சிறி தாயின்*
*வினைஊரும்; — ஊரும்*
*உரன்சிறி தாயின்*
*பகை (41)*

---

*ஊரும் - உரசிப் பார்க்கும். கேலி பண்ணும். மதிக்காது என்பது பொருள். வாரி - வருமானம். மனை - மனையாள். மேலைத் தவம் - முன்பு தேடிச் சேர்த்த புண்ணியம். வினை - தீவினை. உரன் - ஆற்றல், சக்தி.*

*குறிப்பு - ஆண்டியோ, அரசனோ யாரானாலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அயர்ந்தால், சோர்ந்தால் ஒழிந்தது காரியம். விழிப்போடு பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் அது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது.*

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

## நாலடியார்


| பாட்டு முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|

### அ

| | |
|---|---|
| அங்கண் விசும்பின் அகன் | 63 |
| அங்கண் விசும்பின் அமரர் | 110 |
| அரக்காம் பல் | 102 |
| அல்லிப்பூ அன்ன | 56 |

### ஆ

| | |
|---|---|
| ஆகாதெனினும் | 40 |
| ஆர்த்தபொறிய | 45 |

### இ

| | |
|---|---|
| இசையா ஒரு பொருள் | 38 |
| இட்டாற்றுப்பட்டு | 85 |
| இம்மி அரிசி | 32 |
| இளையான் அடக்கம் | 66 |
| இறப்பவே தீய | 15 |
| இன்னா செயினும் | 11 |

### உ

| | |
|---|---|
| உண்ணான் ஒளிநிறான் | 33 |
| உணர உணரும் | 52 |
| உறற் பாலநீக்கல் | 29 |

### எ

| | |
|---|---|
| எஞ்ஞான்றும் எம் கணவர் | 104 |
| என்றும் புதியார் | 121 |
| எனக்குத் தாய் | 93 |
| எனதெனதென்றிருக்கும் | 35 |

### ஒ

| | |
|---|---|
| ஒரு நன்றி செய்தார்பால் | 70 |

### ஓ

| | |
|---|---|
| ஓதியும் ஓதார் | 51 |

### க

| | |
|---|---|
| கடிப்படி கண்முரசம் | 36 |
| கடையாயார் நட்பில் | 68 |
| கணங்கொண்டு | 87 |
| கணமலை நல்நாட | 79 |
| கல்லாது நீண்ட ஒருவன் | 81 |
| கல்லோங்கு உயர் வரை | 44 |
| கற்றறிந்த நாவினார் | 117 |

### கா

| | |
|---|---|
| காதலர் சொல்லும் | 19 |
| காலாடுபோழ்தில் | 43 |

### கு

| | |
|---|---|
| குடநீர் அட்டுண்ணும் | 98 |

**கே**

கேளாதே வந்து 122

**ச**

சக்கரச் செல்வம் 116

**சா**

சான்றோர் என மதித்து 58

**செ**

சென்றே எறிப 90

**த**

தக்காரும் தக்கவர் 20

தவலரும் தொல்கேள்வி 9

**தா**

தான்கெடினும் 22

**தி**

தினை அனைத்தே 67

**து**

துக்கத்துள் தூங்கி 71

துறவுளவா 108

**தெ**

தெரியத் தெரியும் 53

தெளிவிலார் நட்பில் 73

**தோ**

தோற்றஞ்சால் ஞாயிறு 125

**ந**

நடுக்குற்றுத்தற் சேர்ந்தார் 28

நன்னிலைக்கண் 62

**நி**

நின்றன நின்றன 50

நீரினும் நுண்ணிது 83

**நே**

நேர்த்து நிகரல்லார் 74

**ப**

பல்லான்ற கேள்விப்பயன் 119

பல நாளும் பக்கத்தார் 114

பனிபடுசோலை 92

பாலால்க் கழீஇ 55

**பி**

பிறர் மறையின் கண் 60

**பெ**

பெயற்பால் மழை 6

பெரியார் பெருநட்பு 3

**ம**

மலைமிலைத் தோன்றும் 48

மழை திளைக்கும் 100

**யா**

யாக்கையை யாப்புடைத்தாய் 27

யானை யனையவர் 18

வ

வளம்பட வேண்டாதார் 31

வி

விருப்பிலார் இல்லத்து 24

விளக்கொளியும் 47

வெ

வெறிஅயர் 88

வென்றிப் பொருட்டால் 78

## நான்மணிக்கடிகை

அ

அந்தணரின் நல்ல 170

ஆ

ஆசாரம் என்பது கல்வி 223

இ

இளமைப் பருவத்து 213

இன்னாமை வேண்டின் 150

ஊ

ஊனுண்டுழுவை 196

எ

எல்லா இடத்தும் 215

எள்ளற்க என்றும் 131

எள்ளல்ப் பொருள 185

ஏ

ஏரி சிறிதாயின் 236

க

கடல்க் குட்டம் போழ்வர் 154

கண்ணில்ச் சிறிந்த 176

கரப்பார்க்குச் செல்சார் 176

கல்லா ஒருவற்கு 208

கல்லில்ப் பிறக்கும் 141

கள்வம் என்பார்க்கும் 143

கள்ளி வயிற்றின் 137

கள்ளின் இடும்பை 229

கற்றன்னர்கற்றார் 191

கைத்தில்லார் நல்லர் 200

கோல்நோக்கி வாழும் 162

தி

திரி அழல் காணின் தொழுப 195

திருவிற்திறல் 165

தே

தேவரனையர் புலவர் 204

ந

நல்லார்க்குத் தம்மூர் 206

நகை இனிது நட்டார் 172

நன்றி சாம் 180

**நா**

நாற்றம் உரைக்கும் 182

**நீ**

நீரான்வீ நெய்தும் 211

**ப**

பறைநன்று 145

பறைபடவாழா 135

பழி இன்மை 194

**பு**

புகைவித்தா 167

**பெ**

பெற்றான் அதிர்ப்பின் 158

**போ**

போரின்றிவாடும் 178

**ம**

மண்ணி அறிபமணி 139

மழை இன்றி 183

மனைக்காக்கம் 156

மனைக்குப் பாழ் 160

**யா**

யாறுள் அடங்கும் 188

**வ**

வளப்பாத்தி 147

**வா**

வாலிழையார் முள்ளர் 233